# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003


# Online Programmes

## இளங்கலை இரண்டாமாண்டு

## பகுதி - I : தமிழ் தாள் - III

## மூன்றாம் பருவம்

# 200131

# 31 A - பொதுத்தமிழ்

**Author:**

**Dr. V.THIRUVENI,** *Assistant Professor in Tamil & Research Supervisor, PPR- Coordinator- All Tamil Programmes- DDE Directorate of Distance Education, Alagappa University- Karaikudi-630003, Tamilnadu.India.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

# இளங்கலை - இரண்டாமாண்டு
# மூன்றாம் பருவம்
# 31A- பொதுத்தமிழ்
# பாடத் திட்டம் - பொருளடக்கம்

**நோக்கம் :** மொழிஅறிவு, இலக்கிய அறிவை வளர்த்தல்

## பிரிவு-1-இலக்கியம்-1

பக்கம்


**கூறு 1** பத்துப்பாட்டு—முல்லைப்பாட்டு - 3

**கூறு 2** எட்டுத்தொகை—ஐங்குறுநூறு - 15

**கூறு 3** கபிலர் - குறிஞ்சித்திணை - 33

**கூறு 4** மஞ்ஞைப்பத்து—முதல் மூன்றுபாடல்கள் - **53**

**கூறு 5** குறுந்தொகை—பரணர் பாடல்கள் - 80
பா. எண். 19, 24, 36, 128, 399


## பிரிவு-2-இலக்கியம்-2


**கூறு 6:** நற்றிணை — பெருங்குன்றூர்கிழார் - பா. எண். 5 - 92
பெருவழுதியார் - பா. எண். 55
பெருங்கௌசிகனார் - பா. எண். 139

**கூறு 7:** நற்றிணை —கருவூர்க்கோசிகனார்- பா. எண். 214 - 105
உலோச்சனார் - பா. எண் 249

**கூறு 8:** அகநானூறு —சேந்தம்பூதனார் பாடல்கள் பா.எண். 84, 207 - 116

**கூறு 9:** :புறநானூறு —மாறோக்கத்து நப்பசலையார் பாடல்கள் - 130
பா. எண். 37, 39, 126, 226, 280


## பிரிவு-3 பதினெண் கீழ்க்கணக்கு


**கூறு 10 :** பதினெண் கீழ்க்கணக்கு—திருக்குறள் - - 146
வாழ்க்கைத்துணைநலம் (6),
அறிவுடைமை (43),பிரிவாற்றாமை (116)

**கூறு 11:** நான்மணிக்கடிகை— எள்ளற்க (3),பறைபடவாழா (4), - 162

**கூறு 12:** நான்மணிக்கடிகை - மண்ணயறிப (5)
கள்ளிவயிற்றில் (6),கல்லிற்பிறக்கும்(7) - 168

## பிரிவு- 4 நாடகம், புதினம்.

**கூறு 13:** நாடகம் - இராசராசசோழன் - அரு. இராமநாதன் - 177

**கூறு 14:** நாவல் - சுவடுகள் - இரா. பாலசுப்பிரமணியன்,
சத்யாவெளியீடு, மதுரை - 213

***

பிரிவு-1 - இலக்கியம்-1

கூறு 1: பத்துப்பாட்டு–முல்லைப்பாட்டு

குறிப்பு

1 - பாடஅமைப்பு:

1.1. அறிமுகம்- பத்துப்பாட்டு

1.2. நோக்கம்

1.3. முல்லைப்பாட்டு அறிமுகம்

1.4 நப்பூதனார்

1.5. முல்லைப்பாட்டு பாடல் விளக்கம்

1.5.1. நல்லோர் விரிச்சி கேட்டல்,

1.5.2. மழைக்காலத்து மாலை நேரம்,

1.5.3. முதுபெண்டிர்விரிச்சிகேட்டல்

1.5.4. ஆய்மகளின் நற்சொல் கேட்டலும், தலைவியை ஆற்றுவித்தலும்

1.5.5. தலைவியை ஆற்றுவித்தல்

1.5.6. பாசறை அமைத்தல்

1.5.7. பாசறையின் நற்சந்தியில் நிற்கும் யானையின் நிலை,

1.5.8 பாசறையில்வீரர்களின்அரண்கள்

1.5.9. பாசறையில்மன்னனுக்குத்தனிஇடம்

1.5.10. மன்னனின் இருப்பிடத்தில் விளக்கேற்றும் பெண்கள்,

1.5.11. பாசறையில் காவலாளர்

1.5.12. நாழிகைக் கணக்கர்

1.5.13. மன்னன் இருப்பிடத்தில் யவனர்,

1.5.14. மன்னனின் பள்ளியறையில் மிலேச்சர்

1.5.15. பாசறையில் மன்னனின் மனநிலை

1.5.16. வெற்றிக்குப் பின் பாசறையில் மன்னன்

1.5.17. தலைவனைக் காணாது வருந்தும் தலைவியின் நிலை,

1.5.18 அரசன் வெற்றியுடன் மீண்டு வருதல்

1.5.19 கார்ப்பருவத்தில் செழித்திருக்கும் முல்லை நிலம்

1.5.20 அரசனின் நெடுந்தேர் ஆரவாரம்

1.5.21 நிறைவாக

1.6. சோதித்தறியும் வினாவிடைகள்

1.7. பயிற்சி வினா

1.8. பொருளறிக

1.9. மேலும் படித்தறிக.

## 1.1 அறிமுகம் : பத்துப்பாட்டு

குறிப்பு

பதினெண் மேற்கணக்கு நூல்களில் ஒரு பிரிவு பத்துப்பாட்டு. நெடும்பாடல்கள் பத்தினைக் கொண்டது. அவற்றை,

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

என்கிறது பழம்பாடல். அனைத்தும் ஆசிரியப்பாவால் இயன்றவை. சிலவற்றில் வஞ்சியடிகள் விரவி வருதலுமுண்டு. ஆற்றுப்படைகள் 5. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்). பின் நான்கும் கலைப் பெட்டகங்கள். ஆற்றுப்படை இலக்கியங்கள் பண்டைய தமிழகத்தின் Geographical Survey எனலாம். இவ்வாற்றுப்படை மரபு வேறு எம்மொழியிலும் இல்லாதது. தமிழுக்கே உரிய தனிச்சிறப்பினது. அகப்பொருளன 3. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை. புறப்பொருளனது 1. மதுரைக்காஞ்சி. அகமும் புறமும் தழுவியது நெடுநல்வாடை. பத்தையும் பாடியவர் எண்மர். நக்கீரர், முருகாற்றுப்படை, நெடுநல்வாடையும், உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படையும், ஏனையோர் ஒவ்வொன்றும ̇ பாடியுள்ளனர். பாடப்பட்டோரும் எண்மரே. கரிகாலன் பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை இரண்டின் பாட்டுடைத் தலைவன், பாண்டியன் நெடுஞ்செழியன் நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி இரண்டின் தலைவன். பத்தில் பெரியது மதுரைக்காஞ்சி. சிறியது முல்லைப்பாட்டு. பாட்டின் சிறு அளவு 103 அடி, பேரளவு 782 அடி. அனைத்தும் செறிவு மிகுந்தவை, கடின நடையின, பொருத்தமில் கற்பனைகளோ, பொருளற்ற உவமைகளோ காண்டலரிது. பண்டைத் தமிழகத்தைப் படம்பிடித்துக் காட்டும் பான்மையன. வேந்தர் ஆட்சிமுறையும், மக்கள் வாழ்வு வகையும் விளக்குவன. இயல் வாய்மையும், இயற்கை வன்மையும் மிக்கன.

குறிஞ்சிப்பாட்டு, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகியன கரிகாலன் காலத்தில் கி.பி 1ஆம் நூற்றாண்டின் இறுதி - இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியன. மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு நான்கும் கி.பி 3ஆம் நூற்றாண்டின. சிறுபாணாற்றுப்படை

3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தது. திருமுருகாற்றுப்படை கி.பி 3ஆம் நூற்றாண்டின் இடையில் எழுந்திருக்கலாம் என்பர். ஆக பத்துப்பாட்டு தோன்றிய காலம் வேறு, தொகுக்கப்பட்ட காலம் வேறு.

திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, மலைபடுகடாம், குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பன பத்துப்பாட்டு நூல்கள். இவற்றுள் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு ஆகிய மூன்றும் அகம் பற்றியன. ஏனையவை புறம் பற்றியன. பட்டினப்பாலை அகமும், புறமும் தழுவியது.வேறு எந்த நாட்டிலும் எந்நாட்டு இலக்கியத்திலும் காணப்பெறாத அளவு பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்பெறுகின்றன. மேலும் அரசர்களும் புலவர்களாகத் திகழ்ந்துள்ளமையும், பல்வேறு தொழிலர்களும் புலவர்களாக விளங்கியமையும், சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்பாகும்.

### 1.2. நோக்கம்:

முல்லைப்பாட்டில் பாசறை – பள்ளியறை அமைப்புக்கள், தலைவியின் துயர், காட்டுவழிக்காட்சிகள் குறிப்பிடத்தக்கன. கார்காலத் தோற்றம் கற்போரைப் பிடித்திழுத்துக் கனித்தமிழின் சுவையூட்டும் வண்ணம் உளது. இதனை மாணவர்களுக்கு வலியுறுத்துவதே நோக்கமாகும்.

### 1.3. முல்லைப்பாட்டு

முல்லைப்பாட்டின் அடிகள் 103. முல்லை என்றே அழைக்கப் பெறுவதும் உண்டு. பத்துப்பாட்டில் மிகச்சிறியது. நப்பூதனார் பாடியது. போரின் பொருட்டுத் தலைவன் பிரிந்தமை ஆற்றாத தலைவி அவன் வருமளவும் ஆற்றியிருந்த கற்புநிலை கழறுதலான் (கற்பிற்கு முல்லை அடையாளமாதலால் முல்லை ஒழுக்கம் பற்றிய பாட்டு ஆயினமையின்) இப்பெயர் பெற்றது. பாசறை – பள்ளியறை அமைப்புக்கள், தலைவியின் துயர், காட்டு வழிக்காட்சிகள் குறிப்பிடத்தக்கன. கார்காலத் தோற்றம் கற்போரைப் பிடித்திழுத்துக் கனித்தமிழின் சுவையூட்டும் வண்ணம் உளது.

### 1.4. நப்பூதனார்

இவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் என்று அறியப்படுகிறார். இவருடைய இயற்பெயர்

பூதனாரென்பது. 'ந' சிறப்பைப் புலப்படுத்துவது. நற்றிணை, 29ஆம் செய்யுளை இயற்றிய பூதனார் இவரே போலும். இவருடைய ஊர் காவிரிப்பூம்பட்டினமென்றும், இவருடைய தந்தையார் பொன்வாணிகனாரென்னும் வணிக குலத்தினரென்றும், பெயருக்கு முன்னுள்ள அடைமொழியால் தெரியவருகிறது. எட்டுத்தொகை முதலியவற்றில் இவரியற்றியதாக ஒன்றும் காணப்படவில்லை. காவிரிப்பூம்பட்டினத்திற் சதுக்கத்துப் பூதம் முதலிய பூதங்கள் மிக்க சிறப்புடையனவாகவும் பலரால் வழிபடத்தக்கனவாகவும் இருந்து வந்தமையின் அவற்றுள் ஒன்றை நினைந்து பூதனென்னும் பெயர் இவருக்கு இடப்பட்டது போலும்.

பாசறையைப் பற்றி விரிவாக முல்லைப்பாட்டிற் கூறியிருத்தலால் இவர் நல்ல வீரம் பொருந்திய அரசர்களோடு பழகியவரென்று தோற்றுகின்றது.

**1.5. முல்லைப்பாட்டு பாடல் விளக்கம்**

**1.5.1. நல்லோர் விரிச்சி கேட்டல்**

**1.5.2. மால்போலத் தோன்றும் மழைமேகம்**

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி (1-5)

அகன்ற இடத்தையுடைய இந்த உலகத்தை வளைத்துக் காக்கின்ற சக்கரம், சங்கு பொறிக்கப்படட திருமகளைத் தாங்குகின்ற பெரிய கைகளையுடைய திருமால் மாவலிச் சக்கரவர்த்தி தாரை வார்த்த நீர் கையில்பட்ட அளவிலே நிமிர்ந்து எழுந்த தோற்றத்தைப் போன்று மேகங்கள் அலையோசை முழங்கம் குளிர்ந்த கடல் நீரைப் பருகி வலமாக உயர்ந்து எழுந்து மலைகளில் தங்கி விரைந்து சென்றன.

**1.5.3. மழைக்காலத்து மாலை நேரம்**

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை (6)

மேகங்கள் சூழ்ந்து பெருமழையைப் பொழிந்த மாலைப் பொழுது சிறிய துன்பம் தருவதாக இருந்தது.

**1.5.4. முதுபெண்டிர் விரிச்சி கேட்டல்**

அருங்கடி மூதூர் மருங்கில் போகி

குறிப்பு

யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்புஅவிழ் அலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப (7-11)

பெரிதும் வயது முதிர்ந்த பெண்டிர் யாரும் அணுக முடியாத அரிய காவலை பழைய ஊரின் பக்கத்தில் சென்று (திருமால் கோயிலுக்கு), நாழியில் கொண்டு சென்ற நெல்லோடு யாழிசை போல் வண்டுகள் ஆரவாரிக்க அரும்புகள் மலர்ந்திருக்கும் நறுமணம் மிக்க முல்லை மலரையும் தூவி (இறைவனை வேண்டி) கைதொழுது நற்சொல் (விரிச்சி) கேட்டு நின்றனர்.

### 1.5.5. ஆய்மகளின் நற்சொல் கேட்டலும் தலைவியை ஆற்றுவித்தலும்

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது; நீநின்
பருவரல் எவ்வம் களை மாயோய் எனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ் சிறந்து
பூப்போல் உண்கண் புலம்புமுத்து உறைப்ப (12-23)

சிறிய கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் இளம் கன்று தன் தாயினைக் காணாது துயருற்று அங்கும் இங்கும் சுழன்று கொண்டிருந்தது. அதனைப் பார்த்துக் குளிரால் நடுங்கித் தோளில் குறுக்கும் நெடுக்குமாகக் கைகளைக் கட்டியுள்ள ஆயர்குலப் பெண், வளைந்த கோலினைக் கையிலே வைத்துள்ள கோவலர் பின்னே நின்று செலுத்த உம்முடைய தாயர் இப்பொழுது வருவன் என்று கூறிய நன்மை தரும் நல்ல சொல்லைக் கேட்டோம்.

நல்லவர்களின் நல்ல வாய்ச் சொல்லைக் கேட்டதால் பகைவர் இடத்தையெல்லாம் கவர்ந்து போரினை இனிதே முடித்து தலைவன்

குறிப்பு

வருவான். இது உண்மை. நீ உன்னுடைய துன்பத்தால் எழுந்த வருத்தத்தினைக் களைவாயாக' மாந்தளிர் நிறத்தினை உடையவளே, என மீண்டும் தலைவியிடம் வற்புறுத்திக் கூறவும், தலைவி ஆற்றாளால் அழுது கொண்டு குவளை மலர் போன்ற கண்களில் முத்துப் போன்று நீர்த்துளிகள் வருத்தத்தில் இருந்தாள்.

**1.5.6. பாசறை அமைத்தல்**

கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டி காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி (24-28)

காட்டாறு சூழ்ந்த அகன்ற நீண்ட முல்லைநிலக் காட்டில் நெடுந்தொலைவிற்கு மணம் வீசும் பிடவம் செடிகளையும், பசுமையான சிறு தூறுகளையும் வெட்டி வேட்டுவரின் சிறு வாயில் அமைந்த அரணையும் அழித்து, காட்டிலுள்ள முள்ளால் மதிலுக்குக் காவலாக வேலியை வளைத்து ஒலிக்கின்ற நீரையுடைய கடல் போல் பரந்த பாடி வீட்டை அமைத்தனர்.

**1.5.7. பாசறையின் நற்சந்தியில் நிற்கும் யானையின் நிலை**

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த
வயல்விளை இன்குளகு உண்ணாது நுதல்துடைத்து
அயில்நுனை மருப்பின்தம் கையிடைக் கொண்டென
களைமுட் கருவியின் வடமொழி பயிற்றி
கல்லா இளைஞர் கவளம் கைப்ப (29-36)

பாசறையில் தழையால் கூரை வேயப்பட்டு, ஒழுங்காக அமைந்துள்ள தெருவில் நாற்சந்தி கூடுமிடத்து உள்ள முற்றத்தில், காவலுக்காக நின்ற மதநீர் ஒழுகும் கன்னங்களும் சிறிய கண்களும் கொண்ட யானை உயர்ந்து வளைந்த கரும்போடு நெற்கதிர்களையம் கலந்து கட்டியிருக்கின்ற வயலில் விளைந்த இனிய அதிமதுரத் தழையை உண்ணாது அவற்றைத் தனது நெற்றியில் துடைத்து கூரிய

*Self-Instructional Material*

முனையையுடைய மருப்பின் மேலேற்றி தும்பிக்கையில் அடக்கிக் கொண்டிருந்தது. (யானையைப் பயிற்றும் மொழியன்றியும் வேறெதுவும் கற்காதவர்) பாகர் வடமொழியில் யானையிடம் பேசி கவளத்தை உண்ணுமாறு யானைக்கு ஊட்டினார்.

குறிப்பு

**1.5.8. பாசறையில் வீரர்களின் அரண்கள்**

கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நல்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடம் குத்திக் கயிறுவாங்கு இருக்கைப்
பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகு நிரைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக (37-42)

தவவேடமுடைய அந்தணர் தன் காவி நிறம் தோய்ந்த ஆடையை முக்கோலை நட்டு அதன்மேல் தொங்கவிட்டிருப்பது போல வீரர்கள் தான் செய்கின்ற நல்ல போரில் புறமுதுகிட்டு ஓடாமல் இருப்பதற்குக் காரணமான வலிய வில்லை ஊன்றி அதன்மேல் அம்புப் புட்டிலைத் தொங்க விட்டனர். கூடாரம் அமைப்பதற்காக விற்களை ஊன்றி கயிற்றால் வளைத்துக் கட்டிய இருப்பிடத்தில் பூ வேலைப்பாடமைந்த கைவேலைக் குத்தி கேடயத்தை வரிசையாக வைத்து வீரர்கள் தங்குவதற்காக வில்லாலாகிய பல்வேறு அரண்களை அமைத்தனர்.

**1.5.9. பாசறையில் மன்னனுக்குத் தனிஇடம்**

வேறுபல் பெரும்படை நாப்பண் வேறுஓர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகம்நேர்பு (43-44)

வேறு வேறான பல்வேறு படைகளின் நடு விடத்தில் நீண்ட கோல்களோடு கூடிய பல நிறம் வாய்ந்த திரைகளால் கூறுபடுத்தி வேறோர் தனிஇடம் மன்னனுக்கென்று அமைத்தனர்.

**1.5.10. மன்னனின் இருப்பிடத்தில் விளக்கேற்றும் பெண்கள்**

குறுந்தொடி முன்கைக் கூந்தல்அம் சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்
நெய்உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கைஅமை விளக்கம் நந்துதொறும் மாட்ட (45-49)

குறிப்பு

குறுகிய வளையணிந்த முன் கையினையும், கூந்தல் புரளும் அழகிய சிறு முதுகுப்புறத்தையும் உடைய பெண்கள் இரவைப் பகலாக்கும் வலிய பிடி அமைந்த ஒளி வீசும் வாளினைப் பல்வேறு நிறமமைந்த கச்சில் சேர்த்து கட்டியிருந்தனர். பாவையின் கையிலே இருக்கின்ற விளக்கில் நெய் குறையந் தொறும் நெய் வார்க்கும் குழாயினைக் கொண்டு நெய் வார்த்து நெடுந்திரியினைக் கொளுத்தினர்.

**1.5.11. பாசறையில் காவலாளர்**

நெடுநா ஒள்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந்தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெரு மூதாளர் ஏமம் சூழ (50-54)

நீண்ட நாக்கினையுடைய அழகிய மணியின் ஓசை அடங்கிய நடுயாமத்தில், காட்டு மல்லிகைப் பூத்திருக்கும் ஆடுகின்ற மல்லிகைக் கொடியின் சிறு தூறுகள் நீர்த்திவலையோடு வீசுகின்ற காற்றுக்கு அசைவதைப் போல தலையில் தலைப்பாகையைக் கட்டி உடம்பினைப் போர்த்தியுள்ள வயது முதிர்ந்த மெய்க்காப்பாளர் தூக்க மயக்கத்தில் தளர்ந்த நடையோடு திறமையாகப் பாதுகாவலைச் செய்தனர்.

**1.5.12. நாழிகைக் கணக்கர்:**

பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப (55-58)

பொய்த்தலில்லாது நேரத்தைக் கணக்கிட்டு, இவ்வளவு என்று கூறும் நாழிகைக் கணக்கர் மன்னனைக் கண்டு தொழுது அவன் புகழ் தோன்றுமாறு வாழ்த்தி, அலைகடல் சூழ்ந்த உலகத்தில் பகைவரை வெல்தற்குச் செல்பவனே! உனது நாழிகை வட்டியில் நேரத்தை அளந்தறியும் கருவி சென்றுள்ள நேரம் இவ்வளவு என்று அறிவித்தார்.

**1.5.13. மன்னன் இருப்பிடத்தில் யவனர்**

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுஉடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்

*Self-Instructional Material*

புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்

திருமணி விளக்கம் காட்டி.... (59-63)

குறிப்பு

குதிரைச் சவுக்கினை மடக்கி வளைத்துக் கட்டியதால் புடைத்துத் தோன்றும் நெருக்கிக் கட்டிய ஆடையும், சட்டையும் அணிந்த அச்சம் தரும் தோற்றமும் வலிமையான உடம்பும் வீரமும் உடைய யவனர், புலிச்சங்கிலி தொங்கவிடப்பட்டு அலங்கரிக்கப்பட்ட பெருமை பொருந்திய மன்னன் இருக்கும் நல்ல இல்லத்தில் அழகிய மணி விளக்கினை ஒளிரச் செய்தனர்.

### 1.5.14. மன்னனின் பள்ளியறையில் மிலேச்சர்

.................................திண்ஞாண்

எழினி வாங்கிய ஈர்அறைப் பள்ளியுள்

உடம்பின் உரைக்கும் உரையா நாவின்

படம்புகு மிலேச்சர் உழையர் ஆக (64-67)

வலிய கயிற்றால் வளைத்துக் கட்டப்பட்ட திரைச்சீலைகள் அமைந்த இரண்டு அறைகளைக் கொண்ட மன்னனின் பள்ளியறையில் (ஓரறையில்), செய்திகளை உடலசைவால் தெரிவிக்கும் நாவால் உரைக்க முடியாத சட்டையணிந்த ஆரியர் (மிலேச்சர்) அருகாமையில் இருப்பர்.

### 1.5.15.பாசறையில் மன்னனின் மனநிலை

மண்டுஅமர் நசையொடு கண்படை பெறாஅது

எடுத்துஎறி எ.்.கம் பாய்தலின் புண்கூர்ந்து

பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்

பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமியத்

தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்

சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு

வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து

உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்

ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை

முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து (67-76)

போர் செய்வதில் கொண்ட மிக்க விருப்பத்தால் மன்னன் பள்ளியறையில் தூக்கம் கொள்ளாது (முதல் நாள் நடைபெற்ற போர்க்களக் காட்சிகளை நினைந்தபடியே) படுத்திருந்தான். பகைவர்

குறிப்பு

எடுத்தெறிந்த வேல் நுழைந்ததால் புண்பட்டு, பெண் யானைகளை மறந்திருக்கின்ற ஆண் யானைகளையும், அடியுண்ட பாம்பு துடிப்பதையும் போன்று ஆண் யானையின் பருத்த துதிக்கை வெட்டப்பட்டு வீழ்ந்து துடித்ததையும், தேன் ஒழுகும் வஞ்சி மாலைக்கு வெற்றியைத் தந்து செஞ்சோற்றுக் கடன் தீர்த்து போர்க்களத்திலே இறந்த படைவீரர்களை நினைத்தும், தோலாலான கடிவாளத்தையும், அறுத்துக் கொண்டு கூரிய முனையுடைய அம்புகள் பாய்ந்ததால் காதுகளைச் சாய்த்து உணவு உண்ணாது வருந்தும் குதிரையைப் பற்றி சிந்தித்தும் ஒரு கையினைப் படுக்கையின் மேல் ஊன்றி மற்றொரு கடகம் அணிந்த கையினால் தலையைத் தாங்கி நீண்ட நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தான் மன்னன்.

### 1.5.16. வெற்றிக்குப் பின் பாசறையில் மன்னன்

பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசுஇருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை
இன்துயில் வதியுநற் (77-80)

பகைவரைக் குறித்து படைக்கலங்களைச் செலுத்திய வலிமையான விரலாலே தன்னுடைய ஒளியைத் தங்கச் செய்யும் போருக்கு அணிந்ததாகிய வஞ்சி மாலைக்கு நல்ல வெற்றியைக் கொடுத்தமையால் மனநிறைவு பெற்று, பகையரசர் கேட்டு நடுங்க, வெற்றி முரசு முழங்க பாசறையில் (வெற்றி பெற்ற மகிழ்ச்சியில்) இனிமையாகத் துயில் கொண்டான் மன்னன்.

### 1.5.17. தலைவனைக் காணாது வருந்தும் தலைவியின் நிலை

காணாள் துயர் உழந்து
நெஞ்சு ஆற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
ஏஉறு மஞ்ஞையின் நடுங்கி இழைநெகிழ்ந்து
பாவை விளக்கில் பரூஉச்சுடர் அழல
இடம்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கு இறைச் சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்சொலி நிறைய ஆலின (80-89)

*Self-Instructional Material*

(24ஆம் அடியில் கண்ணீர்த் துளிகள் வீழத் தனிமைத் துயரில் வருந்திய தலைவி, ஈண்டும் தலைவன் வரக் காணாது வருத்தத்தில் இருக்கின்றாள்.) தலைவன் வரக் காணாது துயருற்று வருந்திய தலைவியை நெஞ்சமானது, ஆற்றியிரு என்று சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் தலைவியோ துயரத்தை மறைக்க முடியாது வருத்தத்தில் இருந்தாள். நீண்ட நேரம் சிந்தித்தாள். பின் தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள். சுழன்று விழுகின்ற வளையல்களைத் திருத்தமுற கழறாமல் அணிந்து கொண்டாள். அறிவு மயங்கியும், அவ்அறிவு மயக்கத்தால் நெகிழ்ந்தன. பாவை விளக்கின் பெரிய சுடர் எரிய, அகன்று சிறந்து உயர்ந்து விளங்கும் ஏழு அடுக்கான அழகிய வீட்டில், கூரை கூடும் இடங்களில் மழைநீர் அருவி போலச் சொரிந்தன. அதனால் ஏற்பட்ட இனிய பலவாகிய முழக்கத்தினைக் கேட்டவாறே படுத்துக் கிடக்கின்றாள் தலைவி. அத்தலைவியின் காதுகள் நிறையுமாறு ஆரவாரித்தன.

குறிப்பு

### 1.5.18. அரசன் வெற்றியுடன் மீண்டு வருதல்

வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி உயரிவலன் ஏர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப….. (89-93)

பகைவரை வென்று அவர்கள் விரும்புகின்ற நிலங்களைக் கவர்ந்து பெரிய படையோடு வெற்றிக்கொடியை உயர்த்தியபடி வெற்றியை அறிவிக்கும் வகையில் ஊது கொம்பும் சங்கும் முழங்கத் திரும்புகின்றான் தலைவன்.

### 1.5.19. கார்ப்பருவத்தில் செழித்திருக்கும் முல்லை நிலம்

……………………….அயிர
செறிஇலைக் காயா அஞ்சனம் மலர
முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தொடுஆர் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களில் (92-100)

குறிப்பு

முல்லை நிலத்து நுண்ணிய மணலில், நெருங்கிய இலைகளைக் கொண்ட காயா மலர் மை போல் மலர்ந்திருக்கவும், தளிரையும், பூங்கொத்துக்களையும் உடைய கொன்றை பொன் போன்று மலர்களைச் சொரியவும் காந்தளின் குவிந்த மொட்டுகள் அழகிய கை போல பூத்திருக்கவும், காடு செழித்திருக்கும் முல்லை நிலத்தின் பெரிய வழியிலே வானம் தப்பாமல் பெய்த மழையின் காரணமாக விளைந்த – வளைந்த கதிரினையுடைய வரகினூடே திரிந்த கொம்புகளைக் கொண்ட ஆண்மானுடன் பெண்மான் துள்ளிக் குதித்து விளையாடும். இத்தகைய முல்லைநிலத்து எதிரே செல்லும் மேகங்கள் மழையைப் பொழிகின்றதாக கார்காலம் இருந்தது.

**1.5.20. அரசனின் நெடுந்தேர் ஆரவாரம் :**

முதிர்காய் வள்ளிஅம் காடுபிறக்கு ஒழியத்
துனைபரி துரக்கும் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே (101-103)

போர் வினையை நன்கு ஆற்றிய தலைவன் முதிர் காயினையுடைய வள்ளிக்கொடி படர்ந்த காடு. பின்னோக்கிச் சென்று மறைய விரைந்து செல்லும் தேரினை விரைவாகச் செலுத்தினான். நெடுந்தேரில் பூட்டப்பட்டுள்ளக் குதிரையின் குளம்பொலி தலைவனின் வரவு பார்த்துக் காத்திருக்கும் தலைவியின் செவிகள் நிறையுமாறு ஆரவாரித்தன. (89ஆம் அடியின் பொருளை இணைக்க)

**1.5.21. நிறைவாக:**

நல்லோர் விரிச்சி கேட்டல்,மழைக்காலத்து மாலை நேரம், முதுபெண்டிர்விரிச்சிகேட்டல்,

ஆய்மகளின் நற்சொல் கேட்டலும் தலைவியை ஆற்றுவித்தலும், -பாசறை அமைத்தல்,

பாசறையில்வீரர்களின்அரண்கள்,. பாசறையில்மன்னனுக்குத்தனிஇடம், பாசறையில் மன்னனின் மனநிலை, வெற்றிக்குப் பின் பாசறையில் மன்னன், .தலைவனைக் காணாது வருந்தும் தலைவியின் நிலை, அரசன் வெற்றியுடன் மீண்டு வருதல், கார்ப்பருவத்தில் செழித்திருக்கும் முல்லை நிலம், கற்போரைப் பிடித்திழுத்துக் கனித்தமிழின் சுவையை முல்லைப்பாட்டின் வழியே மாணவர்கள் அறிகின்றனர்

**1.6. சோதித்தறியும் வினா விடைகள்.**

1. முல்லைப்பாட்டின் ஆசிரியர் யார்? குறிப்பு வரைக

**குறிப்பு**

முல்லைப்பாட்டின் ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் ஆவார். இவருடைய இயற்பெயர் பூதனாரென்பது. 'ந' சிறப்பைப் புலப்படுத்துவது. நற்றிணை, 29ஆம் செய்யுளை இயற்றிய பூதனார் இவரே போலும். இவருடைய ஊர் காவிரிப்பூம்பட்டினமென்றும், இவருடைய தந்தையார் பெயர் பொன்வாணிகனாரென்றும் வணிக குலத்தினரென்றும், பெயருக்கு முன்னுள்ள அடைமொழியால் தெரியவருகிறது. எட்டுத்தொகை முதலியவற்றில் இவரியற்றியதாக ஒன்றும் காணப்படவில்லை. காவிரிப்பூம்பட்டினத்திற் சதுக்கத்துப் பூதம் முதலிய பூதங்கள் மிக்க சிறப்புடையனவாகவும் பலரால் வழிபடத்தக்கனவாகவும் இருந்து வந்தமையின் அவற்றுள்ஒன்றை நினைந்து பூதனென்னும் பெயர் இவருக்கு இடப்பட்டது போலும்.

2. நாழிகை கணக்கர் என்போர் யார்?

நாழிகை வட்டியில் நேரத்தை அளந்தறியும் கருவி சென்றுள்ள நேரம் இவ்வளவு என்று மன்னனுக்கு கணித்துக் கூறுபவர் நாழிகை கணக்கர் எனப்படுவார்.

3. யவனரின் தோற்றப் பொலிவைக் கூறுக.

குதிரைச் சவுக்கினை மடக்கி வளைத்துக் கட்டியதால் புடைத்துத் தோன்றும் நெருக்கிக் கட்டிய ஆடையும், சட்டையும் அணிந்த அச்சம் தரும் தோற்றமும் வலிமையான உடம்பும் வீரமும் உடையவர் யவனர்.

4. கார்ப்பருவ முல்லை நில வருணனைகளை விளக்குக

………………………….அயிர
செறிஇலைக் காயா அஞ்சனம் மலர
முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தொடுஆர் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களில் (92-100)

முல்லை நிலத்து நுண்ணிய மணலில், நெருங்கிய இலைகளைக் கொண்ட காயா மலர் மை போல் மலர்ந்திருக்கவும், தளிரையும், பூங்கொத்துக்களையும் உடைய கொன்றை பொன் போன்று மலர்களைச்

குறிப்பு

சொரியவும் காந்தளின் குவிந்த மொட்டுகள் அழகிய கை போல பூத்திருக்கவும், காடு செழித்திருக்கும் முல்லை நிலத்தின் பெரிய வழியிலே வானம் தப்பாமல் பெய்த மழையின் காரணமாக விளைந்த – வளைந்த கதிரினையுடைய வரகினூடே திரிந்த கொம்புகளைக் கொண்ட ஆண்மானுடன் பெண்மான் துள்ளிக் குதித்து விளையாடும். முல்லைநிலத்து எதிரே செல்லும் மேகங்கள் மழையைப் பொழிகின்ற கார்காலமானது இவ்வாறு இருந்ததாக முல்லைப்பாட்டு தெரிவிக்கிறது.

**1.7. பயிற்சி வினா:**

1. அரசனின் நெடுந்தேர் ஆரவாரம் பற்றி விவரிக்க.

**1.8. பொருளறிக:**

1. நனந்தலை – அகன்ற இடம் 2. அலரி – மலர் 3. விரிச்சி – நற்சொல் 4. சுவள் - தோள்

5. வாய்ப்புள் - நிமித்தச்சொல் 6. பருவரல் - மனத்தடுமாற்றம் 7. எவ்வம் - துன்பம்

8. கலுழ் - மனக்கலக்கம் 9. கவலை – நாற்சந்தி 10. நாப்பண் - நடுவில்

11. சிதர் - மழைத்திவலை 12. மெய்ப்பை – சட்டை 13. உயங்கும் - துன்புறும்

14. தபு – கெடுதல் 15. வயிர் - ஊதுகொம்பு

**1.9. மேலும் படித்தறிக.**

1. ச.வே.சுப்பிரமணியன்- சங்க இலக்கியம்
பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும்
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600108

2. புலவர் கா.கோவிந்தன் -முல்லை
முல்லைப்பாட்டு விளக்கம்
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்
சென்னை – 18
1990

## பிரிவு-1- ( தொடர்ச்சி )

### கூறு 2 : எட்டுத்தொகை : ஐங்குறுநூறு

குறிப்பு

2..பாடஅமைப்பு:

2.1. அறிமுகம் - எட்டுத்தொகை

2.2. நோக்கம்:

2.3. ஐங்குறுநூறு

2.3.1. பதிப்பித்தோர்

2.3.2. சிவலிங்க ராஜா உரையின் தன்மைகள்

2.3.3. துறைசுட்டி விளக்கல்

2.3.4. பொருள் கூறுதல்

2.3.5. சொற்பொருள் விளக்கம்

2.3.6. அகப்பொருள் விளக்கம்

2.3.7. மேற்கோள் காட்டுதல்

2.3.8. இலக்கணக் குறிப்புக்கள்

2.3.9. பாடபேதம் காட்டுதல்,

2.4. ஐங்குறுநூற்றில் சில பகுதிகள்

2.5. பாடினோர் வரலாறும், தொகுத்தவரும் தொகுப்பித்தோரும்

2.5.1. கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்

2.5.2 மருதம் - ஓரம்போகியார்

2.5.3. நெய்தல் - அம்மூவன்

2.5.4. குறிஞ்சி – கபிலன்

2.5.5. பாலை – ஓதலாந்தை,

2.5.6. முல்லை – பேயனார்

2.5.7. தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்

2.5.8. தொகுப்பித்தோர் - யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையார்

2.5.9. நிறைவாக

2.6. சோதித்தறியும் வினாவிடைகள்

2.7. பயிற்சி வினா

2.8. பொருளறிக

2.9. மேலும் படித்தறிக.

குறிப்பு

**2.1.அறிமுகம்: எட்டுத்தொகை**

சங்க இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனவும், சங்கம் மருவிய கால இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் அழைக்கப்பெறும். மேற்கணக்கில் முதற்கண் தொகுக்கப் பெற்றது எட்டுத்தொகையே. அவை இன்னின்ன என்பதைப் பழம்பாட்டொன்று,

நற்றிணை, நல்ல குறுந்தொகை, **ஐங்குறுநூறு**
ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு, அகம், புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

எனப் பேசுகிறது. தொகுக்கப்பட்டமையால் இது தொகை எனப்படுகிறது. 'எண் பெருந்தொகை' எனவும்படும். இப்பெயரிட்டு எவர், எப்போது அழைத்தார் என்றறியுமாறில்லை. நன்னூல் மயிலைநாதர் (சூ.387) உரையிலும், தொல், பேராசிரிய உரையிலும் வருகின்றன. அடியளவு, பொருட்போக்கு, பாவகை எனும் முத்திறத்தது. அகம் பற்றியன 5, புறம் பற்றியன 2, இரண்டும் கொண்டது என்ற மூவகையது. அகநூல்கள் அனைத்தும் சிதையாது முழுமையுடன் கிடைத்துள்ளன. புற நூல்களோ சிதைந்தும் குறைந்தும் பாடபேதம் மிகுந்தும் உள்ளன.

எட்டுத்தொகையில் கிட்டத்தட்ட காணும் 2360 பாக்களையும் பாடியோர் 500 புலவர்கள், பல ஊரினர், பலவாய தொழிலினர், பல்வேறு காலத்தவர். அரசப் புலவோர் பலர், பெண்பாற் புலவோர் சிலர். இத்துணை பேர் பாடிய அத்துணைப் பாடல்களும், அகம் புறமெனும் இரு திணையில் அமைந்து, ஒருவரே பாடினாற் போன்ற பாங்கும் பெற்றொளிர்கின்றன. ஒரே வகை மரபு, ஒரு திற இலக்கியப் போக்கு, ஒரு நெறியாய நாகரிகம், இன்தமிழ் நாட்டில் ஒளிர்ந்த ஒண்மையினை இ∴துணர்த்துகிறது. பரியும் கலியும் போக, எஞ்சிய ஆறு நூல்களும் ஆசிரியப் பாவானும், சிலகால் வஞ்சியானும் இயன்றும் வருகின்றன. ஆசிரியம் 3 அடிச் சிறுமையும், பல நூறு அடிப்பெருமையும் உடையது.

**2.2. நோக்கம்:**

இத்தொகை, பல்வகைப் பொருள் பற்றியது. மன்னர் மறம், மகளிர் திறம், மக்கள் வழக்கமும் பழக்கமும், அறநெறி, ஐந்திணை

*Self-Instructional Material*

அருமை, ஆட்சிமுறை, வள்ளண்மை, வாழ்வு நெறி, வரலாற்றுக் கூறு, புராணச் செய்தி, போர் முறை, பண்புநிலை போன்றனவற்றை அறிதலோடு ஐந்திணை ஒழுக்கங்களைப் புகட்டுவதே நோக்கம்.

குறிப்பு

### 2.3. ஐங்குறுநூறு

ஐந்திணை ஒழுக்கங்களைத் தனித்தனியே கூறுவது இந்நூல். மூன்றடிச் சிற்றெல்லையும், ஆறடிப் பேரெல்லையும் கொண்டது. அடிவரையிற் குறைந்த நூறு. நூறுபாக்களால் ஐந்திணை ஒழுக்கங்களைத் தனித்தனியே சிறப்பிக்கின்றமையான் ஐங்குறுநூறு என்ற பெயர் ஏற்பட்டது. ஓரம்போகியார் மருதப்பாடல்களையும் அம்மூவனார் நெய்தற்பாடல்களையும், கபிலர் குறிஞ்சிப்பாடல்களையும், ஓதலாந்தையார் பாலைப் பாடல்களையும், பேயனார் முல்லைப் பாடல்களையும், பாடியுள்ளனர். ஒவ்வொரு திணையும் பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துப் பிரிவுகளை உடையது. ஒவ்வொரு பத்துக்கும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து திணைக்கும் தனித்தனியே நூறு நூறு பாடல்கள் கொண்ட, குறைந்த அடிகளையுடைய பாவால் இயன்றமையான் இப்பெயர் பெற்றது. 3-6 அடிகளையுடையது. ஒவ்வொரு நூறும் பத்துப் பத்தாகப் பிரிக்கப்பட்டு, அதன் பொருளமைதியாலோ, பயின்றுவரும் சொல்லாலோ பெயரிடப்பட்டுள்ளது. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவன் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தாகக் காட்சியளிக்கிறது. தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார், தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. பழைய உரை ஒன்றுண்டு. எழுதியவர் பெயர் தெரியவில்லை. ஐந்து திணைகளும் ஐவேறு புலவர்களால் பாடப்பட்டமையை,

"மருதம்ஓ ரம்போகி, நெய்தல்அம் மூவன்
கருதும் குறிஞ்சிக் கபிலன் - கருதிப்
பாலைஓத லாந்தை, பனிமுல்லை பேயனே
நூலைஓ துஐங்குறு நூறு

எனும் பழைய வெண்பாவால் தெளியலாம். 500 பாடல்கள் ஐந்தாக வகுக்கப்பட்டு, ஒவ்வொரு நூறும் பத்துப்பத்தாகப் பகுக்கப்பட்ட நுண்மையும், மருதத்தை முதற்கண் கொண்டொளிரும் மாண்பும் மூன்றே அடிகளில் முதல், கரு, உரி என முப்பொருளையும் குறைவறக் கூறும் முதன்மையும், பறவை விலங்கினங்களைக் கொண்டே ஐந்திணையை

Self-Instructional Material

குறிப்பு

அருமையாக விளக்கும் அழகும், இயற்கை எழிலையும், உலகப் பொருள்களின் இயல்பையும், சில சொல்லால் எடுத்துரைக்கும் ஏற்றமும், தமிழ்ச்சுவை இனிமையும் ஒருங்கே கொண்டொளிரும் உயரிய நூல். தொடர்நிலைச் செய்யுள் என்பது பொருளும் சொல்லும் ஒன்றை ஒன்று தழுவி அமையப் பெற்றிருக்கும்.

**2.3.1. பதிப்பித்தோர்**

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் 1903இல் இந்நூலை முதன்முதலாகப் பதிப்பித்தார். டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் தமது நூலில் 129, 130 ஆகிய பாடல்கள் கிடைக்கவில்லை என்றும் 416, 490 ஆகிய பாடல்களில் இரண்டாம் அடி சிதைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஐங்குறுநூற்றைப் பதிப்பித்த ஔவை துரைசாமி ஆசிரியர் சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியார் தந்த கைப்பிரதியில் 490ஆம் பாடல் முழுமையாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஔவை துரைசாமி, 416ஆம் பாடலில் இரண்டாம் அடியில் உள்ள சீரை முதலடியில் ஈற்றுச் சீராகச் சேர்த்துப் பாட்டை நான்கு அடிகளாகத் திருத்தி அமைத்துள்ளார். எனவே ஔவை துரைசாமிப் பிள்ளையின் கருத்துப்படி 129, 130 முதலிய பாடல்கள் மட்டும் கிடைக்கவில்லை எனக் கூறலாம்.

ஐங்குறுநூறு எனும் இந்நூலின் பதிப்பாசிரியர் ஈழத் தமிழறிஞர் தி.சதாசிவ ஐயர் ஆவார். 1910 முதல் 1940 வரை உள்ள காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் செல்வாக்கு மிக்க தமிழறிஞர்களுள் ஒருவராக விளங்கியவர் தி.சதாசிவ ஐயர்.

இவர் கல்வித் துறையில் கல்வியியல் ஆய்வாளராகப் (Inspector of Schools) பணியில் சேர்ந்து மாவட்டக் கல்வியியலாளராகப் (District Inspector) பணி உயர்வு பெற்று, பின்னர்ப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இப்பதவி காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றினார்.

இவருடைய இலக்கிய ஈடுபாடு போற்றத்தக்கது. கிழக்கிலங்கையிற் கல்வியியல் ஆய்வாளராகப் பணியாற்றிய பொழுது, மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் நாட்டுப்புறப்பாடல்களான வசந்தன் பாடல்களைத் தொகுத்துப் பதிப்பித்தார். அந்நூலின் பெயர் வசந்தன் கவித்திரட்டு. இலங்கை நாட்டுப்புற இலக்கியத் துறையில் தொடக்கக் காலத்தில் வெளிவந்த நூற்களில் இதுவும் ஒன்று.

சதாசிவ ஐயர் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கச் (The Jaffna Oriented Studies Society) செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

சங்கப் பணிகளைச் சிறப்பாக வழி நடத்திய இந்நிறுவனம் மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்று பண்டித, பால பண்டித, பிரவேச பண்டிதத் தேர்வுகளை நடத்திச் சான்றிதழ்களை வழங்கிற்று. யாழ்பாணத் தமிழறிஞர்கள் பலர் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கப் பண்டிதர்கள் இந்தத் தேர்வுக்கு அரசு அங்கீகாரம் அளித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனம் 'கலாநிதி' எனும் ஆராய்ச்சி இதழை வெளியிட்டது. அதன் ஆசிரியராகத் தி. சதாசிவஐயர் பணியாற்றினார். யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை முதலியோர் பதிப்புப் பணியில் முன்னோடிகளாக விளங்கினர். அவர்களைத் தொடர்ந்து அவர்கள் காலத்திற்குப் பின்னர்ப் பதிப்புப் பணியில் ஈடுபாட்டுடன் உழைத்த அறிஞர்களில் ஒருவர் தி.சதாசிவ ஐயர்.

ஐங்குறுநூறு எனும் இந்நூலில் காணப்படும் இவருடைய பதிப்புரை, இவருடைய தமிழ்க் கல்வியின் ஆழத்துக்கும் அகலத்திற்கும் எடுத்துக்காட்டாகும்.

யாழ்பாணத்திலிருந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் இந்நூலை 1943ஆம்ஆண்டு வெளியிட்டது.

டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் பதிப்பித்த ஐங்குறுநூற்றுக்குப் பழைய உரை எழுதிய உரையாசிரியர் தெரியவில்லை. அதேபோல் ஈழத்தில் வெளியிடப்பட்ட இந்த நூலின் உரையாசிரியரைப் பற்றியும் அறிய இயலவில்லை. இச்செய்தியை இந்நூலின் பதிப்புரையில் காணலாம். பதிப்பாசிரியர் தி.சதாசிவ ஐயர் இந்நூலின் எழுத்துருவை திரு.ஆ.தா.சுப்பிரமணியம் தந்ததாகவும் அதில் ஐங்குறுநூற்றின் பாடல் முழுவதற்கும் பொழிப்புரை, இலக்கணக் குறிப்பு எழுதப்பட்டு இருந்ததாகவும், எழுத்துருவைத் தந்த சுப்பிரமணியத்தின் வேண்டுகோளை ஏற்று ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக வெளியிட்டதாகவும் சுட்டியுள்ளார். இந்த எழுத்துருவைத்தந்த ஆ.தா.சுப்பிரமணியம் இந்த உரையை மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளை மாணவரான ஆறுமுகம் பிள்ளை எழுதியிருக்கலாம் எனக் கருதுகிறார். 1920இல் மதுரையில் இருந்து

வெளிவந்த ‘செந்தமிழ்’ இதழில் ஈழத்தைச் சார்ந்த தமிழறிஞர் ஆறுமுகம் பிள்ளை என்பவர் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

குறிப்பு

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் ஐங்குறுநூற்றைப் பழைய உரையுடன் வெளியிட்டார். ஆயின் ஐங்குறுநூறு முழுமைக்கும் உரையில்லை. ஐங்குறுநூறு முழுமைக்கும் முதன்முதலாக உரை எழுதியவர் இந்த நூலின் உரையாசிரியர் ஆவார். இவருக்குப் பின்னரே ஐங்குறுநூறு முழுமைக்கும் அவ்வை துரைசாமிப்பிள்ளை உரை எழுதினார். அவருடைய உரை 3 தொகுதிகளாக வெளிவந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1957ஆம் ஆண்டில் முதல் தொகுதியையும் இரண்டாம் தொகுதியையும், 1958ஆம் ஆண்டில் மூன்றாம் தொகுதியையும் வெளியிட்டது. அவ்வை துரைசாமிப் பிள்ளைக்குப் பின் பெருமழைப்புலவர் சோமசுந்தரனார் நூல் முழுமைக்கும் உரை எழுதினார். அவருடைய உரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் முதற்பதிப்பாக 1961இல் வெளியிட்டது.

**2.3.2. சிவலிங்க ராஜா உரையின் தன்மைகள்**

1. துறை சுட்டி விளக்குதல்
2. பொருள் கூறுதல்
3. சொற்பொருள் விளக்கம் கூறுதல்
4. அகப்பொருள் விளக்கம் உரைத்தல்
5. மேற்கோள் காட்டுதல்
6. இலக்கணக் குறிப்புத் தருதல்
7. பாடபேதம் சுட்டுதல்

**2.3.3. துறைசுட்டி விளக்கல்**

ஐங்குறுநூறு சுட்டும் துறைகளை முதலிற் குறிப்பிட்டு விளக்கியதன் பின்னரே இவ்வுரையாசிரியர் பொருள் கூறத் தொடங்குகிறார். அகப்பாடல்களின் திறவுகோலாயமைவது துறையேயெனலாம். நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்களும் தொல்காப்பிய உரையிலே துறை விளக்கந்தரும் இடங்களிற் பெருமளவுக்கு ஐங்குறுநூற்றுச் செய்யுட்களை மேற்கோள் காட்டி உள்ளமையும் அவதானிக்கத்தக்கது.

அகப்பொருளிலக்கண மரபு மீறாது சுட்டி விளக்கும் இவ்வுரையாசிரியர் தமக்கு ஆதாரமாகத் தொல்காப்பியத்தையே

கொண்டுள்ளார். எனினும் சிற்சில இடங்களில் இறையனார் களவியலுரையும் பிற்கால அகப்பொருளிலக்கண மரபுகளையும் உள்வாங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

குறிப்பு

ஒவ்வொரு பத்திற்கும் துறைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு விளக்குவது இவருரையின் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பு.

ஐங்குறுநூற்றுப் பழைய உரையாசிரியர் துறை சுட்டும்பொழுது விதிகாட்டி விளக்கவில்லை. ஆனால் இவர் ஒவ்வொரு பத்துக்கும் துறைசுட்டி விளக்கும் பொழுது பொருத்தமான பொருளிலக்கண விதியை மேற்கோளாகக் காட்டி விளக்கிக் கூறுகின்றார்.

தாம் சுட்டிய ஒவ்வொரு துறைக்கும் விதியமையும் இலக்கண நூற்பாத் தொடர்களை விளக்கமாகத் தந்து, அவற்றிற்குப் பொருளுமுரைத்து விளக்கியமை இவரிடம் உரையாசிரியத் தன்மையும் ஆய்வறிவுச் சிந்தனைப் போக்கும் இணைந்திருந்தமையைப் புலப்படுத்துகின்றது.

**2.3.4. பொருள் கூறுதல்**

இதன்பொருள் என்று தலைப்பிட்டுச் செய்யுள் சுட்டுகின்ற பொருளைத் தெளிவாகக் கூறுகின்றார். இப்பகுதி பொழிப்புரையின் தன்மையைக் கொண்டுள்ள போதிலும் பலவிடங்களில் விளக்கவுரைப் பாங்கினையும் கொண்டு அமைவதையும் உணரமுடிகின்றது.

பாடலின் பொருளைத் தொகுத்துப் பொழிப்புரையாகக் கூறுவதோடு தேவையானவிடத்துப் பொழிப்புரையை விரித்துப் பொருளுரைப்பதையும் காணமுடிகின்றது. பாடலைக் கொண்டுகூட்டி, எழுவாய் எடுத்துத் திரண்ட பொருளைப் பொழிப்புரையாகக் கூறுகின்றார். சிற்சில இடங்களில் எழுவாயை வருவித்துப் பொருளுரைப்பதும் உண்டு. பொழிப்புரை செறிவும் இறுக்கமும் உடையதாகக் காணப்பட்ட போதிலும் தெளிவும் விளக்கமும் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

பழையவுரையை இவ்வுரையாசிரியர் ஓரளவுக்குத் தழுவிச் சென்றுள்ள போதும் பழையவுரை கிடைக்காத பாடல்களுக்கும் சிறப்பாக உரையெழுதியுள்ளார். இவ்வுரையாசிரியரின் இலக்கிய இலக்கண ஆளுமையையும் உரை கூறுந் திறனையும் பழையவுரை கிடைக்காத பாடல்களுக்கு எழுதிய உரைமூலம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். தமது உரை பழைய உரையில் இருந்து மாறுபடும் இடங்களில் தமது உரையுடன் பழைய உரையையும் தருகின்றார்.

குறிப்பு

### 2.3.5. சொற்பொருள் விளக்கம்

இவ்வுரையாசிரியர் சொற்பொருள் சுட்டுவதிலும் அதனை விளக்கிக் கூறுவதிலும் அதிக கவனஞ் செலுத்தினார் என்று குறிப்பிடலாம்.

பொழிப்புரைக்குக் கீழே சில அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறிச் செல்கின்றார். பெரும்பாலும் அகராதிப் போக்கிலேயே அருஞ்சொற்பொருள் உரைக்கின்றார்.

சொற்பொருள் உரைக்கும் பொழுது அச்சொல் வேறு இலக்கியங்களிற் பயின்று வந்தவிடத்து அதற்குப் பண்டைய உரையாசிரியர்கள் கூறும் கருத்தினைச் சுட்டிக் காட்டுவதும் இவ்வுரையாசிரியரின் இயல்பாகும்.

சொற்களுக்குத் தனியே பொருள் கூறிய இவ்வுரையாசிரியர், சொற்பொருள் விளக்க அடிப்படையிற் சொற்றொடர்களைப் பகுத்துத் தனியே அவற்றிற்கும் பொருள் கூறிச் செல்கின்றார். சொற்பொருள் விளக்கங் கூறுவது ஒரு வகையிலே சொற்பொருள் நயம் கூறுவதாகவும் அமைகின்றதெனலாம்.

ஒரு சொற்றொடருக்குப் பொருத்தமான பல பொருளைச் சுட்டிக்காட்டி விளக்குவதும் இவ்வுரையாசிரியரின் இயல்பெனலாம். சொற்றொடர்ப் பொருளுரைக்கு மிடங்களில் விருத்தியுரைப் பாங்கும், நயவுரைப்பாங்கும் காணப்படுவதையும் உணரமுடிகின்றது.

### 2.3.6. அகப்பொருள் விளக்கம்

பாடல்கள் சுட்டும் அகப்பொருட் கூறுகளைத் தெளிவுற விளக்குவதில் இவ்வுரையாசிரியர் மிகுந்த கவனஞ் செலுத்தியுள்ளார். அகத்திணை மரபின் பல்வேறு கூறுகளையும் ஆங்காங்கே இவ்வுரையாசிரியர் விளக்கிச் செல்வதையும் காணமுடிகின்றது.

செய்யுளுக்குரிய மெய்ப்பாடும் பயனும் உரைத்துச் செல்கின்றார். பாடலின் பொருட் பரப்பை மனங்கொண்டு அகப்பொருட் கூறுகளை விரித்துரைப்பதுண்டு.

பொருளிலக்கணப் பரப்பிலே சர்ச்சைக்குரியதாகக் காணப்படும் சில பகுதிகளைச் சுட்டிக்காட்டித் தமது கருத்தினை முன்வைப்பதனையும் இவரது உரையினூடு காண முடிகின்றது. தமது கருத்துக்கு ஆதாரமாக அகப்பொருள் இலக்கண விதிகளையும், பண்டைய உரையாசிரியர்களின் கருத்துக்களையும் சுட்டிக் காட்டுவதும் இவரது உரையின் தன்மையாகும்.

ஒவ்வொரு திணையையும் அறிமுகம் செய்யும் பொழுது மிக விரிவாக அவற்றின் கூறுகளைத் தெளிவுபடுத்துகின்றார். ஒவ்வொரு திணையின் முதற்பாடலை விளக்கும் பொழுது அகப்பொருட் கூறுகள் பலவற்றைத் தொகுத்து விளக்கம் தருகிறார்.

அகப்பொருள் விளக்கம் கூறுமிடங்களில், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் வழியும், பண்டைய உரையாசிரியர்கள் வழியும் நின்றே தம் கருத்தைக் கூறிச் செல்கிறார். தமது உரையினூடு அகப்பொருள் மரபு பற்றி நிலவும் கருத்து வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டிச் செல்வதும் இவரது வழக்கமாகும்.

சில பாடல்களுக்கு மிகச் சுருக்கமாகத் தாம் கருதியவற்றை விரித்துரைத்துச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு பாடலுக்கும் மெய்ப்பாடும் பயனும் கூறிச் செல்வது இவ்வுரையின் சிறப்பம்சமெனலாம்.

துறை சுட்டி விளக்குதல் முதல், மெய்ப்பாடும் பயனும் கூறுகின்ற வரை, அகப்பொருள் மரபின் பல்வேறு கூறுகளையும் தெளிவாகவும் தேவை நோக்கி விரிவாகவும் கூறிச் செல்வது இவ்வுரையாசிரியரின் பொதுப் பண்பெனலாம்.

**2.3.7.மேற்கோள் காட்டுதல்**

துறைசுட்டி விளக்கல், பொருள் கூறுதல், அகப்பொருள் விளக்கம் உரைத்தல், இலக்கணக் குறிப்புகள் தருதல் முதலான அம்சங்களிலே உரை வகுத்துள்ள இவ்வுரையாசிரியர் இவ்வொவ்வோர் அம்சங்களுக்கும் பொருத்தமான மேற்கோள்களைக் காட்டியே விளக்கிக் கூறியுள்ளார். அவ்வக் குறிப்புக்களை விளக்குமிடங்களிலே உதாரணங்கள் சுட்டிக் காட்டப்பட்டள்ளன.

பொருள் விளக்கத்திற்கு மாத்திரமின்றி ஒப்பீட்டு அடிப்படையிலே ஐங்குறுநூற்றுச் செய்யுள்களை ஆய்ந்தறியவும் இவர் காட்டும் மேற்கோள்கள் உதவுகின்றன எனலாம்.

ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துணர்த்தும் எனத் தாம் கருதியவிடத்து, அச்சொல் வேறு பொருளில் வழங்கும் பொருளை விளக்கும் இலக்கியத்தை மேற்கோளாகச் சுட்டிக் காட்டுவதும் இவ்வுரையாசிரியரின் இயல்பு.

இலக்கிய இலக்கண நூல்களிலிருந்து மேற்கோள் காட்டித் தம் மதம் நிறுவியது போலவே பண்டைய உரையாசிரியர்களையும்

குறிப்பு

பல்வேறிடங்களிலும் மேற்கோள் காட்டித் தம் கருத்தினை அரண் செய்கின்றார்.

**2.3.8. இலக்கணக் குறிப்புக்கள்**

ஐங்குறுநூறு சுட்டும் பொருளிலக்கண மரபுகளைத் தகுந்த மேற்கோளுடன் புலப்படுத்தியது போலவே செய்யுளிற் பயின்றுவரும் எழுத்திலக்கண, சொல்லிலக்கணக் கூறுகளையும் பொருத்தமான மேற்கோளுடன் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். எழுத்திலக்கணக் குறிப்புகளைக் காட்டிலும், பொருளிலக்கணத்திற்கு அடுத்தபடியாகச் சொல்லிலக்கணக் கூறுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார்.

வேற்றுமை, வேற்றுமை மயக்கம், எச்சங்கள், அசை, இடைச்சொல், ஆகுபெயர் முதலானவை பற்றித் தெளிவான நுட்பமான குறிப்புகளைக் கூறிச் செல்கின்றார். யாப்பிலக்கணம் பற்றிய குறிப்புகளும் தந்துள்ளார்.

செய்யுளின் பொருளை விளங்கிக் கொள்ளவும் செய்யுளின் நயத்தை உணர்ந்து கொள்ளவும் இலக்கணக் குறிப்புகள் இவ்வுரையாசிரியர், செய்யுளைத் திறனாய்வு நோக்கிலே பார்த்து மூல நூற்பாவை விமரிசிக்கும் போக்கிலேயும் இலக்கணக் குறிப்புகளைக் கூறியுள்ளார்.

மிக நுட்பமான மேற்கோள்களுடன் குறிப்பிடுவது இவ்வுரையாசிரியரின் இலக்கணப் புலமையைத் தெளிவுபடுத்துகின்றது.

**2.3.9. பாடபேதம் காட்டுதல்**

இவர் குறிப்பிடும் பாடபேதங்களிற் பெரும்பாலானவை 1920ஆம் ஆண்டு வெளிவந்த உ.வே.சாவின் பதிப்பிலே பிரதிபேதம் என்று அடிக்குறிப்பாகக் குறிப்பிடப்பட்டவையேயாகும். உ.வே.சா பதிப்பிலே இடம்பெறாத பாடபேதங்களையும் ஈழத்து உரையாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருமளவுக்கு உ.வே.சா சரியான பாடம் எனக் கொண்டவற்றையே இவ்வுரையாசிரியரும் சரியான பாடமாகக் கொள்கிறார். எனினும் சிலவிடங்களில் உரைவழி நின்று பாடபேதங்களைச் சுட்டிச் சரியான பாடம் எது வென நிறுவ முயலுகின்றார்.

தாம் பொருத்தமான பாடம் எனக் கருதிய பிரதிபேதங்களுக்கே இவ்வுரையாசிரியர் பொருள்கூறும் இயல்புடையவராகக் காணப்படுகின்றார்.

பொருத்தமின்று எனத் தாம் கருதிய பிரதிபேதங்களை, ‘என்றும் பாடம்’, ‘எனவும் பாடம்’ எனக் குறிப்பிட்டுப் பொருளுரைக்காது விட்டு விடுவதும் இவரது இயல்பாகும்.

குறிப்பு

பிரதிபேதமாக வரும் பாடங்களின் பொருந்தாமையைத் தக்க சான்றுகாட்டிப் பலவிடங்களில் மறுத்துரைக்கும் தன்மையும் இவ்வுரையாசிரியரிடம் காணப்படகின்றது. உ.வே.சா பதிப்பிலே அடிக்குறிப்பாக வந்த பிரதிபேதங்கள் யாவற்றிற்கும் ஏதோ ஒருவகையிலே இவ்வுரையாசிரியர் விளக்கம் கொடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இந்த வகையிலே ஈழத்து உரையாசிரியரும் ஐங்குறுநூற்றிற்கு குறிப்பிடக்கூடிய பாடபேதங்களைச் சுட்டிக் காட்டியவராகிறார்.

**2.4. ஐங்குறுநூற்றில் சில பகுதிகள்**

தலைவியை உடனழைத்துச் சென்று தன்னூரில் திருமணம் செய்து கொள்கிறான் தலைவன். தலைவியின் பெற்றோர், இருவரையும் தம்மூருக்கு அழைத்தனர். அவர்களும் வந்தனர். இதுகாறும் தலைவியைப் பிரிந்த தோழி அவளைத் தழுவி, அவளது புதுவாழ்வினைப் பற்றி அறிய அவா மிகக் கொண்டு செய்தியை வாங்குவதற்காக, ‘ஆமாம் தலைவி! உன் தலைவர் நாட்டகத்து உண்ணுதற்கு ஏதும் இல்லையாமே? அங்கு எப்படி வாழ முடிந்தது, என்கிறாள். தலைவியும், ஆம் தோழி, நீ செப்பியதுண்மையெ! ஆங்கு வகையான நீர்நிலைகூட இல்லை, இருப்பவை கூட இலைதழை விழுந்தமையால் அழுகியும், மான் போன்ற விலங்குகள் குடிப்பதால் கலங்கியும் இருக்கின்றன. இருப்பினும் அந்த அருவருக்கத்தக்க எச்சில் நீரும் எத்துணை இனிமையுடையது தெரியுமா? நம் தோட்டத்துத் தேனினைத் தீம்பாலுடன் கலந்து உண்டால் எப்படி இருக்கும் அப்படி இனித்தது எனப் பதிலளித்தாள். காதலன்பு கனிந்திருக்குமிடத்தில், வேறு எப்பொருள் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் தான் என்ன? எல்லாம் இருப்பதாகவன்றோ இதயம் மகிழும்! அன்பின் திறம் தான் என்னே! இதோ அவ்வினிய பாடல்.

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பை
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவற் கீழ்
மானுண் டெஞ்சிய கலுழி நீரே (203)

குறிப்பு

இந்திர விழா (62), மார்கழி நீராடல் (84), தொண்டி (171), கொற்கை (185) பற்றிய செய்திகளும் வருகின்றன.

### 2.5. பாடினோர் வரலாறும், தொகுத்தவரும், தொகுப்பித்தோரும்

கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார், மருதம் - ஓரம்போகியார், நெய்தல் - அம்மூவன், குறிஞ்சி – கபிலன், பாலை – ஓதலாந்தை, முல்லை – பேயனார், தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர்கிழார், தொகுப்பித்தோர் - யானைக்கட் சேய் மாதரஞ்சேரலிரும்பொறை

### 2.5.1. கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்

இந்நூலிற் கடவுள் வாழ்த்தியற்றிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். உரைநடை இயற்றுதலிலும் செய்யுள் செய்தலிலும் மிக்க ஆற்றலுடையவர். இவர் பிறந்த இடம் தொண்டைநாடு. இது,

சீருறும் பாடல்பன் னீரா யிருமுஞ் செழுந்தமிழுக்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி லேற்றிய வித்தகனார்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ சிடுந்தொண்டை மண்டலமே

என்னும் தொண்டைமண்ட சதகச் செய்யுளால் விளங்குகின்றது.

பெருந்தேவனாரென்பது இவரது இயற்பெயர். இ∴து இவரியற்றிய பாரதச் செய்யுளைத் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்துக்காட்டும் இடங்களில் நச்சினார்க்கினியர், "இச்செய்யுள் பெருந்தேவனாரியற்றியது" என்று புலப்படுத்தியிருத்தலால் துணியப்படும் பாரதத்தை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றியதனாற் பாரதம் பாடிய பெருந்தேவனாரென்றும் இவர் வழங்கப்படுவர். இவருடைய பாரதச் செய்யுட்கள் தொல்காப்பியப் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரையிலன்றி யாப்பெருங்கலவிருத்தி முதலியவற்றிலும் மேற்கோளாக அமைந்த பெருமை வாய்ந்தவை.

திருவள்ளுவ மாலையிலுள்ள 'எப்பொருளும் யாரும்' என்னும் வெண்பா இவர் இயற்றியதாகத் தெரிகிறது.

இவர் இயற்றிய கடவுள் வாழ்த்துக்களுள் ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு இவற்றிலுள்ளவை சிவபெருமான் துதிகளாகவும், நற்றிணையிலுள்ளது திருமால் துதியாகவும், குறுந்தொகையிலுள்ளது முருகக்கடவுள் துதியாகவும் உள்ளனவாதலால் இவருடைய கடவுள் வழிபாடும் கொள்கையும் இன்னவெனத் துணிந்து சொல்லக் கூடவில்லை.

இவருடைய கடவுள் வாழ்த்துக்கள் நற்றிணை முதலிய தொகை நூல்களின் முன்னர் வைக்கப் பெற்றிருத்தலும், ஐந்தாமறையாகிய பாரதத்தை இவரியற்றியிருத்தலும் இவருடைய முதன்மையையும் கல்விப் பெருமையையும் நன்கு விளக்கும்.

மேற்கூறிய கடவுள் வாழ்த்துச் செய்யுட்களையும், பாரத வெண்பாவையும், திருவள்ளுவமாலைச் செய்யுளையுமன்றி இவர் செய்தனவாக அகநானூற்றில் ஒரு செய்யுளும், நற்றிணையில் ஒன்றும் இப்பொழுது தெரிகின்றன.

**2.5.2. மருதம் - ஓரம்போகியார்**

இந்நூலின் முதல் நூறாகிய மருதத்தைப் பாடிய இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் பெயர் ஓரம்போதியார் என்றும், ஓரம்போகியார் என்றும், ஒன்னார் உழவர் என்றும், காம்போதியார் என்றும் பிரதிகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவர் மருதத்திணையின் வளங்களை உள்ளுறை யுவமை, இறைச்சி முதலிய நயங்கள் தோன்ற விளங்கப்பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர்.

இவரால் பாடப்பெற்றவர் ஐவர். அவர்களுள் முடிமன்னர் மூவர். (1). சேரமான்களில் ஆதன் அவினி என்பவன் (ஐங்.முதற்பத்து), (2). வெல்போர்ச் சோழன் கடுமான் கிள்ளி (56, 78), (3). பாண்டியன் (54), உபகாரிகள் இருவர் (1). விரா அன் (58), (2). மத்தி (61).

இவர் பாடலில் வந்துள்ள ஊர்கள் நான்கு. (1). தேனூர் (54-5, 57), (2). ஆமூர் (56), (3). இருப்பை (58), (4). கழார் (61). இவற்றுள் தேனூரை வேனிலாயினும் தண்புனல் ஒழுகும் தேனூரென்றும், பாண்டியன் தேனூரென்றும், கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும் தேனூரென்றும், வேள்விகள் மலிந்த தேனூரென்றும் மற்ற ஊர்களிலும் சிறப்பாகப் பாராட்டுதலை நோக்கும்போது இவருக்கு இவ்வூரின்கண் ஏதேனும் நெருங்கிய பற்று இருக்கலாமென்று தோற்றுகிறது.

நதிகளில் காவிரி (42)யும், வையை (7)யும், இந்திர விழாவும் (62), தைந்நீராடும் விதமும் (84) இவரால் குறிக்கப்பெற்றுள்ளன.

இவர் பாடியவை: ஐங்குறுநூற்றில் முதல் நூறு (100), நற்றிணையில் இரண்டு (20, 360), குறுந்தொகையில் ஐந்து (10, 70, 122, 127, 384), அகநானூற்றில் இரண்டு (286, 316), புறநானூற்றில் ஒன்று . ஆக மொத்தம் 110 செய்யுட்கள் இயற்றியுள்ளார்.

குறிப்பு

**2.5.3. நெய்தல் - அம்மூவனார்**

இந்நூலின் இரண்டாம் நூறாகிய நெய்தற்றிணையைப் பாடிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் இடுகுறியோ காரணக் குறியோ யாதும் புலப்படவில்லை. நற்றிணை 18ஆம் செய்யுளிலும், புறநானூறு 209ஆம் செய்யுளின் பின்னுள்ள வாக்கியத்திலும் மூவனென்ற ஓர் உபகாரியின் பெயர் வந்திருத்தலால் மூவனென்ற பெயரொன்று பண்டைக்காலத்தில் வழங்கிவந்ததென்று தெரிகிறது. இவர் நெய்தற்றிணையில் மிகப்பயின்றவர். அதன் வளங்களை விளங்கப்பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர். தமிழ்நாட்டரசர்களுள் சேரன், பாண்டியன் என்னும் முடியுடைவேந்தர் இருவராலும், திருக்கோவலூரை ஆண்ட காரியென்னும் வள்ளலாலும் ஆதரிக்கப் பெற்றவர். சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டி நகரமும், அந்நாட்டின் கண்ணதாகிய மாந்தை நகரமும், பாண்டி நாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய கொற்கை நகரமும், நடுநாட்டின் கண்ணதாகிய கோவலூரும் இந்நூலிலும் பிற தொகை நூல்களிலும் இவராற் பாடப்பெற்றிருத்தலின், இவர் அந்நகரங்களில் இருந்தவரென்றும், இவர் காலத்தில் அவைகள் மிக விளக்கமுற்றிருந்தனவென்றும் கூறலாம். அகநானூறு 35ஆம் செய்யுளில் பெண்ணையாற்றை இவர் சிறப்பித்திருக்கின்றார்.

எட்டுத்தொகையில் இவரியற்றிய செய்யுட்கள் - 127. நற்றிணை - 10, குறுந்தொகை – 11, இந்நூலில் நெய்தல் - 100, அகநானூறு – 6. நற்றிணை முதலிய ஏனைத் தொகை நூல்களிலுள்ள 27 பாடல்களிலும் நெய்தற்குறியன பல.

குறுந்தொகையில் பல இடங்களில் இவர் பெயர் அம்மூவன் என்றே காணப்படுகிறது.

**2.5.4. கபிலர் - குறிஞ்சி**

கபிலர் பற்றிய விரிவான விளக்கம் அடுத்த கூறில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

**2.5.5. பாலை – ஓதலாந்தை**

இந்நூலின் நான்காம் நூறாகிய பாலைத்திணையைப் பாடிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். ஆதன் தந்தையென்பது ஆந்தை யென்று மருவியதென்பது பழைய உரையாசிரியர்களுடைய கொள்கை. பாலைத்திணை இயல்பை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர்.

குறுந்தொகையில் 3ஆம் பாடலும், இந்நூல் பாலையில் 100 பாடல்களும் இவரியற்றிய செய்யுட்கள்.

பாலைத் திணையில் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பயின்று வருவனவாயினும், 'தலைவி தலைவனை மணந்து அவனுடன் இனியளாய் இன்று வரும்' எனக் கேட்ட செவிலி அதனை நற்றாய்க்குக் கூறும் செய்யுளில் ஈற்றில் அமைத்து இத்திணைக்கு மங்கல முடிபு கொடுத்திருத்தல் மிக அழகாயுள்ளது.

**குறிப்பு**

### 2.5.6.முல்லை – பேயனார்

இந்நூலின் ஐந்தாம் நூறாகிய முல்லைத் திணையைப் பாடிய இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். முல்லைத் திணை வளங்களை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலுடையவர். மற்றத் தொகைகளுள்ளே குறுந்தொகையில் மட்டும் 4 பாக்கள் இவர் செய்தனவாக உள்ளன. அவற்றுள் மூன்று செய்யுட்கள் முல்லைத் திணையைக் குறித்தனவே. பேயனென்றும், பேயாரென்றும் இவர் பெயர் பிரதிகளிற் காணப்படுகின்றது. யாப்பெருங்கல விருத்தியுரையில்,

கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சாந்தைத் தொட் டப்பேய்
மறைக்குமோ மாட்டாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் கூர்ங்கத்தி கொண்டு

என்னும் வெண்பாவை மேற்கோளாக எடுத்துக்காட்டிய அந்நூலுரையாசிரியர், 'இது பூதத்தாரும் காரைக்காற் பேயாரும் பாடியது. இதுவும் இரண்டாமடி குறைந்து வந்தது கண்டு கொள்க என்று எழுதியிருத்தலாற் காரைக்காற் பேயாரென்று ஒருவர் பண்டைக் காலத்திற் பாடும் வன்மையுள்ளவராக இருந்தாரென்ற மட்டும் தெரிகின்றது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ யாதும் புலப்படவில்லை.

### 2.5.7. தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்

இத்தொகை நூலைத் தொகுத்த இவர் மலைநாட்டின் கண்ணதாகிய கூடலூரை இருப்பிடமாக உடையவர். இவர் வேளாண் மரபினர். இவருடைய பாடல்கள் இன்சுவையைத் தருபவை. ஒரு விண்மீனின் வீழ்ச்சியைக் கண்டு கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்னும் அரசன் இன்ன நாளில்

குறிப்பு

இறப்பானென்று முதலில் நிச்சயித்திருந்த அவ்வாறே அவன் இறந்தது கண்டு ஒருவாற்றானும் பிரிவாற்றானும் வருந்தினாரென்று. ‘ஆடியழற் குட்டத்து’ (புறநானூறு.229) என்னும் பாடலாலும், அதன் பின்னுள்ள வாக்கியங்களாலும் தெரிதலால், இவர் கணிதத்திலும் வல்லவராகக் கருதப்படுகிறார். இவர் மேற்கூறிய அரசனால் மிக ஆதரிக்கப் பெற்றவர். அவன் வேண்டுகோளால் ஐங்குறுநூறென்னும் தொகை நூலைத் தொகுத்தனர். இந்நூலின் இறுதி வாக்கியத்தில் ‘புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்’ என ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப்பெற்றிருத்தலின், இவருடைய பெரும்புலமை நன்கு வெளியாகின்றது. இவர் காலத்துப் புலவர்கள் குறுங்கோழியூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார் என்பவர்கள். முதுமொழிக்காஞ்சியை இயற்றிய மதுரைக் கூடலூர்கிழார் என்பவர் வேறு. இவர் இயற்றிய வேறு பாடல்கள் 4. குறுந்.3, புறநா.1.

**2.5.8. தொகுப்பித்தோர் - யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையார்**

புலத்துறை முற்றிய கூடலூரைத் கிழாரைக் கொண்டு இந்நூலைத் தொகுப்பித்தோராகிய இவர் சேரநாட்டரசர், சேர பரம்பரையிற் பிறந்தவர்.மகா வீரர், பெருவண்மையையுடையவர், செங்கோலினர், யானையினது பார்வை போலும் பார்வையுடையவர். கொல்லி மலைக்குத் தலைவர், விளங்கிலென்னும் ஊருக்குப் பகைவரான் வந்த துன்பத்தைத் தீர்த்தவர். கபிலருடைய நண்பர். கடற்கரையிலுள்ள தொண்டியென்னும் நகரத்தை ஆண்டவர். ஒரு காலத்துப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு போர் செய்து அவனாற் பிணிப்புண்டிருந்து வலிதிற் போய்ச் சிங்காதனத்திலேறிக் குறுங்கோழியூர் கிழாராற் புகழ்ந்து பாடப்பெற்றார். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர் செய்தவர். இவர் பெயர் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையெனவும், சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறையெனவும், மாந்தரம் பொறையெனவும் தொகை நூல்களில் வழங்குகின்றது. சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை யென்பதனை ஒட்டுப்பெயரென்பர்.

### 2.5.9. நிறைவாக:

ஒரு பொருளைப் பற்றி விரித்துப் பாடுவது மிகவும் எளிது. ஆனால் சுருக்கமாகப் பாடுவது கடினம். ஐங்குறுநூறு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தியைப் பின்பற்றி இயற்றப்பட்ட பாடல்களைக் கொண்ட நூலாகும். இந்நூலுள் உள்ளுறை, இறைச்சி முதலியவை சிறப்பாக ஆளப்பட்டுள்ளன என்பதை இக்கூறு நமக்கு உணர்த்துகின்றது.

### 2.6. சோதித்தறியும் வினாவிடைகள்.

1. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவன், தொகுப்பித்தோன் பெயரைச் சுட்டுக.

தொகுத்தவன் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். தொகுப்பித்தோன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையார்.

2. ஐங்குறுநூற்றைப் பாடியோர் பற்றிக் குறிப்பிடுக.

மருதம் - ஓரம்போகியார்

நெய்தல் - அம்மூவன்

குறிஞ்சி – கபிலன்

பாலை – ஓதலாந்தை

முல்லை – பேயனார்

3. ஐங்குறுநூற்றைப் பதிப்பித்தோர் யாவர்?

1903இல் ஐங்குறுநூற்றை முதன்முதலாகப் பதிப்பித்தவர் உ.வே.சாமிநாத ஐயர் ஆவார். அதன் பின்னர் ஔவை துரைசாமிப் பிள்ளை. ஈழத் தமிழறிஞர் தி.சதாசிவ ஐயர் ஆகியோராவர்.

4. ஐங்குறுநூற்றைப் பற்றி விளக்குக

ஐந்து திணைக்கும் தனித்தனியே நூறு நூறு பாடல்கள் கொண்ட, குறைந்த அடிகளையுடைய பாவால் இயன்றமையான் இப்பெயர் பெற்றது. 3-6 அடிகளையுடையது. ஒவ்வொரு நூறும் பத்துப் பத்தாகப் பிரிக்கப்பட்டு, அதன் பொருளமைதியாலோ, பயின்றுவரும் சொல்லாலோ பெயரிடப்பட்டுள்ளது. பாரதம் பாடிய பெருந்தேவனாரின் சிவன் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தாகக் காட்சியளிக்கிறது. தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார், தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாதரஞ்சேரல் இரும்பொறை. புழைய உரை ஒன்றுண்டு. எழுதியவர் பெயர் தெரியவில்லை. ஐந்து திணைகளும் ஐவேறு புலவர்களால் பாடப்பட்டமையை,

குறிப்பு

"மருதம்ஓ ரம்போகி, நெய்தல்அம் மூவன்
கருதும் குறிஞ்சிக் கபிலன் - கருதிப்
பாலைஓத லாந்தை, பனிமுல்லை பேயனே
நூலைஓ துஜங்குறு நூறு

எனும் பழைய வெண்பாவால் தெளியலாம். 500 பாடல்கள் ஐந்தாக வகுக்கப்பட்டு, ஒவ்வொரு நூறும் பத்துப்பத்தாகப் பகுக்கப்பட்ட நுண்மையும், மருதத்தை முதற்கண் கொண்டொளிரும் மாண்பும் மூன்றே அடிகளில் முதல், கரு, உரி என முப்பொருளையும் குறைவறக் கூறும் முதன்மையும், பறவை விலங்கினங்களைக் கொண்டே ஐந்திணையை அருமையாக விளக்கும் அழகும், இயற்கை எழிலையும், உலகப் பொருள்களின் இயல்பையும், சில சொல்லால் எடுத்துரைக்கும் ஏற்றமும், தமிழ்ச்சுவை இனிமையும் ஒருங்கே கொண்டொளிரும் உயரிய நூல். தொடர்நிலைச் செய்யுள் என்பது பொருளும் சொல்லும் ஒன்றை ஒன்று தழுவி அமையப் பெற்றிருக்கும்.

ஒரு பொருளைப் பற்றி விரித்துப் பாடுவது மிகவும் எளிது. ஆனால் சுருக்கமாகப் பாடுவது கடினம். ஐங்குறுநூறு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தியைப் பின்பற்றி இயற்றப்பட்ட பாடல்களைக் கொண்ட நூலாகும். இந்நூலுள் உள்ளுறை, இறைச்சி முதலியவை சிறப்பாக ஆளப்பட்டுள்ளன.

**2.7. பயிற்சி வினா**

1. ஐங்குறுநூறு சுட்டும் துறைகளை விவரிக்க.

**2.8. பொருளறிக**

1. படப்பை - தோட்டம், 2. உவலை – தழை, 3. கூவல் - கிணறு, 4. கலிழி – கலங்கிய, 5. நீர் எஞ்சிய – மிஞ்சி நின்ற.

குறிப்பு

**2.9. மேலும் படித்தறிக.**


1. ச.வே.சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் எட்டுத்தொகை
   மூலமும் தெளிவுரையும்
   தொகுதி 1
   மணிவாசகர் பதிப்பகம்
   சென்னை – 600 018
   பதிப்பு 2010

2. தி.சதாசிவ ஐயர் - ஐங்குறுநூறு
   மூலமும் உரையும்
   உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
   தரமணி
   சென்னை – 600 113


## பிரிவு-1- ( தொடர்ச்சி )

## கூறு 3: கபிலர்

**3. பாடஅமைப்பு:**

**3.1. அறிமுகம் - கபிலர்**

**3.2. நோக்கம்**

**3.3. பெரும்புலமையும் நட்பின் பெருமையும்**

**3.4. கபிலரால் பாடப் பெற்றோர்**

**3.5. குறிஞ்சித் திணை**

**3.6. குறிஞ்சித் திணையின் முப்பொருள்கள்**

**3.6.1. முதற்பொருள்**

**3.6.2. கருப்பொருள்கள்**

**3.6.3. உரிப்பொருள்**

**3.7. முதற்பொருள் வெளிப்பாடு**

**3.7.1. நிலம்**

**3.7.2. பொழுது**

**3.8. கருப்பொருள்கள் வெளிப்பாடு**

குறிப்பு

3.8.1. தெய்வம் - முருகன்
3.8.2. மக்கள் - சிலம்பன்
3.8.3. பறவை: கிளி, மயில்
3.8.4. விலங்கு: புலி
3.8.5. மரம், பூ
3.8.6 தொழில்
3.9. உரிப்பொருள் வெளிப்பாடு
3.10. குறிஞ்சித் திணையின் சிறப்புகள்
3.10.1 .அறத்தொடு நிற்றல்
3.10.2 .வரைவு கடாதல்
3.10.3. இற்செறிப்பும் இரவுக் குறியும்
3.10.4. குறிஞ்சியைப் போற்றல்
3.10.5. குறிகேட்டல்
3.10.6. தினைப்புனம் காத்தல்
3.11. இலக்கிய நயங்கள்
3.11.1. கற்பனை
3.11.2. சொல்லாட்சி
3.11.3. உவமை
3.11.4. உள்ளுறை
3.11.5. இறைச்சி
3.11.6. நிறைவாக
3.12. சோதித்தறியும் வினாவிடைகள்
3.13. பயிற்சி வினா
3.14. பொருளறிக
3.15. மேலும் படித்தறிக.

### 3.1.அறிமுகம் - கபிலர்

• ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணையைப் பாடியவர் கபிலர் ஆவார். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். கபிலரென்னும் பெயருள்ள முனிவர் சிலருண்டு. அவருள் எவருடைய பெயர் இவருக்கு இடப்பட்டதோ அது விளங்கவில்லை. இவர் பிறந்த ஊர் பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூர். இது 'நீதிமா மதூக நீழ' னெட்டிலையிருப்பை யென்றோர்.'. காதல்கூர் பனுவர் பாடுங் கபிலனார் பிறந்த மூதூர். சோதிசேர் வகுள நீழற்

குறிப்பு

சிலம்பொலி துளங்கக் காட்டும். வேதநாயகனார் வாழும் வியன்றிரு வாத வூரால் (திருவால:27:4) என்பதனால் வெளியாகின்றது. இவர் அந்தண வருணத்தினர். 'யானே பரிசிலன் மன்னு மந்தணன், யானே தந்தை தோழனிவரென் மகளிர், அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே' (புறநா. 200, 201) எனத் தம்மைப் புலப்படுத்துவதற்காக இவர் கூறிய செய்யுட்களும், "புலனழுக்கற்ற அந்த ணாளன்" (புறநா.126) என மாறோக்கத்து நப்பசலையார் இவரைப் பாராட்டிக் கூறிய செய்யுளும் இதனைப் புலப்படுத்தும்.

### 3.2. நோக்கம்:

மன வாக்குக் காயங்களின் தூய்மையும் அறம்புரி கொள்கையும் பெரும்புலமையும் அன்புடைமையும் நட்பின் பெருமையும் பெற்ற கபிலா் பற்றி மாணவா்களை அறியச் செய்தலே நோக்கமாகும்.

### 3..3. பெரும்புலமையும் நட்பின் பெருமையும்

வேள்பாரியின் உயிர் நண்பரும் அவன் அவைக்களத்துப் புலவருமாக இவர் விளங்கினார். தம் மகளிரை மணஞ் செய்து கோடற்குத் தாம் விரும்பியபடி அவன் கொடாதது பற்றிச் சினந்து தமிழ்நாட்டு மூவேந்தரும் பெரும் போர் செய்ய நினைந்து நால்வகைச் சேனைகளோடும் அவன் மலையைச் சூழ்ந்த போது அவர்களைச் சிறிதும் மதியாது அவனுடைய அருமைக் குணங்களைப் புலப்படுத்திப் பாடினார். அவற்றைப் புறநானூற்றிற் காணலாம். அவனிறந்த பின்பு, இவர் மனமுருகிப் பல செய்யுட்களாற் புலம்பி, அவன் புதல்வியரை அழைத்துச் சென்று மணஞ் செய்து கொள்ளும்படி இருங்கோவேள், விச்சிக்கோன் என்பவர்களை வேண்ட மறுத்தமை கண்டு அவர்களை வெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப்பார்க்கு வாழ்க்கைப் படுத்திவிட்டு வந்து தம்முடைய நட்புக்கடனைக் கழித்தனர்.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் குறிஞ்சிப்பாட்டை இயற்றினார். பதிற்றுப் பத்தில் 7ஆம் பத்தைப் பாடிச் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் நூறாயிரங் காணமும் அவன் நன்றாவென்னும் ஒரு மலை மீது ஏறிக் கண்டுகொடுத்த நாடும் பரிசிலாகப் பெற்றனர்.

குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய இன்னாநாற்பதும், கலித்தொகையில் இரண்டாவதாகிய குறிஞ்சியிலுள்ள கலிப்பாக்களும் இவர் இயற்றினவே. இவர் குறிஞ்சித் திணையில் மிக பயின்றவரென்றும், அதன் வளங்களை விளங்கப் பாடுதலிற் பேராற்றலுடையவரென்று இவர் இயற்றிய செய்யுட்கள் புலப்படுத்தும்.

இவரருளிச் செய்தனவாக 278 பாடல்கள் (நற்.20, குறுந்.29, கலி.29, ஐங்.100, பதிற்.10, அகநா.16, புறநா.30, குறிஞ்சி.1, 'நெட்டிலை யிருப்பை' என்பது.1, திருவள்ளுவ.1, இன்னா நாற்பது.41) இப்பொழுது கிடைக்கின்றன. கபிலர் பாடல்களில் ஆசிரியப்பாவால் அமைந்த பாடல்களே அதிகம்.

பன்னிரு பாட்டியலில் இவர் பெயரினோடு சில சூத்திரங்கள் காணப்படுகின்றன. இவருடைய வாக்கில் விநாயகக் கடவுள், முருகக் கடவுள், சிவபெருமான், பலதேவர், திருமால் இவர்களுடைய துதிகள் வந்திருக்கின்றன. இதனால் இவர் சமயக் கோட்பாட்டிற் பாரதம் பாடிய பெருந்தேவனாரைப் போன்றவராக எண்ணப்படுகிறார்.

### 3.4. கபிலரால் பாடப்பெற்றோர்

அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை, நள்ளி, மலையமான் திருமுடிக்காரி, மலையன், விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக் கோப்பெரும்பேகன் என்பவர்கள். கொல்லி மலை, பறம்புநாடு, பறம்புமலை, முள்ளூர் மலை, முள்ளூர்க்கான மென்பவைகள் இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின், அவை இக்காலத்தில் விளக்கமுற்றிருந்தவென்றும், இவர் பழகிய இடங்களென்றும் சொல்லலாம். நட்பு, வண்மை, நன்றி மறவாமை என்பனவற்றை இவருடைய செய்யுள்களிற் காணலாம்.

பழைய இலக்கண உரைகளில் வந்துள்ள 'கபிலபரணர்' என்பதனால் பரணர் என்பருக்கும் 'பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காடனென்போன்' (திருவால.20:1), என்னும் திருவிருத்தத்தால் இடைக்காடருக்கும் சிறந்த நட்பினராக இவர் எண்ணப்படுகிறார். இவர் வேறு. தொகை நூல்களில் காணப்படும் தொல்கபிலர் என்பவர் வேறு. வீரசோழியம், தொகைப் படலம், 6ஆம் கட்டளைக் கலித்

*Self-Instructional Material*

குறிப்பு

துறையுரையால், பரணருடன் இவர் வாது செய்தாரென்பது வெளியாகின்றது. 11ஆம் திருமுறையில் வந்துள்ள மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச்செய்த கபிலதேவ நாயனார் என்பவர் இவரேயென்று சிலர் கூறுவர். மேற்கூறிய திருவிளையாடற் புராணத்தில் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த திருவிளையாடல் 11ஆம் திருவிருத்தத்தில் ‘எனையந்தாதி சொன்னவன் கபிலன்’ என்று சிவபெருமான் கட்டளையிட்டருளியதாக வந்திருத்தல் காண்க.

‘முதலிற் கூறுஞ் சினையறி கிளவி’ என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணரும், சேனாவரையரும் எழுதிய உரையால் கபிலராற் செய்யப்பெற்றுக் கபிலம் என்னும் பெரிய நூலொன்று இருந்ததாகத் தெரிகிறது. இவருடைய விரிந்த வரலாற்றைப் பத்துப்பாட்டுப் பதிப்பிலுள்ள பாடினோர் வரலாற்றிற் காணலாம்.

### 3.5. குறிஞ்சித் திணை

தலைவனும் தலைவியும் களவுக் காலத்தில் கூடி மகிழும் ஒழுக்கத்தைக் கூறுவது குறிஞ்சித் திணையாகும். இந்நிகழ்வுக்குப் பொருத்தமான மலைப்பகுதியே பின்னணியாக அமைகிறது. குறிஞ்சி ஒழுக்கம் தொடர்பாகவும், அதன் பின்னணியாக விளங்கும் நிலம், அதன் கருப்பொருள்கள் தொடர்பாகவும், குறிஞ்சிப் பாடல்களில் புலவர்கள் காட்டியுள்ள இலக்கிய நயங்கள் தொடர்பாகவும் அறிமுகம் செய்யப்படுகின்றன.

### 3.6. குறிஞ்சித் திணையின் முப்பொருள்கள்

அகம் ஐந்திணைக்கும் முதல், கரு, உரிப்பொருள்கள் அமையும். முதல் எனப்படுவது நிலமும் பொழுதுமாகும். அந்நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, பண், யாழ், தொழில் முதலியன கருப்பொருள்கள் எனப்படுகின்றன. குறிஞ்சித் திணைக்கு உரிய மக்களின் ஒழுக்கம் உரிப்பொருள் என்படுகிறது.

குறிப்பு

### 3.6.1. முதற்பொருள்

குறிஞ்சித் திணைக்கு உரிய நிலம் மலையும் மலை சார்ந்த பகுதியாகும். பெரும்பொழுது கூதிர் காலம் (குளிர் காலம், முன்பனிக் காலம்). ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் குளிர்காலம் என்பர். மார்கழி, தை மாதங்களை முன்பனிக்காலம் என்பர். சிறுபொழுது யாமம். யாமம் என்பது இரவு பத்து மணி முதல் அதிகாலை இரண்டு மணி வரை உள்ள பொழுதாகும்.

### 3.6.2. கருப்பொருள்கள்

குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்கள்: தெய்வம் - முருகன், மக்கள் - சிலம்பன், வெற்பன், குறவன், குறத்தி; பறவை – மயில், கிளி; விலங்கு – புலி, கரடி, பன்றி, யானை; ஊர் - சிறுகுடி; நீர் - சுனை, அருவி; பூ - குறிஞ்சி, காந்தள், வேங்கை; மரம் - சந்தனம், அகில், தேக்கு, அசோகம்; உணவு – தினை, மலை நெல், கிழங்கு; பறை – வெறியாட்டுப் பறை, தொண்டகப் பறை; பண் - குறிஞ்சிப்பண்; யாழ் - குறிஞ்சி யாழ்; தொழில் - தேனெடுத்தல், தினைப்புனம் காத்தல், கிழங்கெடுத்தல்.

### 3.6.3. .உரிப்பொருள்

குறிஞ்சித் திணைக்கு உரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் தொடர்பான ஒழுக்கமும். புணர்தல் என்பது கூடுதல் சேருதல் என்று பொருள்படும். அதாவது தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் கூடி மகிழ்தல். புணர்தல் என்பது கூடல் என்ற சொல்லாலும் குறிக்கப்படும்.

## 3.7. முதற்பொருள் வெளிப்பாடு

### 3.7.1. நிலம்

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்
பைஞ்சுனைப் பூத்த பகு வாய்க் குவளையும்

(ஐங்குறுநூறு – 199:1-2) குன்ற நாடன் - முருகன் அல்லது நிலத்தலைவன், குன்றத்துக்கவாஅன் - பக்கமலை, பகுவாய் - மலர்ந்த வாய்)

குறிப்பு

தலைவியின் பண்பைப் பாராட்டும் தலைவனின் கூற்றாக இப்பாடல் அமைகிறது. இப்பாடலின் மேற்காட்டிய இரு அடிகளும் குறிஞ்சி நிலத்தை நம் கண் முன் கொண்டு வருகின்றன. முருகனது அல்லது தலைவியின் தந்தையது மலையின் பக்க மலையில் மலர்ந்த வாயை உடைய குவளை மலர்கள் சுனையில் பூத்துக் கிடக்கின்றன என்பது இதன் பொருள்.

கல்கெழு நாடன் கேண்மை

(நற்றிணை – 206, ஐயூர் முடவனார்) (கல் - மலை, கெழு – நிறைந்த, கேண்மை – நட்பு)

சார்ந்த நறும் புகை
தேங்கமழ் சிலம்பின் வரையகம் கமழும்

(ஐங்குறுநூறு – 253:1-2) (சந்தனம்: தேன் கமழ் சிலம்பு – தேன் மணக்கும் மலை), (வரையகம் - பக்கமலை), குன்றம், கல், மலை, வரை, சிலம்பு, வெற்பு, சாரல் ஆகிய சொற்கள் குறிஞ்சி நிலப்பகுதியைக் குறிப்பவை.

### 3.7.2. பொழுது

கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே

(ஐங்குறுநூறு – 252:4-5) (கூதிர்ப் பெருந்தண் வாடை - கூதிர்க் காலத்துப் பெரிய குளிர்ந்த காற்று)

இவ்வரிகளில் பெரும்பொழுதாகிய பனிக்காலம் சுட்டப்படுகிறது.

இருளிடை என்னாய் நீ இரவு அஞ்சாய்

(கலித்தொகை – 38:14) (இருளிடை - இருண்டு கிடக்கும் இடம்)

நடு நாட் கங்குலும் வருதி

(ஐங்குறுநூறு – 296:3) (நடுநாட் கங்குல் - நள்ளிரவு)

இவ்விரு பாடல் அடிகளும் சிறுபொழுதான யாமத்தைக் குறிக்கின்றன.

## 3.8. கருப்பொருள்கள் வெளிப்பாடு

குறிஞ்சித் திணைக்குரிய சில கருப்பொருள்கள் பாடல்களில் வெளிப்படுவதைச் சான்றுகள் கொண்டு அறியலாம்.

### 3.8.1. தெய்வம் - முருகன்

முரு கயர்ந்து உவந்த முது வாய் வேலை

குறிப்பு

(குறுந்தொகை – 362:1, வேம்பத்தூர்க் கண்ணன் கூத்தனார்) முருகனை வழிபட்டு மகிழ்ந்த அறிவு மிகுந்த வேலனே) என்பது இதன் பொருள்.

**3.8.2. மக்கள் - சிலம்பன்**

விண்டோய் மாம லைச் சிலம்பன்

(குறுந்தொகை: 362:6)

பின்னிரும் கூந்தல் நன்னுதல் குறமகள்

(ஐங்குறுநூறு – 285:1) (பின்னரும் கூந்தல் - பின்னிய கரிய கூந்தல், நுதல் - நெற்றி)

**3.8.3. பறவை: கிளி, மயில்**

வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய பலவே!

(ஐங்குறுநூறு -281:1-2) (ஊழி - இறுதிக் காலம், வரம்பு – எல்லை, கிள்ளை – கிளி)

வெள்ளம் பெருக்கெடுக்கும் யுக முடிவான இறுதிக் காலத்தையும் தாண்டி, கிளியே நீ பல்லாண்டு வாழ்க! என்பது இதன் பொருள்.

மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிர

(ஐங்குறுநூறு – 292:1)

மயில்கள் அகவ, பெரிய வண்டுகள் ஒலிக்கும்.

**3.8.4. விலங்கு: புலி**

ஆகொள் வயப்புலி ஆகும் அ∴து

(அகநானூறு – 52:6, நொச்சி நியமங் கிழார்) (ஆகொள் - பசுவைக் கவர்கின்ற, வய – வலிய)

மராஅ யானை மதம் தப ஒற்றி

(அகநானூறு – 18:4, கபிலர்) (மராஅ - இனத்தோடு சேராத, தப் - கெட, ஒற்றி – மோதி)

இனத்தோடு சேராத ஆண்யானையின் மதம் அழியுமாறு அதனை வெள்ளம் மோதி இழுக்கும் என்பது பொருள்.

**3.8.5 .மரம், பூ**: சந்தன மரம், காந்தள் பூ

குன்றக் குறவன் ஆரம் அறுத்து என
நறும் புகை சூழ்ந்த காந்தள் நாறும்

*Self-Instructional Material*

குறிப்பு

(ஐங்குறுநூறு – 254:1-2) (ஆரம் - சந்தன மரம், காந்தள் - காந்தள் மலர்)

**3.8.6. தொழில்:** தினை காத்தல்

சிறு தினைக் காவல னாகி

(ஐங்குறுநூறு – 230:2)

### 3.9. உரிப்பொருள் வெளிப்பாடு

காதல் மிகுதியால் இரவு நேரத்தில் வந்து தலைவியைச் சந்திக்க விரும்புகிறான் தலைவன். அந்தப் பழக்கத்தைக் கைவிடுமாறு தோழி குறிப்பாகக் கூறுகிறாள்.

காமம் ஒழிவது ஆயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடர்அகத்து இயம்பும் நாடஎம்
தொடர்பும் தேயுமோ நின்வயி னானே?

(குறுந்தொகை – 42, கபிலர்)

(கருவி – மின்னல், இடி போன்ற தொகுதி, விடர் - குகை, மலைப்பிளவு, இயம்பும் - ஒழுகும்)

தலைவனே! நீ இரவில் வராவிட்டால் மெய்யுற்றுப் பெறுகின்ற இன்பம் இல்லாமல் போகலாம். ஆதனால் என் தலைவி உன்னுடன் கொண்ட நட்புக் குறைந்து போகுமா? நள்ளிரவில் பெரும் தொகுதியை உடைய பெரிய மழை பெய்கிறது. மலைக் குகைகளின் வழியே ஒழுகும் அருவியின் ஓசை மறுநாளும் கேட்கிறது. அத்தகைய மலை நாட்டைச் சார்ந்தவனே! என் வினாவிற்கு விடையைச் சொல்வாயாக.

இப்பாடலில் தலைவன் - தலைவியின் கூடல் தொடர்பான செய்தி குறிக்கப்படுவதால், குறிஞ்சியின் உரிப்பொருள் தெளிவாகத் தெரிகிறது. (தலைவியைக் கூடத் தலைவன் முயல்வதும், தோழி அதற்கு மறுத்துரைப்பதும் கூடல் தொடர்பானவையே). இரவில் பிறர் அறியாதபடி மலையில் மழை பெய்கிறது. ஆயினும் அருவியின் ஒலியால் மழை பெய்தது அறியப்படுகிறது. அதுபோல் இரவில் பிறர் அறியாதபடி தலைவன் - தலைவி சந்திப்பு நிகழ்ந்தாலும் பகலில் தலைவியின் மேனி (உடல்) வேறுபாடு ஊரார்க்கு இரவுச் சந்திப்பை உணர்த்திவிடும். அவர்கள் இதைப் பற்றிப் பழித்துப் பேசத் தொடங்கி விடுவார்கள். ஆகவே இச்சந்திப்பு வேண்டாம் என மறைமுகமாக உணர்த்துகிறாள் தோழி.

நாறு உயிர்

மடப்பிடி தழீஇத் தடக்கை யானை

குறிப்பு

(குறுந்தொகை – 332:3-4, இளம் போத்தன்) (நாறு உயிர் - மணக்கும் மூச்சு, மடப்பிடி - இளைய பெண்யானை, தழீஇ - தழுவி, தடக்கை – பெரியகை)

மணக்கும் மூச்சை உடைய இளமையான பெண் யானையை அன்புடன் தன் துதிக்கையால் தழுவிக் கொள்ளும் ஆண் யானை என்பது பொருள். யானைகளின் அன்புநிலை காட்டிக் கூடல் என்ற உரிப்பொருள், கூடல் தொடர்பான செய்திகளைச் சுட்டி வெளிப்படுத்தப்படுகிறது.

நனவில் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ

நனவில் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே

கனவில் புணர்ச்சி கடித மாம் அன்றோ

(கலித்தொகை – 39:34-36) புணர்ச்சி என்ற சொல் இப்பாடலில் மீண்டும் மீண்டும் வந்து குறிஞ்சியின் உரிப்பொருளை வெளிப்படுத்துகிறது.

**3.10. குறிஞ்சித் திணையின் சிறப்புகள்**

அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல், இற்செறிப்பு, இரவுக்குறி, குறிஞ்சியைப் போற்றல், குறி கேட்டல், தினைப்புனம் காத்தல் முதலியன குறிஞ்சித் திணைக்குச் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகள் ஆகும்.

**3.10.1. அறத்தொடு நிற்றல்**

அகத்திணை மாந்தர்களின் மன, மண ஒழுக்கங்களைக் களவு, கற்பு என்ற இரு பிரிவுகளில் அடக்குவர். இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றலாகும். தலைவியின் களவு ஒழுக்கத்தை, அதாவது பிறருக்குத் தெரியாமல் தலைவன் - தலைவி மனங்கள் ஒன்று சேர்ந்ததை உண்மையோடு வெளிப்படுத்தலே அறத்தொடு நிற்றல் ஆகும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என ஒவ்வொருவரும் அறத்தொடு நிற்பதுண்டு. அறத்தொடு நிற்றலின் விளைவு தலைவியை அவள் விரும்பிய தலைவனுடன் கற்பு வாழ்க்கையில் இணைப்பதாகும். தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்வித்தலாகும்.

தலைவிக்கு உடனிருந்து பிறர் அறியாமல் களவுக் காதலுக்கு உதவியவள் தோழி. களவுக் காதல் கற்பாக மாற வேண்டும். காதல் வெளிப்பட்டுத் திருமணம் நிகழ வேண்டும். ஆதலால் வாய்ப்பு ஏற்படும்

**குறிப்பு**

பொழுது தோழி செவிலிக்குத் (செவிலி – வளர்ப்புத்தாய்) தலைவியின் காதலைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறாள். களவை வெளிப்படுத்தல் என்று கூறாமல் அறத்தொடு நிற்றல் என்று பெயர் வைத்துள்ளது சிறப்பாகும். தலைவியின் கற்பு அறத்தைக் காப்பதற்காகக் களவு உண்மையை வெளிப்படுத்துவதால் இது அறத்தொடு நிலை என்று சொல்லப்படுகிறது.

அகவன் மகளே! பாடுக பாட்டே!
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே!

(குறுந்தொகை -23:3-5, ஔவையார்) (அகவன் மகள் - குறி சொல்லும் பெண், நன்னெடும் - நல்ல நெடிய, குன்றம் - மலை)

ஒரு குறிப்பிட்ட மலையைச் சார்ந்த தலைவன் ஒருவனை விரும்பினாள் தலைவி. செவிலித்தாய் தலைவியின் போக்கில் மாற்றத்தை உணர்கிறாள். எனவே குறத்தியை அழைத்துத் தலைவியின் மாற்றத்துக்குக் காரணம் அறியக் குறி கேட்கிறாள். குறத்தி குறி கூறும் முன் வழக்கப்படி பல மலைகளையம் பற்றிப் பாடத் தொடங்குகிறாள். தலைவனுடைய மலையைப் பாடும்போது தோழி குறுக்கிட்டுக் கூறுகிறாள். ‘குறத்தியே பாடு, பாடு, அவருடைய மலையை மட்டுமே பாடிக் கொண்டேயிரு’ என்கிறாள். இவ்வாறு குறி கூறுபவளைப் பார்த்து அவர் மலையை மட்டுமே பாடும் என்பது தாய்க்கு ஐயத்தை உறுதியாக ஏற்படுத்தும். அவர் மலை என்பதில் உள்ள குறிப்பு தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தைத் தாய்க்கு வெளிப்படுத்திவிடும். களவு வெளிப்பட்ட பின் திருமண ஏற்பாடுகள் தொடங்கிவிடும். இதுவே தோழியின் எதிர்பார்ப்பு. இவ்வாறு குறிப்பாக நிகழ்வதே அறத்தொடு நிற்றல் நிகழ்ச்சி.

குறிஞ்சிப் பாடல்களை இயற்றுவதில் மிகச் சிறந்தவர் கபிலர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லக் கபிலர் பாடியது குறிஞ்சிப்பாட்டு. 261 அடிகளை உடைய குறிஞ்சிப் பாட்டு அறத்தொடு நிற்றல் துறையில் அருமையாக அமைந்துள்ளது. தோழி செவிலித்தாய்க்குக் கூறும் கூற்றாக இப்பாட்டு அமைந்துள்ளது.

அன்னாய் வாழி வேண்டு அன்னை

(குறிஞ்சிப்பாட்டு – 1) (அன்னாய் - அன்னையே, வாழி – வாழ்க, வேண்டு – விரும்பிக் கேள், அன்னை – அன்னையே)

குறிப்பு

குறிஞ்சிப் பாட்டின் இம்முதல் அடி அறத்தொடு நிற்க விரும்பும் தோழி செவிலித்தாயின் கவனத்தைத் தன்முகமாகத் திருப்பப் பேசும் பேச்சுத்தொடக்கம். தன்னை நோக்கித் திரும்புவள் தன் சொல்லின் உண்மையை நோக்கித் திரும்புவாள் என்று தோழி நம்புகிறாள். களவு ஒழுக்கத்தால் தலைவியின் மேனி (உடல்), ஒழுக்கம் (இயல்புகள்) இவை வேறுபடுகின்றன. செவிலி வேலனையும் கட்டுவிச்சியையும் (கட்டுவிச்சி – நெல்மணியை முறத்தில் இட்டுக் குறிசொல்பவள்) வரவழைத்துக் காரணம் கேட்கிறாள். அதனால் எப்பயனும் விளையவில்லை. இந்நிலையில் தலைவி தோழியிடம், தோழி! நும் வீட்டுக் கட்டுக் காவலை மீறிச் சென்று தலைவனும் நானும் கொண்ட காதலைத் தாயிடம் சொல்வது தவறாகுமா? என்று கேட்கிறாள்.

### 3.10.2. வரைவு கடாவுதல்

இரவில் வந்து தலைவியைச் சந்தித்துத் திரும்புகிறான் தலைவன். இந்நிலை நீடிக்கிறது. தலைவனிடம் தலைவியை விரைவில் மணந்து கொள்ளுமாறு வேண்டுகிறாள் தோழி. இதனையே வரைவு கடாவுதல் (மணந்து கொள்ள வேண்டுதல் அல்லது தூண்டுதல்) என்பர். சூழலை விளக்கி மணம் புரியுமாறு தலைவனைத் தோழி வேண்டுவது என வரைவு கடாவுதலுக்குப் பொருள் கொள்ளலாம். (வரைவு - திருமணம், கடாவுதல் - வேண்டுதல்) வரைவு கடாவுதல் குறிப்பாலும், வெளிப்படையாலும் அமையப் பெறும். குறிப்பாய் உணர்த்தும் போது பயனற்றுப் போனால் மட்டுமே வெளிப்படையாய்க் கூறுதல் மரபு.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!
யார் அஃது அறிந்திசி னோரே? சாரல்
சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கி யாங்கு இவள்
உயிர்தவச் சிறிது! காமமோ பெரிதே

(குறுந்தொகை – 18, கபிலர்) (வேரல் - மூங்கில், வேர்க்கோட்பலா – வேரில் குலை உடைய பலாமரம், தவ – மிக)

இப்பாடலில் விரைந்து வந்து மணக்குமாறு தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்துகிறாள் தோழி. 'வளர்ந்த மூங்கிலை வேலியாகக்

கொண்ட மலைச்சாரல் நாட்டினனே! உனது நாட்டில் வேலியில் உள்ளே வேரில் குலைகளை உடைய பலா மரங்கள் நிறைந்திருக்கும் எங்கள் மலையிலோ பலாவின் உயர்ந்த சிறு கிளையில் தாங்க முடியாதபடி பெரிய பழம் தொங்கும். அந்தக் கிளை போல் தலைவியின் உயிர் மிகச் சிறியது. பெரிய பழம்போல் அவ்வுயிர் சுமக்கும் காமமோ பெரியது. யார் இதனை அறிவார்? நீ விரைந்து வந்து அவளை மணந்து கொள்' என்பது பொருள்.

### 3.10.3. இற்செறிப்பும் இரவுக் குறியும்

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவியின் உடல் மாறுபாடு கண்டதாய் அவளை வெளியில் செல்லவிடாது வீட்டின் உள்ளேயே நிறுத்திக் கொள்வாள். இந்த மரபினை இற்செறிப்பு என்பர். (இல் - வீடு, செறிப்பு – தடுத்து நிறுத்திக் கொள்ளல்)

பாரி
பலவுறு குன்றம் போலப்
பெருங்கவின் எய்திய அருங்காப் பினளே

(நற்றிணை – 253:7-9, கபிலர்) (பலவுறு – பலாமரம் நிறைந்த, அருங்காப்பு – அரிய காவல், கவின் - அழகு)

வள்ளல் பாரியின் பலாமரம் நிறைந்த பறம்பு மலைபோலப் பேரழகு வாய்ந்தவள் தலைவி. அத்தலைவி அரிய காவலில் வைக்கப்பட்டுள்ளாள். இவ்வாறு இற்செறிப்பு என்ற அருங்காவல் வைப்பு பல பாடல்களில் இடம்பெறுகிறது. தலைவி இற்செறிக்கப்பட்ட பின் அவளைப் பகலில் சந்திக்க இயலாதவன் ஆகிறான் தலைவன். இரவு நேரத்தில் அவளைச் சந்திக்க வருகின்றான். இரவில் வந்து தலைவியைச் சந்திக்கத் தோழி ஏற்பாடு செய்து வைக்கும் இடம் இரவுக்குறி எனப்படும். தொடர்ந்து இரவில் வரும் அவனைத் தடுத்து இனிமேல் 'இரவில் வராதே, மணம் புரிந்து கொள்' என்று குறிப்பாகவும், வெளிப்டையாகவும் சொல்கிறாள் தோழி. இதனை இரவுக்குறி மறுத்தல் என்று கூறுவர்.

குறிப்பு

### 3.10.4. குறிஞ்சியைப் போற்றல்

மலைப்பகுதியில் மட்டுமே காணப்படும் மலர் குறிஞ்சி மலர். கரிய கொம்பினில் பூப்பது. இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மலரும் தன்மையது. குறிஞ்சி நிலத்தோர் தம் வாழ்வின் சிறந்த கூறாக இம்மலரைப் போற்றுகின்றார்.

சாரல்
கருங் கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே

(குறுந்தொகை – 3:2-4), தேவ குலத்தார்)

தலைவி, மலைநாடனின் நட்பு மிகவும் பெரியது, பரந்தது, உயர்ந்தது என்று கூற விரும்புகிறாள். எத்தகைய மலை நாட்டிற்குத் தலைவன் என்று கூறும் போது கரிய கிளையில் பூக்கும் குறிஞ்சி மலரை நினைக்கிறாள். குறிஞ்சித்தேன் மிகவும் இனியது. குறிஞ்சி மலர்களில் உள்ள தேனை எடுத்து வண்டுகள் பெரிய தேன் கூட்டைக் கட்டியிருக்கும் மலைநாடன் என்று அவனைக் குறிப்பிடுகிறாள். சிறப்பான குறிஞ்சித் தேன் போன்றது தங்களது காதல் என உணர்த்துகிறாள். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 வகை மலர்களை அடுக்கிக் கூறுகிறார். அவற்றுள் குறிஞ்சியும் உண்டு.

### 3.10.5. குறிகேட்டல்

மலைவாழ் மக்களில் குறிசொல்லும் மரபினர் உண்டு. குறிசொல்லும் பெண் கட்டுவிச்சி என்று அழைக்கப்பட்டாள். தலைவியின் உடல், ஒழுக்க வேறுபாடுகளைக் காணும் செவிலி குறிசொல்லுபவளை அழைத்துக் காரணம் கேட்பது மரபு. சங்க காலத்தில் குறிஞ்சித் திணையின் சிறப்பியல்பாக விளங்கிய குறிகேட்டல் நிகழ்வு பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியம் எழக் காரணமாகியது.

என் தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவு அருங் கடுநோய்
அகலுள் ஆங் கண் அறியுநர் வினாயும்

(குறிஞ்சிப் பாட்டு: 2-4)

குறிப்பு

(விறல் - வெற்றி, இழை – அணி, நெகிழ்த்த – கழலும் படி செய்த, வீவு அருங்கடு நோய் - மருந்துகளால் நீக்குவதற்கு அரிய கொடிய நோய், அகல்உள்ஆங்கள் - அகன்ற உள் இடத்தை உடைய ஊரில், அறியுநர் - குறியால் உணருபவர்) குறிஞ்சிப்பாட்டு எழக் காரணம் செவிலி குறிகேட்க ஆரம்பத்திலே ஆகும். 'தாயே! என் தோழியின் உடலில் அணிந்துள்ள ஆடை அணிகள் நெகிழ்கின்றன. மருந்துகளால் நீக்க முடியாத நோயினளாக அவள் உள்ளாள். அவளுக்கு வந்துள்ள அரிய கொடிய நோயின் காரணத்தை அறிய நீ விரும்புகின்றாய். அதனால் அகன்ற உள்ளிடத்தை உடைய ஊரில் உள்ள குறியால் உணருபவரை அழைக்கின்றாய். 'என்மகள் அடைந்த நோய்க்குக் காரணம் யாது? எனக் கேட்கிறாய்' எனக் கூறியே தோழி தொடங்குகிறாள்.

### 3.10.6. தினைப்புனம் காத்தல்

தினை விளையும் நிலம் தினைப்புனம் ஆகும். விளைந்த தினைக் கதிர்களைத் தலைவியும், தோழியும் கிளி முதலிய பறவைகளிடம் இருந்து காப்பர். தினைப்புனம் காவல் காக்கத் தலைவி தோழி இருவரையும் செவிலி அனுப்பிவைக்கும் வழக்கம் உண்டு. இதனைக் குறிஞ்சிப்பாட்டு காட்டுகிறது.

துய்த்தலை வாங்கிய புனிறு நீர் பெருங் குரல்
நல் கோள் சிறு தினைப் படுபுள் ஓப்பி
எல்பட வருதியர் எனநீ விடுத்தலின்

(குறிஞ்சிப்பாட்டு: 37-39) (துய் - பஞ்சு, வாங்கிய – விளைந்த, புனிறு - இளமை, தீர் - நீங்கிய, பெருங்குரல் - பெரிய கதிர், படுபுள் - வீழ்கின்ற பறவைகள் (கிளிகள்), ஓப்பி – ஓட்டி, எல்பட - சூரியன் மறைய, வருதியர் - வருவீராக)

"பஞ்சு போன்ற நுனியைக் கொண்டு நன்றாக விளைந்து வளைந்தன தினைக்கதிர்கள். அக்கதிர்களைக் கவர வரும் கிளிகளை ஓட்டி மலையில் வருமாறு என்னையும், தலைவியையும் நீ தினைப்புனத்திற்கு அனுப்பினாய்" என்று செவிலியிடம் தோழி கூறுகிறாள். பரண் அமைத்து அதில் அமர்ந்து பல கருவிகளால் ஒலி எழுப்பிக் கிளிகளை விரட்டும் இயல்பினைக் குறிஞ்சிப்பாட்டு காட்டுகிறது. (குறிஞ்சிப்பாட்டு: 40-41).

குறிப்பு

### 3.11. இலக்கிய நயங்கள்

குறிஞ்சித் திணைப் பாடல்களில் காணப்படும் இலக்கிய நயங்களாகிய கற்பனை, சொல்லாட்சி, உவமை, உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றை இப்பகுதியில் அறியலாம்.

#### 3.11.1. கற்பனை

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ யறியும் பூவே

(குறுந்தொகை – 2, இறையனார்)

(கொங்கு – பூந்துகள், தேன், அஞ்சிறை – அழகிய சிறகுகள், தும்பி – வண்டு, காமம் - விருப்பம், செப்பாது – செல்லாமல், கண்டது – ஆராய்ந்து கண்ட உண்மை, மொழிமோ – சொல்க, பயிலியது கெழீஇய – பல பிறவியிலும் என்னோடு இணைந்த, செறிஎயிற்று – நெருங்கிய பல்வரிசையினை உடைய, அரிவை – பெண், கூந்தலின் - கூந்த் போல, நறியவும் - நறுமணம் உள்ளதும்)

அழகிய சிறகுகளை உடைய வண்டே! நீ மலர்களில் உள்ள பூந்துகளை ஆராய்ந்த உண்கின்றாய். என் வினாவிற்கு விடை தருவாயாக. எனக்காக நான் விரும்பியதை நான் விரும்பியதை நீ சொல்ல வேண்டாம். பல பிறவியிலும் என்னோடு தொடர்ந்து வரும் அன்பினை உடையவள் என் காதலி. அவள் மயில் போன்ற சாயலினை உடையவள். நெருங்கிய பல்வரிசை உடையவள். அவளது கூந்தலைப் போல நறுமணம் உடைய பூவை நீ அறிந்ததுண்டோ?

வண்டை அழைத்து, அதன் வாழ்க்கை முறை காட்டித் தன்கருத்தை நிலை நிறுத்தும் பாங்கு சிறப்பிற்குரியது. இங்கு ஒரு நாடகமே நடக்கிறது. வண்டோடு பேசும் பேச்சு தலைவியின் அழகைப் பாராட்டும் பேச்சு, தலைவி அதைக் கேட்டுப் புன்முறுவல் பூப்பது தெரிகிறது. கூந்தலில் மொய்க்கும் வண்டை விலக்குவது போன்ற ஒரு பாவனையில் தலைவன் தலைவியின் கூந்தலைத் தீண்டுவது புலப்படுகிறது.

### 3.11.2. சொல்லாட்சி

குறிப்பு

காதலின் அகல உயர, ஆழ அளவுகளைக் கூறிப் பாடப்பட்ட குறுந்தொகைப் பாடல்சொல்லாட்சிக்குச் சிறந்த சான்று ஆகும். தலைவனோடு தான் கொண்டநட்பின் தன்மையைத் தலைவி தோழிக்கு எடுத்துரைக்கிறாள்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங் கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே

(குறுந்தொகை – 3, தேவ குலத்தார்)

கரிய கொம்புகளில் பூத்துள்ள குறிஞ்சி மலர்கள் அவற்றில் இருந்து வண்டுகள் தேனைச் சேர்த்துத் தேன் கூடுகளைக் கட்டுகின்றன. இத்தகு இனிமை நிறைந்த மலை நாட்டினன் என் தலைவன். அவனிடம்நான் கொண்ட நட்பானது நிலத்தைவிட அகலமானது. வானத்தைவிட உயர்ந்தது. கடலைவிட ஆழமானது. குறிஞ்சி மலரில் உள்ள தேனை மலை உச்சியில் தேன்கூட்டில் சேர்க்கின்றது தேனீ என்னும் வண்டு. அதுபோல் வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த எங்கள் உள்ளங்கள் இனிமையாய் ஒன்றுபட்டன. பால்வரை தெய்வம் என்ற விதி எங்கள் இருவரையும் இணைத்துள்ளது என்பன போன்ற பல கருத்துக்களை உள்ளடக்கியது இப்பாடல். இது தோழியிடம் தலைவி கூறுவது 'கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன்' என்பது சொல்லால் வரைந்த ஓவியம் ஆகிறது.

### 3.11.3. உவமை

இகல் மீக் கடவும் இரு பெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல

(குறிஞ்சிப்பாட்டு:27-28)

'பகை கொண்ட இரு பேரரசர்களை ஒன்று சேர்த்துக் கூட்டும் அறிவுடையவரைப் போல' என்பது இதன் பொருள். தோழி தலைவிக்கும் செவிலிக்கும் இடையே நின்று தலைவியின் காதலைத் தெரிவித்து,

மணம் கூட்டும் பெரும் முயற்சியில் ஈடுபடுவதற்குக் கவிஞர் இந்தப் பொருத்தமான உவமையைக் கையாள்கிறார்.

குறிப்பு

**3.11.4 உள்ளுறை**

குறிஞ்சிப் பாடல்களில் உள்ளுறை நிறைந்து காணப்படுகின்றது. 'மலையில் ஓங்கி வளர்ந்துள்ளது மூங்கில். அந்த மூங்கில் ஈன்ற அரிசியைத் தின்ன விருப்பத்துடன் வருகின்றது ஆண்யானை. மேல் நோக்கித் துதிக்கையை உயர்த்தி முயற்சி செய்கின்றது அது. தன் கைக்கு அரிசி எட்டாததால் தன் கொம்பில் துதிக்கையை வளைத்துப் போட்டு வருத்தம் நீங்குகின்றது. உலக்கையைப் போன்ற தினைக் கதிர்கள்' என்றொரு செய்தியைத் தோழி குறிஞ்சிப்பாட்டில் செவிலியிடம் சொல்கிறாள் (குறிஞ்சிப்பாட்டு: 35-35)

**3.11.5. இறைச்சி**

பாடுகம் வா வாழி தோழி! வயக்களிற்றுக்
கோடு உலக்கை யாகநல் சேம்பின் இலை சுளகா
ஆடுகழை நெல்லை அறை உரலுள் பெய்து இருவாம்
பாடுகம்வா வாழி

(கலித்தொகை 41: 1-3) (பாடுகம் - பாடுவோம். வயக்களிற்றுக்கோடு – வலிய யானைக்கொம்பு, களகு – முறம், கூழை - மூங்கில், அறை – பாறை, இருவாம் - இருவரும்)

தலைவன் வேலியை அடுத்து நிற்கிறான். தோழியும் தலைவியும் உலக்கை கொண்டு நெல் குற்றும் பாட்டைப் பாடுகின்றனர். இப்பாட்டை வள்ளைப் பாட்டு எனச் சொல்வர். தலைவன் தலைவியை மணந்து கொள்ள விரும்பினான். உரியவரை அவளுடைய பெற்றோரிடம் அனுப்பினான். அவர்களும் மணத்துக்கு இசைவு (சம்மதம்) தெரிவித்தனர். அதைத் தோழி தலைவிக்குக் கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

தோழி வாழ்க! நாம் பாடுவோம் வா! எவ்வாறு பாடுவோம் என்று சொல்கிறேன் தோழி! நாம் இருவரும் அசையும் மூங்கில் உதிர்த்த நெல்லைப் பாறையாகிய உரலில் இடுவோம். வலிமை வாய்ந்த யானைக் கொம்பாகிய உலக்கைக் கொண்டு குற்றுவோம். நல்ல சேம்பினது இலையை முறமாகக் கொண்டு புடைத்துப் பாடுவோம். இது பாடல் அடிகள் தரும் வெளிப்படைப் பொருள்.

*Self-Instructional Material*

குறிப்பு

உயர்ந்த மூங்கிலின் நெல் தானே உதிர்ந்தது. அதனை நாம் எடுத்து உரலில் இடுவோம் என்னும் வருணனை, உயர்ந்த தலைவனை நமக்குத் தெய்வம் தானே கொண்டு வந்து கொடுத்தது. அவனை நம் வயமாக்கிக் கொண்டோம் என்னும் வேறொரு குறிப்புப் பொருள் தருகிறது. யானைக் கொம்பு கொண்டு நெல்லைக் குற்றிப் பயன்படச் செய்வது, வரைவு கடாதல் செயலால் தலைவன் பெண்கேட்டு இல்லறப் பயனை அடையச் செய்கிறோம் எனப் பொருள் தருகிறது. சேம்பிலை அரிசி புடைக்க முழுமையாகப் பயன்படாது. அதுபோல, களவுக் காதலால் விரைவாக மணந்துகொள்ள முடியாது எனும் பொருள் கிடைக்கிறது. இவ்வாறு பொருள்கொள்ள அமைகிறது இறைச்சி

### 3.11.6. நிறைவாக:

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் முத்தொகுதி நூல்களிலும் இவருடைய பாடல்களும் நூல்களும் கலந்திருந்தல் இவரது பெருமையை விளக்குகின்றது. 'அரசவை பணிய அறம் புரிந்து வயங்கிய மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின், உவலை கூராக் கவலையினெஞ்சின் நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்' (பதிற்.85) எனப் பெருங்குன்றூர்கிழாரும், 'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்' (புறநா.53) எனப் பொருந்திலிளங்கீரனாரும், 'புலனழுக்கற்ற வந்தணாளன் இரந்துசென் மாக்கட் கினியிடனின்றிப், பரந்திசை நிற்கப் பாடினன், பொய்யா நாவிற் கபிலன்' (புறநா.126,174) என மாறோக்கத்து நப்பசலையாரும் பாடியவற்றைப் பார்க்கையில் இவருடைய மன வாக்குக் காயங்களின் தூய்மையும் அறம்புரி கொள்கையும் பெரும்புலமையும் அன்புடைமையும் நட்பின் பெருமையும் நன்கு விளங்குகின்றன.

### 3.12. சோதித்தறியும் வினாவிடைகள்:

1. குறிஞ்சிக் கபிலர் விளக்குக

கபிலர் குறிஞ்சித் திணையைப் பாடுவதில் வல்லவர். சங்க இலக்கியத்தில் மட்டும் இவர் 278 பாடல்களை இயற்றியுள்ளார். இவர் அக இலக்கியத்தில் 197 பாக்களைப் படைத்துள்ளார். இவற்றுள் பெரும்பான்மை குறிஞ்சி பற்றி அமைந்தவையாகும்.

குறிப்பு

2. கபிலரால் பாடப்பெற்ற மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், சேரமான் மாந்தரஞ்சேரலிரும்பொறை, நள்ளி, மலையமான் திருமுடிக்காரி, மலையன், விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக் கோப்பெரும்பேகன் என்பவர்கள் கபிலரால் பாடப்பெற்ற மன்னர்களாவர்.

3. குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களைச் சுட்டுக

குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்கள்: தெய்வம் - முருகன், மக்கள் - சிலம்பன், வெற்பன், குறவன், குறத்தி; பறவை – மயில், கிளி; விலங்கு – புலி, கரடி, பன்றி, யானை; ஊர் - சிறுகுடி; நீர் - சுனை, அருவி; பூ - குறிஞ்சி, காந்தள், வேங்கை; மரம் - சந்தனம், அகில், தேக்கு, அசோகம்; உணவு – தினை, மலை நெல், கிழங்கு; பறை – வெறியாட்டுப் பறை, தொண்டகப் பறை; பண் - குறிஞ்சிப்பண்; யாழ் - குறிஞ்சி யாழ்; தொழில் - தேனெடுத்தல், தினைப்புனம் காத்தல், கிழங்கெடுத்தல்.

### 3.13. பயிற்சி வினாக்கள்

1. குறிஞ்சித் திணைக்குரிய முப்பொருள்களைச் சுட்டுக
2. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன? விளக்குக

### 3.14. பொருளறிக

அகவன் மகள் - குறி சொல்லும் பெண், நன்னெடும் - நல்ல நெடிய, குன்றம் - மலை, பாடுகம் - பாடுவோம். வயக்களிற்றுக்கோடு – வலிய யானைக்கொம்பு, களகு – முறம், கூழை - மூங்கில், அறை – பாறை, இருவாம் - இருவரும்.

### 3.15. மேலும் படித்தறிக.

1. உ.வே.சாமிநாதையர் (குறிப்புரை) -ஐங்குறுநூறு
மூலமும் பழைய உரையும்
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல்நிலையம்
சென்னை – 600 090
பதிப்பு 1903, 2018

# பிரிவு-1- ( தொடர்ச்சி )

## கூறு 4: மஞ்ஞைப் பத்து

குறிப்பு

4. பாடஅமைப்பு:

4.1. அறிமுகம்

4.2. நோக்கம்

4.3. குறிஞ்சித் திணையில் அமையும் பத்துக்கள்

- 4.3.1. அன்னாய் வாழிப் பத்து
- 4.3.2. அன்னாய்ப் பத்து
- 4.3.3. அம்ம வாழிப் பத்து
- 4.3.4. தெய்யோப்பத்து
- 4.3.5. வெறிப் பத்து
- 4.3.6. குன்றக் குறவன் பத்து
- 4.3.7. கேழற் பத்து
- 4.3.8. குரக்குப் பத்து
- 4.3.9. கிள்ளைப் பத்து
- 4.3.10. மஞ்ஞைப் பத்து
- 4.3.11 நிறைவாக

4.4 சோதித்தறியும் வினாவிடைகள்

4.5. பயிற்சி வினா

4.6. பொருளறிக

4.7. மேலும் படித்தறிக.

**4.1.**அறிமுகம் - குறிஞ்சித் திணையில் அமையும் **பத்துக்கள்**

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணையில் அமையும் பத்துக்கள் மஞ்ஞைப் பத்தாகும். குறிஞ்சித் திணை கபிலரால் பாடப்பெற்றதாகும். மஞ்ஞை என்பது மயிலைக் குறிக்கும். இப்பகுதியின் 10 பாடல்களும் மயில்கள் தொடர்புடைய செய்திகளைத் தருவதால மஞ்ஞைப் பத்து ஆயிற்று.

குறிப்பு

இத்திணையில் அன்னாய் வாழிப் பத்து, அன்னாய்ப் பத்து, அம்ம வாழிப் பத்து, தெய்யோப்பத்து, வெறிப் பத்து, குன்றக் குறவன் பத்து, கேழற் பத்து, குரக்குப் பத்து, கிள்ளைப் பத்து, மஞ்ஞைப் பத்து ஆகியவை இடம்பெறுகின்றன. **ஒவ்வொரு பத்தையும் சுருக்கமாகப் பார்ப்போம். இப்பாடப்பகுதியின் இறுதியில் பத்தாம் பத்தாக அமைவது மஞ்ஞைப் பத்தாகும்.**

### 4.2. நோக்கம்

மயில்கள் தொடர்புடைய செய்திகளைத் தருவதால் மஞ்ஞைப் பத்து. மஞ்ஞைப் பத்தில் தலைவன் கூற்று **நான்கும்,** தலைவி கூற்று **இரண்டும்**, தோழி கூற்று **நான்கும்** அமைகின்றன. இதில் பாடப்பகுதியில் தலைவன் கூற்று இரண்டும், தலைவி கூற்று ஒன்றும் இடம்பெறுகிறது. ஒவ்வொரு பத்தையும் மாணவர்கள் அறியச் செய்வதே நோக்கமாகும்..

### 4.3. குறிஞ்சித் திணையில் அமையும் பத்துக்கள்

#### 4.3.1.அன்னாய் வாழிப்பத்து

201 முதல் 210 வரையுள்ள பாடல்கள் அன்னாய் வாழிப்பத்தாகும். இப்பகுதியில் வரும் பாடல் ஒவ்வொன்றும் ‘அன்னாய் வாழி’ என்ற தொடரால் தொடங்கப்பெறும். இதனால் இப்பெயர் பெற்றது.

201. **தலைவி கூற்று**

துறை: நொதுமலர் வரைவின்கட் செவிலி கேட்குமாற்றால் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிலை குறித்துக் கூறியது.

துறை விளக்கம்: தலைவியை அயலார் மணம் பேச வந்தனர். அப்போது செவிலி கேட்கத் தலைமகள் தோழிக்குத் தனக்கும் தலைமகனுக்கும் உள்ள தொடர்பைக் கூறுவது.

202. **தோழி கூற்று**

துறை: தலைமகன் வரைதல் வேண்டித் தானே வருகின்றமை கண்ட தோழி மகிழ்வுள்ளத்தோடு தலைவிக்குக் காட்டிக் கூறியது.

துறை விளக்கம்: தலைமகன் தலைவியை மணந்து கொள்ள வருவதைக் கண்ட தோழி மகிழ்வுள்ளத்தோடு தலைவிக்குக் காட்டிக் கூறியது

203. **தலைவி கூற்று**

குறிப்பு

துறை: உடன் போய் மீண்ட தலைமகள் 'நீ சென்ற நாட்டு நீர் இனியவல்ல, நீ எங்ஙனம் நுகர்ந்தாய்' எனக் கேட்ட தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவனுடன் போய் மீண்டு வந்த தலைவியைப் பார்த்துத் தோழி 'நீ சென்றிருந்த நாட்டின் நீர் இனியது அன்று. எனவே நீ எங்ஙனம் அதை அருந்தினாய்?' என்று வினவினாள். அதற்குத் தலைவி உரைத்தது.

204. **தலைவி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் ஒழுகிய நாளில் ஒருகால் சிறைப்புறமாக வந்திருந்தான். அப்போது தலைவி தோழிக்குக் கூறியது.

205. **தோழி கூற்று**

துறை: நொதுமலர் வரைவு வேண்டி விட்டுழழித் தலைமகட்கு உளதாகிய வருத்தம் நோக்கி, 'இவள் இவ்வாறு அதற்குக் காரணம் என்னை? என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: அயலார் வரைவு வேண்டித் தக்கவரை தலைவியின் பெற்றோரிடம் அனுப்பினர். அதைக் கண்ட செவிலி இவள் இப்படித் துன்பம் அடையக் காரணம் யாது என்று வினவினாள். அச்செவிலிக்குத் தோழி தலைவியின் களவொழுக்கத்தைக் கூறி அறத்தொடு நின்றது.

206. **தோழி கூற்று**

துறை: இரவுக் குறிக்கண் தலைமகன் வந்து குறியிடத்து நின்றமை அறிந்த தோழி தலைமைகட்குச் சொல்லியது

துறை விளக்கம்: குறித்துச் சொன்ன இரவுக் குறியில் தலைவன் வந்து நின்றான். அதை அறிந்த தோழி தலைவிக்கு அதைக் கூறியது.

207. **தோழி கூற்று**

துறை: 'மழையின்மையால் தினை உணங்கும், விளைய மாட்டா, புனங்காப்பச் சென்று அவரை எதிர்ப்படலாம்' என்று எண்ணியிருந்த இது கூடாதாயிற்று என வெறுத்திருந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.

குறிப்பு

துறை விளக்கம்: மழை பொய்த்ததால் தினை வாடும். விளைவு உண்டாகாது. ஆதனால் புனம் காப்பச் சென்று தலைவரை எதிர்ப்படலாம் என எண்ணியிருந்தது கூடாமற் போயிற்று என்று வெறுத்திருந்தாள் தலைவி. அவளுக்குத் தோழி உரைப்பது.

208. **தோழி கூற்று**

துறை: செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி அவளால் வரைவு மாட்சிமைப்பட்ட பின்பு இவள் இவ்வாறு பட்ட வருத்தம் எல்லாம் நின்னின் தீர்ந்தன என்பது குறிப்பாய்த் தோன்ற அவட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றாள். அவளால் மணம் நன்கு நிறைவேறியது. பின்பு இவள் இப்படிப்பட்ட துன்பம் எல்லாம் நின்னால் நீங்கியது என்பது குறிப்பாய்த் தோன்றச் செவிலிக்குக் கூறியது.

209. **தலைவி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிவின் கண் அவனை நினைவு விடாது ஆற்றாளாகிய வழி, ‘சிறிது மறந்து ஆற்ற வேண்டும்’ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

துறை விளக்கம்: வரைவு இடை வைத்துத் தலைவன் பிரிந்தான். அவனது நினைவால் ஆற்றாளானாள் தலைவி. அப்போது சற்று அவளை ஆற்றியிருக்க வேண்டும் என்றாள் தோழி. அதனைக் கேட்ட தலைவி உரைத்தது.

210. **தோழி கூற்று**

துறை: காப்பு மிகுதிக்கண் தலைமகள் மெலிவு கண்டு தெய்வத்தினான் ஆயிற்றென்று வெறியெடுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: தலைவிக்குக் காவல் மிக்கது. அதனால் அவள் மெலிவை அடைந்தாள். அவளது மெலிவு தெய்வத்தால் உண்டானது என்று வெறியாட்டு எடுத்தனர். அப்போது தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

**4.3.2. அன்னாய்ப் பத்து**

211 முதல் 220 வரையுள்ள பாடல்கள் அன்னாய்ப் பத்தாகும். இப்பகுதியில் அமைந்துள்ள பாக்கள் பத்தும் இறுதியில் ‘அன்னாய்’ என முடியும். ஆதலால் இப்பெயர் கொண்டது. ‘அன்னை’ என்பது ‘ஆம்’ பெற்று அன்னாய் என வரும்.

குறிப்பு

211. **தோழி கூற்று**

துறை: தலைமகன் ஆற்றாமை கண்டு கையுறை ஏற்ற தோழி தலைமகள் தழை ஏற்க வேண்டிக் கூறியது.

துறை விளக்கம்: தலைமகள் இரந்து நின்று தழையைப் பெற்றுக் கொள்ளும்படி கூற அதை ஏற்ற தோழி, தலைமகளை அத்தழையை ஏற்கும்படி கூறியது.

212. **தோழி கூற்று**

துறை: வரைவு எதிர் கொள்ளல் தமர் அவன் மறுத்தவழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணந்து கொள்ள மறுப்புத் தெரிவித்தனர். அப்போது தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. தலைவனுக்கும் தலைவிக்கும்உள்ள களவொழுக்கத்தை வெளிப்படையாகக் கூறினாள்.

213. **தலைவி கூற்று**

துறை: 'வரைவொடு வருதலைத் துணிந்தான்' என்று தோழி கூறக் கேட்ட தலைமகள் சொல்லியது.

துறை விளக்கம்: தலைமகன் தலைமகளை மணம் பேசி வரத் துணிந்தான் என்பதைத் தோழி தலைமகளுக்குச் சொன்னாள். அப்போது தலைவி உரைப்பது.

214. **தோழி கூற்று**

துறை: தலைமகன் 'ஒருவழித் தணப்பல்' என்று கூறிய அதனை அவன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் ஒருவழித் தணந்து போவேன் என்று கூறினான். அதனை அவன் சிறைப்புறமாக வந்து நின்றபோது தோழி தலைவிக்குக் கூறியது. ஒருவழித் தணத்தல் - தலைவன் தலைவியின் தொடர்பு காரணமாக ஏற்பட்ட அலர் அடங்கச் சிறிது காலம் பிரிந்திருத்தல்.

215. **தலைவி கூற்று**

துறை: இரவுக் குறி நயந்த தலைமகள் பகற்குறிக் கண் வந்து நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம்: பகற்குறியில் வந்து நீங்கும் தலைவன் சிறைப்புறத்தில் இருக்க, இரவுக் குறியை விரும்பிய தலைவி தோழிக்குக் கூறியது.

குறிப்பு

216. **தோழி கூற்று**

துறை: வரைவு நீட ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி கூறியது.

துறை விளக்கம்: தலைவன் மணந்து கொள்வது நீட ஆற்றாதவளான தலைவியின் வீட்டு வேலிப்புறத்தே தலைவன் இருந்தான். அப்போது தோழி சொல்லியது.

217. **தோழி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீட்சி உணர்ந்த தோழி ஆற்றாளாகிய தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: மணந்து கொள்வதாகக் கூறிப் பிரிந்த தலைமகன் மீண்டான் என்பதை யுணர்ந்த தோழி தலைவிக்குக் கூறியது.

218. **தோழி கூற்று**

துறை: தலைமகள் வரைவு வேண்டி விடத் தமர் மறுத்துழி, அது கேட்டு, 'இ∴த என்னாய் கொல்' என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி தனக்கு நன்குறி செய்யக் கண்டு, 'கடிதின் வந்து வரைவான்' எனச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் மணம் பேச வேண்டிச் சான்றோரை அனுப்பத் தலைவியின் சுற்றத்தார் மறுத்தனர். அதைக் கேட்டு, 'இ∴து எப்படி முடியுமோ?' என்று வருந்திய தலைவிக்குத் தோழி தனக்கு நற்குறி செய்யக் கண்டு, 'விரைவில் வந்து மணந்து கொள்வான்' எனக் கூறியது.

219. **தோழி கூற்று**

துறை: வரைவிடைப் பிரிந்த அணிமைக் கண்ணே ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது.

துறை விளக்கம்: வரைவை இடை வைத்துத் தலைவன் பிரிந்தான். அப்போது ஆற்றாமல் தலைமகள் வருந்தினாள். அவளுக்குத் தோழி கூறியது.

220. **தோழி கூற்று**

துறை: நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: அயலார் தலைவியை மணந்து கொள்ள முற்பட்டனர். அப்போது தோழி செவிலிக்குத் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ள தொடர்பைக் கூறியது.

குறிப்பு

### 4.3.3. அம்ம வாழிப் பத்து

221 முதல் 230 வரையுள்ள பாடல்கள் அம்ம வாழிப் பத்தாகும். இப்பகுதியில் வரும் பாக்கள் பத்தும் 'அம்ம வாழி' என்ற தொடக்கத்தைக் கொண்டன. ஆதலால் அம்ம வாழிப் பத்து என்ற பெயர் பெற்றது.

221. **தலைவி கூற்று**

துறை: ஒருவழித் தணந்து வரைதற்கு வேண்டுவன முடித்து வருவல் என்று தலைமகன் கூறக்கேட்ட தலைமகள் அவன் சிறைப்புறத்தானாய்க் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம்: சில காலம் பிரிந்திருந்து மணத்துக்கு வேண்டுவனவற்றை முடித்து வருவேன் என்று தலைவன் கூறக் கேட்ட தலைமகள், அவன் சிறைப்புறமாய் இருந்தபடி கேட்கத் தோழிக்குக் கூறியது.

222. **தலைவி கூற்று**

துறை: குறி இரண்டன் கண்ணும் வந்து ஒழுகும் தலைமகன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழி, 'நின் நுதல் பசத்தற்குக் காரணம் என்னை' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

துறை விளக்கம்: பகற்குறி இரவுக்குறி என்ற இரண்டிலுமாய் வந்து போய்க் கொண்டிருக்கும் தலைவன் இடையில் சிறிது வாராமல் இருந்து வந்து சிறைப்புறமாக நின்றபோது, நின் நெற்றி பசலை கொள்வதற்குக் காரணம் யாது என்று தோழி வினவியதற்குத் தலைவி கூறியது.

223. **தோழி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வருகின்றமை அறிந்த தோழி தலைமகட்கு மகிழ்ந்து சொல்லியது.

துறை விளக்கம்: வரைவிடை வைத்துப் பிரிந்து போன தலைமகன், குறித்த காலத்துக்கு முன்னம் வந்தான். அதை அறிந்த தோழி தலைவிக்கு மகிழ்ந்து கூறியது.

224. **தலைவி கூற்று**

குறிப்பு

துறை: இற்செறிப்புணர்ந்த தலைமகள் ஆற்றாளாய்த் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம்: வீட்டில் காவலின் இருத்தப்பட்ட தலைமகள் ஆற்றாத தலைவி, தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குக் கூறியது.

225. **தோழி கூற்று**

துறை: மெலிவு கூறி வரைவு கடாவக் கேட்ட தலைமகன் தான் வரைதற் பொருட்டால் ஒருவழித் தணந்து நீட்டித்தானாக, ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியின் மெலிவைக் கூறி வரைந்து கொள்ள வேண்டும் என்று தோழி வேண்டினாள். அதைக் கேட்ட தலைவன் வரைந்து கொள்ளும் பொருட்டு ஒருவழித் தணந்து காலம் நீட்டித்தான். ஆற்றாளான தலைவிக்குத் தோழி கூறியது.

226. **தோழி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்துழித் தோழ தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் காலம் நீட்டித்து வந்தான். அப்போது தோழி தலைவிக்குக் கூறியது.

227. **தோழி கூற்று**

துறை: ஒருவழித் தணந்து வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது

துறை விளக்கம்: சில காலம் பிரிந்திருந்த தலைவன் வந்தான். சிறைப்புறம் இருந்தான். அப்போது தலைவிக்குத் தோழி கூறியது.

228. **தோழி கூற்று**

துறை: தலைமகன் வரைவு வெண்டி விடத் தமர் மறுத்துழி அவர் கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணம் பேசச் சான்றோரை அனுப்பியிருந்தான். தலைவியின் சுற்றத்தார் அதை மறுத்தனர். தமர் கேட்கத் தலைவிக்குச் சொல்பவளாய் அறத்தொடு நின்றது.

229. **தோழி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டான் என்பது கேட்டுத் தலைமகட்கு எய்திய கவினைத் தோழி தான் அறியாதாள் போன்றுஅவளை வினாவியது.

குறிப்பு

துறை விளக்கம்: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் திரும்பி வந்தான். இதைக் கேட்டுத் தலைவி அழகுற விளங்கினாள். அக்கவினைக் கண்ட தோழி தான் அறியாதவள் போல் அவளை வினவியது.

230. **தோழி கூற்று**

துறை: தலைமகன் வரைவு வேண்டித் தமரை விடுத்துழி, மறுப்பர் கொல்லோ என்று அச்சமுறுகின்ற தலைவிக்குத் தோழி சொல்லியது.

**4.3.4. தெய்யோப் பத்து**

231 முதல் 240 வரையுள்ள பாடல்கள் தெய்யோப் பத்தாகும். இப்பகுதியில் வரும் பத்துப் பாடல்களும் 'தெய்யோ' என்ற இடைச்சொல் ஈற்றில் வருவதால் இப்பெயர்த்தாம்.

'தெய்ய' என்ற சொல் அகநானூறு முதலியவற்றில் காணப்படுகின்றது. அது 'தெய்யோ' எனவும் வரும். இச்சொல் அசைநிலையாய் வருகின்றது.

231. **தோழி கூற்று**

துறை: ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது

துறை விளக்கம்: ஒருவழித் தணத்தல் பிரிவில் சென்றிருந்த தலைவன் திரும்பி வந்தான். அவனுக்குத் தோழி கூறியது.

ஒருவழித் தணத்தல்: சிறிது காலம் பிரிந்து வாழ்தல்.

232. **தோழி கூற்று**

துறை: ஒருவழித் தணந்து வந்த தலைமகன், 'நான் பிரிந்த நாட்கண் நீவிர் என் செய்தீர்?' எனக் கேட்கத் தோழி கூறியது.

துறை விளக்கம்: ஒருவழித் தணந்து வந்தான் தலைவன். அவன், 'நான் பிரிந்திருந்த நாளில் நீங்கள் என்ன செய்தீர்?' எனக் கேட்கத் தோழி சொன்னது.

233. **தோழி கூற்று**

துறை: 'ஒருவழித் தணந்து வரைய வேண்டும்' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

துறை விளக்கம்: ஒருவழித் தணத்தலை மேற்கொண்டு போய்த் திரும்பி வந்து மணந்து கொள்ள வேண்டும் என்ற தலைவற்குத் தோழி கூறியது.

குறிப்பு

234. **தோழி கூற்று**

துறை: இடைவிடாது வந்து ஒழுகா நின்றே களவு விடாமல் வரைதற்கு முயல்கின்ற தலைமகன், தலைமகள் வேறுபாடு கண்டு, 'இதற்குக் காரணம் என்' என்று வினாவிய வழி, 'நின்னைக் களவிற் கண்டு விழித்துக் காணாளாய்வந்தது' எனத் தோழி சொல்லி வரைவு முடுக்கியது.

துறை விளக்கம்: தலைவன் இடையீடு இல்லாது வந்தனன். களவொழுக்கம் நீளாது மணம்செய்து கொள்ள முயன்றான். ஒருகால் தலைமகள் வேறுபட்டதைக் கண்டு இதற்கு என்ன காரணம் என்று வினவினான். அப்போது நின்னைத் தலைவி கனவிற் கண்டாள். விழித்த போது நின்னைக் காணவில்லை. ஆதலால் வருந்தினாள் என்று தோழி உரைத்தாள்.

235. **தோழி கூற்று**

துறை: உடன்போக்கு நேர்வித்த பின்பு தலைமகன் உடன்கொண்டு போவான் இடையாமத்து வந்துழித் தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: உடன்போக்குக்கு இசையச் செய்த பின்பு தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போகின்றவன் இடையாமத்தில் வந்த போது தோழி தலைவிக்கக் கூறியது.

236. **தோழி கூற்று**

துறை: களவொழுக்கம் வெளிப்பட்டமையும் தம் மெலிவும் உணர்த்தித் தோழி உடன்போக்கு நயந்தாள் போன்று வரைவு கடாயது.

துறை விளக்கம்: களவொழுக்கம் பலரும் அறிய வெளிப்பட்டமை, தம் வருத்தம் என்பனவற்றை உணர்த்தித் தோழி உடன்போக்கை விரும்பியவள் போல் மணம் செய்து கொள்ளுமாறு தோழி வேண்டியது.

237. **தோழி கூற்று**

துறை: அல்ல குறிப்பட்டு நீங்கிய தலைமகனை வந்திலனாகக் கொண்டு அவன் பின்பு வந்துழி அவற்குத் தோழி சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் இரவில் வந்தான். அல்ல குறிப்பட்டுத் தலைவியைக் கூடாது வறிதே திரும்பினான். அவள் வாராததாகவே

குறிப்பு

கருதிய அவன் பின்பு ஒருகால் வந்தபோது அத்தலைவனுக்குத் தோழி சொல்லியது.

238. **தோழி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகனுக்கு, 'இவள் கவின் நீ வந்த காலத்து வருதலால் நீ போன காலத்து அதன் தொலைவு உனக்கு அறியப்படாது' எனத் தோழி சொல்லி வரைவு கடாயது.

துறை விளக்கம்: மணந்து கொள்ளாமல் வந்து போகும் தலைவனுக்கு, 'இவள் அழகு நீ வந்த காலத்தில் வருதலால் நீ சென்ற காலத்தில் அதன் நீக்கம் உனக்கு அறியப்படாதது எனத் தோழி சொல்லி மணந்து கொள்ளுமாறு வேண்டியது.

239. **தோழி கூற்று**

துறை: 'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி கூறியது.

துறை விளக்கம்: வரைவை மேற்கொண்டு பிரிவேன் என்றுரைத்த தலைவனுக்குத் தோழி கூறியது.

240. **தோழி கூற்று**

துறை: தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதானமை அறிந்து தலைமகள் புலத்தவழி அவன் அதனை இல்லை என்று மறைத்தானாகத் தோழி சொல்லியது.

துறை விளக்கம்: தலைவனுக்குப் பரத்தை ஒருத்தியுடன் ஒழுகும் ஒழுக்கம் உண்டு என்று அறிந்து தலைவி புலந்தாள். தலைவன் அவ்வொழுக்கம் தன்னிடம் இல்லை என்று மறுத்தான். அப்போது தோழி கூறியது.

**4.3.5. வெறிப்பத்து**

241 முதல் 250 வரையுள்ள பாடல்கள் வெறிப்பத்தாகும். வெறியைப் பொருளாகக் கொண்டு பத்துப்பாட்டுகள் இதில் அமைந்துள்ளன. ஆதலால் வெறிப்பத்து எனப்பெயர் பெற்றது. 'வெறி' என்பது 'மணம்' என்ற பொருளில் வருவது. மிகுதிப் பொருளிலும் இது வரும். இயற்கையில் விளங்கும் மிகுமணம் என்ற சொல்லால் வழங்கப்படும்.

குறிப்பு

241. **தோழி கூற்று**

துறை: இற்செறித்தவழித் தலைமகட்கு எய்திய மெலிவு கண்டு, 'இ∴து எற்றினானாயிற்று,' என்று வேலனைக் கேட்பத் துணிந்துழி, அறத்தொடு நிலை துணிந்த தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள களவொழுக்கத்தை அறிந்ததால் தலைவி இல்லத்தில் காவலில் வைக்கப் பெற்றாள். அப்போது அவள் மெலிந்தாள். இ∴து எதனால் உண்டாயிற்று என்று வெறியாடும் வேலனைக் கேட்கத் துணிந்தபோது அறத்தொடு நிலை நிற்கத் துணிந்த தோழி செவிலி கேட்கும்படி தலைமகட்குச் சொல்லியது.

242**. தோழி கூற்று**

துறை: தலைமகள் அறத்தொடு நிலை நயப்ப வேண்டித், தோழி அவட்குச் சொல்லியது

துறை விளக்கம்: தலைவி அறத்தொடு நிற்றலை விரும்ப வேண்டித் தோழி அவளுக்குக் கூறியது.

243**. தோழி கூற்று**

துறை: தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது

துறை விளக்கம்: 'தாயிடம் அறியாமை உள்ளது என்று கூறித் தோழி செவிலித்தாய் எடுக்க இருந்த வெறியாடலை விலக்கியது.

244. **தோழி கூற்று**

துறை: வெறியாடல் துணிந்துழி விலக்க லுறும் தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: வெறியாடல் நிகழ்த்த வேண்டும் எனத் துணிந்த போது அதை விலக்க முயலும் தோழி செவிலி கேட்கும் வண்ணம் தலைவிக்குச் சொல்லியது.

245. **தோழி கூற்று**

துறை: தலைமகன் சிறைப்புறத்தானாக வெறி அறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

துறை விளக்கம்: தலைவன் சிறைப்புறமாக வந்திருந்தான். அவனுக்கு வெறியாடல் நிகழ இருப்பதை அறிவுறுத்தித் தோழி மணம் செய்து கொள்ளத் தூண்டியது.

246. **தோழி கூற்று**

குறிப்பு

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாய் நின்றுழி அவன் கேட்குமாற்றால் வெறி நிகழா நின்றமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியை மணந்து கொள்ளாமல் களவை மேற்கொண்டு ஒழுகும் தலைவன், சிறைப்புறமாய் வந்திருக்க, அவன் கேட்க வெறி நிகழ்வதைத் தோழி தலைமகட்குக் கூறியது.

247. **தோழி கூற்று**

துறை: வெறி விலக்கலுறும் தோழி தமர் கேட்பத் தலைமகளை வினவுவாளாய்ச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியின் மேனி வேறுபாட்டைக் கண்டு அவளது வேறுபாடு எதனால் உண்டானது என்பதை அறிய வெறியாடலுக்கு ஏற்பாடு செய்தனர். அதைத் தோழி விலக்க முயன்று தலைவியை வினவுவது போல் கூறியது.

248. **தோழி கூற்று**

துறை: தலைமகள் வேறுபாடு கழங்கினால் தெரியும் என்று வேலன் கூறியவழி அதனைப் பொய்யென இகழ்ந்த தோழி வெறி விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: தலைமகளின் மேனி வேறுபாட்டுக்குக் காரணம் கழங்கினால் தெரியும் என்று வேலன் கூறினான். அது பொய் என்று இகழ்ந்த தோழி வெறி விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது.

249. **தோழி கூற்று**

துறை: வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகட்குத் தோழி கூறியது.

துறை விளக்கம்: வேலன் தலைவியின் மேனி வேறுபாட்டுக்குரிய காரணத்தைச் சொன்னான். அதை மெய் என்று கொண்டாள் தாய். அவன் கேட்பத் தலைவிக்குத் தோழி உரைத்தது.

250. **தோழி கூற்று**

துறை: தலைமகட்கு வந்த நோய் முருகனால் வந்ததென இக்கழங்கு கூறிற்றென்று வேலன் சொன்னான் என்பது கேட்ட தோழி அக்கழங்கிற்கு உரைப்பாளாய்ச் செவிலி கேட்குமாற்றான் அறத்தொடு நிலை குறித்துச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவிக்கு வந்த நோய் முருகப் பெருமானால் ஏற்பட்டது என்று இக்கழங்கு கூறியது என்று வேலன் உரைத்தான்

என்பதைச் செவியேற்ற தோழி அந்தக் கழங்குக்கு உரைப்பவளாய்ச் செவிலி கேட்கும்படி அறத்தொடு நிலைபற்றிச் சொன்னது.

குறிப்பு

**4.3.6. குன்றக் குறவன் பத்து**

251 முதல் 260 வரையுள்ள பாடல்கள் குன்றக் குறவன் பத்தாகும். இப்பகுதியில் வரும் பத்துப் பாடல்களும் குன்றக் குறவன் என்று தொடங்குவன. ஆதலால் இப்பெயர்த்து.

251. **தோழி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகற்கு வரைவு வேட்ட தோழி கூறியது.

துறை விளக்கம்: தலைவியை மணந்து கொள்ளாமல் வந்து போய்க் கொண்டிருக்கும் தலைவனுக்குத் திருமணத்தை விரும்பிய தோழி கூறியது.

252. **தோழி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வந்தானாக உவந்த தோழி, தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணந்து கொள்வதாகக் கூறிப் பிரிந்தவன் குறித்த பருவத்துக்கு முன் வந்தான். அதைக் கண்டு மகிழ்ந்த தோழி தலைவிக்குச் சொல்லியது.

253. **தலைவி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவொடு புகுதரா நின்றான் என்பது தோழி கூறக் கேட்ட தலைமகள் அவட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் மண ஏற்பாட்டுடன் வந்துள்ளான் என்பதைத் தோழி சொல்லக் கேட்ட தலைவி அத்தோழிக்குக் கூறியது.

254. **தோழி கூற்று**

துறை: உடன்போக்கு உடன்பட வேண்டிய தோழி தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு போதற்கு உடன்பட்ட தோழி தலைவிக்குச் சொல்லியது.

255. **தலைவன் கூற்று**

குறிப்பு

துறை: 'நின்னால் காணப்பட்டவன் எத்தன்மையன் என்ற பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் கூடிய தலைவி எத்தகையவள் என்பதை அறிய விரும்பிய தோழன் 'தலைவி எத்தகையவள்?' என்று வினவியது.

256. **தலைவி கூற்று**

துறை: 'நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும் பருவத்தளல்லள்' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

துறை விளக்கம்: நீ கூறும் அவள் நின்னை வருத்தக் கூடிய அளவு காமவுணர்வு வரப்பெற்ற பருவம் உடையவள் அல்லள் என்று தோழி கூறத் தலைவன் கூறுவது.

257. **தோழி கூற்று**

துறை: 'வரைவிடை வைத்தப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது.

துறை விளக்கம்: வரைவிடை வைத்துப் பிரிவேன் என்ற தலைவனுக்குத் தோழி உடன்படாமல் கூறியது.

258. **தோழி கூற்று**

துறை: வரைவு வேண்டிவிட மறுத்துழித் தோழி தமர்க்குரைப்பாளாய்சொல்லியது. வரையாது வந்தொழுகும் தலைமகற்குத் தோழி அவன் மலை காண்பதே பற்றாகத் தாங்கள் உயிர் வாழ்கின்றமை தோன்றச் சொல்லிய தூஉம் ஆம்.

துறை விளக்கம்: மணம் செய்து கொள்ள வேண்டி உறவினரை அனுப்பிக் கேட்கத் தமர் மறுத்தனர். அப்போது சுற்றத்தார்க்கு உரைப்பவளாய்க் கூறியது.

259. **தலைமகன் மனத்துள் சொல்லியது**

துறை: வரையத் துணிந்த தலைமகன் வரைவு முடித்தற்குத் தலைமகள் வருந்துகின்ற வருத்தம் தோழி காட்டக் கண்டு, இனி அது கடிதின் முடியுமென உவந்த உள்ளத்தனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

துறை விளக்கம்: மணந்து கொள்வதற்கு முடிவு செய்த தலைவன், வரைவு முடித்தற்குத் தலைமகள் வருந்துகின்ற வருத்தம் தோழி காட்டக் கண்டு, இனி அது விரைவில் முடிந்து விடும் என்று மகிழ்ந்த உள்ளம் உடையவனாய்த் தனக்குள் சொல்லிக் கொண்டது.

260. **தோழி கூற்று**

துறை: பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி ‘இனிப் புனம் காவற்கு வாரேம்’ எனக் கூறி வரைவு கடாயது.

குறிப்பு

துறை விளக்கம்: தலைவன் முன் போல் பகற்குறியில் தலைவியைக் கூடுதற்காக வந்தான். அவனிடம் தோழி நாங்கள் இனித் தினைப்புனம் காவற்கு வாரோம் எனக்கூறி மணந்து கொள்ள வேண்டியது.

**4.3.7. கேழற் பத்து**

261 முதல் 270 வரையுள்ள பாடல்கள் கேழற் பத்தாகும். கேழல் என்பது காட்டுப் பன்றி. இது குறிஞ்சி நிலத்துக் கருப்பொருள்களுள் ஒன்று. இப்பகுதியுள் உள்ள பத்தப் பாடல்களுள் இது சிறப்பாகப் பேசப்படுகின்றது. ஆதலால் இப்பெயர்த்து.

261. **தோழி கூறியது**

துறை: அல்லகுறிப்பட்டுத் தலைமகன் நீங்கியமை அறியாதாள் போன்று தோழி பிற்றை ஞான்று அவன் சிறைப்புறத்தானாய் நிற்பத் தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியைக் காண வந்தான். பிழைபட்ட குறியால் அவளைக் காண இயலாது போயிற்று திரும்பினான். அத்தகையோன் மறுநாள் வந்தான். சிறைப்புறத்து இருந்தான். அவனுக்குத் தோழி கூறியது.

262. **தலைவி கூற்று**

துறை: ‘வரைந்து கொள்ள நினைக்கிலன்’ என்று வேறுபட்ட தலைமகள், ‘அவன் நின்மேல் விருப்பம் உடையன், நீ நோகின்றது என்னை! என்ற தோழிக்குக் கூறியது.

துறை விளக்கம்: தலைவன் மணந்து கொள்ள எண்ணவில்லை எனத் தலைவி மனம் வேறுபட்டாள்.அவன் நின் மீது விருப்பம் உடையவள். நீ வருந்துவது ஏன்? என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

263. **தலைவி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டமை அறிந்த தலைமகள், ‘நீ தொலைத்த நலம் இன்று எய்திய காரணம் என்னை?’ என்ற தோழிக்குச் சொல்லியது.

குறிப்பு

துறை விளக்கம்: மணந்து கொள்வதற்காகச் சொல்லிப் பிரிந்து போன தலைவன் மீண்டு வந்தான். அதை அறிந்த தலைவி, 'நீ தொலைத்த நலம் இன்.று எய்திய காரணம் என்னை?' என்ற தோழிக்குக் கூறியது.

264. **தோழி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகனைப் பகற்குறிக்கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவு கடாயது.

துறை விளக்கம்: மணந்து கொள்ளாமல் களவொழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகும் தலைமகனைப் பகற்குறியில் எதிர்ப்பட்டுத் தோழி மணம் செய்து கொள்ளுமாறு வேண்டியது.

265. **தலைவி கூற்று**

துறை: பரத்தையிடத்தானாக ஒழுகுகின்ற தலைமகன் விடுத்த வாயில் மக்கட்குத் தலைமகள் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் பரத்தை ஒழுக்கம் கொண்டிருந்த போது தலைவியிடம் தூது அனுப்பினான். வாயிலாக வந்த வாயில் மக்களை நோக்கித் தலைவி கூறியது.

266. **தோழி கூற்று**

துறை: நொதுமலர் வரைவு பிறந்துழித் தோழி தலைமகட்கு உளதாகிய வேறுபாடு கூறித் தலைமகனை வரைவு கடாயது.

துறை விளக்கம்: அயலார் தலைவியை மணக்க முன் வந்தனர். அதைக் கேட்ட தலைவி வேறுபட்டாள். அதனைத் தோழி தலைவனுக்குச் சொல்லி மணந்து கொள்ளும்படி வேண்டியது.

267. **தோழி கூற்று**

துறை: தலைமகளைத் தலைமகன் வரைவல் எனத் தெளிந்தான் என்று அவள் கூறக் கேட்ட தோழி அவன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியைத் தலைவன் மணந்து கொள்வேன் என்று கூறியதாகத் தலைவி கூறினாள். அதைக் கேட்ட தோழி அவன் சிறைப்புறத்தானாகக் கூறியது.

268. **தோழி கூற்று**

குறிப்பு

துறை: 'அவன் குறிப்பிருந்தவாற்றால் நம்மைப் பிரிந்து வந்தல்லது வரைய மாட்டான் போன்றிருந்தது' எனத் தலைமகள் கூறக் கேட்ட தோழி தலைமகன் சிறைப்புறத்தானாக அவட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவனது குறிப்பு நம்மைப் பிரிந்து போய்த் திரும்பி வந்தல்லது மணக்க மாட்டான் போல் தோன்றுகிறது என்று தலைவி கூறக் கேட்ட தோழி தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தலைவிக்குக் கூறியது.

269. **தோழி கூற்று**

துறை: குறைநயப்பக் கூறித் தலைமகளைக் கூட்டிய தோழி, அவன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழித் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

துறை விளக்கம்: தோழி தலைவியைத் தலைவன் விருப்பின்படி கூட்டினான். பின்பு ஒருகால் அவன் வந்து சிறைப்புறமாக இருந்தான். அப்போது தலைவிக்குத் தோழி கூறியது.

270. **தோழி கூற்று**

துறை: வரைவு காரணமாக நெட்டிடை கழிந்த பொருள்வயின் போகிய தலைமகன் வந்தமை அறிந்த தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

துறை விளக்கம்: மணம் செய்து கொள்வது காரணமாகப் பொருள் தேடச் சென்ற தலைவன் வந்ததை அறிந்து தோழி மகிழ்ந்த மனத்துடன் தலைவிக்குச் சொல்லியது.

**4.3.8. குரக்குப் பத்து**

271 முதல் 280 வரையுள்ள பாடல்கள் குரக்குப்பத்தாகும். இப்பகுதியில் உள்ள பாட்டுத்தோறும் குரங்கு சிறந்து வரத் தொடுக்கப் பெற்றுள்ளதால் இதற்குக் குரக்குப் பத்து எனப் பெயர் ஆயிற்று. குரங்கு + பத்து = குரக்குப்பத்து.

271. **தோழி கூற்று**

துறை: தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழிச் செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

துறை விளக்கம்: தலைவன் தலைமகளை மணந்து கொள்ள வேண்டித் தக்காரை அனுப்பினான். அவள் சுற்றத்தார் அவனைத் தர மறுத்தனர். அப்போது தோழி செவிலிக்கு உண்மையைச் சொல்லி அறத்தொடு நின்றது.

272. **தலைவி கூற்று**

துறை: அல்ல குறிப்பட்டு நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாக முன்னை நாள் நிகழ்ந்ததனைத் தோழிக்குச் சொல்லுவாள் போன்று தலைமகள் சொல்லியது.

துறை விளக்கம்: குறிப்பிட்ட குறி தவறித் தலைவியைக் கூடப் பெறாமல் நீங்கும் தலைமகன் வந்து சிறைப்புறமாய் நின்றான். அப்போது முன் நாள் நிகழ்ந்ததைத் தோழிக்குச் சொல்வதைப் போன்று தலைவி கூறியது.

273. **தோழி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரியும் தலைமகன், 'நின் துணைவியை உடம்படுவித்தேன்! இனி நீயே இதற்கு உடம்படாது கலிழ்கின்றாய்?' என்றாற்குத் தோழி கூறியது.

துறை விளக்கம்: வரைவிடை வைத்துப் பிரியும் தலைவன் நின் துணைவியை உடன்படத் செய்தேன். இனி நீ உடம்படாது அழுகின்றாய் என்றவனுக்குத் தோழி கூறியது.

274. **தலைவி கூற்று**

துறை: வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

துறை விளக்கம்: மணம் செய்து கொள்வதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டித் தலைவன் பிரிந்தான். அப்போது தோழி தலைவியை ஆற்றாலானாள். அவளுக்குத் தலைவி கூறியது.

275. **தோழி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வருதலால் எதிர்ப்பாடு பெறாத தோழி குறியிடத்து எதிர்ப்பட்டு அவன் கொடுமை கூறி நெருங்கிச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் ஒழுகுபவனாய் இடைவிட்டு வந்தனன். அவனைத் தோழி கண்டு அவன் கொடுமையைச் சொல்லியது.

276. **தோழி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் களவு ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தான். அத்தகையானை நெருங்கித் தோழி கூறியது.

குறிப்பு

277. **தோழி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமைகன் புணர்ந்து நீங்குழி எதிர்ப்பட்ட தோழி வரைவு கடாயது.

துறை விளக்கம்: தலைவியை மணந்து கொள்ளாமல் களவொழுக்கத்தை மேற்கொண்டு வந்த தலைவன் தலைவியைப் புணர்ந்து நீங்கும் போது எதிர்ப்பட்ட தோழி அவனைத் தலைவியை மணந்து கொள்ளும்படி வேண்டியது.

278. **தலைவி கூற்று**

துறை: வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளாமல் களவு ஒழுக்கத்தை மேற்கொண்டான். அவன் சிறைப்புறத்தே இருந்தான். அப்போது தலைவி தோழிக்குச் சொல்லியது.

279. **தோழி கூற்று**

துறை: இரவுக்குறி வேண்டும் தலைமகனைத் தோழி வரலருமை கூறி மறுத்தது.

துறை விளக்கம்: தலைவன் தலைவியைக் கூட இரவுக்குறியை விரும்பினன். அதுபோழ்து தோழி அவன் வருதற்குரிய வழியின் அருமை கூறி மறுத்தது.

280. **தோழி கூற்று**

துறை: புணர்ந்துடன் போகிய தலைமகன் தலைமகளைக் கரண வகையான் வரைந்தானாக, எதிர் சென்ற தோழிக்கு, 'இனி யான் இவளை வரைந்தமை நுமர்க்கு உணர்த்த வேண்டும்' என்றானாக அவள் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியைத் தன்னுடன் அவளுடைய பெற்றோர் அறியாமல் அழைத்துச் சென்றான். முறைப்படி மணந்தான். அப்போது தோழி அவன் எதிரே வந்தபோது 'இனி யான் இவளை வரைந்தமை நுமர்க்குத் தெரிவிக்க வேண்டும்' என்று கூற அவள் சொல்லியது.

குறிப்பு

### 4.3.9. கிள்ளைப் பத்து

281 முதல் 290 வரையுள்ள பாடல்கள் கிள்ளைப் பத்தாகும். கிள்ளை பொருளாக அமையும் பாட்டுக்கள் பத்தின் தொகுதி இது. ஆதலால் இப்பெயர்த்து. கிளிகளில் ஐந்நூறு வகை உண்டு. கிள்ளை – கிளி.

281. **தலைவன் கூற்று**

துறை: ஆயத்தோடு விளையாட்டு விருப்பினாற் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன் அவள் புனங்காவற்குரியளாய் நின்றது கண்டு மகிழ்ந்து சொல்லியது.

துறை விளக்கம்: தன் தோழியருடன் விளையாட்டு விருப்பத்தினால் சோலையில் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகும் தலைவன், அவள் புனங்காவற்கு உரியவளாய் நின்றதைக் கண்டு மகிழ்ந்து கூறியது.

282. **தோழி கூற்று**

துறை: இரவுக்குறி நேர்ந்த தோழி தலைமகன் வந்து புணர்ந்து நீங்குழி அவனை எதிர்ப்பட்டுச் சொல்லியது

துறை விளக்கம்: தலைவன் இரவில் வந்து தலைவியைப் புணர்ந்து நீங்கினான். அப்போது தோழி அவனைக் கண்டு இனி இரவில் வர வேண்டா எனக் கூறியது.

283. **தோழி கூற்று**

துறை: தோழி வாயில் மறுக்கவும் தலைமகன் ஆற்றாமை கண்டு தலைமகள் வாயில் நேர அவன் பள்ளியிடத்தாயிருந்துழிப் புக்க தோழி கூறியது.

துறை விளக்கம்: தோழி தலைவனுக்கு வாயில் மறுத்தாள். தலைமகன் ஆற்றான் ஆயினான். ஆனதால் தலைவி அவனுக்கு வாயில் தந்தான். அவன் தலைவியுடன் படுக்கையில் இருந்தபோது அங்குப் புகுந்த தோழி கூறியது.

284. **தோழி கூற்று**

துறை: தினையரிந்துழிக் கிளியை நோக்கிக் கூறுவாள் போல் சிறைப்புறமாக ஓம்படுத்தது.

குறிப்பு

துறை விளக்கம்: விளைந்து முற்றியது தினை. அதனை அரிந்தனர். அப்போது கிளியை நோக்கிக் கூறுவது போல் சொல்லுதல்.

285. **தோழி கூற்று**

துறை: ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

துறை விளக்கம்: சில காலம் பிரிந்து தங்கியிருந்து பின் வந்த தலைவனுக்குத் தோழி சொன்னது.

286. **தலைவி கூற்று**

துறை: உடன்போக்குத் துணிந்த தலைமகன் அ∴தொழிந்து தானே வரைவிடை வைத்துப் பிரிய நினைந்ததனைக் குறிப்பால் உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிவல் என்ற வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியதூஉம் ஆம்.

துறை விளக்கம்: தலைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்லத் துணிந்தான் தலைவன். பின் அதை விட்டுத் தானே வரைவிடை வைத்துப் பிரிய எண்ணினான். அதைக் குறிப்பால் உணர்ந்த தலைவி தோழிக்குக் கூறியது.

தலைவன் மணம் செய்து கொள்வதற்குரியவற்றைச் செய்தற்குப் பிரிந்து செல்வேன் என்ற போது தலைவி தோழிக்குக் கூறியது.

287. **தோழி கூற்று**

துறை: இன்ன நாளில் 'வரைவல்' எனக் கூறி அந்நாளில் வரையாது பின் அவ்வாறு கூறும் தலைமகற்குத் தோழி கூறியது.

துறை விளக்கம்: இன்ன நாளில் மணந்து கொள்வேன் எனக் கூறி, அந்த நாளில் மணந்து கொள்ளாமல் பின்பு அப்படியே கூறும் தலைமகனுக்குத் தோழி சொன்னது.

288. **தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது**

துறை: கிளிகள் புனத்தின்கண் படியா நின்றனவென்று தலைவியைக் காக்க ஏவிய வழி அதனையறிந்த தலைமகன் உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

துறை விளக்கம்: தான் காதலித்த தலைவி கிளிகள் படியும் தினைப்புனத்தில் காவல் காக்க ஏவியபோது அதை அறிந்த தலைமகன் மகிழ்ந்து தன் மனத்துக்குக் கூறியது.

குறிப்பு

289. **தோழி கூற்று**

துறை: இற்செறித்த பின்னர்த் தோழி வரைவு கடாவுழி முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல் என்றாற்கு அவள் சொல்லியது.

துறை விளக்கம்: தலைவியின் களவொழுக்கத்தால் வீட்டில் இருக்கும்படி செய்யப்பட்டாள். பின்னர்த் தோழி தலைவனிடம் வரைவு கடாயினாள். இப்போது முற்றி விளைந்த தினைப்புனம் இவள் காத்தலைக் கைவிடின் மணந்து கொள்வேன் எனத் தலைவன் சொல்லத் தோழி கூறியது.

290. **தோழி கூற்று**

துறை: காவல் மிகுதியான் இரவுக்குறி மறுக்கப்பட்டு நீங்கிய தலைமகன் வந்துழி அவன் கேட்டு வெறுப்புத் தீர்தற் பொருட்டால் தினைப் புனங்காவல் தொடங்கா நின்றாள் என்பது தோன்றத் தோழி கூறியது.

துறை விளக்கம்: காவல் மிகுதி தலைவிக்கு ஏற்பட்டதால் இரவுக்குறி தரப்படவில்லை. இந்நிலையில் தலைவன் வந்தபோது அவன் கேட்டு வெறுப்புத் தீர்தற் பொருட்டுத் தினைப்புனம் காவல் தொடங்குகின்றாள் என்பது தோன்றத் தோழி, 'அறத்தைச் செய்யும் செங்கோன்மையை உடைய மன்னனைப் போன்று மலர்களின் மணம் கமழ்கின்ற கூந்தலையுடைய குறமகள் தலைவி மிக உயர்ந்தாள். கிளிகளும் உயர்ந்தன. அவளால் மகிழ்ந்து நோக்கப்படுவதே அல்லாது விரைவாய் விலக்கவும் படுமாகலான்!' என்றாள்.

### 4.3.10. மஞ்ஞைப் பத்து

291. தலைவன் கூற்று

கூற்று: வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத் ததுவே பணைத்தோள்
ஆய்தழை நுடங்கும் அல்குல்
காதலி உறையும் நனிநல் ஊரே (ஐங்.291)

மூங்கில் போன்ற பருத்த தோள்களையும் ஆய்ந்து எடுத்த தழைகளால் ஆகிய தழை ஆடை அசையும் அடிவயிற்றையும் உடைய என் காதலி வாழும் ஊர் மிக நல்ல ஊர். அங்கு மயில்கள் ஆட

குறிப்பு

ஆட்டத்திற்கேற்பப் பேராந்தைகள் மாறிமாறி ஒலிக்க குண்டுக் கற்கள் உள்ள பக்கமலையுடைய ஊரில் இவள் வாழ்கின்றாள்.

292. தலைவி கூற்று

கூற்று: பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை முடித்தவளை இல்லத்துக் கொண்டு புகுந்துழித் தலைமகன் உவந்து சொல்லியது.

மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினும் சிறந்தனள் எமக்கே நீநயந்து
நன்மனை அருங்கடி அயர
எம்நலம் சிறப்பயாம் இனிப் பெற்றோளே (ஐங்.292)

மயில்கள் ஆடவும், பெரிய தேனீக்கள் ஒலிக்கவும் குளிர்ந்த மழை மேகங்கள் மலைமுகட்டைத் தழுவிக் கிடக்கும் பெரிய மலைநாடனே நீ விரும்பி நம் மனையின் கண் கொணர்ந்து திருமணம் செய்து கொண்டமையின் அந்த மணத்தால் எம் நலனும் சிறந்தன. இப்போது யாம் பெற்ற இவள் உன்னை விட சிறப்பானவளாக எமக்கு உள்ளாள்.

சங்க இலக்கியத்தில் இப்பாடலில் மட்டுமே பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை என்ற இரண்டாவது திருமணம் குறிக்கப் பெற்றுள்ளது.

293. தலைவன் கூற்று

கூற்று: பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைவி பின்னாக மறைய வந்து கண்புதைத்துழிச் சொல்லியது.

சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை அன்ன
நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே
பாயல் இன்துணை ஆகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயலது உளரோஎன் நெஞ்சு அமர்ந்தோளே (ஐங்.293)

மலைப்பக்கம் முழுவதும் நறுமணம் கமழச் செய்யும் காந்தள் மலர்க்கொத்துப் போன்ற உன் அழகிய கைகளால் என் கண்களைப் பொத்தியவளே, படுக்கையின்கண் இனிய துணையாகி மூங்கில் போன்ற மென்மை மிக்க தோள்களையும் மயிலின் சாயலையும் கொண்டு

உன்னையன்றி என் கண்களைப் பொத்தி விளையாடும் உரிமை பிறர்க்கு இல்லை. என் நெஞ்கத்து என்றென்றும் அமர்ந்திருப்போர் நீயே.

குறிப்பு

**4.4 நிறைவாக**

குறிஞ்சித் திணையில் இடம்பெறும் அன்னாய் வாழிப் பத்து, அன்னாய்ப் பத்து, அம்மவாழிப் பத்து, தெய்யோப் பத்து, வெறிப்பத்து, குன்றக்குறவன் பத்து, கேழற் பத்து, குரக்குப்பத்து, கிள்ளைப்பத்து, மஞ்ஞைப்பத்து ஆகிய பத்துக்களில் இடம்பெறும் கூற்றுகள் இடம்பெற்றுள்ளன. மஞ்ஞைப் பத்தில் இடம்பெற்றுள்ள தலைவன் கூற்று இரண்டும், தலைவி கூற்று ஒன்றும் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இதில் குறிஞ்சி நில வருணனை, முதல், கரு, உரிப்பொருட்கள் சுட்டப்பட்டள்ளன. குறிஞ்சி நில மலைவளக் காட்சியை மாணவர்கள் இப்பாடப்பகுதியின் வாயிலாக அறிகின்றனர்.

**4.5 சோதித்தறியும் வினா விடைகள்**

1. மஞ்ஞைப் பத்து பற்றிக் குறிப்பு வரைக.

ஐங்குறுநூற்றில் குறிஞ்சித் திணையில் அமையும் பத்துக்கள் மஞ்ஞைப் பத்தாகும். குறிஞ்சித் திணை கபிலரால் பாடப்பெற்றதாகும். மஞ்ஞை என்பது மயிலைக் குறிக்கும். இப்பகுதியின் 10 பாடல்களும் மயில்கள் தொடர்புடைய செய்திகளைத் தருவதால் மஞ்ஞைப் பத்து ஆயிற்று.

2. குறிஞ்சித் திணையில் அமையும் பத்துப்பத்துக்களை எழுதுக.

இத்திணையில் அன்னாய் வாழிப் பத்து, அன்னாய்ப் பத்து, அம்ம வாழிப் பத்து, தெய்யோப்பத்து, வெறிப் பத்து, குன்றக் குறவன் பத்து, கேழற் பத்து, குரக்குப் பத்து, கிள்ளைப் பத்து, மஞ்ஞைப் பத்து ஆகியவை இடம்பெறுகின்றன.

3. தலைவன் கூற்றில் அமையும் கூற்றுச் சூழலைக் கூறுக.

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது (291). பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைவி பின்னாக மறைய வந்து கண்புதைத்துழிச் சொல்லியது (293).

4. மஞ்ஞைத் பத்தில் இடம்பெறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க

குறிப்பு

மஞ்ஞைப் பத்தில் தலைவன் கூற்று நான்கும், தலைவி கூற்று இரண்டும், தோழி கூற்று நான்கும் அமைகின்றன. இதில் பாடப்பகுதியில் தலைவன் கூற்று இரண்டும், தலைவி கூற்று ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

291. தலைவன் கூற்று

கூற்று: வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகள் அடுக்கத் ததுவே பணைத்தோள்
ஆய்தழை நுடங்கும் அல்குல்
காதலி உறையும் நனிநல் ஊரே (ஐங்.291)

மூங்கில் போன்ற பருத்த தோள்களையும் ஆய்ந்து எடுத்த தழைகளால் ஆகிய தழை ஆடை அசையும் அடிவயிற்றையும் உடைய என் காதலி வாழும் ஊர் மிக நல்ல ஊர். அங்கு மயில்கள் ஆட ஆட்டத்திற்கேற்பப் பேராந்தைகள் மாறிமாறி ஒலிக்க குண்டுக் கற்கள் உள்ள பக்கமலையுடைய ஊரில் இவள் வாழ்கின்றாள்.

292. தலைவி கூற்று

கூற்று: பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவை முடித்தவளை இல்லத்துக் கொண்டு புகுந்துழித் தலைமகன் உவந்து சொல்லியது.

மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிரத்
தண்மழை தழீஇய மாமலை நாட
நின்னினும் சிறந்தனள் எமக்கே நீநயந்து
நன்மனை அருங்கடி அயர
எம்நலம் சிறப்பயாம் இனிப் பெற்றோளே (ஐங்.292)

மயில்கள் ஆடவும், பெரிய தேனீக்கள் ஒலிக்கவும் குளிர்ந்த மழை மேகங்கள் மலைமுகட்டைத் தழுவிக் கிடக்கும் பெரிய மலைநாடனே நீ விரும்பி நம் மனையின் கண் கொணர்ந்து திருமணம் செய்து கொண்டமையின் அந்த மணத்தால் எம் நலனும் சிறந்தன. இப்போது யாம் பெற்ற இவள் உன்னை விட சிறப்பானவளாக எமக்கு உள்ளாள்.

சங்க இலக்கியத்தில் இப்பாடலில் மட்டுமே பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை என்ற இரண்டாவது திருமணம் குறிக்கப் பெற்றுள்ளது.

293. தலைவன் கூற்று

குறிப்பு

கூற்று: பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைவி பின்னாக மறைய வந்து கண்புதைத்துழிச் சொல்லியது.

சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை அன்ன
நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே
பாயல் இன்துணை ஆகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயலது உளரோஎன் நெஞ்சு அமர்ந்தோளே (ஐங்.293)

மலைப்பக்கம் முழுவதும் நறுமணம் கமழச் செய்யும் காந்தள் மலர்க்கொத்துப் போன்ற உன் அழகிய கைகளால் என் கண்களைப் பொத்தியவளே, படுக்கையின்கண் இனிய துணையாகி மூங்கில் போன்ற மென்மை மிக்க தோள்களையும் மயிலின் சாயலையும் கொண்டு உன்னையன்றி என் கண்களைப் பொத்தி விளையாடும் உரிமை பிறர்க்கு இல்லை. என் நெஞ்சகத்து என்றென்றும் அமர்ந்திருப்போர் நீயே.

**4.6. பயிற்சி வினா**

1. ஐங்குறுநூற்றில் உள்ள மஞ்ஞைப் பத்துப் பாடல்களின் சிறப்பினை விவரிக்க.

**4.7. பொருளறிக**

1. குடிஞை இரட்டும் - பேராந்தை மாறி ஒலிக்கும், 2. பணைத்தோள் - பெருத்ததோள், 3. பெருந்தேன் - பெரிய வண்டுகள், 4. இரிம – ஒலிக்க, தழீஇய – தழுவிய, கடிஅயர – மணத்தைச் செய்ய, பாயல் - படுக்கை, தோகை மாட்சிய – மயில் போன்ற பெருமையையுடைய

**4.8. மேலும் படித்தறிக.**

**1.** கி.வா.ஜகந்நாதன் - தமிழ் நூல் அறிமுகம்
அமுத நிலையம்
சென்னை – 14
1991.

2. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை - ஐங்குறுநூற்று உரைகள்
கழக வெளியீடு
சென்னை

குறிப்பு

## பிரிவு-1- (நிறைவு)

## கூறு 5: குறுந்தொகை – பரணர் பாடல்கள்

## பரணர் பாடல்கள் பா. எண். 19, 24, 36, 128, 399

**5. பாடஅமைப்பு:**

**5.1. அறிமுகம் - குறுந்தொகை**

**5.2. நோக்கம் .**

**5.3. பரணர் - பாடிய பாடல்கள்**

**5.3.1. பாடற் சிறப்புக்கள்**

**5.3.2. பரணரின் தனிச்சிறப்பு**

**5.3.3. பரணரின் புலமை**

**5.4. கூற்றுக்கள்**

**5.4.1. தலைவி கூற்றுகள்- (1,2.)**

**5.4.2 தலைவன் கூற்று**

**5.4.3. தலைவி கூற்று**

**5.5. நிறைவாக**

**5.6. சோதித்தறியும் வினாவிடைகள்**

**5.7. பயிற்சி வினா**

**5.8. பொருளறிக**

**5.9. மேலும் படித்தறிக.**

### 5.1. அறிமுகம் - குறுந்தொகை

இது நல்ல குறுந்தொகை எனப் பாராட்டப்பெறும் சிறப்பினைப் பெற்றது. தொகை நூல்களிலே முதன் முதலாகத் தொகுக்கப்பட்டது. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடையது. இந்நூலைத் தொகுப்பித்தவன் பூரிக்கோ. பாடிய புலவர்கள் இருநூற்றைவர். இந்நூலின் முதல் 380 பாடல்களுக்குப் பேராசிரியரும், இறுதி 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியரும் உரை கண்டுள்ளனர். அப்பழைய உரை அப்பொழுது கிடைத்திலது. பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடியுள்ளார். குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் பூரிக்கோ, தொகுப்பித்தவர் யாரென்று தெரியவில்லை.

*Self-Instructional Material*

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இதனை நல்ல குறுந்தொகை எனப் புலவர் பாராட்டுவர். குறைந்த அடிகளையுடைய பாடல்களை உடையது குறுந்தொகை. நான்கு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை அமைந்துள்ள பாடல்கள் இவை. ஏடு எழுதுவோர் பிழையால் 307, 391ஆம் பாடல்கள் ஒன்பது அடிகளாக உள்ளன.

| | | |
|---|---|---|
| நான்கு அடிகள் | - | 38 |
| ஐந்து அடிகள் | - | 90 |
| ஆறு அடிகள் | - | 93 |
| ஏழு அடிகள் | - | 103 |
| எட்டு அடிகள் | - | 75 |
| ஒன்பது அடிகள் | - | 2 |
| | ஆக | 401 |

தொகை என்ற பெயரால் சங்க இலக்கியத்தில் அமைந்தவை குறுந்தொகையும், கலித்தொகையும், அகநானூற்றை நெடுந்தொகை என்றும் அழைப்பர். குறைந்த அடிகளையுடைய பாடல்களைக் குறுந்தொகை என்றும், நெடிய அடிகளையுடைய பாடல்களை நெடுந்தொகை என்றும் அழைத்தனர். அகநானூறு 13 அடி முதல் 31 அடிகள் வரை உள்ள பாடல்களால் அமைந்தது.

இந்நானூறு பாடல்களை 205 புலவர்கள் பாடியுள்ளனர். ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள் 10 உள்ளன.

புலவர் பெயர்களைக் கொண்டு ஆராய்ந்தால் எட்டுத்தொகையில் முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை என்பது தெரிய வரும். காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்ரென்பது ஒரு புலவர் பெயர். அவருடைய இயற்பெயர் நச்செள்ளையார் என்பது, விருந்துவரக் கரைந்த காக்கையைப் பாராட்டினமையின் காக்கப்பாடினியாரென்ற சிறப்புப் பெயர் அவருக்கு உளதாயிற்று. குறுந்தொகையை முதலில் தொகுக்கையில் நச்செள்ளையார், காக்கை பாடினியார் நச்செள்ளையாரெனக் குறிக்கப்பட்டார். அப்பால் தொகுக்கப்பட்ட நூல்களில் அவ்வாறே வழங்கப்பட்டார். கயமனாரென்பது ஒரு புலவர் பெயர். அப்பெயரை

குறிப்பு

அவரது சிறப்புப் பெயராகவே கருத இடமுண்டு. அவரது இயற்பெயர் தெரியவில்லை. குறுந்தொகையில்', கழியில் உள்ள நெய்தல் மலருக்குக் கயத்தில் மூழ்கும் மகளிர் கண்ணை அவர் உவமிக்கின்றார். கயத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் கூறுதலின் அப்பெயர் பெற்றரென்று கொள்ளல் தகும். அவர் இயற்றிய பாடல்கள் பிறதொகை நூல்களிலும் காணப்படுகின்றன. அவ்விடங்களிலும் கயமனாரென்ற சிறப்புப் பெயரே குறிக்கப் பெற்றிருக்கிறது. அவருடைய இயற்பெயர் தெரியவில்லை. அவ்விடங்களிலும் கயமனாரென்ற சிறப்புப் பெயரே குறிக்கப் பெற்றிருக்கிறது. அவருடைய இயற்பெயர் தெரிந்த காலத்தும் குறுந்தொகையிலமைந்த பெயரையே பின் தொகுத்த நூல்களிலும் அமைத்தனரென்றே தெரியவருகின்றது. இங்ஙனமே கள்ளிலாத்திரையனாரென்பவரது பெயருக்கரிய காரணம் குறுந்தொகையிலுள்ள செய்யுட் பகுதியாகிய, "கள்ளிற் கேளி ராத்திரை" என்பது. அவர் செய்யுட்கள் புறநானூற்றிலும் வருகின்றன. ஒரேருழவரென்னும் புலவர் இயற்றிய குறுந்தொகைப் பாட்டிலுள்ள, "ஒரே ருழவன் போல" என்னும் தொடர் அவரது பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுகின்றது. புறநானூற்றிலும் அவர் செய்யுளொன்று காணப்படுகின்றது. இவ்விரு புலவர்களும் குறுந்தொகைச் செய்யுட்பகுதி காரணமாகப் பெற்ற பெயராலேயே பின் தொகுத்த புறநானூற்றிலும் குறிக்கப்பட்டனரென்றல் ஏற்புடையதேயன்றோ?

### 5.2. நோக்கம் :

சங்கப் புலவருள் சிறப்பும் செம்மலும் வாய்ந்த பரணர் கபிலருடன் மிக நெருங்கிய நட்பு பூண்டு, அவருடன் இரட்டையராய்த் திகழ்ந்தமையால், 'கபில பரணர்' என்று சேர்த்தே குறிக்கப்பெற்றவர். சங்கத்தில் தலைமை பெற்றுத் திகழ்ந்த நக்கீரராரும் மதித்துப் போற்றப்பட்டவர் என்பதால் அவர் பாடல்களை மாணவர்கள் அறியச் செய்தல் நோக்கமாகும்.

### 5.3. பரணர் பாடிய பாடல்கள்

இவரது இயற்பெயரே பரணர் என்பதாம். இவர் பாடியனவாகப் புறநானூற்றில் பதின்மூன்றும் (4, 63, 141, 144, 145, 336, 341, 343, 348, 352, 354, 369) பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தும் (41-45) அகநானூற்றில்

*Self-Instructional Material*

முப்பத்து நான்கும் (6, 62, 76, 116, 122, 125, 135, 142, 148, 152, 162, 178, 181, 186, 196,198, 208, 212, 222, 226, 236, 246, 258, 262, 266, 276, 322, 326, 356, 367, 372, 376, 386, 396) குறுந்தொகையில் பதினேழும் (19, 24, 36, 50, 73, 89, 120, 128, 165, 199, 258, 259, 292, 298, 328, 393, 399) நற்றிணையில் பன்னிரண்டும் (6, 100, 201, 247, 260, 265, 270, 280, 300, 310, 350, 356) ஆக 86 பாடல்கள் உள்ளன.

### 5.3.1. பாடற் சிறப்புக்கள்

புறப்பாடல்களுள் சோழன் உருவப் ப∴றேர் இளஞ்சேட்சென்னியின் போர்த்தோற்றத்தை இவர் மிகச் சிறப்பாகப் புனைந்துள்ளார். (புறநானூறு.4). சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்ப∴றடக்கைப் பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்தே பொருது படைகளுடன் இருவரும் வீழ்ந்த நிலையில் அக்களத்தே சென்று தொகைநிலைத் துறையில் இவர் இரங்கிப் பாடியது ஏனையோரையும் இரக்கத்தில் ஆழ்த்துவதாய் உள்ளது (புறநானூறு.63). வையாவிக் கோப்பெரும் பேகனின் ஈகைச் சிறப்பினைப் பாணாற்றுப் படையாகவும் ( புறநானூறு.141), அவன் கொடைமடம் படுதலல்லது படைமடம் படாமையை இயன்மொழியாகவும் (புறநானூறு.142) பாடிய இவர், அவன் தன் மனைவி கண்ணகியைத் துறந்து மற்றொருத்தியின் நலன் நயந்து நல்லூரின் கண்ணே இருக்கையில் அக்கண்ணகி பொருட்டு அவனை இரு பாடல்களால் பாடி, அவளுடன் இணைக்கவும் முயன்றார் (புறநானூறு.144, 145). சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவனது போர் வெற்றியை மறக்களவழியாக ஏர்க்கள உருவகமும் அமைய இவர் புனைந்துள்ளார். (புறநானூறு.369). மகட்பாற் காஞ்சித்துறையில் இவர் பாடியுள்ள ஏனைய புறப்பாடல்கள் ஆறும் (336, 341, 343, 348, 352, 354) அத்துறையைப் பாடுவதில் அமைந்த இவரது தனியாற்றலை உணர்த்தும்.

### 5.3.2. பரணரின் தனிச்சிறப்பு

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தினால் சேரவேந்தன் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடி உம்பற்காட்டு வருவாயினையும், அவன் மகன் குட்டுவன் சேரலையும், அவன் தர இவர் பரிசிலாகப் பெற்றார் (பதிற்றுப்பத்து.5 ). அகத்துறைப் பாடல்களைச் சிறப்புற ஆக்குவதிலும்

குறிப்பு

இவர் வல்லவர். இரவுக்குறியிடையீடுகள் பலவற்றையும் அடுக்கிக் கூறிய தலைவி, அவையெல்லாம் இல்லாது அரிதின் வாய்த்த ஓரிரவில் தலைவன் வாராதொழிந்ததையும் தெரிவித்து, 'அதனால் தோழி, நம் களவொழுக்கம் பல தடைகளையுடையது காண்' என்று தோழியிடம் கூறுவதாகவும், (அகநானூறு.122), அல்ல குறிப்பட்டு மீளும் தலைவன் தன்நெஞ்சை நோக்கி, 'நம் காதலி நல்லவள் என்பதை மட்டும் அறிந்து, அவள் நம்மால் எய்தற்கரியவள் என்பதை அறியாத என் நெஞ்சே, பொருளில்லாதோன் இன்பத்தைக் காமுற்றவாறு போல நீயும் நினக்கு அரியதொன்றை விரும்பினாய்' என்று கலங்கி மொழிவதாகவும் (குறுந்தொகை.120), இன்னும் இவ்வாறே இவர் பாடியுள்ள அகப்பாடல்களைக் காணலாம். அவ்வகப் பாடல்களுள் இவர் அக்கால வரலாற்றுக் குறிப்புக்களான புறச்செய்திகளை இடைப்புகுத்தி அமைத்துள்ள பான்மை தனிச்சிறப்பு வாய்ந்ததாம். 'ஊரனாகிய தலைவன் எம் சேரிக்கண் வந்தானாக, அஃதையென்பான் களிறுகளுடனே நன்கலங்களை ஈயும் நாண்மகிழிருக்கையாகிய அவையின்கண் புகும் பொருநர் எறியும் பறைபோல, அவ்வூரன் பெண்டிர் ஓயாது என்னைப் பழிப்பர் என்று பலரும் கூறுகின்றனர். ஆட்டனத்தியைக் கண்டீரோ, என்று வினவிச் சென்று அவன் காதலியாகிய ஆதிமந்தி பேதுற்று வருந்துமாறு அவனைக் கவர்ந்து கொண்ட காவிரி யாறு போல, அவ்வூரனை யானும் கவர்ந்து கொள்ள இனி ஆராய்கின்றேன்', என்று பரத்தை பேசுவதில் (அகநானூறு.76) அகச் செய்திகளுக்குப் புறச்செய்திகளை இவர் உவமித்து இணைக்கும் நயம் மிகப் பாராட்டத்தக்கதாகும்.

**5.3.3. பரணரின் புலமை :**

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய மூன்று தொகை நூல்களிலும் அமைந்த இவர்தம் பாடல்கள் அறுபத்து மூன்றனுள் பத்துப்பாடல்கள் ஒழிய ஏனைய ஐம்பத்து மூன்று பாடல்களிலும் இவர் இவ்வாறான குறிப்புக்களைப் பொருத்தியுள்ளார். முடிகெழுவேந்தர், குறுநில மன்னர், வண்மையர், மறவர், தலைவர், பெண்டிர் ஆகியோர் வரலாற்றுச் செய்திகளும், நாடுகள், நகர்கள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றின் குறிப்புகளும் இவரால் நேரில் கண்டாங்கே குறிக்கப்பெற்றுள்ளன. அதியமானைப் பலபடப் பாராட்டிப் பாடி

ஔவையாரால், ஒரு பாடலில், 'நீ ஏழரசரோடு மாறுபட்டு மேற்சென்று போரிலே வென்று நின்னாற்றலைத் தோற்றுவித்த அன்றும் என்போலும் பாடுநர்க்கு அரியையாயினை, இன்றும் மாறுபாடு மிக்க கோவலூரை அழித்து வென்று ஆழி தாங்கிய நின் தோளைப் பரணனே (தன் பெருமையால்) பாடினான். பிறரால் நீ பாடப்படுதற்கு அரியை' என்று, இவரது புலமை புகழப் பெறுவது காணலாம் (புறநானூறு.99). பதிற்றுப்பத்தின் பதிகமும், 'கரணம் அமைந்த காசறு செய்யுட் பரணர்' என்று இவரது செய்யுட் பெருமையைச் செப்பியே இவரைக் குறிப்பிடுகின்றது (பதிற்றுப்பத்து. 5).

குறுந்தொகைப் பாடல்களிலிருந்து தெரியவரும் அரசர், புலவர் (கொடையாளிகள்), குறுநில மன்னர், சான்றோர்

| | |
|---|---|
| 1. அகுதை – 298 | 13. கோசர் - 15, 73 |
| 2. அஞ்சி – 91 | 14. சேந்தன் - 258 |
| 3. அதிகன் - 393 | 15. தொண்டையர் - 260 |
| 4. அருமன் - 293 | 16. நள்ளி - 210 |
| 5. அழிசி – 258 | 17. நன்னன் - 73, 292 |
| 6. ஆஅய் - 84 | 18. பசும்பூட்பாண்டியன் - 393 |
| 7. எவ்வி – 19 | 19. பாரி - 196 |
| 8. எழினி – 80 | 20. பூழியர் - 163 |
| 9. ஓரி – 100, 109 | 21. பொறையன் - 89, 128 |
| 10.கட்டி – 11 | 22. மலையன் - 198, 312 |
| 11.குட்டுவன் - 34 | 23. வடுகர் - 11 |
| 12.கொங்கர் - 393 | 24. விச்சியர் பெருமகன் - 328 |
| | 25. வேளிர் - 164 |

**5.6. தலைவன் கூற்று**

தலைவன் ஊடியபோது அவ்வூடலைத் தான் தெளியச் செய்யவும் தெளியாளாகிப் பின்னும் ஊடிய காலத்தில் தலைவன், "இவள் தன் பழைய தன்மை மாறி நம்மோடு உறவில்லாள்போல் இருக்கின்றாள்" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

19. எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனை மரத்து

எல்உறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே

**குறிப்பு**

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது. (உணர்ப்பு-ஊடலைத் தெளியச் செய்தல்)

நெஞ்சே! வீட்டில் உள்ள மரத்தில் படர்ந்து மாலைப் பொழுதில் மலரும் முல்லை மணக்கும் பலவாகிய கரிய கூந்தலை உடையவள் இனி நமக்கு என்ன தொடர்போ? எவ்வி என்ற வள்ளலை இழந்ததால் வறுமையுற்ற யாழ்ப்பாணர்களின் பொற்பூ சூடாத வறிய தலைபோலப் பொலிவற்று வருந்துவாயாக.

**5.6.1.தலைவி கூற்று- 1**

பிரிந்த தலைவன் மீண்டு வருவேனென்று சொல்லிய இளவேனிற் பருவத்தைக் கண்ட தலைவி, “தலைவர் பிரிவினால் எனக்கு உண்டாகிய வேறுபாடுகளைக் கண்டு ஊரார் பழி கூறுகின்றனர். அது தீர அவர் இன்னும் வந்திலர்” என வருந்திக் கூறியது.

24. கருங்கால் வேம்பின் நண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே

பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது.

(பருவம் - தலைவன் வருவேனென்று கூறிச் சென்ற காலம், ஈண்டு இளவேனில்)

கரிய அடிப்பாகத்தை உடைய வேம்பின் ஒளிமிக்க பூவாகிய புதுவருவாய் என் தலைவன் என்னுடனில்லாமல் கழியுமோ? என் தலைவர் என்னைப் பிரிந்ததால் எழுந்த ஊர்ப்பெண்டிரின் பழிச் சொற்கள் ஆற்றங் கரையில் முளைத்து வளர்ந்த வெண்மையான கிளைகளுடைய மரத்தில் பழுத்த ஒரு பழத்தை ஏழு நண்டுகள் விரும்பிச் சிதைத்தது போல யான் குழைந்து வருமாறு கூறினார். கல்லென்ற ஆரவாரம் மிகுந்ததாக இவ்வூர் அமைந்தது.

*Self-Instructional Material*

**குறிப்பு**

### 5.6.1. தலைவி கூற்று -2

தலைவன் வரைபொருளின் பொருட்டுப் பிரிந்த காலத்தில் அப்பிரிவைத் தலைவி ஆற்றாளெனக் கவலையுற்ற தோழியை நோக்கித் தலைவி, “தலைவர் முன்பு பிரியேனென்று சூளுறவு செய்து இப்பொழுது பிரிந்துறைய அதனால் உண்டான வருத்தத்தைப் பொறுத்துக் கொண்டு யான் இருப்பவும் நீ வருந்துதல் முறையன்று” என்று உணர்த்தியது.

36. துறுகல் அயலது மானை மாக்கொடி
துஞ்சுகளிறு இவரும் குன்ற நாடன்
நெஞ்சுகளன் ஆக நீயலென் யான்என
நற்றோள் மணந்த ஞான்றை மற்றுஅவன்
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே

வரைவிடை வைத்துப் பிரிய, ஆற்றாளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

தோழி நீட்டிக் கொண்டிருக்கும் பருத்த கல்லின் பக்கத்தே படரும் மாணைக்கொடி தூங்குகின்ற யானையின்மீது கல் எனத் தவறுதலாகக் கருதிப் படரும் மலைநாட்டையுடைய தலைவன் எனது அழகிய தோள்களை அணைந்த போது உன்னைப் பிரியேன் என்று தன் நெஞ்சு சான்றாகச் சொன்ன உறுதிமொழி உன்னிடம் துன்பத்தை உண்டாக்கி விட்டதோ.

### 5.6.2 .தலைவன் கூற்று

தலைவன் தலைவியைக் குறியிடத்திற் காணாது மீளும் பொழுது நெஞ்சை நோக்கி, “இனி, தலைவி காண்டற் கரியள், நீ துன்புறற்குரியை’ என்று கூறியது.

128. குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆர்இரைக்கு அணவந் தாங்குச்
சேயள் அரியோள் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப் பாலோயே

அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன், தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் கூறியதூஉம் ஆம்.

குறிப்பு

நெஞ்சே! கிழக்குக் கடற்கரையில் உள்ள பறக்க இயலாத நாரை வலிமையான தேரை உடைய சேரமன்னனாகிய பொறையனது தொண்டி என்னும் மேற்குக் கடற்கரையின் முன் துறையில் உள்ள அயிரை மீனை உணவாகக் கொள்வதற்கு விரும்பித் தன் தலையை மேலே தூக்கி அண்ணாந்தது போல நம் விருப்பத்திற்கு எட்டாத வெகு தொலைவில் உள்ளவளும் அடைதற்கு அரியவளுமான தலைவியை அடைய நினைக்கின்றாய் நீ துன்புறுதற்கான ஊழ்வினையை உடையாய்.

**5.6.3. தலைவி கூற்று**

வரைவு நீட்டித்த காலத்துத் தலைவி தோழியை நோக்கி, "தலைவர் உடனுறையின் நீங்கியும் பிரியின் ஒன்றியும் நிற்கின்றது பசலை" என்று கூறியது.

399. ஊருண் கேணி உண்துறைத் தொக்க
பாசி அற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரந்த லானே

வரைவு நீட்டித்த வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

தோழி! நம் மேனி நிறத்தை மாறச் செய்யும் பசலையானது காதலர் நம்மைத் தொடும்போதும் தொடும் போதும் நம்மை விட்டு நீங்குகிறது. அவர் நம்மை விட்டு விலகுந்தோறும் விலகுந்தோறும் பசலை படர்கின்றது. ஊரார் நீருண்ணும் குளத்தில் நீரைப் பருகும் துறையில் நிறைந்து மிதக்கும் பாசியைப் போன்று உள்ளது இப்பசலை.

**5.7. நிறைவாக**

சங்கப் புலவருள் பரணரால் குறிக்கப்பெற்ற வரலாற்று மாந்தரும் செய்திகளுமே மிகுதியாம். இவற்றால் இவர்தம் பரந்துபட்ட பயிற்சியும், தொடர்புகளுமே புலனாகின்றன. அடுத்து, ஏனைப்புலவர் எவராலும் பாடுதற்கரிய செய்திகளையும் பாடவல்லவர் பரணர் என்ற சிறப்பும் இவர்க்குண்டு என்பதனை இப்பாடத்தின் வழியே அறிகிறோம்.

**5.8. சோதித்தறியும் வினாவிடைகள்**

1. குறுந்தொகை தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயரைச் சுட்டுக

குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் பூரிக்கோ, தொகுப்பித்தவர் யாரென்று தெரியவில்லை.

*Self-Instructional Material*

குறிப்பு

2. பரணர் பற்றிக் குறிப்பு வரைக

இவரது இயற்பெயரே பரணர் என்பதாம். சங்கப் புலவருள் சிறப்பும் செம்மலும் வாய்ந்த இவர் கபிலருடன் மிக நெருங்கிய நண்பு பூண்டு, அவருடன் இரட்டையராய்த் திகழ்ந்தமையால், 'கபில பரணர்' என்று சேர்த்தே குறிக்கப்பெற்றவர். சங்கத்தில் தலைமை பெற்றுத் திகழ்ந்த நக்கீரராரும் மதித்துப் போற்றப்பட்டவர்.

3. வரைவு நீட்டித்த வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது யாது?

தோழி! நம் மேனி நிறத்தை மாறச் செய்யும் பசலையானது காதலர் நம்மைத் தொடும்போதும் தொடும் போதும் நம்மை விட்டு நீங்குகிறது. அவர் நம்மை விட்டு விலகுந்தோறும் விலகுந்தோறும் பசலை படர்கின்றது. ஊரார் நீருண்ணும் குளத்தில் நீரைப் பருகும் துறையில் நிறைந்து மிதக்கும் பாசியைப் போன்று உள்ளது இப்பசலை என்று தலைவன் வரைவு நீட்டித்த நிலையில் தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

4. தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்த பாடல்களைத் தொகுத்துரைக்க

பரணர் குறுந்தொகை 19, 128ஆம் பாடல்கள் தலைவன் கூற்றாக அமைந்துள்ளன. இது தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைகிறது. குறுந்தொகை 19ஆம் பாடல் தலைவி தலைவன் மேல் கொண்ட ஊடல் காரணமாக நிகழ்வதாகும். குறுந்தொகை 128ஆம் பாடலில் தலைவன் அல்லகுறிப்பட்டு நீங்கும் நிலையில் அமைவதாகும்.

தலைவன் ஊடியபோது அவ்வூடலைத் தான் தெளியச் செய்யவும் தெளியாளாகிப் பின்னும் ஊடிய காலத்தில் தலைவன், "இவள் தன் பழைய தன்மை மாறி நம்மோடு உறவில்லாள்போல் இருக்கின்றாள்" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனை மரத்து
எல்உறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது. (உணர்ப்பு-ஊடலைத் தெளியச் செய்தல்)

நெஞ்சே! வீட்டில் உள்ள மரத்தில் படர்ந்து மாலைப் பொழுதில் மலரும் முல்லை மணக்கும் பலவாகிய கரிய கூந்தலை உடையவள்

குறிப்பு

இனி நமக்கு என்ன தொடர்போ? எவ்வி என்ற வள்ளலை இழந்ததால் வறுமையுற்ற யாழ்ப்பாணர்களின் பொற்பூ சூடாத வறிய தலைபோலப் பொலிவற்று வருந்துவாயாக என்றும், அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன், தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியதாகவும், உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் கூறியதாகவும் அமைகிறது. நெஞ்சே! கிழக்குக் கடற்கரையில் உள்ள பறக்க இயலாத நாரை வலிமையான தேரை உடைய சேரமன்னனாகிய பொறையனது தொண்டி என்னும் மேற்குக் கடற்கரையின் முன் துறையில் உள்ள அயிரை மீனை உணவாகக் கொள்வதற்கு விரும்பித் தன் தலையை மேலே தூக்கி அண்ணாந்தது போல நம் விருப்பத்திற்கு எட்டாத வெகு தொலைவில் உள்ளவளும் அடைதற்கு அரியவளுமான தலைவியை அடைய நினைக்கின்றாய் நீ துன்புறுதற்கான ஊழ்வினையை உடையாய் என்றும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகிறான்.

## 5.9. பயிற்சி வினா

1. பரணரின் தனிச்சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

## 5.10. பொருளறிக

எவ்வி – ஒரு நிலக் கிழார், 2. வறுந்தலை – வறுமை, புல் - பொலிவிழந்து, இனைமதி – வருந்துதல், எல் - சூரியன், மௌவல் - முல்லை, எல் - ஒளி, யாணர் - புதுவருவாய், ஐ – தலைவன், அதவம் - அத்திமரம், எழுகுளிறு – நண்டு, துறுகல் - குண்டுக்கல், மாணை – ஒருவகைக் கொடி, இவரும் - படரும், ஞான்றை – பொழுது, தாவா – குறையாத (கெடாத, நோ – துன்பம், தபு – தப்பிய, பால் - ஊழ்,

## 5.11. மேலும் படித்தறிக.

1. ச.வே.சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் எட்டுத்தொகை
மூலமும் தெளிவுரையும்
தொகுதி 1
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600 018
பதிப்பு 2010

குறிப்பு

2. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ) குறுந்தொகை
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்
சென்னை
1951

குறிப்பு

# பிரிவு-2

## இலக்கியம் -2 (தொடர்ச்சி)

## கூறு 6 :நற்றிணை

6. பாடஅமைப்பு:

6.1. அறிமுகம் - நற்றிணை

6.2. நோக்கம்

6.3. நற்றிணை -அடி வரையறை

6.3.1. தொகுத்தவன் தொகுப்பித்தவன்

6.3.2. பாடிய புலவர்கள்-

6.3.3. பாடியோர் பெயர் காணாப் பாடல்கள்

6.3.4. பாடலால் பெயர் பெற்ற புலவர்

6.4. அமையும் திணைகள்

6.4.1. உரிப்பொருட் சிறப்புக்கள்

6.4.2. அமையும் கூற்றுக்கள்

6.5. நற்றிணைச் சிறப்புக்கள்

6.6. பெருங்குன்றூர்கிழார் -கூற்று விளக்கம்

6.7. பெருவழுதி -கூற்று விளக்கம்

6.8. பெருங்கௌசிகனார்- கூற்று விளக்கம்

6.9. நிறைவாக

6.10. சோதித்தறியும் வினாவிடைகள்

6.11. பயிற்சி வினா

6.12. பொருளறிக

6.13. மேலும் படித்தறிக..

### 6.1. அறிமுகம் - நற்றிணை

எட்டுத்தொகை நூல்கள் இவை எனக் குறிக்கும் வெண்பாவில் முதலில் இடம் பெறுவது நற்றிணையாகும். 9 அடி முதல் 12 அடி வரை உள்ள பாடல்கள் இந்நூற்தொகுப்பில் அடங்கும். இந்நூலைத் தொகுத்தவர் இன்னார் என்று தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி ஆவார். நற்றிணையிலுள்ள நானூறு

பாடல்களையும் 175 புலவர்கள் பாடியுள்ளனர். கடவுள் வாழ்த்துப்பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனரால் பாடப்பெற்று பின்னால் சேர்க்கப் பெற்றுள்ளது. நூலைத் தொகுத்தவரே "நல்" என்ற அடை கொடுத்துள்ளமை சுட்டத்தக்கது. இந்நூலூக்கு முதன் முதல் உரை எழுதியவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள்.

### 6.2. நோக்கம்

உலகம் தோன்றியதிலிருந்து உலகம் இருக்கும் வரை உள்ள வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற பாடல்கள் உள்ளன. வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது உணர்ச்சி, அறிவு என்ற இரண்டு நிலைகள். உணர்ச்சிக்கும் அறிவுக்கும் உள்ள போராட்டமே வாழ்க்கை. உணர்ச்சி அறிவு என்ற போராட்டம் இல்லாத மனித வாழ்வு இல்லை. இது உலக மனித சமுதாயத்திற்குப் பொருந்தும் எனபதை மாணவர்கள் உணரச்செய்வதே நோக்கமாகும்.

### 6.3. நற்றிணை -அடி வரையறை

சங்கத் தொகை நூல்களில் நற்றிணை என்ற நூல் முதலிடம் பெறுகிறது. நற்றிணையில் 7 அடி முதல் 13 அடி (அடி) வரை உள்ள பாடல்கள் உள.

| | |
|---|---|
| 7 அடி பாடல் | - 1 |
| 8 அடி பாடல் | - 1 |
| 9 அடி பாடல் | - 106 |
| 10 அடி பாடல் | - 96 |
| 11 அடி பாடல் | - 110 |
| 12 அடி பாடல் | - 77 |
| 13 அடி பாடல் | - 8 |

நற்றிணையில் 234ஆம் பாடல் கிடைக்கவில்லை.

நல் + திணை = நற்றிணை என்றாகும். நல்ல ஒழுகலாறுகளைக் கூறுவது என்று பொருள். திணை என்ற சொல்லுக்குக் கொண்ட கொள்கையில் திண்மையாக நிற்பது என்று பொருள். திண் + ஐ – திணை. திண்மையை உடையது. அகத்திணை அகஒழுக்கம். புறத்திணை புறஒழுக்கம்.

குறிப்பு

### 6.3.1. தொகுத்தவன் தொகுப்பித்தவன்

நற்றிணைப் பாடல்களைத் தொகுக்கச் செய்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. தொகுத்தவர் யார் என்று தெரியவில்லை.

### 6.3.2. பாடிய புலவர்கள்-

192 புலவர்களால் பாடப்பெற்ற நற்றிணை.

### 6.3.3. பாடியோர் பெயர் காணாப் பாடல்கள்

8, 10, 22, 24, 45, 46, 84, 92, 107, 108, 111, 115, 125, 126, 132, 134, 160 – 186, 188 – 190, 192, 193, 195, 207, 229, 235, 271, 355, 385, 396.

முற்றும் மறைந்து போன பாடல் - 234

### 6.3.4. பாடலால் பெயர் பெற்ற புலவர்கள்

பாடலில் உள்ள சொற்றொடர்களால் பெயர் பெற்றவர் எழுவர். வண்ணப்புறக் கந்தரத்தனார், மலையனார், தனிமகனார், விழிக்கண் பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார், தேய்புரி பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார் ஆகியோர்.

## 6.4. அமையும் திணைகள்

| | |
|---|---|
| குறிஞ்சித் திணைப் பாடல்கள் | - 130 |
| பாலைப் பாடல்கள் | - 107 |
| நெய்தல் பாடல்கள் | - 101 |
| மருதப் பாடல்கள் | - 33 |
| முல்லைப் பாடல்கள் | - 28 |

### 6.4.1. உரிப்பொருட் சிறப்புக்கள்

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்குரிய உரிப்பொருளாக அமைகின்றன. அதில் தான் மிகுதியான பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைத் திணைக்குரிய உரிப்பொருளாக அமைகின்றன. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்குரிய உரிப்பொருளாக அமைகின்றன. அவற்றுக்கு அடுத்த நிலையில் மருதத் திணைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கு உரிப்பொருளாக ஊடலும் ஊடல் நிமித்தமும் அமைகின்றன. இவை நற்றிணையில் ஊடல் திணைப் பாடல்கள் குறைவாக உள்ளன. காரணம் மருதத்தில் தலைவன் பரத்தையரோடு இணைதல் குறைவாக

குறிப்பு

அமைகின்றன எந்த இலக்கியத்தில் குறிஞ்சிப் பாடல்களும் பாலைப் பாடல்களும் மிகுதியாக உள்ளனவோ, அதில் பரத்தையர் காரணமாக உள்ள ஊடல் குறைவாக உள்ளது என்பது எண்ணம்.

### 6.4.2. அமையும் கூற்றுக்கள்

நற்றிணையில் தோழி கூற்றுக்கள் - 217 பாடல்கள், தலைவி கூற்றுக்கள் - 84 பாடல்கள், தலைவன் கூற்றுக்கள் - 73 பாடல்கள், நற்றாய் கூற்றுக்கள் - 11 பாடல்கள், பரத்தை கூற்றுக்கள் - 9 பாடல்கள், கண்டோர் கூற்றுக்கள் - 2 பாடல்கள், செவிலி கூற்று - 1 பாடல், தேர்ப்பாகன் கூற்று – 1 பாடல், தேர்ப்பாகன் கூற்று – 1 பாடல் உள்ளன.

### 6.5. நற்றிணைச் சிறப்புக்கள்

சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம். உலகத்தினர் வாழ்க்கை பற்றிப் பேசுகிறது. அக இலக்கியங்கள் ஒருவர் பெயரைச் சுட்டி அமைவதில்லை. அதனால் அது உலகப் பொது இலக்கியம் ஆகின்றது. எந்தக் காதலனும், எந்தக் காதலியும் இந்தப் பாடல்களைப் பயன் கொள்ளலாம்.

உலகம் தோன்றியதிலிருந்து உலகம் இருக்கும் வரை உள்ள வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற பாடல்கள் உள்ளன. வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது உணர்ச்சி, அறிவு என்ற இரண்டு நிலைகள். உணர்ச்சிக்கும் அறிவுக்கும் உள்ள போராட்டமே வாழ்க்கை. உணர்ச்சி அறிவு என்ற போராட்டம் இல்லாத மனித வாழ்வு இல்லை. இது உலக மனித சமுதாயத்திற்குப் பொருந்தும்.

ஒரு தலைவன், ஒருத்தியைக் காதலிக்கிறான். பொருள் ஈட்டி வந்த பிறகுதான் அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றான். குறிக்கோளில் பாதிப்பொருள் ஈட்டிவிட்டான். தலைவியின் நினைவு அதிகமாகிறது. தலைவியின்பால் உள்ள அன்பு அவன் நெஞ்சைத் தலைவியைப் பார்க்கச் செல் என்று கூறுகிறது. எடுத்த காரியத்தை நிறைவேற்றாமல் திரும்புவது சரியன்று என அவன் அறிவு பேசுகிறது. அன்பு உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இடையே அவன் உடம்பு துன்புறுகிறது. இதனை மிக அழகாகச் சித்தரிக்கிறார் புலவர். அறிவு என்பது ஆற்றலுள்ள யானை, உணர்ச்சி என்பது மற்றொரு ஆற்றலுள்ள யானை. இவ்விரு யானைகளுக்கும் இடையே ஒரு பழங்கயிறு உள்ளது. இப்பழங்கயிறும், தேய்ந்த புரிகழன்ற பழங்கயிறு,

குறிப்பு

அக்கயிற்றைப் பிடித்து இரு பக்கங்களிலும் இரண்டு யானைகள் இழுத்தால் கயிற்றின் நிலை என்னவாகும்? கயிறாக அவன் உடல் அமைகின்றது. இருபக்கம் இழுக்கும் யானைகளாக அறிவும், நெஞ்சும் உள்ளன. அவன் துன்புறுகிறான். இது மனித வாழ்வில் எங்கும், என்றும் நடைபெறுகின்ற செய்தி.

இதை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றான் கவிஞன். அவன் தன் பெயரைக் குறிக்கவில்லை. பாடலைப் படித்தோர், அப்பாட்டின் சொல் தொடரைக் கொண்டு அப்புலவர்க்குத் தேய்புரிப் பழங்கயிற்றினார் எனப் பெயர் சூட்டினார்.

புறந்தாழ்பு இருண்ட கூந்தல் போதின்
நிறம்பெறும் ஈர்இதழ்ப் பொலிந்த உண்கண்
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இழிவுதலைத் தரும்என
உறுதி தூக்காத் தூக்கி, அறிவே
சிறிதுநனி விரையல் என்னும், ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல,
வீவது கொல்என் வருந்திய உடம்பே? (நற்றிணை.284)

ஏழு வயதுப் பெண், கடற்கரை மணலில் புன்னைக் காயைக் கொண்டு மறைத்துக் கண்டுபிடிக்கும் கீச்சுக் கீச்சுத் தாம்பலம் என்னும் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தாள். மழை வந்துவிட்டது. ஒரு வாரமாக மழை வெளியில் செல்லவில்லை. ஒரு வாரம் கழித்துக் கடற்கரைக்குச் சென்றவள் மகிழ்ந்து, வீட்டின் பின் தோட்டத்தில் வைத்து வளர்த்தாள். அது வளர்ந்தது. தானும் வளர்ந்தாள். திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் பெற்றாள். அப்பெண் குழந்தையிடம், தான் வளர்த்த புன்னை மரமே தனது முதல் குழந்தை எனவும், அவளுடைய அக்கா எனவும் சொல்லி வைத்தாள். அக்குழந்தை பெரியவளாகி, காதலனுடன் புன்னை மரத்தடியில் பேச நாணுகிறாள். புன்னைமரத்தைச் சகோதரியாகவே கருதுகிறாள். இங்கு ஓர் ஓரறிவுயிராகிய மரத்தைத் தன் குழந்தையாகப் பார்த்த தாயையும், சகோதரியாகப் பார்த்த மகளையும் பார்க்கிறோம். இது மனப் பக்குவத்தின் பண்பாட்டைக் காட்டுகிறது.

குறிப்பு

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி,
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது, நுவ்வை ஆகும்என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே! (நற்றிணை.172)

திருக்குறள் கருத்துகள் சிலவற்றை நற்றிணையில் காண்கிறோம். நண்பர்களை நன்கு ஆராய்ந்த பின்பு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை, நட்பாராய்தல் என்ற அதிகாரத்தின் முதல் குறளாகத் தருகிறார் திருவள்ளுவர்.

நாடாது நட்டலில் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள்.791)

இவ்வெண்ணம்,

அரிய வாழி தோழி பெரியொர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே! (நற்றிணை.32:7-9)

என வருகிறது.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் (நற்றிணை.355:6-7)

என நற்றிணையின் கருத்தை,

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். (குறள்.580)

என்ற குறளில் காண்கிறோம். நற் கருத்துக்களின் தொகுப்பு நற்றிணை என்பதை இதனால் தெளிகிறோம்.

தமிழ்ப் பண்பாட்டின் சுரங்கம் சங்க இலக்கியங்கள். தலைவன் பிரிவு உணர்த்தியவுடன், தோழி தலைவிக்கு ஆறுதல் கூறும் நிலையில் சொல்லத் தொடங்குகிறாள். தலைவி, தோழி சொல்வதற்கு முன்பு தலைவன் பண்புகளைச் சொல்கிறாள்.

தலைவன் சொன்ன சொல்படி நடப்பவன். சொல் பிறழ மாட்டான். அதனை நின்ற சொல்லர் என்ற சொற்றொடரால் தருகிறாள். நினைக்குந்தோறும் இனிமை உடையவர். எந்தக் காலத்திலும் என்னை விட்டுப் பிரிய நினைக்க மாட்டார். தாமரை மலரின் தேன் எடுத்துச் சந்தன மரத்தில் அத்தேனை வைத்தது போன்ற பண்பு உடையவர்

அவர். இவ்வுலகம் நீர் இல்லையென்றால் இருக்காது. அதே போன்று நீர் போன்றவர் அவர். அதனால் அவர் பிரிய மாட்டார் என்று பேசுகிறாள் தலைவி. இப்பாடலைப் பாடியவர் குறிஞ்சிக் கபிலர்.

குறிப்பு

நின்ற சொல்லர், நீடுதோறு இனியர்
என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை,
நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நம்நயந்து அருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்புஅறி யலரே. (நற்றிணை.1)

### 6.6. பெருங்குன்றூர்கிழார் -கூற்று -விளக்கம்

பெருங்குன்றூர்கிழார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் பாடிய மொத்தப் பாடல்கள் 21. இவற்றில் அகம் எனப்படும் காதல் வாழ்க்கை சார்ந்தவை ஆறு பாடல்கள். அகப்பாடல்கள் ஆறு பாடல்களில் நான்கு பாடல்கள் நற்றிணையிலும் (5, 112, 119, 347), அகநானூறு ஒன்றும் (8), குறுந்தொகையில் (338), புறநானூற்றில் ஐந்தும் (147, 210, 211, 266, 318) இடம்பெறுகின்றன. புறப்பாடலான பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தாக அமைகின்றது.

**கூற்று**: தோழி கூற்று

**கூற்று விளக்கம்:**

தலைவன் பிரியும் குறிப்பை அறிந்து தலைவி வேறுபட்டாள். அவளுக்குத் தோழி சொல்லியது.

தலைவன் பிரிந்து செல்லவிருக்கும் குறிப்பை அறிந்து வேறுபட்ட தலைவிக்குத் தோழி சொல்லியது. மேகம் பெரும்பெயல் பொழிந்ததனால் ஏற்பட்ட பயன்கள் சொல்லப்படுகின்றன.

**திணை**: குறிஞ்சி

1. நிலம்நீர் ஆர, குன்றம் குழைப்ப
அகல் வாய்ப பைஞ்சுனைப் பயிர் கால்யாப்பக்
குறவர் கொன்ற குறைக்கொடி நறைப் பவர்
நறுங் காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப,

பெரும் பெயல் பொழிந்த தொழில எழிலி (5)
தெற்கு ஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்,

குறிப்பு

அரிதே, காதலர்ப் பிரிதல் - இன்று செல்
இளையர்த் தரூஉம் வாடையொடு
முயங்கு இதழ் மழைக் கண் பயந்த, தூதே
(நற்றிணை.5)

நிலத்தில் நீர் நிரம்பவும், மலையானது மரம் செடிகளால் தழைப்பவும், அகன்ற வாயையுடைய பசிய சுனையை யடுத்த இடங்களில் பயிர்கள் முளைத்து வெளியே வரவும், குறவர்கள் வெட்டிக் குறைத்த வாசனைக் கொடிகள் நறிய வயிரம் பொருந்திய சந்தன மரங்களைத் தழைக்கவும் பெரும் பெயர் பொழிந்த தொழிலையுடைய மேகம் தென்திசையில் எழுந்து சென்றது.

இந்த முன்பனிக் காலத்தில் காதலரைப் பிரிந்து வாழ்தல் அரிதேயாகும்.

இன்னுங்கேள், வாடையால் வருந்திய இமைகளையுடைய உன் கண்கள் உண்டாக்கிய நீர்த்துளிகளாகிய தூதே இனன்று செல்லும் இளைஞரைப் போகாது தடுத்துத் திரும்பும்படி செய்யும். ஆதலால் கவலை விடுக.

### 6.7. பெருவழுதி -கூற்று விளக்கம்

பெருவழுதி சங்ககாலப் புலவர். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி ஓர் அரசன். அவனது அண்ணன் ஒரு புலவர். பெருவழுதியின் பாடல்கள் இரண்டு உள்ளன. அவை நற்றிணை 55, 56.

**கூற்று**: தோழி கூற்று

**கூற்று விளக்கம்:**

வரைவிடை மெலிவு ஆற்றுவிக்கும் தோழி தலைவனை நோக்கிச் சொல்லியது.

வரைவை இடையே வைத்துப் பொருள் தேடப் போயிருந்தான் தலைவன். அந்நாட்களில் தலைவியின் மெலிவிற்கு ஆறுதல் ஆற்றுவித்த தோழி திரும்பி வந்த தலைவனிடம் சொல்லியது.

தோழியின் நோக்கம் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

2. ஓங்கு மலை நாட! ஒழிக, நின் வாய்மை!
காம்பு தலைமணந்த கல் அதர்ச் சிறு நெறி,
உறு பகை பேணாது, இரவின் வந்து, இவள்
பொறி கிளர் ஆகம் புல்ல, தோள் சேர்பு
அறுகாற் பறவை அளவு இல மொய்த்தலின்,
கண் கோள் ஆக நோக்கி, ‘பண்டும்
இணையையோ?’ என வினவினள், யாயே,
அதன் எதிர் சொல்லாளாகி, அல்லாந்து,
என் முகம் நோக்கியொளே, அன்னாய்! –
‘யாங்கு உணர்ந்து உய்குவள்கொல்?’ என மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கு ஆயினவால்’ என்றிசின் யானே (நற்றிணை.55)

உயர்ந்த மலைநாடனே! நீ தீமையிலாது சொல்லி வரும் வாய்மை மொழிகள் போதும், போகட்டும். மூங்கில் நெருங்கிக் கலந்த மலை வழியாகிய சிறு பாதையில் மிக்க பகைகளைப் பொருட்படுத்தாமல் இரவில் வருகிறாய். வந்து தேமல் புள்ளி விளங்கும் இவள் மார்பைத் தழுவுகிறாய். ஆதனால் உன் மாலையில் உள்ள வண்டுகள் இவளுடைய தோளைச் சேர்ந்து அளவில்லாதன மொய்க்கின்றன. அவற்றைப் பகலில் தன் கண்களால் கொல்லுதல் போல் கண்ட அன்னை, “நீ முன்பும் இப்படியா இருந்தாய்” என்று சினந்து வினவினாள். அதற்கு எதிராகத் தலைவி ஒன்றும் சொல்ல முடியாதவளாகி மனம் மயங்கி என் முகம் நோக்கினாள். அந்தோ இவள் எவ்வாறு உணர்ந்து கூறித் தப்பப் போகிறாளோ என்று யான் அஞ்சி வருந்தினேன். அன்னையை விளித்து அடுப்பிலிட்ட சந்தனக் கொள்ளிக் கட்டையைக் காட்டி ‘இதனால் தான் வண்டுகள் வந்து சேரலாயின’ என்று யான் எடுத்துச் சொன்னேன்.

### 6.7.1. பெருங்கௌசிகனார்- கூற்று விளக்கம்

பெருங்கௌசிகனார் சங்ககாலப் புலவர். இவருடைய பாடல்கள் நற்றிணையில் 44, 139 ஆகிய இரண்டு உள்ளன.

**கூற்று**: தலைவன் கூற்று

குறிப்பு

**கூற்று விளக்கம்**

தலைவன் வினைமுற்றி மீண்டுவந்து தலைவியுடன் இருந்த போது பெய்த மழையை வாழ்த்தியது.

தலைவன் மேற்கொண்ட வினையை முடித்துத் தன் இல்லம் திரும்பி வந்து பள்ளியிடத்திலே இருந்தான். அப்போது பெருமழை பெய்தது. அம்மழையை வாழ்த்தினான்.

"மேகமே! நீ உலகிற்கு ஆதாரமாய் உள்ளாய். படுமலைப் பாலை என்னும் பண் போல நீ பெய்கின்றாய். என் மனைவியோடு மகிழ்ந்திருக்க நீ உதவி செய்கின்றாய். ஆகையால் நீ பல மலைகளின் கொடுமுடிகள் தோறும் பொருந்தியிருந்து பலரும் தொழும்படி உலாவுவாயாக" என்று தலைவைன் வாழ்த்தினான்.

3.உலகிற்கு ஆணியாகப் பலர் தொழ
பல வயின் நிலைஇய குன்றின் கோடுதோறு
ஏயினை, உரைஇயரோ! – பெருங் கலி எழிலி!
படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு
எழீஇயன்ன உறையினை! முழவின்
மண் ஆர் கண்ணின் இம்மென இமிரும்
வணர்ந்து ஒலி கூந்தல் மாஅயோளொடு
புணர்ந்து இனிது நுகர்ந்த சாரல் நல் ஊர்,
விரவு மலர் உதிர வீசி –
இரவுப் பெயல் பொழிந்த உதவியோயே! (நற்றிணை.139)

பெரும் ஆரவாரத்தையுடைய மேகமே! நீ "படுமலைப் பாலை" பண் நின்ற நல்ல யாழின் திருத்தமான நரம்பில் எழுந்த ஓசைபோல மழைத்துளிகளைப் பெய்தாய். மத்தளத்தின் மண் வைத்த பக்கத்தில் "இம்" என ஒலிப்பது போல இடியுடன் ஒலிப்பாய்.பல மலர்களும் கலக்கவும் உதிரவும் வீசி இரவில் மழை பொழிந்தாய்.

என் காதலி கடைகுழன்று தழைத்த கூந்தலையுடையவள். மாமை நிறத்தையுடையவள், மலைப் பக்கமுள்ள நல்ல ஊரில் அவளோடு முயங்கி அவளது நலனை இனிதாக நுகர்ந்து யான் தங்கும் வண்ணம் உதவி செய்தாய்.

குறிப்பு

இவ்வாறு உதவிய நீ இவ்வுலகத்திற்கு ஓர் ஆணியாய் உள்ளாய், பலரும் தொழும்படியுள்ளாய். பல இடங்களிலும் நிலைபெற்ற குன்றுகளின் கொடுமுடி தோறும் சென்று பொருந்தி உலவுவாயாக.

**6.8. நிறைவாக**

பொது நிலையில் எல்லா அகஇலக்கியங்களிலும், பெரும்பாலும் தோழிகூற்று தான் மிகுதியாக அமையும். அந்நிலையில் நற்றிணையிலும் தோழி கூற்றே மிகுதியாக உள்ளது. பரத்தை கூற்று மிகக் குறைவாக இருப்பதால், பொது நிலையில் ஒழுக்கம் சிறந்ததாக அமைந்திருந்தது என்பதை நற்றிணைப் பாடல்கள் வழி அறியலாகிறது.

**6.9. சோதித்தறியும் வினாவிடைகள்**

1. நற்றிணையில் அமையும் கூற்றுக்கள் யாவை?

நற்றிணையில் தோழி கூற்றுக்கள் - 217 பாடல்கள், தலைவி கூற்றுக்கள் - 84 பாடல்கள், தலைவன் கூற்றுக்கள் - 73 பாடல்கள், நற்றாய் கூற்றுக்கள் - 11 பாடல்கள், பரத்தை கூற்றுக்கள் - 9 பாடல்கள், கண்டோர் கூற்றுக்கள் - 2 பாடல்கள், செவிலி கூற்று - 1 பாடல், தேர்ப்பாகன் கூற்று – 1 பாடல், தேர்ப்பாகன் கூற்று – 1 பாடல் உள்ளன.

2. பெருங்குன்றூர்கிழார் பற்றிக் குறிப்பு வரைக

பெருங்குன்றூர்கிழார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் பாடிய மொத்தப் பாடல்கள் 21. இவற்றில் அகம் எனப்படும் காதல் வாழ்க்கை சார்ந்தவை ஆறு பாடல்கள். அகப்பாடல்கள் ஆறு பாடல்களில் நான்கு பாடல்கள் நற்றிணையிலும் (5, 112, 119, 347), அகநானூறு ஒன்றும் (8), குறுந்தொகையில் (338), புறநானூற்றில் ஐந்தும் (147, 210, 211, 266, 318) இடம்பெறுகின்றன. புறப்பாடலான பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தாக அமைகின்றது.

3. பெருங்கௌசிகனார் பற்றிக் குறிப்பு எழுதுக.

பெருங்கௌசிகனார் சங்ககாலப் புலவர். இவருடைய பாடல்கள் நற்றிணையில் 44, 139 ஆகிய இரண்டு உள்ளன.

4. வினைமுற்றி மீண்டுவந்த தலைவன் மழையை வாழ்த்துவதாக அமைந்த பாடல்களை பெருங்கௌசிகனார் எங்ஙனம் புலப்படுத்துகிறார்?

தலைவன் வினைமுற்றி மீண்டுவந்து தலைவியுடன் இருந்த போது பெய்த மழையை வாழ்த்தியது.

*Self-Instructional Material*

குறிப்பு

தலைவன் மேற்கொண்ட வினையை முடித்துத் தன் இல்லம் திரும்பி வந்து பள்ளியிடத்திலே இருந்தான். அப்போது பெருமழை பெய்தது. அம்மழையை வாழ்த்தினான்.

“மேகமே! நீ உலகிற்கு ஆதாரமாய் உள்ளாய். படுமலைப் பாலை என்னும் பண் போல நீ பெய்கின்றாய். என் மனைவியோடு மகிழ்ந்திருக்க நீ உதவி செய்கின்றாய். ஆகையால் நீ பல மலைகளின் கொடுமுடிகள் தோறும் பொருந்தியிருந்து பலரும் தொழும்படி உலாவுவாயாக” என்று தலைவைன் வாழ்த்தினான்.

3. உலகிற்கு ஆணியாகப் பலர் தொழ
பல வயின் நிலைஇய குன்றின் கோடுதோறு
ஏயினை, உரைஇயரோ! – பெருங் கலி எழிலி!
படுமலை நின்ற நல் யாழ் வடி நரம்பு
எழீஇயன்ன உறையினை! முழவின்
மண் ஆர் கண்ணின் இம்மென இமிரும்
வணர்ந்து ஒலி கூந்தல் மாஅயோளொடு
புணர்ந்து இனிது நுகர்ந்த சாரல் நல் ஊர்,

என்று அமையும் பாடலில் “பெரும் ஆரவாரத்தையுடைய மேகமே! நீ “படுமலைப் பாலை” பண் நின்ற நல்ல யாழின் திருத்தமான நரம்பில் எழுந்த ஓசைபோல மழைத்துளிகளைப் பெய்தாய். மத்தளத்தின் மண் வைத்த பக்கத்தில் “இம்” என ஒலிப்பது போல இடியுடன் ஒலிப்பாய்.பல மலர்களும் கலக்கவும் உதிரவும் வீசி இரவில் மழை பொழிந்தாய்.

என் காதலி கடைகுழன்று தழைத்த கூந்தலையுடையவள். மாமை நிறத்தையுடையவள், மலைப் பக்கமுள்ள நல்ல ஓரில் அவளோடு முயங்கி அவளது நலனை இனிதாக நுகர்ந்து யான் தங்கும் வண்ணம் உதவி செய்தாய்.

இவ்வாறு உதவிய நீ இவ்வுலகத்திற்கு ஓர் ஆணியாய் உள்ளாய், பலரும் தொழும்படியுள்ளாய். புல இடங்களிலும் நிலைபெற்ற குன்றுகளின் கொடுமுடி தோறும் சென்று பொருந்தி உலவுவாயாக” என்று பெருங்கௌசிகனார் தம் பாடலில் புலப்படுத்துகிறார்.

5. நற்றிணையின் சிறப்புக்களை விரித்து எழுதுக

குறிப்பு

சங்க இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம். உலகத்தினர் வாழ்க்கை பற்றிப் பேசுகிறது. அக இலக்கியங்கள் ஒருவர் பெயரைச் சுட்டி அமைவதில்லை. அதனால் அது உலகப் பொது இலக்கியம் ஆகின்றது. எந்தக் காதலனும், எந்தக் காதலியும் இந்தப் பாடல்களைப் பயன் கொள்ளலாம்.

உலகம் தோன்றியதிலிருந்து உலகம் இருக்கும் வரை உள்ள வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற பாடல்கள் உள்ளன. வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது உணர்ச்சி, அறிவு என்ற இரண்டு நிலைகள். உணர்ச்சிக்கும் அறிவுக்கும் உள்ள போராட்டமே வாழ்க்கை. உணர்ச்சி அறிவு என்ற போராட்டம் இல்லாத மனித வாழ்வு இல்லை. இது உலக மனித சமுதாயத்திற்குப் பொருந்தும்.

ஒரு தலைவன், ஒருத்தியைக் காதலிக்கிறான். பொருள் ஈட்டி வந்த பிறகுதான் அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றான். குறிக்கோளில் பாதிப்பொருள் ஈட்டிவிட்டான். தலைவியின் நினைவு அதிகமாகிறது. தலைவியின்பால் உள்ள அன்பு அவன் நெஞ்சைத் தலைவியைப் பார்க்கச் செல் என்று கூறுகிறது. எடுத்த காரியத்தை நிறைவேற்றாமல் திரும்புவது சரியன்று என அவன் அறிவு பேசுகிறது. அன்பு உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இடையே அவன் உடம்பு துன்புறுகிறது. இதனை மிக அழகாகச் சித்தரிக்கிறார் புலவர். அறிவு என்பது ஆற்றலுள்ள யானை, உணர்ச்சி என்பது மற்றொரு ஆற்றலுள்ள யானை. இவ்விரு யானைகளுக்கும் இடையே ஒரு பழங்கயிறு உள்ளது. இப்பழங்கயிறும், தேய்ந்த புரிகழன்ற பழங்கயிறு, அக்கயிற்றைப் பிடித்து இரு பக்கங்களிலும் இரண்டு யானைகள் இழுத்தால் கயிற்றின் நிலை என்னவாகும்? கயிறாக அவன் உடல் அமைகின்றது. இருபக்கம் இழுக்கும் யானைகளாக அறிவும், நெஞ்சும் உள்ளன. அவன் துன்புறுகிறான். இது மனித வாழ்வில் எங்கும், என்றும் நடைபெறுகின்ற செய்தி.

**6.10. பயிற்சி வினா**

1. நற்றிணையில் தோழி கூற்றுக்கள் எத்தனை?

குறிப்பு

### 6.11. பொருளறிக

நறை – வாசனை, மணம், பவர் - கொடி, ஆரம் - சந்தனம், அகைப்ப – படர, எழிலி – மேகம், அற்சிரம் - முன்பனிக்காலம், இகுளை – தோழி, நொதுமலர் - அயலவர், புணரி – கடல், அலவன் - நண்டு, வலவன் - தேர்ப்பாகன், ஆணி – ஆதாரம், கோடு – மலைச்சிகரம், படுமலை – ஒருவகைப் பண்

### 6.12. மேலும் படித்தறிக..


1. ச.வே.சுப்பிரமணியன் -சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் தொகுதி 1 மணிவாசகர் பதிப்பகம் சென்னை – 600 018 பதிப்பு 2010
2. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை நற்றிணை அருணா பதிப்பகம் சென்னை 1969


## பிரிவு-2: -இலக்கியம் -2 (தொடர்ச்சி)

## கூறு 7: நற்றிணை

7. **பாடஅமைப்பு:**

**7.1. தொடக்கம் - திணை வரையறை**

**7.1.1. நற்றிணை - பெயர்க்காரணம்**

**7.2. நோக்கம்**

**7.3. திருமால் சிறப்பு**

**7.3.1. காதற் சிறப்பு**

**7.3.2. உவமைச் சிறப்பு**

**7.4. சிலப்பதிகாரச் சாயல்**

**7.5. மணிக் கருத்துக்கள்**

**7.6. கருவூர்க் கோசிகனார்**

**7.7. உலோச்சனார்**

**7.8. நிறைவாக**

**7.9. சோதித்தறியும் வினாவிடைகள்**

**7.10. பயிற்சி வினா**

**7.11. பொருளறிக**

**7.12. மேலும் படித்தறிக..**

### 7.1. தொடக்கம் - திணை வரையறை

திணை என்பதனோடு கூடிய பாடல்கள் சங்க இலக்கியங்களிலும், சங்க மருவிய கால இலக்கியங்களிலும் காணப்படுகிறது. அகத்துறைப் பாடல்களில் ஒவ்வொன்றும் ஐந்து திணைகளில் ஏதேனும் ஒரு திணையைச் சார்ந்தது என்ற வரையறை இலக்கணப்படி அமைந்திருந்தது. அகநானூற்றில் பழங்காலத்திலேயே இந்த வரையறை அமைந்திருந்தது.

#### 7.1.1. நற்றிணை - பெயர்க்காரணம்

அகத்துறைப் பாடல்களையுடைய நூல்களுக்குத் திணை என்பதனோடு ஒட்டிய பெயரை அமைப்பது பழங்கால வழக்கம் என்று தெரிகிறது. புதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்று உள்ளவற்றின் பெயர்களைக் கொண்டு இதை அறியலாம். வகையில் சிறிய பாடல்கள் அமைந்த தொகைக்குக் குறுந்தொகையென்றும், நீண்ட பாடல்கள் அமைந்ததற்கு நெடுந்தொகையென்றும் பெயர் வைத்தார்கள். இடையில் உள்ள நூலுக்கு நற்றிணை என்று பெயர் அமைத்தார்கள். இந்த நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் வழுதி, அந்த மன்னன் ஒரு புலவரைக் கொண்டு இப்படித் தொகுக்கச் செய்திருக்க வேண்டும். அந்தப் புலவர் பெயர் தெரியவில்லை.

இந்த நூலில் முதலில் கடவுள் வாழ்த்தும் பிறகு நானூறு அகத்துறைப் பாடல்களும் உள்ளன. நற்றிணை நானூறு என்றும் இதனை வழங்குவது உண்டு. இப்போது 234ஆம் பாடலும் 385ஆம் பாடலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. இதனை முதல்முதலில் ஆராய்ந்து உரையுடன் வெளியிட்டவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் ஆவார்.

குறிப்பு

இந்த நூலில் 56 பாடல்களுக்கு உரிய ஆசிரியர்களின் பெயர் தெரியவில்லை. மற்றப் பாடல்களைப் பாடியவர்கள் 192 புலவர்கள். ஒவ்வொரு பாட்டுக்குப் பின்பும், அந்தப் பாட்டின் துறையை விரிக்கும் குறிப்பு இருக்கிறது. அகத்துறைப் பாடல்கள் எல்லாவற்றிற்கும் இப்படிக் குறிப்பு அமைப்பது பழங்கால வழக்கம்.

**7.2. நோக்கம்**

நல்ல திணையில் அமைந்த பாடல்களையுடைய நூல் என்பதனால் இதனை மாணவர்கள் அறியச் செய்வதே நோக்கமாகும்.

**7.3. திருமால் சிறப்பு**

இந்த நூலில் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். திருமாலின் துதியாக அமைந்தது அந்தப் பாட்டு. அப்பெருமான் உலகமே தன் வடிவமாகக் கொண்டவன் என்று போற்றுகிறது அந்தப் பாட்டு. அவனுக்கு இந்த விரிந்த பெரிய பூமியே திருவடி, இந்த உலகைச் சூழ்ந்த நீலப் பெருங்கடலே ஆடை, ஆகாயமே திருமேனி, திசைகளே திருக்கரங்கள், சந்திரனும் சூரியனும் திருவிழிகள். எல்லாவற்றினூடும் இருப்பதோடு, எல்லாவற்றையும் தனக்குள் அடக்கியவன் அவன். வேதத்தினால் சொல்லப்பட்ட முதற்பொருள். திருக்கரத்தில் சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலை இப்படியெல்லாம் பெரியோர்கள் சொல்வார்கள் என்று கூறுகிறார் பெருந்தேவனார்.

மாநிலம் சேவடி ஆகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை ஆக
விசும்புமெய் ஆகத் திசைகை ஆகப்,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப,
தீதற விளங்கிய திகிரி யோனே

ஆண்டவனுக்குத் தமிழில் கடவுள் என்ற பெயர் அமைந்திருந்திருக்கிறது. அது அவனுடைய இரண்டு இயல்புகளைக் குறிக்கும். அவன் எல்லாப் பொருளையும் கடந்து நிற்கிறான். என்றாலும் எல்லாப் பொருள்களின் உள்ளும் இருக்கிறான். கட, உள் என்ற இரண்டு சொற்களும் இணைந்தது கடவுள் என்ற சொல் நற்றிணையின் கடவுள் வாழ்த்து. கடவுள் என்ற சொல்லுக்குப் பொருள் உரைப்பதுபோல அமைந்திருக்கிறது. அவன் இயன்ற எல்லாப் பொருளினூடும் பயின்று

குறிப்பு

உள்ளிருக்கிறான். அவனே எல்லாவற்றையும் தன் அகத்தில் அடக்கியும் இருக்கிறான். பயின்றதனால் உள்ளிருப்பது தெரியும். அடக்கியதால் கடந்து நிற்பது தெரியும்.

'இயன்ற எல்லாம் பயின்று அகத்தி அடக்கிய' என்ற அடி இதனைப் புலப்படுத்துகிறது.

**7.3.1.. காதற் சிறப்பு**

நற்றிணையின் முதல் பாட்டு, காதலின் சிறப்பைச் சொல்லுகிறது. காதலி தன் காதலனுக்கும் தனக்கும் உள்ள உறவாகிய காதலைப் பற்றிச் சொல்லுகிறாள். காதல் என்பது ஒரு பண்பு. அது நுட்பமானது. கண்ணினால் பார்க்க முடியாதது. கருத்தினால் மட்டும் அறியத்தக்கது. அத்தகைய நுட்பமான ஒன்றை எப்படிச் சொல்லுவது?

கவிஞர்கள் நுட்பமானதையும் நாம் உணரும்படி செய்து விடுவார்கள்.

என் காதலர் மிக உயர்ந்தவர். அவர் என்னிடத்தில் வைத்தள்ள உறவாகிய காதல் உயர்ந்தது. உயர்ந்தோருடைய கேண்மை உயர்ந்ததாகத்தானே இருக்கும்?

"புரைய மன்ற புரையோர் கேண்மை"

அதன் உயர்வைக் காதலி சொல்ல வருகிறான். புள்ளிக்கு அளவு இல்லை. ஆனாலும் அதனைக் காட்டுவதற்குக் கணித நூலார் இரண்டு கோடுகளை ஒன்றை ஒன்று வெட்டும்படி போட்டு அவை வெட்டும் இடத்தில் உள்ளது புள்ளி என்று காட்டுவார்கள். நுட்பமானதைத் திட்பமானவற்றின் சார்பு கொண்டு விளக்குவது ஓர் உத்தி. ஆலமரத்தைக் காட்டி அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவதில்லையா?

முதற்பாட்டைப் பாடிய கபிலர் என்னும் புலவர் அப்படி ஓர் உத்தியை ஆள்கிறார். உயர்ந்தவையாகவும் இனியவையாகவும் உள்ள பொருள்களை உவமையாகக் காட்டி காதலை விளக்க வருகிறார்.

உயர்ந்த சாதி வண்டுகள் தாமரை மலரிலே புகுந்து அதில் உள்ள தண்ணிய பூந்தாதை ஊதி முரல்கின்றன. அதில் உள்ள தேனை உண்ணுகின்றன. அங்கிருந்து மேலே மேலே பறக்கின்றன. மனிதனுடைய காற்புழுதியும் மூச்சுக் காற்றும் படாத மலையின் மேலே செல்லுகின்றன. அங்கே மலை முகட்டில் சந்தன மரம் வளர்கிறது. அதன் உச்சிக்குச் சென்று அடைகட்டித் தேனை வைக்கின்றன. தாமரைத்தேன், புழுதிபடாத

குறிப்பு

உயர்ந்த இடத்தில், மணம் நிரம்பிய சந்தன மரத்தில் இருக்கிறது. அந்தத் தேனைப் போன்றது அவர்களுடைய காதல்.

“தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன்போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை”

மணமும் இனிமையும் தூய்மையும் உயர்வும் உள்ள பொருள்களை இணைத்துக் காதலின் சிறப்பைக் காட்டிவிட்டார் கவிஞர்.

இப்படியே காதலின் சிறப்பையும், காதல் நாடகத்தின் பல வேறு காட்சிகளையும் இந்த நூலில் காணலாம்.

**7.3.2.. உவமைச் சிறப்பு**

பொருளை ஈட்டுவதற்காகக் காதலன் தன் காதலன் தன் காதலியைப் பிரிந்து வேற்றூருக்கு வந்திருக்கிறான். இன்னும் பொருளை முற்றும் ஈட்டவில்லை. அதற்குள் அவனுடைய உள்ளத்துக்கும் அறிவுக்கும் ஒரு போராட்டம் நடக்கிறது. உணர்ச்சி வசப்பட்ட உள்ளம் சொல்கிறது. வா போகலாம் பிரிவுத் துன்பத்தைப் போக்கிக் கொள்ளலாம். முதுகில் தொங்கும் நீண்ட கரிய கூந்தலையும், தாமரை மலர் போல விளங்கும் மையுண்ட கண்களையும் உடையவளாய் நம் மனத்தைக் கவர்ந்த காதலியிடம் போகலாம் வா என்று சொல்கிறது. அறிவோ நீதியுபதேசம் செய்கிறது. ஏன் அவசரப் படுகிறாய்? சிறிது காலம் பொறு, எடுத்துக்கொண்ட காரியத்தை முடிக்க வேண்டாமோ? நடுவிலே புறப்பட்டு விட்டால் அது முட்டாள் தனம், அது மட்டும் அல்ல ஊரிலே இருப்பவர்கள் எல்லாம் இழித்துப் பேசுவார்கள், அவமதிப்பு உண்டாகும் என்று நியாயம் பேசுகிறது. இப்படி உணர்ச்சியும் அறிவும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பக்கம் இழுக்க, அவன் தடுமாறுகின்றான். அவன் உடம்பு மெலிகின்றது. பழங்கயிறு ஒன்றை ஒவ்வொரு புரியாக அற்று மெலிவது போல அவன் உடம்பு மெலிகிறது.

உணர்ச்சிக்கும் அறிவுக்கும் உண்டான போராட்டத்தில் அகப்பட்ட அவன் தன் நிலைக்குத் ‘தேய்புரிப் பழங்கயிற்றை’ உவமை சொல்கிறான்.

புறம்தாழ்பு இருண்ட கூந்தல் போதின்
நிறம்பெறும் ஈர்இதழ்ப் பொலிந்த உண்கண்,
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்கம், செல்வாம் என்னும்,

குறிப்பு

எய்யா மையோடு இளிவுதலைத் தரும், என,
உறுதி தூக்கத் துங்கி, அறிவே
சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை
ஒளிறு ஏந்த மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல,
வீவது கொல்என் வருந்திய உடம்பே”

இதைப் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. இந்தப் பாட்டில் அவர் கூறும் அருமையான உவமையைக் கொண்டே அவருக்கத் ‘தேய்புரிப் பழங் கயிற்றினார்’ என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

**7.4... சிலப்பதிகாரச் சாயல்**

ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை அறுத்த திருமா உண்ணிக்
கேட்டார் அனையர் (நற்றிணை.216)

என்ற பகுதி வருகிறது. அதைப் பாடியவர் மதுரை மருதன் இளநாகனார். இது சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியைக் குறிப்பிடுவது போல இருக்கிறது. ஆனால் சிலப்பதிகாரத்தின் காலம் வேறு, நற்றிணையின் காலம் வேறு.

**7.5. மணிக் கருத்துக்கள்**

பாடல்களின் இடைஇடையே மணிமணியான கருத்துக்கள் பல வருகின்றன.

பெரிய பெரிய காரியங்களைச் செய்வோம் என்று உறுதிமொழி கூறுவதும், வேகமான ஊர்திகளில் ஏறிப் போவதும் செல்வத்துக்கு அறிகுறி என்று பொதுவாக உலகத்தார் நினைக்கிறார்கள். அவை முன்னை வினைப்பயனால் வருபவை. அவை அல்ல செல்வம். தம்மைச் சேர்ந்தவர்களுக்கு வரும் துன்பத்தைக் கண்டு அஞ்சி அதை நீக்க முற்படும் மெல்லிய பண்புதான் செல்வம் என்று ஒரு பாட்டில் வருகிறது.

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று, தன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் என் பதுவே” (210)
பழகிய பகையும் பிரிவுஇன்னாதே



என்பது ஓர் அரிய அடி.

நமக்க வேண்டாதவர் நம் எதிர் வீட்டில் இருக்கிறார். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நம் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பத்திரிக்கை படிக்கிறோம். எதிர் வீட்டுக்காரர் வாய்நிறையத் தண்ணீரை வைத்துக்கொண்டு வாசலில் வந்து தூவென்று துப்புகிறார். நம்மைக் பண்டு அவமதிப்பாக எண்ணியே அப்படிச் செய்கிறார். ஒவ்வொரு நாளும் இப்படியே செய்து வருகிறார்.

அவர் இறந்து போகிறார். ஒவ்வொரு நாளும் காலையில் அந்த நேரத்தில் நாம் பத்திரிகை படிப்பதும் எதிர் வீட்டுக்காரர் எரிச்சலோடு துப்புவதும் வழக்கமாகி விட்டவை. இப்போது அந்த நேரத்தில் அவர் துப்பும் நிகழ்ச்சி நின்று விட்டது. நம் நண்பர் ஒருவர் வருகிறார். எதிர் வீட்டுக்காரரைப் பற்றிக் கேட்கிறார். ஒவ்வொரு நாளும் இந்த நேரத்தில் வாசலில் வந்து காறித் துப்புவான். இப்போது வெறிச்சொ என்றிருக்கிறது என்கிறோம். அந்த நேரத்தில் அந்த நிகழ்ச்சியைக் கண்டு பழகி விட்டோம். இப்போது அது இல்லாமல் அந்த நேரம் வெறிச்சோடுகிறது.

இத்தகைய அனுபவத்தோடு ஒட்டிப் பார்த்தால், "பழகிய பகையும் பிரிவு இன்னாதே" என்ற அருமையான கருத்து நன்றாக விளங்கும்.

### 7.6. கருவூர்க் கோசிகனார்

கருவூர்க் கோசிகனார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். அவரது பாடல் நற்றிணையில் 214ஆம் பாடலாக அமைகிறது.

**கூற்று**: தலைவி கூற்று

**கூற்று விளக்கம்**:

உலகியலால் பிரிவுணர்த்தப்பட்ட தலைமகன் குறித்த பருவம் கண்டு தலைமகள் சொல்லியது.

உலகியல் நன்மைக்காகப் பொருள்வயின் பிரிந்த தலைவன் குறித்த பருவத்தில் திரும்பி வருவேன் என்றாள். வாராதது கண்டு தலைவி சொல்லியது.

இப்பாடலில் இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும் அசையுடன் (சோம்பலுடன்) இருந்தோர்க்கு கைகூடா என்ற உலகியல் நீதி சொல்லப்படுகிறது.

1. 'இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு ஈன்ம்' என
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை,

குறிப்பு

'அரும்பு அவிழ் அலரிச் சுரும்பு உண் பல் போது
அணிய வருதும், நின் மணி இருங் கதுப்பு' என,
எஞ்சா வஞ்சினம் நெஞ்சு உணக் கூறி,
மை சூழ் வெற்பின் மலை பல இறந்து,
செய் பொருட்கு அகன்ற செயிர் தீர் காதலர்
கேளார்கொல்லோ — தோழி! — தோள
இலங்கு வளை நெகிழ்த்த கலங்கு அஞர் எள்ளி
நகுவது போல, மின்னி
ஆர்ப்பது போலும் இக் கார்ப் பெயற் குரலே?
(நற்றிணை.214)

"தோழி! புகழும் இன்பமும் கொடையும் மூன்றும் சோம்பலோடு இருப்பவர்க்கு (பொருந்துவதில்லை) கிடைத்தல் அரிது எனக் கருதிப் பொருள் தேடும் வினைவயின் பிரிந்த அவர் நம்மில் வேறுபட்ட கொள்கையுடையவராய் உள்ளார். அரும்புகள் மலர்ந்த பூக்களில் வண்டுகள் உண்ணும் பல மலர்களை நீலமணி போன்ற கரிய உன் கூந்தலில் அணிய கார்காலத்தில் திரும்பி வருவேன் என்று குறையிலாத உறுதிமொழியை என் மனங்கொள்ளுமாறு கூறிச் சென்றார். மேகம் சூழும் மலைகள் பலவற்றைக் கடந்து தேடும் பொருளுக்காகச் சென்ற குற்றமற்ற காதலர், தோளில் விளங்கிய வளைகள் நெகிழும்படி செய்தார். என் கலங்கிய துன்பத்தைக் கண்டு என்னை எள்ளி நகுவது போல மின்னி, இகழ்ந்து ஆரவாரம் செய்வது போல முழங்குகின்ற இந்தக் கார்கால மழையின் குரலை அவர் அந்த நாட்டில் கேட்கவில்லையோ"

## 7.7. உலோச்சனார்

உலோச்சனார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். சங்க நூல்களில் இவரது பாடல்கள் 35 உள்ளன. அவற்றில் புறத்திணைப் பாடல்கள் 3. எஞ்சியுள்ள 32 பாடல்களும் அகம் சார்ந்தவையாகும்.

**கூற்று:** தலைவி கூற்று

**கூற்று விளக்கம்:**

வரைவிடை வைத்துப் பிரிந்தபோது தலைவி வருந்தியது.

வரைவை இடையே வைத்துப் பிரிந்தான் தலைவன். பிரிவால் தலைவி வரைவு ஏற்படுமா என்று மெலிந்தது.

குறிப்பு

இரும்பின் அன்ன கருங் கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன பாசிலை அகம்தொறும்,
வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந் தாது உதிர,
புலிப் பொறிக் கொண்ட பூ நாறு குருஉச் சுவல்
வரிவண்டு ஊதலின் புலி செத்து வெரீஇ
பரியுடை வயங்கு தாள் தந்தின் தாவத்
தாங்கவும் தகை வரை நில்லா ஆங்கண்,
மல்லல்அம் சேரி கல்லெனத் தோன்றி,
அம்பல் மூதூர் அலர் எழ,
சென்றது அன்றோ, கொண்கன் தேரே

இரும்பு போன்ற கரிய கிளைகளையுடையது புன்னை மரம். நீலம் போன்ற பசிய இலைகளை எங்கும் உடையது அம்மரம். வெள்ளி போன்ற விளங்கிய பூங்கொத்துக்களையுடையது அம்மரம். பொன் போன்ற நறுந்தாது அம்மரப் பூங்கொத்தின் நடுவில் இருக்கும். அந்நறுந்தாது உதிரும்.

புலியின் புள்ளியைக் கொண்ட அழகு விளங்கிய நல்ல நிறமுள்ள மேற்புறத்தையுடைய வரிகள் அமைந்தவை வண்டுகள். அவை ஊதலால் இது புலியோசையோவென்று தேரிற் பூட்டிய குதிரைகள் அச்சமுறும். அவற்றைப் பலமுறை இழுத்து நிறுத்தியும் நில்லாது குதிரைகளின் விளங்கிய கால்கள் பந்து போலத் தாவும். அக்குதிரைகள் பூட்டிய கொண்கண்தேர், வளப்ப மிக்க நம் சேரியிலே கல் என்னும்படி ஒலி தோன்றி அம்பல் மூதூரில் அலர் எழ நில்லாது சென்றதன்றோ? இனி வருவாரோ யாதோ?

இரும்பு, நீலம், வெள்ளி, பொன் நான்கும் புன்னை மரத்தின் கிளை, இலை, பூங்கொத்து, மகரந்தம் இவற்றிற்கு உவமையாக வந்துள்ளன.

### 7.8. நிறைவாக

காதலின் சிறப்பையும், காதல் நாடகத்தின் பல்வேறு காட்சிகளையும் இந்த நூலில் காணலாம். மேலும், தம்மைச்

குறிப்பு

சேர்ந்தவர்களுக்கு வரும் துன்பத்தைக் கண்டு அஞ்சி அதை நீக்க முற்படும் மெல்லிய பண்புதான் செல்வம் என்று ஒரு பாட்டில் வருகிறது. இதுபோன்ற நல்ல கருத்துகளை மாணவர்கள் இப்பாடத்தின்வழி அறிகிறார்கள்.

### 7.9. சோதித்தறியும் வினாவிடைகள

1. பாரதம் பாடிய பெருந்தேவனார் திருமாலை எங்ஙனம் போற்றுகிறார்?

அப்பெருமான் உலகமே தன் வடிவமாகக் கொண்டவன் என்று போற்றுகிறது அந்தப் பாட்டு. அவனுக்கு இந்த விரிந்த பெரிய பூமியே திருவடி, இந்த உலகைச் சூழ்ந்த நீலப் பெருங்கடலே ஆடை, ஆகாயமே திருமேனி, திசைகளே திருக்கரங்கள், சந்திரனும் சூரியனும் திருவிழிகள். எல்லாவற்றினூடும் அந்தர்யாமியாய் இருப்பதோடு,

எல்லா வற்றையும் தனக்குள் அடக்கியவன் அவன். வேதத்தினால் சொல்லப்பட்ட முதற்பொருள். திருக்கரத்தில் சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலை இப்படியெல்லாம் பெரியோர்கள் சொல்வார்கள் என்று கூறுகிறார் பெருந்தேவனார்.

2. சிலப்பதிகாரச் சாயல் தரும் நற்றிணைப் பாடலை விளக்குக

நற்றிணை.216ஆம் பாடல் என்ற பகுதி வருகிறது. அதைப் பாடியவர் மதுரை மருதன் இளநாகனார். இது சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியைக் குறிப்பிடுவது போல இருக்கிறது. ஆனால் சிலப்பதிகாரத்தின் காலம் வேறு, நற்றிணையின் காலம் வேறு.

3. கருவூர்க் கோசிகனார் பற்றிக் குறிப்பு வரைக

கருவூர்க் கோசிகனார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். அவரது பாடல் நற்றிணையில் 214ஆம் பாடலாக அமைகிறது.

4. உலோச்சனார் பற்றிக் குறிப்பு தருக

உலோச்சனார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். சங்க நூல்களில் இவரது பாடல்கள் 35 உள்ளன. அவற்றில் புறத்திணைப் பாடல்கள் 3. எஞ்சியுள்ள 32 பாடல்களும் அகம் சார்ந்தவையாகும்.

5. குறித்த பருவம் கண்டு வருந்திய தலைவி புலம்புவதை விளக்குக

உலகியல் நன்மைக்காகப் பொருள்வயின் பிரிந்த தலைவன் குறித்த பருவத்தில் திரும்பி வருவேன் என்றாள். வாராதது கண்டு தலைவி சொல்லியது.

குறிப்பு

இப்பாடலில் இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும் அசையுடன் (சோம்பலுடன்) இருந்தோர்க்கு கைகூடா என்ற உலகியல் நீதி சொல்லப்படுகிறது.

1. ‘இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும் புணர்வு ஈன்ம்’ என
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை,
‘அரும்பு அவிழ் அலரிச் சுரும்பு உண் பல் போது
அணிய வருதும், நின் மணி இருங் கதுப்பு’ என,
எஞ்சா வஞ்சினம் நெஞ்சு உணக் கூறி,

….

என்ற அடிகளில், “தோழி! புகழும் இன்பமும் கொடையும் மூன்றும் சோம்பலோடு இருப்பவர்க்கு (பொருந்துவதில்லை) கிடைத்தல் அரிது எனக் கருதிப் பொருள் தேடும் வினைவயின் பிரிந்த அவர் நம்மில் வேறுபட்ட கொள்கையுடையவராய் உள்ளார். அரும்புகள் மலர்ந்த பூக்களில் வண்டுகள் உண்ணும் பல மலர்களை நீலமணி போன்ற கரிய உன் கூந்தலில் அணிய கார்காலத்தில் திரும்பி வருவேன் என்று குறையிலாத உறுதிமொழியை என் மனங்கொள்ளுமாறு கூறிச் சென்றார். மேகம் சூழும் மலைகள் பலவற்றைக் கடந்து தேடும் பொருளுக்காகச் சென்ற குற்றமற்ற காதலர், தோளில் விளங்கிய வளைகள் நெகிழும்படி செய்தார். என் கலங்கிய துன்பத்தைக் கண்டு என்னை எள்ளி நகுவது போல மின்னி, இகழ்ந்து ஆரவாரம் செய்வது போல முழங்குகின்ற இந்தக் கார்கால மழையின் குரலை அவர் அந்த நாட்டில் கேட்கவில்லையோ? என்று தன் தோழியிடம் கூறுகிறாள்.

**7.10. பயிற்சி வினா**

1..நற்றிணையிலுள்ள மணிமணியான கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

**7.11. பொருளறிக** இசை – புகழ், அலரி – மலர், கதுப்பு - கூந்தல், மை – மேகம், பெயல் - மழை, கோடு – கிளை, இணர் - பூங்கொத்து, நாப்பண் - நடுவு, குரூஉ – நிறம், சுவல் - மேற்புறம்.

குறிப்பு

**7.12. மேலும் படித்தறிக..**

1. ச.வே.சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் எட்டுத்தொகை
மூலமும் தெளிவுரையும்
தொகுதி 1
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை – 600 018
பதிப்பு 2010

2. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர - நற்றிணை
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்புக்கழகம்
சென்னை
1952

## பிரிவு- 2: ( தொடர்ச்சி )

## கூறு 8: அகநானூறு

**8.பாடஅமைப்பு:**

**8.1. அறிமுகம் - அகநானூறு - அகம் - சொற்பொருள் விளக்கம்**

**8.2. நோக்கம்**

**8.3. அகம் புறம் பற்றிய விளக்கம்**

**8.3.1. தொகுத்தவன் தொகுப்பித்தவன்**

**8.3.2. அகநானூற்றுப் பாடற் பிரிவுகள்**

**8.3.3. அகநானூறு -அடி வரையறை**

**8.3.4. அகநானூற்றின் மூன்று பகுப்புகள்.**

**8.3.5. பாடிய புலவர்களின் எண்ணிக்கை**

**8.4. அகநானூற்றில் அமையும் கூற்றுக்கள்**

**8.5. அகநானூற்றின் சிறப்புக்கள்**

**8.5.1. அகநானூற்றால் அறிய வரும் வரலாற்றுச் செய்திகள்**

**8.5.2. அரசியலும் வாணிபமும்**

**8.5.3. வாழ்க்கை முறை மற்றும் பண்பாடுகள்**

**8.6. இயற்கைக் காட்சிகள்**

குறிப்பு

**8.7. பதிப்பு வரலாறு**

**8.8. அகநானூறு – சேந்தன்பூதனார் பாடல்கள்**

**8.8.1. தலைமகன் கூற்று**

**8.8.2. செவிலி கூற்று**

**8.9. நிறைவாக**

**8.10. சோதித்தறியும் வினாவிடைகள்**

**8.11. பயிற்சி வினா**

**8.12. பொருளறிக**

**8.13. மேலும் படித்தறிக..**

## 8.1.அறிமுகம் - அகநானூறு - அகம் - சொற்பொருள் விளக்கம்

அகம் + நான்கு + நூறு = அகநானூறு என்றாகும். அகம் என்ற சொல்லில் உள்ள மகர ஒற்று அதற்குமுன் வருகின்ற சொல்லாகிய நான்கு என்பதிலுள்ள மெல்லினத்தால் அகம் என்ற சொல்லிலுள்ள மகரம் வீழ்ந்துவிடும். அதனால், அகம் + நான்கு. + நூறு = அகநானூறு என்றாகியது.

அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காமஇன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்கு அகம் என்ற சொல் அகப்பொருளைக் குறிப்பதோடு, வீட்டு வாழ்க்கையைப் பற்றியும் பேசுகிறது. புறம் என்பது நாட்டு வாழ்க்கையைப் பற்றிப் பேசும் நூல்.

## 8.2.நோக்கம்

அகம்' என்ற பெயரமைந்த நூல் இது ஒன்றே. இந்நூல் நெடுந்தொகை என்றும் வழங்கப்பெறும். நானூறு பாடல்களை நூற்றைம்பது புலவர்கள் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார். பாடல்களைப் பகுத்துள்ள முறையாலும் தொகுத்துள்ள முறையாலும் சிறப்புடையது என்பதை மாணவர்களுக்ககு உணர்த்துவதே நோக்கமாகும்.

## 8.3.அகம் புறம் பற்றிய விளக்கம்

தொல்காப்பியர் காலத்தில் இலக்கிய அடிப்படையாக அகம், புறம் என்ற இரண்டு நிலையில் தான் அமைந்தன. தொல்காப்பியர்

குறிப்பு

காலத்திற்குப் பிற்காலத்தில் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று நிலையில் இலக்கிய அடிப்படை அமைந்தது. வடமொழித் தாக்கத்தால் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு நிலையாக இலக்கிய அடிப்படை வளர்ந்தது. தொடக்கத்தில் இருந்தது அகம், புறம் என்ற இரண்டு மட்டுமே. ஆனால், தொல்காப்பியர் இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு (தொல் 1038) என்று முப்பொருளையும் சுட்டுவார். அறம் பொருள் இன்பம் என்ற மூன்றினையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஆனால், சிறுவயதில் இன்பமும், நடுவயதில் பொருள் ஈட்டலும், முதிய வயதில் அறஉணர்வும் அதிகமாகும் என்ற நிலையில், இன்பமும் பொருளும் அறனும் என்று இன்பத்தை முதலில் வைத்தார். ஆனால் அறவழியில் பொருள் ஈட்ட வேண்டும். அறவழியில் இன்பம் துய்க்க வேண்டும் என்ற நிலையில்தான் வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று அமைத்தார்.

மன வாழ்க்கையாகவும், மனை வாழ்க்கையாகவும், அக வாழ்க்கை அமைகிறது. அதனால்தான் அகநானூற்றை முதலில் கூறுகிறார்.

**8.3.1.தொகுத்தவன் தொகுப்பித்தவன்**

அகநானூற்றைத் தொகுக்கச் செய்தவன் மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மர்.

**8.3.2.அகநானூற்றுப் பாடற் பிரிவுகள் -**

இதனை மிகவும் சிந்தித்துத் தொகுத்துள்ளார். ஒற்றைப்படை எண்ணாலான பாடல்கள் 1, 3, 5, 7, …ஆகியவை பாலைப்பாடல்கள், 400 பாடல்களில் 200 பாலைப்பாடல்கள். இரட்டைப்படை எண்களில் 2, 8, 12, 18….எனப்படுபவை குறிஞ்சிப்பாடல்கள். 80 குறிஞ்சிப் பாடல்கள். 4, 14, 24 … எனும் எண்ணுள்ள பாடல்கள் முல்லைத் திணைப் பாடல்கள். அவை 40 பாடல்கள். 6, 16, 26 … எனும் எண்ணுள்ள பாடல்கள் மருதத் திணைப் பாடல்கள். அவை 40 பாடல்கள். 10, 20, 30, 40 ..எனும் எண்ணுள்ள பாடல்கள் நெய்தல் பாடல்கள். அவை 40. மிகத் திட்டமிட்டு இவ்வமைப்பு செய்யப்பட்டள்ளது. மருதப்பாடல்களில் தான் பெரும்பாலும் பரத்தையர், ஊடல் போன்ற செய்திகள் அமையும். பாலைப் பாடல்கள் மிகுதியாக இருப்பதால், பிரிதல் அதிலும் பொருள்வயிற்பிரிதல் மிகுதியாக அமைகிறது. காரணம் தலைவன்

பொருள் ஈட்டிய பின்புதான் திருமணம் செய்துகொள்ள வெண்டும் என்று நினைத்தது.

1. பாலைத் திணைப் பாடல்கள் - 200
2. குறிஞ்சித்திணைப் பாடல்கள் - 80
3. முல்லைத் திணைப் பாடல்கள் - 40
4. மருதத் திணைப் பாடல்கள்- - 40
5. நெய்தல் திணைப் பாடல்கள் - 40

குறிப்பு

'அகம்' என்ற பெயரமைந்த நூல் இது ஒன்றே. இந்நூல் நெடுந்தொகை என்றும் வழங்கப்பெறும். நானூறு பாடல்களை நூற்றைம்பது புலவர்கள் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார். பாடல்களைப் பகுத்துள்ள முறையாலும் தொகுத்துள்ள முறையாலும் சிறப்புடையது.

**8.3.3. அகநானூறு -அடி வரையறை**

இந்நூலில் அடங்கியுள்ள பாடல்கள் மிகக் குறைந்த அளவாகப் 13 அடிகளையும், கூடிய அளவாகப் 31 அடிகளையும் கொண்டு அமைந்துள்ளன. கடவுள் வாழ்த்துச் செய்யுளைத் தவிர்த்து இந்நூலில் 400 பாடல்கள் உள்ளன.

**8.3.4. அகநானூற்றின் மூன்று பகுப்புகள்.**

1. -களிற்றியானை நிரை
2. -மணிமிடைப் பவளம்
3. -நித்திலக்கோவை

**1.களிற்றியானை நிரை**

1 முதல் 120 வரையில் உள்ள 120 பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. இதில் உள்ள பாடல்கள் யானைக் களிறு போல் பெருமித நடை கொண்டவை. யானைகளின் அணிவகுப்பைப் போன்று ஓரினப் பாடல்களின் அணிவகுப்பாக அவை அமைந்துள்ளன.

**2.மணிமிடைப் பவளம்**

121 முதல் 300 வரை உள்ள பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. இதில் உள்ள பாடல்கள் நீலநிற மணிகள் போலவும், செந்நிறப் பவளம் போலவும் பெருமதிப்பு உடையனவாக அமைந்து ஈரினப் பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ளன. மணியும் பவளமும் கோத்த ஆரம் போன்று இத்தொகுப்பு அமைந்துள்ளது.

குறிப்பு

**3.நித்திலக்கோவை**

301 முதல் 400 வரை உள்ள 100 பாடல்கள் இத்தொகுப்பில் உள்ளன. இதில் உள்ள பாடல்கள் நித்தில முத்துக்கள் போலப் பெருமதிப்பு கொண்டவையாக அமைந்து ஓரினக் கோவை போல அமைந்துள்ளன. இத்தொகுப்பு முத்தாரம் போல் அமைந்துள்ளது.

**8.3.5. பாடிய புலவர்களின் எண்ணிக்கை**

பாடிய புலவர்கள்: 144

ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள்: 3 (114, 117, 165)

**8.4. அகநானூற்றில் அமையும் கூற்றுக்கள்**

அகநானூற்றில் எல்லா அகஇலக்கியங்களையும் போன்று, தோழி கூற்றே மிகுதியாக உள்ளது.

தோழி கூற்று – 156, தலைவன் கூற்று – 103, தலைவி கூற்று – 95, செவிலி கூற்று – 16, நற்றாய் கூற்று – 9, பரத்தையர் கூற்று – 9, உழையர் கூற்று – 3, பாணன் கூற்று – 1, கண்டார் கூற்று – 1, தோழி (அ) தலைவி – 5, தலைவி (அ) தோழி – 2.

**8.5.அகநானூற்றின் சிறப்புக்கள்**

சங்க இலக்கியம் உள்ளுறைகள் மிகுதியாக உள்ள இலக்கியம். எட்டுத்தொகை நூல்களில் ஐந்து அகம் பற்றிக் கூறும் நூல்கள். அவ்வைந்து நூல்களிலும் உள்ளுறையும் இறைச்சியும் உள்ளன.

**1.உள்ளுறை**

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் (தொல்காப்பியம்.994)

உள்ளுறை என்பது உவமத்தின் ஒரு வகை. வெளிப்படையாக ஒன்றைக் கூறி, மற்றொரு கருத்தை அவ்வுவமையில் வைத்துக் கூறுவது உள்ளுறை உவமம் ஆகும்.

அகநானூறு 56ஆம் பாடலில் "இரும்பியன்றன்ன கருங் கோட்டெருமை கயங்கலங்க, ஆம்பல் மெல் அடை கிழியக் குவளைக் கூம்புவிடு பன்மலரை மாந்திக், காஞ்சி நுண்டாது புறந்துறைப்ப, மெல்கிடு கவுளவாய்த் தங்குநிலை புகுதரும்" என்றது, இரும்பு போன்ற

மனத்தையுடையராகிய பரத்தையர் ஊர் முழுவதும் கலங்கத், தாம் முன்பு கூடிய பரத்தையர் தாய்மார் கலங்க, அப்பரத்தையர் அவ்வாம்பல் பூப்போல் குவிய, குவிதல் விட்ட குவளை மலர் போலும் பூப்பெய்து கொள்ளப்பட்ட பரத்தையரை நுகர்ந்து வருகின்ற காலத்து, வழியில் அகப்பட்ட சேடியர் முதலானவரையும் நுகர்ந்து பின்னும் சிலரைக் கூடக் கொடுநாக்கெறிந்து கொண்டு நம் மனையிலே தங்குதற் பொருட்டு வருகின்றான்" எனத் தோழிக்கு வாயில் மறுத்தது எனப் பழைய உரையாசிரியர் உரைத்துள்ளார்.

**குறிப்பு**

**2.இறைச்சி**

இறைச்சி தானே உரிப் புறத்ததுவே (தொல்காப்பியம்.1176)

இறைச்சி உரிப்பொருளுக்கு புறத்தாகி வரும் என்கிறது தொல்காப்பியம்.

அகநானூறு 21ஆம் பாடலில் பெண்நாய் பசியுடன் உள்ளது என எண்ணி ஆண் பன்றியைத் தாக்க அதுகண்டு பெண் பன்றி ஈந்தின் மீது உராய்தலால் விதை பரந்த வன்னிலம் என்றதால் பொருளை விரும்பி நெஞ்சம் தலைவனைத் தூண்டலால் தலைவி வருந்திப் புலம்ப அது எங்கும் பரவியது என்பது கருத்து. கூவலர் தோண்டிக் கைவிட்டுச் சென்ற கிணற்றை வேடுவர் தோண்டிய குழி எனக் களிறு தூர்க்கும் என்றதால், யாம் கைவிட்டு வந்த தலைவி படும் துன்பத்தைப் பார்த்து இது வேறொன்று என எண்ணி ஆயத்தார் முதலியவர் அதற்குப் பரிகாரமாக வெறியாடல் செய்வர் என்பதாம்.

**8.5.1.அகநானூற்றால் அறிய வரும் வரலாற்றுச் செய்திகள்**

அகப்பொருள் நூலான அகநானூற்றில் புறப்பொருள் செய்திகளும் உள்ளன. தித்தன், மத்தி, நன்னன், கரிகாற் பெருவளத்தான், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற பெருநில வேந்தர்கள் பற்றியும், ஆதன்எழினி, ஆட்டனத்தி, அன்னிமிஞிலி, பாணன், பழையன் போன்ற குறுநில மன்னர்கள் பற்றியும் எண்ணற்ற வரலாற்றுச் செய்திகளைத் தருகிறது. அலெக்சாண்டரின் படையெடுப்பின் போது கஞ்சி நந்தர்கள் தமது செல்வங்களையெல்லாம் கங்கையாற்றின் அடியில் புதைத்து வைத்த வரலாற்றுச் செய்தியும் இந்நூலின் 20, 25ஆம் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகம் 77 இல் தேர்தல் முறை பற்றிய செய்தி உள்ளது.

கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்

*Self-Instructional Material*

குறிப்பு

பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின் (அகம்.77:7-8)

இங்குப் பருந்து, இறந்தவரின் குடல் கொழுப்பை எடுக்கின்றது. அதுபோன்று தேர்தல் சீட்டுகள் உள்ள குடத்தில் இருந்து சீட்டுகளை அதிகாரிகள் எடுக்கின்றனர் என்ற குறிப்பு உள்ளது.

**8.5.2.அரசியலும் வாணிபமும்**

நாட்டை ஆளும் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க "குடவோலை முறை' பழக்கத்தில் இருந்ததென்ற அரசியல் செய்தி அகநானூறு வழி தெரிகிறது. யவனர்கள் வாசனைப் பொருளான மிளகைப் பெறுவதற்காகவே தமிழகத்துடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற செய்தியை,

யவனர் தந்தவினைமாண் நன்கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்"

என்னும் அடிகள் மூலம் அறியலாம். இது தமிழர்களின் வாணிப வளத்தைக் காட்டுகிறது.

**8.5.3. வாழ்க்கை முறை மற்றும் பண்பாடுகள்**

தமிழரின் திருமண முறை பற்றிய செய்தி அகம் 86, 136 ஆம் பாடல்களில் உள்ளன. உயர்ந்த எண்ணங்களை உள்ளத்தில் பதியுமாறு கூறுகின்ற பாடல்கள் பல உள்ளன.

மிகுந்த அன்புடையவராக காதலுடையவராக இருந்தாலும் சான்றோர் தவறு என்று நினைக்கும் நிலையில் அமைந்த இன்பத்தை அக்காதலர் விரும்பவதில்லை.

கழியக் காதலர் ஆயினம் சான்றோர்
பழியொடு வரூஉம் இன்பம் வெ·்கார் (அகம்.112:11-12)

தமிழர் இயற்கையோடு இணைந்து இயைந்து வாழ்ந்தவர். இயற்கையில் அமையும் கூத்தாட்டக் காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறார் கபிலர்.

**8.6. இயற்கைக் காட்சிகள்**

மலையில் மயில்கள் ஆடுகின்றன. அவ்வாட்டத்திற்கு தக மூங்கில் துளைகளின் வழியாகச் செல்லும் காற்று, குழல் போல் ஒலிக்கின்றது. அருகிலிருக்கும் அருவி வீழ்ச்சியின் ஓசை முரசு போன்று முழங்குகின்றது. துள்ளித் திரியும் மான்களின் ஒலி, பெருவங்கிய ஒலி போல் அமைகின்றது. பூக்களில் தேனையுண்ணும் வண்டுகளின் ரீங்காரம், யாழிசையாக அமைகின்றது. மயிலின் ஆட்டத்திற்குத் தகக்

குழலோசையும், முழவோசையும், வங்கியம் ஆகிய கொம்போசையும், வண்டுகளின் ரீங்காரமாகிய யாழ் ஓசையும் இணைக்கின்றன. இம்மயில் ஆட்டத்தையும் இவ்வோசைகளையும் பார்த்து மருண்டு, மகிழ்ச்சியோடு நிற்கின்றன. அங்குள்ள குரங்குகள், பார்வையாளர்களாகக் குரங்குகள் அமைகின்றன. இம்மலைக் காட்சி இயற்கைக் காட்சி.

ஆடுஅமை குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆகப்
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசைத்
தோடுஅமை முழவின் துதைகுரல் ஆகக்
குணக்கலை இருக்கம் கடுங்குரற் தூம்பொடு,
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக,
இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து,
மந்தி நல்அவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டுமயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன் (அகநானூறு.82)

அகநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் இதுபோன்ற இயற்கைக் காட்சிகளையும் வாழ்வியல் காட்சிகளையும், வரலாற்றுக் காட்சிகளையும் தருகின்றன.

### 8.7 பதிப்பு வரலாறு

இந்நூல் உரையுடன் முதற் பகுதி 'மெட்ராஸ் கம்பர் விலாஸ் புக் டிப்போட் மயிலாப்பூர்' என்றவர்களால் 1918ல் முதலில் பதிப்பிக்கப்பட்டது. ஆனால் இப்பதிப்பின் முகப்புப் பக்கத்தைத் தவிர வேறு எந்தப் பக்கமும் பார்க்கக் கிடைக்கவில்லை. அகநானூற்றின் இரண்டாம் பகுதி 1920இல் வந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்த தகவலைத் தவிர இப்பதிப்பும் பார்க்கக் கிடைக்கவில்லை. இந்நூலின் முழுப் பதிப்பானது 1923இல் அகநானூறு மூலமும் பழைய உரையும் என்னும் பெயரில் ரா.இராகவையங்கார் பதிப்பிக்க, கம்பர் விலாசம் இராஜகோபாலையங்கார் என்பவரால் வெளியிடப்பட்டது.

### 8.8.. அகநானூறு – சேந்தன்பூதனார் பாடல்கள்

சேந்தன் என்பது தந்தை பெயர். பூதனார் என்பதே இப்புலவர் பெயர். இம்முழுப் பெயர் சேந்தன் பூதனார் என இயல்பாகவும்

குறிப்பு

(நற்றிணை.281). சேந்தம் பூதனார் எனப் புணர்ச்சியில் திரிந்தும் (அகநானூறு.207 ) வழங்கும் மற்று, நற்றிணை 69ஆம் பாடலாசிரியர் பெயராகக் காணப்படும் சேகம் பூதனார் என்பதும் இச்சேந்தம் பூதனார் பெயரின் திரிபே எனப் பி.நா. முதலிய பதிப்பாசிரியர் பலரும் கொள்வர். இப்புலவர் பெயர்முன் ‘மதுரை எழுத்தாளன்’ என்னும் அடைமொழி காணப்படுதலால் (அகநானூறு.207 குறுந்தொகை.90,226) இவர் மதுரைப் பதியினரென்பதும் ஏடெழும் தொழிலினரென்பதும் விளங்கும். பெயரேயன்றி மதுரை எழுத்தாளன் என்று மட்டுமே குறிக்கப் பெறுமளவு (அகநானூறு.84) இவர் அப்பதியியுலும் அத்தொழிலும் சிறந்து புகழுடன் விளங்கினர் எனக் கொள்ளலாம். இவருடையனவாக அகநானூற்றில் இரண்டும் (84, 207), குறுந்தொகையில் மூன்றும் (90, 226, 247), நற்றிணையில் இரண்டும் (69, 261) ஆக ஏழு பாடல்கள் உள்ளன. அவற்றை இவர் மருதமொழிந்த ஏனைத் திணைகள் நான்கிலும் அமைத்துப் பாடியுள்ளார். மழையினையேற்ற முல்லை நிலத்தையும் (அகம்.84) பகலினைப் போக்கிய மாலைப் பொழுதையும் (நற்.69) இவர் புனையும் அழகு பாராட்டத்தகும். உமணர் கழுதைமேல் உப்புப் பொதிகளையேற்றிக் கொண்டு குடபுலம் செல்லும் குறிப்பினை இவர் ஒரு பாடலில் (அகம்.207) தருவர். வயல்கள் சூழ்ந்த கொடியசையும், அரண்மனையைப் பகைவர் திறையாகக் கொடுப்பவும் அதனைக் கொள்ளாத சினம் மிக்கவன் தன் வேந்தன் என, அவனுக்குத் துணையாகிப் போர்வயிற் பிரிந்து பாசறையிலிருக்கும் தலைவன் கூற்றாக (அகம்.84) இவர் கூறும் மேம்பாடு குறிப்பிடத்தக்கது. ‘தலைவனோடு நகைத்து நட்புக் கொள்ளும் முன் பூவோடொக்கும் கண்ணும் வேயோடொக்கும் தோளும் பிறையோடொக்கும் நுதலும் நமக்கு நல்லனவாகவே இருந்தன’ என்று தலைவன் மணம் நீட்டித்தலால் அழகிழந்த தலைவி கூற்றில் இவர் பேசும் நயம் மிக நன்று.

**8.8.1.தலைமகன் கூற்று**

கூற்று: தலைமகன் பாசறையிலிருந்து சொல்லியது

போர்த்தொழில் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பாசறையில் தங்கியிருக்கும் நிலையில் தலைவியை நினைந்து கூறுவது.



திணை: முல்லை

84. மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங்கு எழில் பௌவம் வாங்கித்,
தாழ்பெயல் பெருநீர் வலன்ஏர்பு, வளைஇ,
மாதிரம் புதைப்பப் பொழிதலின், காண்வர
இருநிலம் கவினிய ஏமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவுஅடைத்து இருந்த அருமுனை இயவில்
சீறூ ரோளே, ஒண்ணுதல்! – யாமே,
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி,
அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ஆர் வினைஞர் களந்தொறும் மறுகும்
தண்ணடை தழீஇய கொடிநுடங்கு ஆர்எயில்
அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் சினஞ்சிறந்து,
வினைவயின் பெயர்க்கம் தானைப்,
புனைதார் வேந்தன் பாசறை யேமே! (1-17)

மலையினது உச்சியில் வளைந்தநிறம் பொருந்திய இந்திர வில்லையும் முரசு போன்ற ஒலியையும் உடைய மேகம், கடலினது நீரைக் குடித்து உலகை வலமாக எழுந்து வளைத்து இறங்கிப் பெய்யும் மிகுந்த மழையைத் திசைகள் எல்லாம் மறையப் பெய்கின்றது. அதனால் இனிய காட்சி உண்டாகும்படி பெரிய நிலம் அழகு பெற்று இன்பம் அடையும் கார்காலம். இக்கார்ப்பருவத்தில் தீயைப் போன்ற கண்களையுடைய பன்றி நுண்ணிய மணலில் உள்ள சிறிய புதரில் உறங்கும். அதன் முதுகு மறைந்து போகுமாறு நறுமணம் கமழும் மலர்களை உடைய முல்லையின் மலர்கள் உதிரும். இத்தகைய காடு சார்ந்துள்ள அரிய முனைகளையுடைய வழிகளில் உள்ள சிறிய ஊரிலே ஒளியுடைய நெற்றியுடைய நம் தலைவி உள்ளாள்.

தீயைப் போன்ற பல மலர்களை உடைய மாறு பட வைத்து நெல்லரிபவர் கட்டிய, அசையும் பக்கங்களையுடைய பெரிய நெற்கட்டினைக் கொண்டு கள் குடித்த தொழிலாளர் சுமந்து கொண்டு களந்தோறும் செல்வதற்கு இடமான மருத நிலம் சூழ்ந்த வெற்றிக் கொடி அசைகின்ற மதிலுடன் கூடிய இந்த ஊரையே திரைப்பொருளாகக்

கொடுப்பினும் கொள்ளாதவனாய்ச் சினம் மிக்குப் பின்பும் போர்த் தொழிலில் செலுத்தப்படும் படைஞரையும் வாகை மாலையையும் உடைய நம் மன்னனின் பாசறையில் அவளை நினைந்தபடி நாம் உள்ளோம்! அவளுடைய நிலை என்னவோ?

### 8.8.2. செவிலி கூற்று

கூற்று: மகட் போக்கிய தாய் சொல்லியது.

தலைவனும் தலைவியும் திருமணம் செய்து கொள்வதற்குப் பெற்றோர் உடன்படாத நிலையில் தலைவன் தலைவியை உடன்போக்கில் அழைத்துச்சென்று திருமணம் செய்து கொள்வது மரபு. அவ்வாறு உடன்போக்கில் சென்ற தலைவியை நினைந்து செவிலித்தாய் கூறுவது.

திணை: பாலை

207. அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார், புள்ஓர்த்துப்
புடைஅமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர்
நிரைபரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்த கல்பிறழ் இயவின்,
வெஞ்சுரம் போழ்ந்த, அஞ்சுவரு கவலை,
மிஞிறுஆர் கடாஅம் சுரந்துவிடு கவுள,
வெயில்தின வருந்திய, நீடுமருப்பு ஒருத்தல்
பிணர்அழி பெருங்கை புரண்ட கூவல்
தெண்கண் உவரிக் குறைக்குட முகவை
அறனி லாளன் தோண்ட, வெய்துஉயிர்த்துப்,
பிறைநுதல் வியர்ப்ப உண்டனள் கொல்லோ-
தேம்கலந்து அளைஇய தீம்பால் ஏந்திக்
கூழை உளர்ந்து மோழைமை கூறவும்,
மறுத்த சொல்லள் ஆகி,
வெறுத்த உள்ளமொடு உண்ணா தோளே? (1-17)

(1-7) தெய்வத்தை உடைய கடல் நீர் பரந்த உப்பு விளையும் வயலில் நீர் காய்ந்த தன்மையால் வேறான உப்பு என்ற அமிழ்தத்தை, மேற்குத் திக்கில் உள்ள இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லும் பொருட்டு, நிமித்தம் பார்த்துப் படைக்கலங்கள் அமைத்துக் கொண்டு

எழுந்த வீரச் செயல்களைப் புரியும் உமணர் - அடுக்கிய உப்பு மூடைகளான சுமையையுடைய வெண்மையான முதுகையுடைய கழுதைகளின் தேய்ந்த குளம்பு படுதலால் பரற்கற்கள் பிறழ்ந்து கிடக்கும் வழிகள். ஆவை பொருந்திய பாலையை ஊடறுத்துச் செல்லும் அச்சமுடைய கவர்த்த நெறிகளில்.

(8-12) வண்டுகள் மொய்க்கும் மதநீர் வற்றி மறைந்த கன்னத்தையுடைய வெயில் நலிதலால் வருந்திய நீண்ட கொம்பையுடைய ஆண்யானையினது, பெரிய கை நீர் வேண்டித் துழாவிப் பார்த்த கிணறு. அதனை அறம் இல்லாத தன் தலைவன் தோண்டுதலால் ஊறிய தெளிந்த உவரையுடைய குறைக்குடமாக மொள்ளப்பட்ட நீரை,

(14-17) தேனை வார்த்து நன்கு கலந்த இனிய பாலை ஏந்திக் கொண்டு கூந்தலைக் கோதி நல்ல சொற்களைச் சொல்லிடவும் மறுத்துரைத்தாளாகிய வெறுப்புற்ற உள்ளத்துடன் அதனை உண்ணாதவள் என் மகள், இப்போது,

(12-13) வெப்பத்துடன் பெருமூச்சு விட்டுப் பிறைமதி போன்ற நெற்றி வியர்க்கக் குடித்தனள் போலும்!

## 8.9. நிறைவாக

காதலும் வீரமும் சங்க இலக்கியங்களின் இரு கண்களாகப் போற்றப்படுவன. இவற்றுள் அகம் என்ற தலைப்பிலமைந்த அகநானூறு தலைவன், தலைவியின் வாழ்வியல் ஒழுகலாற்றைக் கூறுகிறது. இவற்றை மாணவர்கள் கற்பதின் வாயிலான சங்ககால வாழ்க்கை முறையினைத் தெரிந்து கொள்ளலாம்

## 8.10. சோதித்தறியும் வினாவிடைகள்

1. அகநானூறு நூற்குறிப்புத் தருக.

அகம் + நானூறு = அகநானூறு எனப்பெறும். அகம் பற்றிய 400 பாக்களைக் கொண்டது. அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காமஇன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்கு அகம் என்ற சொல் அகப்பொருளைக் குறிப்பதோடு, வீட்டு வாழ்க்கையைப் பற்றியும் பேசுகிறது.

2. அகநானூற்றைத் தொகுத்தவன், தொகுப்பித்தோன் பெயரைச் சுட்டுக.

குறிப்பு

அகநானூற்றைத் தொகுக்கச் செய்தவன் மன்னன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மர்.

3. சேந்தம்பூதனார் பற்றிக் குறிப்பு வரைக

சேந்தம்பூதனார் சங்கப் புலவருள் ஒருவர். சேந்தன் என்பது தந்தை பெயர். பூதனார் என்பதே இப்புலவர் பெயர். இவருடையனவாக அகநானூற்றில் இரண்டும் (84, 207), குறுந்தொகையில் மூன்றும் (90, 226, 247), நற்றிணையில் இரண்டும் (69, 261) ஆக ஏழு பாடல்கள் உள்ளன.

4. தலைமகன் பாசறையிலிருந்து சொல்லிய செய்தியை சேந்தம்பூந்தனார் வழி நின்று விளக்குக

போர்த்தொழில் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பாசறையில் தங்கியிருக்கும் நிலையில் தலைவியை நினைந்து கூறுவது.

இது முல்லைத் திணையில் இடம்பெறுகிறது.

84. மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங்கு எழில் பௌவம் வாங்கித்,
தாழ்பெயல் பெருநீர் வலன்ஏர்பு, வளைஇ,
மாதிரம் புதைப்பப் பொழிதலின், காண்வர
இருநிலம் கவினிய ஏமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
……….

என்று அமையும் பாடலில் மலையினது உச்சியில் வளைந்தநிறம் பொருந்திய இந்திர வில்லையும் முரசு போன்ற ஒலியையும் உடைய மேகம், கடலினது நீரைக் குடித்து உலகை வலமாக எழுந்து வளைத்து இறங்கிப் பெய்யும் மிகுந்த மழையைத் திசைகள் எல்லாம் மறையப் பெய்கின்றது. அதனால் இனிய காட்சி உண்டாகும்படி பெரிய நிலம் அழகு பெற்று இன்பம் அடையும் கார்காலம். இக்கார்ப்பருவத்தில் தீயைப் போன்ற கண்களையுடைய பன்றி நுண்ணிய மணலில் உள்ள சிறிய புதரில் உறங்கும். அதன் முதுகு மறைந்து போகுமாறு நறுமணம் கமழும் மலர்களை உடைய முல்லையின் மலர்கள் உதிரும். இத்தகைய

காடு சார்ந்துள்ள அரிய முனைகளையுடைய வழிகளில் உள்ள சிறிய ஊரிலே ஒளியுடைய நெற்றியுடைய நம் தலைவி உள்ளாள்.

தீயைப் போன்ற பல மலர்களை உடைய மாறு பட வைத்து நெல்லரிபவர் கட்டிய, அசையும் பக்கங்களையுடைய பெரிய நெற்கட்டினைக் கொண்டு கள் குடித்த தொழிலாளர் சுமந்து கொண்டு களந்தோறும் செல்வதற்கு இடமான மருத நிலம் சூழ்ந்த வெற்றிக் கொடி அசைகின்ற மதிலுடன் கூடிய இந்த ஊரையே திறைப்பொருளாகக் கொடுப்பினும் கொள்ளாதவனாய்ச் சினம் மிக்குப் பின்பும் போர்த் தொழிலில் செலுத்தப்படும் படைஞரையும் வாகை மாலையையும் உடைய நம் மன்னனின் பாசறையில் அவளை நினைந்தபடி நாம் உள்ளோம்! அவளுடைய நிலை என்னவோ? என்று தலைமகன் பாசறையிலிருந்து தலைவியை நினைத்து கூறுவதாக சேந்தம்பூதனார் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பு

### 8.11. பயிற்சி வினா

1. அகநானூற்றில் அமையும் கூற்றுக்களை விவரி.

### 8.12. பொருளறிக

உருகெழு – அச்சதம் தரும், எழிலி – மேகம், பவ்வம் - கடல், பணை – முரசு, அரிஞர் - அரிபவர், அலங்குதலை – அசையும் பக்கம், சூடு – நெல் கட்டு, தண்ணடை – மருதநிலம், எயில் - மதில், செறு – உப்பு வயல், கவலை – கவர்த்த வழிகள், ஞிமிறு – வண்டு, கூவல் - கிணறு, மோழைமை - நயமொழி

### 8.13. மேலும் படித்தறிக..

1. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ) அகநானூறு
திருநெல்வேலி சைவ
சித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்
சென்னை
1944

குறிப்பு

2. ச.வே.சுப்பிரமணியன் - சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் தொகுதி 1 மணிவாசகர் பதிப்பகம் சென்னை – 600 018 பதிப்பு 2010

## பிரிவு -2 (நிறைவு)

## கூறு 9: புறநானூறு

**9.பாடஅமைப்பு:**

**9.1. அறிமுகம் - புறநானூறு**

**9.2. நோக்கம்**

**9.3. புறம் - சொற்பொருள் விளக்கம்**

**9.4. புறவொழுக்கம்**

**9.5. இடம்பெற்ற திணை துறைகள்**

**9.6. புறநானூற்றுச் சிறப்புகள்**

**9.6.1. அடி வரையறை**

**9.6.2. பாடிய புலவர்களின் எண்ணிக்கை**

**9.6.3. பா வகை**

**9.7. மாறோக்கத்து நப்பசலையார்**

**9.8. பாடப்பெறும் மன்னர்கள் - திணைகள் - துறைகள்**

**9.9. நிறைவாக**

**9.10. சோதித்தறியும் வினாவிடைகள்**

**9.11. பயிற்சி வினா**

**9.12. பொருளறிக**

**9.13. மேலும் படித்தறிக..**

### 9.1. அறிமுகம் - புறநானூறு

புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறம் என்ற சொல்லின் மெல்லின ம், ந் என்ற மெல்லினத்தின் முன் வீழ்ந்துவிடும். அதனால் புற என்று நிற்கிறது. நான்கு என்பது நூறு என்ற சொல் வரும்போது நான் என்று நிற்கும்.

குறிப்பு

"நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா (தொல்.462)

நான்கு + நூறு நான்கில் உள்ள கு வீழ்ந்து, நான் என்று நிற்கும். நான் நூறு வருகின்ற தந் நகரம் ந, றன்னகரமாகத் திரியும். அதனால், நானூறு என்று ஆகிறது. நான்கு என்ற எண்ணுப்பெயர், நாற்பது என்பதில் நாற் என்று திரியும். நாலாயிரம் என்பதில் நால் என்று திரியும். அடிச்சொல் நான்குதான்.

முதற் செய்யுளாகிய கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். மற்ற 399 பாக்களும் முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர்கிழார் இறுதியாகவுள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டுள்ளன. இதனைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரெனத் தெரியவில்லை.. அகநானூறு போன்று 'புறம்' பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டமையின் புறநானூறு என்னும் பெயரினைப் பெற்றது. இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார். நூற்று அறுபது (160) புலவர்கள் பாடிய பாடற்றொகுதி இது. புறம் புறப்பாட்டு, புறம்பு நானூறு என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

## 9.2. நோக்கம்

பண்டைய மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள், கொடைஞர்கள் முதலானோர் பாட்டுடைத்தலைவராக இடம்பெற்றுள்ள இந்நூலினைப்பற்றிய சிறப்பை மாணவர்கள் அறிவதே நோக்கமாகும்.

## 9.3. புறம் - சொற்பொருள் விளக்கம்

புறமாவது ஒத்த அன்புடையாராலேயே யன்றி எல்லாராலும் அனுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்தது எனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள். அறனும் பொருளும் அடங்கும். அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர்.

புறம் என்ற சொல்லுக்கு வெளியிடம், அன்னியம், புறத்திணை, வீரம், பக்கம், முதுகு, பின்புறம், இடம், இறையிலி நிலம் போன்ற பல பொருள்கள் உள்ளன. இங்குப் புறத்திணை, புறவொழுக்கம் என்ற நிலையில் அமைகிறது. புறநானூறு புறப்பாட்டெனவும், புறமெனவும், புறம்புநானூறெனவும் வழங்கும்.

## 9.4. புறவொழுக்கம்

குறிப்பு

சங்க இலக்கியங்கள் பாடுபொருளாக அமைபவை காதலும் வீரமும் ஆகும். இது உரையாசிரியர்களால் அகவொழுக்கம், புறவொழுக்கம் என வகைப்படுத்தப்படுகிறது. அகவொழுக்கத்தைப் பற்றிய செய்திகள் அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. புறவொழுக்கம் என்பது மன்னர்களின் வீரம், கொடை, வெற்றி, போர் போன்ற பல செய்திகள் புறவொழுக்கத்தில் காணப்படும். இது சங்க கால மன்னர்களின் வீரச் செயல்களைப் பாடுவனவாக புறவொழுக்கம் அமைகிறது.

## 9.5. இடம்பெற்ற திணை துறைகள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு, இலக்கிய வகைகளை அகம், புறம் எனப் பிரித்தனர். அகவொழுக்கம் என்பது வீட்டு வாழ்க்கை. புறவொழுக்கம் என்பது நாட்டு வாழ்க்கை. அறம் பொருள் இன்பம் என்ற இலக்கிய வகைப்பாடு தொல்காப்பியத்தில் கூறப்பெற்றாலும், திருக்குறள் காலத்திலிருந்துதான் அது செயல்பாட்டுக்கு வருகிறது.

சங்க இலக்கியம் எட்டுத்தொகை நூல்களில், அக இலக்கியங்களாக ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அமைகின்றன. புற இலக்கியங்களாகப் பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இரண்டும் அமைகின்றன. பரிபாடல் என்பது பொதுநிலையில் திருமால், செவ்வேள், வையை இவற்றைப் பற்றிய பாடல்களாக உள்ளன.

400 பாக்களிலும் அமைந்த திணைகள்: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பன.

400 பாக்களிலும் அமைந்த துறைகள்: மக்களும் விலங்குகள் முதலியனவும் சென்று நீருண்ணும் துறை போலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப்பட்டு இயங்குதற்குரிய வழி.

## 9.6. புறநானூற்றுச் சிறப்புகள் -

பண்டைக் காலத்தே இத்தமிழ் நாட்டிலிருந்த சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரர் முதலிய பலருடைய சரித்திரங்களும், இந்நூற்

குறிப்பு

செய்யுட்களாற் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தாரல்லர், ஒரு குலத்தாரல்லர், ஓரு சாதியல்லாரல்லர், ஓரிடத்தாருமல்லர். பாடிவர்களும் இத்தன்மையினரே. இவர்களில் அந்தணர் சிலர், அரசர் பலர், வணிகர் பலர், வேளாளர் பலர், பெண்பாலாரும் உளர்.

**9.6.1. அடி வரையறை**

இந்நூலில் 3 அடிகள் முதல் 40 அடிகள் வரை பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**9.6.2. பாடிய புலவர்களின் எண்ணிக்கை**

பாடிய புலவர்கள்: 157/160, ஆசிரியர் பெயர் காணாப் பாடல்கள் 14

**9.6.3 பா வகை**

கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய 400 அகவற்பாக்களை உடையது.

**9.7. மாறோக்கத்து நப்பசலையார்**

மாறோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு. ந - சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல். பசலை – கணவனைப் பிரிந்த மகளிருடைய நெற்றி முதலியவற்றில் உண்டாவதாகிய வேறுபட்ட நிறம். ‘மணிமிடை பொன்னின் மாமை சாயவென் அணிநலஞ் சிதைக்குமாம் பசலை’ (நற்றிணை.304) எனப் பசலையின் இயல்பை விளங்கக் கூறியிருத்தலின் இவர் இப்பெயர் பெற்றார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய போர் வெற்றியையும், அவன் கொடை முதலியவற்றையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவன் இறந்த பொழுது இவர் பாடிய பாடல் படிப்பவர் மனத்தை உருக்கும் மலையமான் திருமுடிக்காரியும் அவன் மகன் சோழியவேனாதி திருக்கண்ணனும் கபிலரும் இவராற் பாராட்டப் பெற்றோராவார். இவர் பெண்பாலாரென்று தெரிகிறது. இவர் இயற்றிய செய்யுளொன்று நற்றிணையில் உண்டு.

மாறோக்கத்து நப்பசலையார் பாடல்கள் புறநானூற்றில் 37, 39, 126, 226, 280 ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன.

**9.8. பாடப்பெறும் மன்னர்கள்**

**1. பாடப்பெறும் மன்னன்:** சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்

குறிப்பு

இவனது தலைநகர் உறையூர். மிக்க கொடையும் வீரமும் உடையோன், செய்யுள் செய்தலில் வல்லவன், கருவூரை முற்றுகை செய்து சேரனை வென்றவன். இவனைப் பாடிய புலவர்கள்: ஆலந்தூர் கிழார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர் முடவனார், கோவூர்கிழார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார், வெள்ளைக்குடி நாகனார். இவருள் இறந்த பின்பும் இருந்து பிரிவாற்றாது வருந்தியவர்கள்: மாறோக்கத்து நப்பசலையார், ஐயூர் முடவனார், ஆடுதுறை மாசாத்தனார்.

**திணை: வாகை**

வாகைத்திணை என்பது வாழ்க்கையின் மேம்பட்ட வெற்றி நிலையைக் குறிக்கும். இதில் வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றிக்கு அடையாளமான வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுதலைக் குறிக்கும் என்று புறப்பொருள் வெண்பா மாலை(155) கூறுகிறது.

**துறை**: அரசவாகை, முதல் வஞ்சியும் ஆம்.

**அரச வாகை**

அரச வாகை என்பது வாகைத் திணையின் துறைகளில் ஒன்று. புறநானூற்றுப் பாடல்களுக்குத் தரப்பட்ட துறைகளுள் ஒன்றாக இது விளங்குகிறது. அரசனது இயல்பையோ வெற்றியையோ எடுத்துரைத்தல் அரசவாகை எனப்படுகிறது.

**முதல் வஞ்சி**

அடங்காத மண்ணாசையாலோ அல்லது தன்னை மதியாத பகையரசனின் செருக்கை அடக்கவோ ஒரு மன்னன் மற்றொரு மன்னன் மேல் போர் தொடுப்பது வஞ்சியாகும். பழைய வரலாற்றையுடைய முன்னோரின் நிலையைக் கூறுவது முதல் வஞ்சி. இதை முதல் வஞ்சி எனவும் கூறுவர்.

37. நஞ்சுடை வால்எயிற்று, ஐந்தலை சுமந்த,
வேக வெந்திறல், நாகம் புக்கென,
விசும்புதீப் பிறப்பத் திருகி, பசும்கொடிப்
பெருமலை விடரகத்து உரும்எறிந் தாங்கு,

குறிப்பு

புள்உறு புன்கண் தீர்ந்த, வெள்வேல்
சினம்கெழு தானை, செம்பியன் மருக!
கராஅம் கலித்த குண்டுகண் அகழி,
இடம்கருங் குட்டத்து உடன்தொக்கு ஓடி,
யாமம் கொள்பவர் சுடர்நிழல் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சி,
செம்புஉறழ் புரிசைச் செம்மல் மூதூர்,
வம்புஅணி யானை வேந்துஅகத்து உண்மையின்,
'நல்ல' என்னாது, சிதைத்தல்
வல்லையால், நெடுந்தகை! செருவத் தானே,

அரசனது வெற்றியைக் கூறுதல், பழம்புகழ் வாய்ந்த முன்னோர் வழிமுறைச் சிறப்பைக் கூறுதல்

நஞ்சுண்டதும் வெண்ணிறப் பல் உடையதும், அழகிய தலையைக் கொண்டதுமாகிய சினமிக்க பாம்பு, புகுந்தது போல, வானில் தீ உண்டாக முறுகி, பசுமையான கொடிகள் நிறைந்த, பெரிய மலையின் வெடிப்புகளில் இடி விழுந்தது போலப் புறாவின் துயரம் தீர்த்த வெண்ணிற வேலையுடைய, சினமிக்க படையைக் கொண்ட செம்பியனின் வழி வந்தவனே! முதலை நிரம்பிய ஆழமான இடத்தை உடைய அகழியில் நள்ளிரவில் காவல் புரிவார், விளக்கின் ஒளி நிழலைப் பற்றும் வலிமையுடைய முதலைகள் மிக்க நீர் நிறைந்த மடுவையும், செம்பிட்டுச் செய்யப் பெற்ற மதிலையும் உடைய பழமையான ஊரில் முகபடாம் அணிந்த, யானையுடைய அரசு இருத்தலால் அவற்றை நல்லன என்று பாராது போரில் அழித்தலில் வலியவனாய் இருந்தால் பெருந்தகையே!

2. **பாடப் பெறும் மன்னன்**: சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

**திணை:** பாடாண் திணை

**பாடாண் திணை**: பாடுதற்கரிய ஒரு ஆண் மகனின் (வேந்தர்) சிறப்பியல்புகளைக் கூறி அவனது வீரத்தையும் புகழையும் கொடை வள்ளன்மையையும் குறித்துப் புகழ்ந்து பாடுவது, ஆண்மகனது ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண் திணையின் நோக்கமாகும்.

**துறை**: இயன்மொழி

**இயன்மொழி:**

குறிப்பு

புறப்பொருள் வெண்பா மாலை என்னும் இலக்கண நூல் பாடாண் படலத்தில் வரும் 48 துறைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிடுகிறது. இத்துறை இந்த நூலில் இரண்டு நூற்பாக்களில் விளக்கப்படுகிறது. முதல் நூற்பா 'இவர் எமக்கு இது கொடுத்தார், அது போல நீயும் கொடு என்று வள்ளலை வேண்டுவது இயன்மொழி என்னும் துறையாகும். இரண்டாவது நூற்பா மன்னவனின் இயல்பை மொழிவதும் அத்துறை என்கிறது.

39. புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதல்நின் புகழும் அன்றே சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்
தூங்குஎயில் எறிந்தநின் ஊங்கனோர் நினைப்பின்
அடுதல்நின் புகழும் அன்றே கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற்று ஆகலின் அதனால்
முறைமைநின் புகழும் அன்றே மறம்மிக்கு
எழுசமம் கடந்த எழுஉறழ் திணிதோள்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ
யாங்கனம் மொழிகோ யானே ஓங்கிய
வரைஅளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு
இமயம் சூட்டிய ஏம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டுநின்
பீடுகெழு நொன்தாள் பாடுங் காலே

புறாவின் வருத்தத்தைப் போக்கக் கறையுடைய அடிகள் பொருந்திய யானையின் வெண்மையான கொம்புகளால் கடைந்து அமைக்கப்பட்ட வெண்மையான கடைக்கோலான நிறுக்கப்படும் துலாக் கோலிலே தானே ஏறி நின்ற செம்பியன் மரபினன் நீ, ஆதலால் இரப்பவர்க்கு அளிப்பது உனக்கு இயல்பான செயலே அல்லது புகழ் ஆகாது. பகைவர் அஞ்சத்தக்க நெருங்குவதற்கு அரிய கொடிய ஆற்றல் உடைய தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் நின் முன்னோன், அவனை நினைப்பின் இங்குள்ள பகைவரைக் கொல்லுதல் நினக்குப்

புகழ் ஆகாது. கெடுதல் இல்லாது மறம் பொருந்திய சோழரின் உறையூர் அவைக்களத்தில் அறம் நின்று நிலை பெற்றுள்ளது. ஆதலால் முறை செய்தல் என்பது நினக்குப் புகழ் ஆகாது. அதனால் வீரம் மிக எழுந்த போரை வென்ற கணைய மரத்துடன் மாறுபடும் தோளினையும் கண்ணுக்கு ஆர்ந்த மாலையையும் மனம் செருக்குடைய குதிரையையும் உடைய வளவ! உயர்ந்த உச்சியையுடைய இமய மலையில் பொறித்த காவலான வில் பொறியையும் மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய பெரிய தேரையும் உடைய சேரன் அழிய, அவனது கருவூரை அழிக்கும் நின் வலிய தாளைப் பாடுங் காலத்தில் நான் எவ்வாறு பாடுவேன்?

**3. பாடப்பெறும் மன்னன்**: மலைமான் திருமுடிக்காரி

இவன் பெண்ணையாற்றங்கரையின்கண் உள்ள மலாடென்று வழங்கும் மலையமானாட்டின் அரசன். கோவலூர் இவனது தலைநகர். தமிழ்நாட்டரசர் மூவர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயத்து யுத்தத்தில் உதவி புரிந்தவன். புலவர்க்குப் பரோபகாரி. முள்ளூர் மலையையுடையான். அந்தணர்க்கு நிலங் கொடுத்தோன். கடையெழு வள்ளல்களில் ஒருவனென்று கூறப்படும் மலையன் இவனே. இவன் குதிரைக்குக் காரியென்று பெயர். மேற்கூறிய வள்ளல்களுளொருவனாகிய ஓரியென்பவனோடு போர் செய்தவன். இதனை, ‘காரிக் குதிரைக் காரியொடு மலைந்த, வோரிக் குதிரை யோரியும்’ (110-111) என்னும் சிறுபாணாற்றுப்படையாலுணர்க. இன்னும்,

‘துஞ்சா முழவிற் கோவற் கோமான்,
நெடுந்தேர்க் காரி கொடுங்கான மூன்றுரைப்ப
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும்,
நெறியிருங் கதுப்பி னென்பே தைக்கு (அகநானூறு.35),
‘முரண்கொடுப்பிற் செவ்வேன் மலையன்,
முள்ளூர்க் கானம்’ (குறுந்தொகை.132),
ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த வொள்வாண் மலையன்,
தொருவேற் கோடியாங்கு’ (நற்றிணை.170) எனச் சான்றோர்

இவனைப் பாராட்டியிருத்தல் காண்க. இவன் பெயர் மலையமானெனவும்

குறிப்பு

காரியெனவும் மலையனெனவும் வழங்கும் இவனைப் பாடிய புலவர்கள் கபிலர், மாறோக்கத்து நப்பசலையார்.

**திணை**: பாடாண் திணை

**துறை**: பரிசில் துறை

புறப்பொருள் வெண்பாமலை, 'பரிசில் இன்னார் கொடுத்தது' என்று கூறுவது பரிசில் துறை எனப்படுகிறது.

தலைவ! நின் குடிப் பெருமையும் நின் புகழும் எம்மால் எடுத்துக் கூறி இயலாது என்றாலும் எம்மால் இயன்ற அளவில் உரைப்போம். கபிலர் நின் புகழைப் பாடிய பின்பு எம் போன்றவர் பாடல் செல்லாது, எனினும் வறுமை எம்மைத் துரத்த நின்னிடம் வந்தோம் என்று நப்பசலையார் இதில் கூறியுள்ளார்.

126. ஒன்னார் யானை ஓடைப்பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை உரவோன் மருக
வல்லே மல்லேம் ஆயினும் வல்லே
நின்வயின் கிளக்குவ மாயின் கங்குல்
துயில்மடிந் தன்ன தூங்கிருள் இறும்பின்
பறைஇசை அருவி முள்ளூர்ப் பொருந
தெறல்அரும் மரபின்நின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பரந்த மக்கட்கு எல்லாம்
புலன்அழுக்கு அற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிடன் இன்றிப்
பரந்துஇசை நிற்கப் பாடினன் அதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடல்
பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறர்கலம் செல்கலா தனையேம் அத்தை
இன்மை துரப்ப இசைதர வந்துநின்
வண்மையில் தொடுத்தனம் யாமே முள்எயிற்று
அரவுஎறி உருமின் முரசெழுந்து இயம்ப
அண்ணல் யானையொடு வேந்துகளத்து ஒழிய
அருஞ்சமம் ததையத் தாக்கி நன்றும்
நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்

பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே

பகைவரின் யானைப் படாத்தில் உள்ள பொன்னைக் கொண்டு பாணரின் தலை அழகுடன் விளங்க, வாடாத பொன் தாமரையைச் சூட்டிய சிறந்த புகழை உடைய முதுகுகாட்டி ஓடாத இயல்புடைய பெரியவனின் வழியில் வந்தவனே! இரவானது ஓரிடத்தில் உறங்குவதைப் போன்ற செறிந்த இருள் உடைய சிறிய காட்டையும், பறை போல ஒலிக்கும் அருவியையும் உடைய முள்ளூர்ப் என்ற ஊரின் அரசே! முள்ளைப் போன்ற கூரிய பல்லையுடைய பாம்பைக் கொல்லும் இடியைப் போல, முரசமானது ஒலிக்க சிறந்த யானையுடனே அதைச் செலுத்தி வரும் மன்னனும் போர்க்களத்திலே இறக்கும்படி, அரிய போரை அழியும்படிச் செய்து, பெரிதும் பொருத்தமற்ற பகைவரைத் தடுக்கும் ஆற்றல் கொண்ட, பெண்ணையாற்றின் பக்கம் பொருந்திய நாட்டின் மன்னனே! ஒன்றையாம் கற்றவராயினும் கல்லாதவராயினும் உன் புகழைச் சொல்லுமிடத்து அத்தகைய திறம் எமக்கு இல்லை. அழிப்பதற்கு அரிய இயல்புடைய நின் உறவினருடன் பெருக, நிலத்தில் உயர்ந்த மக்கள், எல்லாரையும் விட அறிவிற் சிறந்த குற்றம் இல்லாத அந்தணனான கபிலன், இரக்கும் புலவர்க்கு, இனிமேல் புகழ்ந்து பேசுவதற்கு இடம் இல்லை என்னும்படி நின் புகழ் பரந்து நிலைத்து நிற்கப் பாடினான். அதனால் சினம் மிக்க படையையுடைய சேர மன்னன் (கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்) மேல் கடலில் பொன்னைத் தரும் தோணி செலுத்திய அவ்விடத்தில், மற்றவரின் மரக்கலம் போக இயலாத அத்தகைய இயல்புடையவர்யாம், அங்ஙனமாகவும், எம் வறுமை எம்மைச் செலுத்த, நின் புகழ் அழைக்க வந்து, நின் கொடைத் தன்மையில் சிலவற்றைச் சொல்லத் தொடங்கினோம்.

**4. பாடப்பெறும் மன்னன்:** சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

**திணை**: பொதுவியல்

பொதுவியல் திணை புறத்திணைகள் ஒவ்வொன்றிலும் வகைப்படுத்த முடியாத அறம் கூறும் பாடல்களையும், அறிவு கூறும் பாடல்களையும் உள்ளடக்கியது.

**துறை: கையறு நிலை**

மன்னன் ஒருவன் இறக்க அவனைச் சேர்ந்தோர் அந்த இறப்பைச் சொல்லி ஒழுக்கம் தளர்தல் கையறுநிலை எனப்படும்.

குறிப்பு

பேராண்மை படைத்தவன் கிள்ளிவளவன். இவனுடைய வீரத்தை ஆலந்தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனார், ஆவூர் மூலங்கிழார், கோவூர்கிழார் முதலியவர் பாராட்டியுள்ளனர். இவன் 'குளமுற்றம்' என்ற இடத்தில் உள்ள அரண்மனையில் மறைந்தான். ஆதலால் அதை அறிந்த மாறோக்கத்து நப்பசலையார், கொடைவன்மை, படை வன்மை முதலியவற்றை நினைந்தார், வருந்தினார். அதுவே இப்பாடல், மாறோக்கம் - மாறோகம். இஃது ஓர் ஊர். பாண்டிய நாட்டில் உள்ளது.

226. செற்றன்று ஆயினும் செயிர்த்தன்று ஆயினும்
உற்றன்று ஆயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆகல் வேண்டும் பொலம்தார்
முண்டமர் கடக்கும் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே

நெருங்கிய போரில் எதிர் நின்று வெல்லும் படையையும், திண்ணிய தேரையும், பொன்னால் ஆன மாலையையும் உடைய கிள்ளிவளவனது உயிரைக் கொண்டு சென்ற கூற்று, பாடுவாரைப் போல் தோன்றி நின்று கையால் தொழுது வாழ்த்தி யாசித்து உயிர் கொண்டு சென்றிருக்க வேண்டும்! அங்ஙனமின்றித் தன் உள்ளத்தில் பகைமை கொண்டாயினும், வெளிப்படையாய் நின்று சினங்கொண்டாயினும், பொருந்தி நின்று கையொடு மெய் தீண்டியாயினும் உயிர்கொண்டு சென்றிருந்தால் அக்கூற்றத்துக்கு உயிர் தப்பிப் பிழைத்தல் இயலாது.

5. **திணை**: பொதுவியல்

**துறை**: ஆனந்தப்பையுள்

**ஆனந்தப்பையுள்**:

ஒருகுல மகள் தன் கணவன் இறக்கத் துன்பம் அடைதல். ஒருவன் இறந்ததைக் குறித்துச் சுற்றத்தார் இரங்கிக் கூறுதலும் ஆனந்தப்பையுளாகும்.

மூங்கில் போன்ற தோளையுடைய மனைவி, தன் கணவன் இறக்க மெலிந்து வருந்தியதாகும்.

280. என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியுந் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கி நில்லை
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்

அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்
நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா
துடிய பாண பாடுவல் விறலி
என்னா குவிர்கொல் அளியிர் நுமக்கும்
இவணுறை வாழ்க்கையோ அரிதே யானும்
மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்றுதாம்உடுத்து அம்பகைத் தெரியல்
சிறுவெள் ளாம்பல் அல்லி உண்ணும்
கழிகல மகளிர் போல
வழிநினைந்து இருத்தல் அதனினும் அரிதே

குறிப்பு

என் தலைவனின் மார்பில் உண்டாகியுள்ள புண்களும் பெரியவையாய் உள்ளன. நண்பகலில் வண்டுகளும் வந்து ஒலிக்கின்றன. பெரிய வீட்டில் ஏற்றி வைத்த விளக்குகளும் நின்று எரியாமல் அவிகின்றன. உறக்கம் இல்லாத என் கண்களும் உறக்கத்தை விரும்புகின்றன. அச்சத்தைத் தரும் கோட்டானும் உரத்த குரலில் கூவுகின்றது. நெல்லையும் நீரையும் சொரிந்து விரிச்சி கேட்கும் செம்மையுடைய முதியவள் சொல்லிய சொற்களும் குறையுடையனவாக உள்ளன. ஆதலால், துடியைக் கொட்டுபவளே! பாணனே! பாடுவதில் வல்ல விறலியே! நீங்கள் எங்ஙனம் ஆவீர்களோ! நீங்கள் இரங்கத்தக்கவர்கள்! இதற்கு முன் நீங்கள் இங்கிருப்பது போல இனி இருப்பது அரிது. கழுவுகின்ற மொட்டையான தலையினின்றும் நீர் ஒழுக, என் இளமைக் காலத்தில் உடுத்த அழகிய தழையாக இருந்த சிறிய வெண்மையான ஆம்பலில் உண்டாகும் அல்லி அரிசியை உண்ணும், கழித்த அணிகலன்களையுடைய கைம்மை மகளிர் போல், கணவன் இறந்த பின்னர் வாழ்வதை எண்ணி, யானும் இங்கு உயிர் வாழ்வது என்பது அதைவிட அரிதாகும்.

## 9.9. நிறைவாக

கடையெழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச்சங்கப் புலவர் பலருடைய வரலாறுகளும் அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும் இன்னும் பற்பலவும் இந்நூலால் நன்கு புலப்படுவதை இதன் வழி அறிகிறோம்.

குறிப்பு

### 9.10. சோதித்தறியும் வினாவிடைகள்

1. புறநானூறு நூற்குறிப்புத் தருக

புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறமாவது ஒத்த அன்புடையாராலேயே யன்றி எல்லாராலும் அனுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்தது எனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள். அறனும் பொருளும் அடங்கும். அறனும் பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறமென்றது ஆகுபெயர். புறநானூறு புறப்பாட்டெனவும், புறமெனவும், புறம்புநானூறெனவும் வழங்கும்.

2. மாறோக்கத்து நப்பசலையார் பற்றிக் குறிப்பு வரைக

மாறோக்கம் என்பது கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு. பசலை – கணவனைப் பிரிந்த மகளிருடைய நெற்றி முதலியவற்றில் உண்டாவதாகிய வேறுபட்ட நிறம். 'மணிமிடை பொன்னின் மாமை சாயவென் அணிநலஞ் சிதைக்குமாம் பசலை' (நற்றிணை.304) எனப் பசலையின் இயல்பை விளங்கக் கூறியிருத்தலின் இவர் இப்பெயர் பெற்றார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுடைய போர் வெற்றியையும், அவன் கொடை முதலியவற்றையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவன் இறந்த பொழுது இவர் பாடிய பாடல் படிப்பவர் மனத்தை உருக்கும் மலையமான் திருமுடிக்காரியும் அவன் மகன் சோழியவேனாதி திருக்கண்ணனும் கபிலரும் இவராற் பாராட்டப் பெற்றோராவார். இவர் பெண்பாலாரென்று தெரிகிறது. இவர் இயற்றிய செய்யுளொன்று நற்றிணையில் உண்டு.

3. பாடாண் திணை என்பதை வரையறு

**பாடாண் திணை**: பாடுதற்கரிய ஒரு ஆண் மகனின் (வேந்தர்) சிறப்பியல்புகளைக் கூறி அவனது வீரத்தையும் புகழையும் கொடை வள்ளன்மையையும் குறித்துப் புகழ்ந்து பாடுவது, ஆண்மகனது ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண் தினையின் நோக்கமாகும்.

4. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை மாறோக்கத்து நப்பசலையார் எங்ஙனம் புகழ்ந்து பாடுகிறார்,

புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதல்நின் புகழும் அன்றே சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்

தூங்குஎயில் எறிந்தநின் ஊங்கனோர் நினைப்பின்
அடுதல்நின் புகழும் அன்றே கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற்று ஆகலின் அதனால்
முறைமைநின் புகழும் அன்றே மறம்மிக்கு
…..

குறிப்பு

என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் மாறோக்கத்து நப்பசலையார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் புகழ்ந்து பாடுகிறார். இதில் புறாவின் வருத்தத்தைப் போக்கக் கறையுடைய அடிகள் பொருந்திய யானையின் வெண்மையான கொம்புகளால் கடைந்து அமைக்கப்பட்ட வெண்மையான கடையையுடைய கோலான நிறுக்கப்படும் துலாக் கோலிலே தானே ஏறி நின்ற செம்பியன் மரபினன் நீ, ஆதலால் இரப்பவர்க்கு அளிப்பது உனக்கு இயல்பான செயலே அல்லது புகழ் ஆகாது. பகைவர் அஞ்சத்தக்க நெருங்குவதற்கு அரிய கொடிய ஆற்றல் உடைய தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் நின் முன்னோன், அவனை நினைப்பின் இங்குள்ள பகைவரைக் கொல்லுதல் நினக்குப் புகழ் ஆகாது. கெடுதல் இல்லாது மறம் பொருந்திய சோழரின் உறையூர் அவைக்களத்தில் அறம் நின்று நிலை பெற்றுள்ளது. ஆதலால் முறை செய்தல் என்பது நினக்குப் புகழ் ஆகாது. அதனால் வீரம் மிக எழுந்த போரை வென்ற கணைய மரத்துடன் மாறுபடும் தோளினையும் கண்ணுக்கு ஆர்ந்த மாலையையும் மனம் செருக்குடைய குதிரையையும் உடைய வளவ! உயர்ந்த உச்சியையுடைய இமய மலையில் பொறித்த காவலான வில் பொறியையும் மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய பெரிய தேரையும் உடைய சேரன் அழிய, அவனது கருவூரை அழிக்கும் நின் வலிய தாளைப் பாடுங் காலத்தில் நான் எவ்வாறு பாடுவேன்? என்று பாடுகிறார்.

5. ஆனந்தப்பையுள் என்றால் என்ன? மாறோக்கத்து நப்பசலையார் பாடிய ஆனந்தப்பையுள் துறையமைந்த பாடலை விளக்குக

ஒருகுல மகள் தன் கணவன் இறக்கத் துன்பம் அடைதல். ஒருவன் இறந்ததைக் குறித்துச் சுற்றத்தார் இரங்கிக் கூறுதலும் ஆனந்தப்பையுளாகும்.

என்னை மார்பிற் புண்ணும் வெய்ய
நடுநாள் வந்து தும்பியுந் துவைக்கும்

குறிப்பு

நெடுநகர் வரைப்பின் விளக்கி நில்லை
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்
அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்
நெல்நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்
செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா
……………………………..

என்ற பாடல் ஆனந்தப்பையுள் என்னும் துறையைச் சார்ந்ததாகும். இதில் என் தலைவனின் மார்பில் உண்டாகியுள்ள புண்களும் பெரியவையாய் உள்ளன. நண்பகலில் வண்டுகளும் வந்து ஒலிக்கின்றன. பெரிய வீட்டில் ஏற்றி வைத்த விளக்குகளும் நின்று எரியாமல் அவிகின்றன. உறக்கம் இல்லாத என் கண்களும் உறக்கத்தை விரும்புகின்றன. அச்சத்தைத் தரும் கோட்டானும் உரத்த குரலில் கூவுகின்றது. நெல்லையும் நீரையும் சொரிந்து விரிச்சி கேட்கும் செம்மையுடைய முதியவள் சொல்லிய சொற்களும் குறையுடையனவாக உள்ளன. ஆதலால், துடியைக் கொட்டுபவளே! பாணனே! பாடுவதில் வல்ல விறலியே! நீங்கள் எங்ஙனம் ஆவீர்களோ! நீங்கள் இரங்கத்தக்கவர்கள்! இதற்கு முன் நீங்கள் இங்கிருப்பது போல இனி இருப்பது அரிது. கழுவுகின்ற மொட்டையான தலையினின்றும் நீர் ஒழுக, என் இளமைக் காலத்தில் உடுத்த அழகிய தழையாக இருந்த சிறிய வெண்மையான ஆம்பலில் உண்டாகும் அல்லி அரிசியை உண்ணும், கழித்த அணிகலன்களையுடைய கைம்மை மகளிர் போல், கணவன் இறந்த பின்னர் வாழ்வதை எண்ணி, யானும் இங்கு உயிர் வாழ்வது என்பது அதைவிட அரிதாகும்.

### 9.11. பயிற்சி வினா

1.கையறு நிலை - துறையை விளக்குக.

### 9.12. பொருளறிக

ஐ – அழகு, திருகி – முறுகி, செம்பியன் - சிபிச் சக்கரவர்த்தி, கராஅம் - முதலை, கதூஉம் - பற்றும், புரிசை – மதில், வம்பு – முகபடாம், செருவம் - போர்க்களம், கறை – உரல், கோல் - துலாக்கோல், எயில் - கோட்டை, தூங்கு தல் - தங்குதல், சமம் - போர்,

எழு – கணைய மரம், வாடா வஞ்சி – வஞ்சி நகர், ஓடை – நெற்றிப்பட்டம், பூட்கை – கொள்கை, வானவன் - சேரன், தெவ்வர் - பகைவர், படப்பை – தோட்டம், செற்றம் - மனக்கோபம், செயிர்த்தல் - கோபம் கொள்ளுதல், பொலம் - பொன், அமர் - போர், தும்பி – வண்டு, குரால் - கூகை, அல்லி – அரிசி.

**9.13. மேலும் படித்தறிக..**


1. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ) - சங்க இலக்கியம்
எட்டுத்தொகை
மூலமும் தெளிவுரையும்
தொகுதி 1
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை 600 108

2. புலவர் அ.மாணிக்கனார் - புறநானூறு
மூலமும் உரையும்
வர்த்தமானன் பதிப்பகம்
சென்னை – 600 017
1999

குறிப்பு

# பிரிவு-3

## கூறு 10 :பதினெண் கீழ்க்கணக்கு–திருக்குறள்

**10.பாடஅமைப்பு:**

**10.1. அறிமுகம் - பதினெண்கீழ்க்கணக்கு (கி.பி 250 – 600)**
**10.2. நோக்கம்**
**10.3. திருக்குறள்**
**10.4 .திருக்குறள் அமைப்பு**
**10.5. திருவள்ளுவர்**
**10.6. அறத்துப்பால்**
**10.7. பொருட்பால்**
**10.8. இன்பத்துப்பால்**
**10.9. நிறைவாக**
**10.10. சோதித்தறியும் வினாவிடைகள்**
**10.11. பயிற்சி வினா**
**10.12. பொருளறிக**
**10.13. மேலும் படித்தறிக..**

### 10.1.அறிமுகம் - பதினெண்கீழ்க்கணக்கு (கி.பி 250 – 600)

அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையோ, அன்றி ஒன்றையோ, ஐந்தோ அல்லது அதனினும் குறைந்த அடிகளிலோ வெண்பா யாப்பில் விளம்புவதாம். பன்னிரு பாட்டியல் இதற்கு இலக்கணம் பகர்கிறது:

அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி யவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும். (248)

கணக்கு – நூல், கீழ் - சிறிய என்பதாம் (தாழ்ந்தது என்பதாகாது). தொல்காப்பியரும் 'அம்மை' எனும் வனப்பில் அமைக்கின்றார்.

"சின்மென் மொழியாற்றாய பனுவலின்
அம்மை தானே அடிநிமிர்பு இன்றே" (செய்:235)

கீழ்க்கணக்கு நூல்கள் இன்னன்ன என்பதை,

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்

பால்கழுகங் கோவை பழமொழி மாமூலம்
இந்நிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு’ எனப்

குறிப்பு

பழம் பாட்டொன்று பதினெட்டாகப் பேசுகிறது.

கீழ்க்கணக்கு, தொகையால் ஒன்று. வகையால் பதினெட்டு. பாடியோர் பதின்மூவர். காலத்தால் இடத்தால் வேறுபட்டவர்கள், சமயத்தால் குலத்தால் மாறுபட்டவர்கள். அகம் பற்றியன 6, புறம் பற்றியன 12, அதிலும் அறம் பற்றியன 11, போர் பற்றியது 1. இதனைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பெயரோ காலமோ தெரியவில்லை. பதினெட்டில் ஒரு மறை. இரு நானூறு, மும்மருந்து, நானாற்பது, ஐயைந்திணை, மணிமொழிக் கோவை உள. அறம், திணை, காலம், இடம், மருந்து எனும் ஐந்திறத்தனவாம்.

கீழ்க்கணக்கு நூல்கள் மேற்கணக்கு நூல்கள் போல் செறிவும், நுட்ப திட்பமும் கொண்டு வாழ்வு நெறி காட்டும் வளமையன. கீழ்க்கணக்கில் முக்காற் பகுதி ஒழுக்கம் உணர்த்துவன. இவற்றில் பெரும்பாலன சமணர் செய்தவை. அதனைப் பின்பற்றித் தமிழ்ச் சமயங்கள் நீதி நூல்கள் இயற்றின. இவ்வற நூல்களை இலக்கிய நூல்களாகக் கொண்டு இலக்கிய வரிசையில் வைத்த சிறப்பு தமிழுக்கே உரியது. வேறெம் மொழியிலும் இத்திறம் இல்லை. அற நூல்கள் இயற்றுவதனை விளையாட்டாகப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர் தமிழர் எனப் போப் ஐயர் போன்றோர் போற்றுமளவிற்கு நீதி நூல்கள் மிகுதியாக உள்ளன. தமிழர் சால்பும், உணர்வொழுக்கங்களின் உயர்வும் எடுத்தோதும் ஒளி விளக்கங்களாக இவை ஒளிர்கின்றன. அற நூல்கள் ஒழுக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஓது முறை, பிற்காலக் கோவை போன்ற அகப்பொருட் பிரபந்தங்கட்கு வழிகாட்டியாக விளங்குகிறது

### 10.2. நோக்கம்

இன்று தமிழில் உள்ள நூல்களிலேயே திருக்குறள்தான் உலகப் புகழ்பெற்ற நூலாக விளங்குகிறது. உலக மக்கள் அனைவரும் திருக்குறளைப் போற்றுகின்றனர். அதில் உள்ள உயர்ந்த

குறிப்பு

கருத்துக்களைப் பாராட்டுகின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளில் உள்ள பல அறங்கள் இன்றைக்கும் பொருந்துவனவாயிருப்பது இதற்கொரு காரணம். எனவே திருக்குறளை மாணவர்கள் அனைவரும் கற்று அதன்படி வாழ வழி செய்வதே நோக்கமாகும்.

## 10.3. திருக்குறள்

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலே தலைசிறந்து விளங்குவது திருக்குறள். இந்நூல் வரிசையால் முப்பால் என்ற பெயரால் திருக்குறள் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் வரிசையிலே முதலில் தோன்றியது திருக்குறள்.

அன்றியும் திருக்குறளின் பெருமைக்கு மற்றொரு சிறந்த காரணம் உண்டு. இந்நூலிலே கூறப்படும் கருத்துக்கள் உலக மக்கள் அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடியவை. இந்நூல் குறிப்பிட்ட ஒரு மதத்தினர்க்கோ, ஒரு இனத்தினர்க்கோ, ஒரு நாட்டினர்க்கோ, ஒரு மொழியினர்க்கோ என்று செய்யப்படவில்லை. மனித சமூகம் முழுவதற்கும் உலக மக்கள் எல்லோருக்கும் பொதுவாகச் செய்யப்பட்டதாகும். இதனாலேயே இன்று திருக்குறள் உலகப் பொது நூல் என்று கொண்டாடும்படி சிறந்து விளங்குகிறது.

தமிழிலே முதன் முதல் தோன்றிய நீதி நூல் திருக்குறள்தான். வட மொழியிலே ஸ்மிருதிகள் (சமூக வாழ்க்கை தொடர்பான கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங்களும் சேர்ந்து ஸ்மிருதி என்னும் பெயர் பெறுகிறது.) பல உண்டு. அவை மக்கள் இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டும், இன்னின்ன காரியங்களைச் செய்யக்கூடாது என்று கட்டளையிடுகின்றன. அந்நூல்களிலே, இல்லறத்தான் கடமை, துறவிகளின் கடமை, அரசியல் அறங்கள் முதலியவை கூறப்படுகின்றன. அவை போன்ற நூல் தமிழிலே திருக்குறளுக்கு முன் ஒன்றேனும் இல்லை.

திருக்குறளை வட மொழியிலேயுள்ள ஸ்மிருதிகளுக்கு ஒப்பிடலாம். ஆனால் ஒரு வகையிலே அவற்றை விட உயர்ந்து நிற்கின்றது திருக்குறள். ஸ்மிருதிகளில் கூறப்படும் நீதிகள் அனைத்தும் வருணாஸ்ரம தருமத்தை அடிப்படையாகக் கொண்டவை. சாதிக்கொரு

நீதி கூறுவன. திருக்குறளோ மனித சமுதாயத்தை ஒன்றெனக் கருதி, மக்கள் அனைவருக்கும் பொதுவான நீதிகளையே கூறுகின்றது. இதுதான் திருக்குறளுள்ள தனிச்சிறப்பு.

குறிப்பு

திருக்குறளின் மாண்பைக் காட்ட அதற்கு அமைந்திருக்கும் பெயர்களே போதும். திருக்குறளுக்கு ஒன்பது பெயர்கள் அமைந்திருக்கின்றன. வேறு எந்த அற நூல்களுக்கும் இத்தனை பெயர்கள் இல்லை.

1.திருக்குறள், 2.உத்தரவேதம், 3.திருவள்ளுவர், 4.பொய்யாமொழி, 5.வாயுறை வாழ்த்து, 6.தெய்வ நூல், 7.பொதுமறை, 8.முப்பால், 9.தமிழ் மறை இவையே திருக்குறளைக் குறிக்கும் ஒன்பது பெயர்கள்.

சீரார் திருக்குறள் உத்தர
வேதம், திருவள்ளுவர்
பேரார் பொய் யாமொழி
வாயுறை வாழ்த்துப, பெருந் தெய்வநூல்,
ஊரார் பொதுமறை, முப்பால்
தமிழ்மறை, ஒன்பதும் நல்
காராளர் கற்றுணர் செய்யுட்கு
நாமங்கள் கார்குழலே

இப்பழம் பாட்டினால் அவ்வொன்பது பெயர்களையும் காணலாம்.

## 10.4. திருக்குறள் அமைப்பு

திருக்குறள், குறள் வெண்பாக்களால் அமைந்தது. இரண்டே அடிகளால் அமைந்த ஒருவகை வெண்பாவுக்குக் குறள் வெண்பா என்று பெயர். பெரிய செய்யுட்களை விடச் சிறிய செய்யுட்கள் மக்கள் மனதிலே அப்படியே ஒட்டிக்கொள்ளும்.திருக்குறளிலே ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்கள் அமைந்திருக்கின்றன.

இவை பத்துப் பாடல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பத்துப்பாடல்கள் கொண்டது ஒரு அதிகாரம். அவை நூற்று முப்பது மூன்று அதிகாரங்களாகக் ˙ காட்சியளிக்கின்றன.

குறிப்பு

ஒவ்வொரு அதிகாரத்திற்கும் தலைப் பெயர்கள் உண்டு. "1.கடவுள் வாழ்த்து, 2.வான் சிறப்பு, 3.நீத்தார் பெருமை, 4.அறன் வலியுறுத்தல், 5.இல்வாழ்க்கை, 6.வாழ்க்கைத் துணைநலம், 7.மக்கட்பேறு, 8.அன்புடைமை" என்று இவ்வாறு 133 அதிகாரங்களுக்கும் தலைப்பெயர்கள் உண்டு.

திருக்குறள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால்தான் இதற்கு முப்பால் என்று பெயர். முதற்பகுதி அறத்துப்பால். இதில் இல்லறம், துறவறம் இரண்டைப் பற்றியும் முப்பத்தெட்டு அதிகாரங்களில் கூறப்படுகின்றன.

இரண்டாவது பகுதி பொருட்பால். இதிலே, அரசாள்வோர்க்கு வேண்டிய தகுதிகள், அமைச்சருக்கு வேண்டிய தகுதிகள், அரசாங்கத்திற்கு வேண்டிய அங்கங்கள், பொருளீட்ட வேண்டிய முறை, அரசாட்சியின் கடமை, குடிமக்களின் கடமை ஆகிய அனைத்தும் வலியுறுத்தப்படுகின்றன. எழுபது அதிகாரங்களில் இச்செய்திகள் கூறப்படுகின்றன.

மூன்றாவது பகுதி காமத்துப்பால். இதிலே பண்டைத் தமிழர்களின் குடும்ப வாழ்க்கை முறையைப் பற்றிக் கூறப்படுகின்றது. ஒரு ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்வது, அவர்கள் உள்ளம் ஒன்றுபட்டுக் காதலனும், காதலியுமாய் மறைந்து வாழ்வது, பிறகு அவர்கள் எல்லோரும் காண மணம் புரிந்து கொண்டு இல்லறம் நடத்துவது. இதுவே பழந்தமிழர் வாழ்க்கை முறை. இப்பண்பாட்டையே களவியல், கற்பியல் என்று இரண்டு பகுதியாகப் பிரித்துக் கூறுகின்றது. காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் இருபத்து ஐந்து.

இவ்வாறு அமைந்துள்ள திருக்குறளிலே, வள்ளுவர் தம் காலத்திலிருந்த எல்லாப் பொருள்களைப் பற்றியும் விளக்கியிருக்கின்றார். இவ்வுண்மையை,

"எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"

என்று ஒரு புலவர் பாராட்டிப் பாடியிருக்கின்றார்.

மற்றொரு புலவர், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் படித்தால் போதும். சிறந்த தமிழ்ப் புலவராகி

விடலாம். மற்றொருவரிடத்திலே வேறொரு நூலையும் பாடங் கேட்க வேண்டியதில்லை' என்று திருக்குறளைப் போற்றியிருக்கின்றார்.

குறிப்பு

திருக்குறளைப் போன்ற அதிகார அமைப்பும் பால் அமைப்பும் கொண்ட நூல் திருக்குறளுக்கு முன் வேறு ஒன்றுமேயில்லை.

## 10.5. திருவள்ளுவர்

திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். அவர் ஒரு மாபெரும் புலவர். பல நூல்களையும் கற்றறிந்தவர். உலகச் செய்திகள் பலவற்றையும் உணர்ந்தவர். அவர் காலத்திலிருந்த சமுதாய நிலை, அரசியல் அமைப்பு எல்லாவற்றையும் நன்றாக அறிந்தவர். மனித சமுதாயம் நன்றாக வாழ வேண்டும் என்னும் அன்பும் கருணையும் உள்ளவர். தனித்தனி ஆண், பெண்கள் அனைவரும் மனிதத் தன்மையுடன் ஒழுக்கங் குன்றாமல் உயர்ந்த நிலையிலே வாழவேண்டும் என்னும் கருத்துள்ளவர்.

திருவள்ளுவருடைய பிறப்பு வளர்ப்பு வரலாற்றைப் பற்றி இறுதியாக ஒன்றும் கூற முடியவில்லை.

யாளிதன் என்னும் அந்தணன், ஒரு சண்டாளப் பெண்ணை மணந்து திருவள்ளுவர் முதலிய எழுவரைப் பெற்றான் என்பது ஒரு கதை. இது ஞானாமிர்தம் என்னும் நூலில் காணப்படுகின்றது.

பகவன் என்னும் அந்தணன், ஆதி என்னும் புலைச்சியை மணந்தான். ஏழு மக்களைப் பெற்றான். அவன் ஆதியுடன் யாத்திரை போகும்போது வழியிலேயே மக்களைப் பெற்றான். ஒவ்வொரு பிள்ளையையும் பிறந்த விடத்திலே அப்படி அப்படியே போட்டுவிட்டு ஆதியும், பகவனும் போய்விட்டனர். அப்பிள்ளைகளைப் பார்த்தவர்கள் எடுத்து வளர்த்தனர்.

இவ்வாறு பிறந்த பிள்ளையை வள்ளுவர். அவர் மயிலாப்பூரில் போடப்பட்டார். ஒரு வள்ளுவன் அவரை எடுத்து வளர்த்தான். அதனால் வள்ளுவர் என்று பெயர் பெற்றார். இது ஒரு கதை. இதற்குக் கபிலர் அகவல் என்னும் பிற்காலத்துச் சிறு நூலே ஆதாரம்.

திருவள்ளுவர் மதுரையிலிருந்தவர் என்று திருவள்ளுவமாலையில் ஒரு செய்யுளில் காணப்படுகின்றது.

திருவள்ளுவர், வள்ளுவர் மரபைச் சேர்ந்தவர்தான். வள்ளுவர் மரபைச் சேர்ந்தவர் என்று இகழ்ந்துரைப்பவன் அறிவற்றவன். அவர்

குறிப்பு

அறிவாளி, ஒழுக்கத்தால் உயர்ந்தவர், ஆதலால் அவரைப் போற்றுவதே அறிஞர் கடமை என்ற கருத்து திருவள்ளுவ மாலைச் செய்யுள் ஒன்றிலே காணப்படுகின்றது.

இவ்வாறு திருவள்ளுவர் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. அவருடைய உண்மை வரலாற்றை அறிவதற்கு இடமில்லை.

அவர் பிறப்பு வளர்ப்பு எப்படியாயினும், அவர் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தெய்வப் புலவர் என்ற பெயர் பெற்று வாழ்கின்றார். திருவள்ளுவரை நான்முகன் என்று போற்றியிருக்கின்றனர். அவரைப் பொய்யாமொழியார் என்று பாராட்டியிருக்கின்றனர். திருக்குறளைத் தமிழ் வேதம் என்று கொண்டாடி வருகின்றனர். திருக்குறளையும் பொய்யாமொழி என்று பாராட்டினர். பாராட்டுகின்றனர்.

திருவள்ளுவர் தமிழ்நாட்டிலே பிறந்தவர். சாமி மத பேதம் பாராட்டதவர். மனித சமுதாயத்தையும், உலகையும் ஒன்றாகக் கருதிய ஒரு உத்தமத் தமிழ்ப் பெரியார். இதுதான் நாம் அவரைப் பற்றி அறியும் உண்மை.

**10.6. அறத்துப்பால்**

அறத்துப்பால் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்திலிருந்து தொடங்குகிறது. உயர் ஞானமும் வரம்பிலாற்றலும் உடைய கடவுளைத் தொழுது ஞானத்தையும் ஆற்றலையும் பெற்று எண்ணிய பணியை இனிதே முடித்திட விரும்பிக் கடவுளை வாழ்த்துதல்.

காணப்படுதலைக் கொண்டு காணப்படாத காரணங்களைக் கண்டுபிடிக்கக் கடவுள் வாழ்த்து துணை செய்யும்.

உயிர் இன்ப துன்பங்களிலிருந்து விடுதலை பெறுதலே பிறவிக்கடல் நீந்துதல்.

'வைகுந்தம் சொர்க்கம் எல்லாம் இந்த மானுட உடம்பிலேயே' என்ற வள்ளலார் நெறி அறிக, உய்த்துணர்க

இவ்வறத்துப்பாலில் இல்லறவியலுக்கான அறங்கள், துறவறவியலுக்கான அறங்கள், ஊழியலுக்கான அறங்கள் கூறப்பட்டுள்ளன. வாழ்க்கைத் துணைநலம் என்பது இல்லறவியல் என்னும் பகுதியில் அடங்குவதாகும்.

**வாழ்க்கைத் துணைநலம் (6)**

குறிப்பு

தலைமகன் ஒருவனுடைய வாழ்க்கைக்குத் துணையாக அமைந்த நலம் பயக்கும் பெண்ணின் இயல்புகளையும் கடமைகளையும் கூறுவது. நல்ல துணை பயன் தருவது முடிவாதலின் வாழ்க்கைத் துணைநலம் என்றே கூறினார். ஒவ்வோர் ஆடவனின் புகழ்மிக்க வாழ்க்கையின் பின்னணியில் ஒவ்வொரு பெண் இருக்கிறாள் என்ற உரை உடன் எண்ணத்தக்கது.

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
   வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

மனையற வாழ்க்கைக்குரிய குணநலன்களைப் பெற்றுத் தன்னைக் கொண்ட தலைவனின் வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கையை நடத்துகிறவள் வாழ்க்கைத் துணை.

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
   எனைமாட்சித் தாயினும் இல்

வாழ்க்கைத் துணைநலமாக அமைந்தவனிடம் மனையறத்திற்குரிய சிறந்த குணநலன்கள் இல்லாமற் போயின், வாழ்க்கை எத்துணைச் சிறப்புக்களைப் பெற்றிருப்பினும் இல்லாதது போலவேயாகும். பொருளுடைமை முதலிய சிறப்புகள் பயனுடையவாதல், வாழ்க்கைத் துணை நலத்தின் சிறப்பினாலேயாம்.

3. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
   இல்லவள் மாணாக் கடை

வாழ்க்கைத் துணைநலமாகிய இல்லாள் பெருமைக்குரிய குணநலன்களைப் பெற்று விளங்கினால் இல்லாதது எது? அவள் பெருமைக்குரிய தகுதிகள் உடையவளாக இல்லாது போயின் உள்ளது எது? இருப்பதும் இல்லாததும் பொருள்களின் பாற்பட்டனவல்ல. இவற்றோடு தொடர்பு கொண்டவர்களின் குணநலன்களைப் பொருத்தனவேயாகும்.

4. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
   திண்மையுண் டாகப் பெறின்

கற்பென்று சிறப்பித்துக் கூறப்பெறும் உறுதிப்பாட்டைப் பெறின் பெண்ணை விடப் பெருமைக்குரியது எது? எதுவும் இல்லை என்பது கருத்து.

குறிப்பு

கற்புடையராதல் சிறப்பே. ஆயினும் அக்கற்பொழுக்கம் திண்மையுடையதாக உறுதியும் ஆற்றலும் உடையதாக வளர்ந்து இடர்கள் வந்துற்ற போது போராடுதல் திண்மையாகும். இது மிகவும் விழுமியது.

5. தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

தெய்வத்தைத் தொழாது கணவனைத் தொழுது எழுபவள் பெய்யெனப் பெய்யும் மழை போல்வாள். தேவையின்போது பெய்யும் மழை தப்பாது பயன் தருதல் போல் கணவனையே தொழுது வாழ்பவள் பயன் தரத்தக்கவளாக இருப்பாள்.

6. தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

கற்பொழுக்கத்தில் தன்னைக் காத்துக் கொள்வதுடன் தன்னுடைய கணவனையும் பேணிக் காப்பாற்றுபவளும் சோர்விலாதிருப்பவளும் பெண் தற்காத்தல் - கற்பு. உயிரினைச் சார்ந்த ஒழுக்கம் - பிறர் காத்தல் அரிது என்பதால் 'தற்காத்து' என்றார்

தற்கொண்டான்பேணல்: காதலின்பம் குறைபடாதவாறு ஒழுகி வழங்குதல் வழி தன் கணவனின் கற்புக்குத் துணையாய் அமைதல்.

சொற்காத்தல் - உண்மையும் இல்லாமையும் குறைகளும் குற்றங்களும் ஊடலும் மற்றவர் அறியாதவாறு பாதுகாத்தல்.

சோர்விலாள்: குடும்பப் பாதுகாப்புப் பணி மிகப் பெரிது. சோர்வின்றி அனைத்துத் துறைகளையும் கண்காணித்துச் செய்தல்.

7. சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை

மகளிரின் கற்பொழுக்கமே தலையாயது. சிறைப்படுத்திக் காக்கும் காப்பால் யாதொரு பயனுமில்லை.

8. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு

பெண்மைக்குரிய சிறப்பியல்புகளை அடைந்து சிறப்புறும் பெண்ணை ஒருவர் வாழ்க்கைத் துணைநலமாகப் பெறின் இன்ப உலகினை எய்துவர்.

9. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை

புகழுக்குரியவளாக வாழ்க்கைத் துணைநலம் அமையாத வழி தலைமகனுக்கு அவனை இகழ்வார் முன் பெருமிதம் இல்லை.

10. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

மனைவியின்குணநலன் மனையறத்திற்கு நன்மை. நன்மக்களைப்பெறுதல் அம் மனையறத்திற்கு நல்ல அணிகலம். நன்மக்கள் - காதலர்களின் குணச் சிறப்புக்களின் வழியில் நன்மக்கள் அமைவதாம்.

**10.7..பொருட்பால்**

அரசும் சமுதாயமும் மனித நிறைவுக்கு வழிகோலும் முறையைச் சொல்கின்றன. மக்கள் யாவரும் சமம். மனிதரிடையே ஏற்றத்தாழ்வு யாதுமில்லை. யாரும் எப்பணியையும் மேற்கொண்டு வாழ்வு நடத்தினாலும் எதுவும் ஒடுக்கப்படவில்லை. எல்லா வினைகளும் அறத்தின்பாற் பட்டனவாக இருத்தல் வேண்டும். இது பொருட்பால் கூறும் கருத்தின் சாரம்.

பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் ஆகிய பகுதிகளைக் கொண்டதாகும். அரசியல் 25 அதிகாரங்களையும், அமைச்சியல் 10 அதிகாரங்களையும், அரணியல் 2 அதிகாரங்களையும், கூழியல் 1 அதிகாரத்தையும், படையியல் 2 அதிகாரங்களையும், நட்பியல் 17 அதிகாரங்களையும், குடியியல் 13 அதிகாரங்களையும் உள்ளடக்கி மொத்தம் 70 அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

இதில் அரசியல் என்னும் அதிகாரத்தில் அறிவுடைமை இடம்பெற்றுள்ளது.

**அறிவுடைமை (43)**

ஒருவனின் வளர்ச்சிக்கு அறிவுடைமையே அடிப்படை. இந்த அறிவு மூன்று வகைப்படும். 1.இயல்பாகப் பெற்றுள்ள தன்னறிவு. 2.கல்வியின் மூலம் பெறும் அறிவு. 3.கேள்வியின் மூலம் பெறும் அறிவு எனப் பெறும். கல்வியறிவு கேள்வியறிவை விட உயர்ந்தது, பயனுடையது. பட்டறிவு வாழ்க்கையில் தோன்றுவது. வாழ்க்கையை வழி நடத்தக் கூடிய ஆற்றல் பட்டறிவுக்கே உண்டு. கற்கும் நூல்களும் பட்டறிவுடையோர்களால் இயற்றப் பெற்றிருப்பின் பயன் உண்டு.

குறிப்பு

அதுபோலவே வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்களுடைய சொற்களும் பட்டறிவின் பாற்பட்டவையாக இருக்கும். இவைகளால் பயன் உண்டு. ஆயினும் கற்ற நூற்கருத்தும் சான்றோர்பால் கேட்ட கேள்வியும் வாழ்க்கையில் நடைமுறைக்கு வரும் பொழுதே அறிவுடைமையைப் பெற முடியும்.

அறிவு என்பது நோக்கம், அறிதல், ஆய்வு செய்தல் ஆகியவை வழியாக அடையக்கூடியது. கல்வி, கேள்விகளின் மூலம் பெறும் அறிவு தகவலறிவு (Knowledge). தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளை உய்த்தறிந்து தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளும் அறிவுச் செயல்பாட்டுக்குப் புத்திக் கூர்மை (Intelligence) என்று பெயர். அறிவு வளர்ந்து செழித்த நிலையில் அறிவு மயமாகி வாழ்தல் ஞானம் (Wisdom). இந்த கடைசி நிலையே வாழ்க்கையின் நோக்கம் மற்றும் பயன் ஆகும்.

. 1. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்

ஒருவருக்கு அழிவு வராமல் காக்கும் கருவி அறிவு. அறிவு, பகைவராலும் அழிக்க முடியாத உள்ளரணாகும். அறிவு மனிதரைத் துன்பத்திலிருந்து காக்கும் கருவி.

2. சென்ற இடத்தால் செவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு

மனத்தை, அது சென்றவிடத்திலெல்லாம் செல்லவிடாது தீய வழியிலிருந்து மனத்தை இழுத்து நல்ல வழியில் செலுத்துவது அறிவாம்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

எப்பொருள் எவரெவர் சொல்லக் கேட்பினும், அப்பொருளின் உண்மையான பொருளைக் காணவல்லது அறிவு. “யார் யார் வாய்க் கேட்பினும்” என்றதால் சொல்லுபவரின் தகுதி பற்றி ஆராயாமல் அல்லது ஏற்காமல், கேட்கப்படும் செய்தி பற்றியே முடிவு கொள்க என்று உணர்த்தியவாறு.

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு

குறிப்பு

பிறர்க்குச் சொல்லும்பொழுது, அவர் ஆராயத் தக்க வகையில்எண்ணத்தைத் தூண்டி, அவர் கொள்ளத்தக்க வகையில் எளிமையாகச் சொல்லி, தாம் பிறர்வாய்க் கேட்கும்பொழுது நுண்பொருளை அறிவது அறிவு.

5. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு

உலகம் தழுவியது நல்லறிவு. சார்புகள் கருதியும், நன்மை – தீமை கருதியும் தளர்தலுமின்றி ஒரு நிலையாய் நிற்பது அறிவு. அறிவு உலகம் தழுவியது. அறியாமை சிற்றெல்லையுட் சுழல்வது.

6. எவ்வ துறைவது உலகம் உலத்தோடு
அவ்வ துறைவது அறிவு

உலகம் எந்த நிலையில் நின்று ஒழுகுகின்றயதோ, அதே நிலையில் நின்று உலகத்தோடியைந்து ஒழுகுதல் அறிவு.

7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அ∴தறி கல்லா தவர்

அறிவுடையார் நடக்க வேண்டியதை அறிந்து செய்வர். அறிவில்லாதவர் அதனை அறிய ஆற்றலில்லாதவர். எதிர்வருங் காலத்தில் நடக்க வேண்டியவற்றை அறிந்து செய்தலே அறிவுடைமை. சென்ற காலத்திய நிகழ்வுகளைக் குறித்து மகிழ்வோ, துன்பமோ அடைதல் அறிவுடைமை யல்ல.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமை பேதைமையாம். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடையார் செயல். போரினால் விளையும் துன்பத்திற்கு அஞ்சி அறவழி மேற்கொள்வது அறிவுடைமை. போரினால் விளையும் இழப்புகள். துன்பங்கள் பற்றிக் கவலைப்படாமல் துப்பாக்கி தூக்குவது அறிவிலார் தொழில்.

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்

எதிர்வரும் காலத்தில் வரக்கூடியதை முன்னரே அறிந்து தம்மைக் காத்தக் கொள்ளும் அறிவுடையோர்க்கு, அவர் அஞ்சி நடுங்கக்கூடிய துன்பம் யாதொன்றும் இல்லை. “அதிர வருவதோர் நோய்” என்றதால்

துன்பம் வரலாம். அது எதிர்பார்த்து இருந்த ஒன்று. ஆதலால் தாக்காது என்பது கருத்து.

குறிப்பு

10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

அறிவு உடையார் எல்லாம் உடையார். அறிவு இல்லாதவர் பிறவெல்லாம் பெற்றிருந்தாலும் ஒன்றும் பெறாதவரேயாவர். பொருள் முதலியன பயனுற, அறிவு தேவை என்பதறிக.

### 10.8. இன்பத்துப்பால்

இன்பத்துப்பால் தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையையும், கற்பு வாழ்க்கையையும் கூறுகிறது. இது களவியல் கற்பியல் என்ற இரு பகுதிகளை உள்ளடக்கியது. களவியல் 7 அதிகாரங்களையும், கற்பியல் 18 அதிகாரங்களையும் உடையது. மொத்தம் இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்கள் காணப்படுகின்றன.

இதில் பிரிவாற்றாமை என்பது கற்பியலில் உள்ள அதிகாரமாகும்.

**பிரிவாற்றாமை (116)**

பிரிவாற்றாமை என்பது தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் சூழலில் நிகழ்வதாகும். அப்பொழுது வருந்தும் தலைவியின் மனநிலையை விளக்குவதாக இவ்வதிகாரம் விளங்குகிறது.

1. செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை

நீ பொருள் தேடிச் சென்று விரைவில் வருவேன் என்ற சொல்லை அப்போது உயிருடன் இருந்தால் அந்தத் தலைவிக்குக் கூறுவாயாக.

2. இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு

இணைந்து வாழும் இந்நிலையிலும் தலைவர் பிரிவார் என்பதை நினைக்கும் போதே அச்சம் உண்டாகிறது.

3. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்

என் தலைவர் ஒரு காரணம் பற்றிப் பிரிதல் கூடும். ஆகவே பிரியேன் என்று சொன்னால் எப்படி என்னால் நம்ப முடியும்.

4. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு

குறிப்பு

பிரியேன் என்று கூறியவர் இப்போது என்னை விட்டுப் பிரிந்தால் அவரை நம்பியவர் மேல் குற்றம் உண்டோ? இல்லை.

5. ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு

என் தலைவர் பிரிவைத் தடுத்து நிறுத்துங்கள்! மீண்டும் வந்து அன்பு செய்வார் என்பது வீண் ஆசையாகும்.

6. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை

என்னைப் பிரியத் துணிந்தார், இரக்கமற்றவர், மீண்டும் வந்து அன்பு செய்வார் என்பது வீண் ஆசையாகும்.

7. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை

என் தலைவர் பிரிந்து போனதை என் கை வளையல்கள் கழன்று விழுவதன் மூலம் ஊரார் அறிந்திடுவர்.

8. இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு

பெண்களுக்குத் தோழியர் இல்லாத இடத்தில் வாழ்வது துன்பம். தலைவரைப் பிரிந்து வாழ்வது அதனினும் துன்பம்.

9. தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ

நெருப்பானது தன்னைத் தொட்டால் தான் சுடும். காதல் நோயோ தன்னை விட்டு விலகினாலும் சுடும். அந்த தன்மை நெருப்புக்கு உண்டா?

10. அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்

பிரிவுக்கு உடன்பட்டும், பிரிவுத் துன்பத்தை நீக்கியும், அப்பிரிவினைப் பொறுத்துக் கொண்டும் இருந்து வாழும் மகளிர் சிலர் உண்டு. நான் அவ்வாறு உயிர் வாழ மாட்டேன்.

**10.9. நிறைவாக**

ஆதலால்தான், மக்கள் பின்பற்றி நடக்க வேண்டிய நல்லுரைகளை நவில வந்த வள்ளுவர், சிறிய குறள் வெண்பாக்களால் தமது நூலை இயற்றினார். இதுவே அவரது உயர்ந்த அறிவுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை இதன்மூலம் அறியலாம்.

**10.10. சோதித்தறியும் வினாவிடைகள்**

குறிப்பு

1. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

1.திருக்குறள், 2.உத்தரவேதம், 3.திருவள்ளுவம், 4.பொய்யாமொழி, 5.வாயுறை வாழ்த்து, 6.தெய்வ நூல், 7.பொதுமறை, 8.முப்பால், 9.தமிழ் மறை இவையே திருக்குறளைக் குறிக்கும் ஒன்பது பெயர்கள் ஆகும்.

2. திருக்குறளின் பா வகைகையக் கூறுக.

திருக்குறள், குறள் வெண்பாக்களால் அமைந்தது. இரண்டே அடிகளால் அமைந்த ஒருவகை வெண்பாவுக்குக் குறள் வெண்பா என்று பெயர்.

3. வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தின் பொருளை விளக்குக

தலைமகன் ஒருவனுடைய வாழ்க்கைக்குத் துணையாக அமைந்த நலம் பயக்கும் பெண்ணின் இயல்புகளையும் கடமைகளையும் கூறுவது. நல்ல துணை பயன் தருவது முடிவாதலின் வாழ்க்கைத் துணைநலம் என்றே கூறினார். ஒவ்வோர் ஆடவனின் புகழ்மிக்க வாழ்க்கையின் பின்னணியில் ஒவ்வொரு பெண் இருக்கிறாள் என்பதை விளக்குவது இவ்வதிகாரமாகும்.

4. வள்ளுவர் கூறும் அறிவுடையார் அறிவிலார் பற்றி விளக்குக.

வள்ளுவர் பொருட்பாலில் அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் அறிவுடையாருக்கும் அறிவில்லாதார்க்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டியிருக்கிறார்.

அறிவு என்பது நோக்கம், அறிதல், ஆய்வு செய்தல் ஆகியவை வழியாக அடையக்கூடியது. கல்வி, கேள்விகளின் மூலம் பெறும் அறிவு தகவலறிவு (Knowledge). தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளை உய்த்தறிந்து தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளும் அறிவுச் செயல்பாட்டுக்குப் புத்திக் கூர்மை (Intelligence) என்று பெயர். அறிவு வளர்ந்து செழித்த நிலையில் அறிவு மயமாகி வாழ்தல் ஞானம் (Wisdom). இந்த கடைசி நிலையே வாழ்க்கையின் நோக்கம் மற்றும் பயன் ஆகும். ஆனால் அறிவிலார் இத்தகைய நிலையினை அடையமாட்டார்கள் என்பதை 4 குறட்பாக்களில் வெளிப்படுத்துகிறார்.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

அறிவுடையார் நடக்க வேண்டியதை அறிந்து செய்வர். அறிவில்லாதவர் அதனை அறிய ஆற்றலில்லாதவர். எதிர்வருங்

குறிப்பு

காலத்தில் நடக்க வேண்டியவற்றை அறிந்து செய்தலே அறிவுடைமை. சென்ற காலத்திய நிகழ்வுகளைக் குறித்து மகிழவோ, துன்பமோ அடைதல் அறிவுடைமை யல்ல.

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்

அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமை பேதைமையாம். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடையார் செயல். போரினால் விளையும் துன்பத்திற்கு அஞ்சி அறவழி மேற்கொள்வது அறிவுடைமை. போரினால் விளையும் இழப்புகள். துன்பங்கள் பற்றிக் கவலைப்படாமல் துப்பாக்கி தூக்குவது அறிவிலார் தொழில்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்

எதிர்வரும் காலத்தில் வரக்கூடியதை முன்னரே அறிந்து தம்மைக் காத்தக் கொள்ளும் அறிவுடையோர்க்கு, அவர் அஞ்சி நடுங்கக்கூடிய துன்பம் யாதொன்றும் இல்லை. "அதிர வருவதோர் நோய்" என்றதால் துன்பம் வரலாம். அது எதிர்பார்த்து இருந்த ஒன்று. ஆதலால் தாக்காது என்பது கருத்து.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

அறிவு உடையார் எல்லாம் உடையார். அறிவு இல்லாதவர் பிறவெல்லாம் பெற்றிருந்தாலும் ஒன்றும் பெறாதவரேயாவர். பொருள் முதலியன பயனுற, அறிவு தேவை என்பதறிக.

இவையே வள்ளுவர் கூறும் அறிவுடையாருக்கும் அறிவில்லாதவருக்கும் உள்ள வேறுபாடாகும்.

### 10.11. பயிற்சி வினா

1. திருக்குறளின் சிறப்பை உம் பாடப்பகுதியைக் கொண்டு நிறுவுக

.

### 10.12. பொருளறிக

மாண்பு - குணம், திண்மை – கலங்கா நிலைமை, சிறை – மதிலும் வாயிற் காவலும் முதலாயின, புத்தேளிர் வாழும் - தேவர்கள் வாழும், இகழ்வார் - இகழ்ந்துரைப்பவர், செறு – பகை, நன்றின்பால் -

நன்மையானதில், எண்பொருள் - எளிய பொருள், ஒட்பம் - கூர்மையான அறிவு, ஓம்பு – பாதுகாப்பு.

குறிப்பு

**10.13. மேலும் படித்தறிக..**

1. மு.வரதராசனார் - திருக்குறள்
   தெளிவுரை
   திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
   சென்னை – 600 018
   முதற்பதிப்பு 1949
   மறுபதிப்பு 2008

2. குன்றக்குடி அடிகளார் உரை திருக்குறள் உரை
   கங்கை புத்தக நிலையம்
   சென்னை – 600 017
   2016

## கூறு 11. நான்மணிக்கடிகை

**11. பாடஅமைப்பு:**

**11.1. அறிமுகம்- நான்மணிக்கடிகை**

**11.1.1. நான்மணிக்கடிகை - பெயர்க்காரணம்**

**11.2. நோக்கம்**

**11.3. நூல் இயற்றப்பட்டகாலம்**

**11.4. பா அமைப்பு**

**11.5. விளம்பிநாகனார்**

**11.6. நிறைவாக**

**11.7. சோதித்தறியும் வினாவிடைகள்**

**11.8. பயிற்சி வினா**

**11.9. பொருளறிக**

**11.10. மேலும் படித்தறிக..**

**11.1. அறிமுகம்- நான்மணிக்கடிகை**

குறிப்பு

நான்மணிக்கடிகை பதினெண்கீழக்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனை,

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலைய வாங் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலை யுமாம் கீழ்க்கணக்கு

என்ற வெண்பாப் பாடல் பதினெண்கீழக்கணக்கு நூல்களை வரிசைப்படுத்துகிறது. இதில் இரண்டாவதாகச் சொல்லப்படுவது நான்மணிக்கடிகையாகும். இது ஒரு நீதி நூல். இந்நூல் நூற்றியொரு பாடல்களைத் தன்னகத்தே கொண்டது.

### 11.1.1. நான்மணிக்கடிகை பெயர்க்காரணம்

கடிகை – துண்டு எனும் பொருளது. நான்கு மணிகளின் துண்டுகள் இணைந்த மாலை போல ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு நீதிமணிகள் வரப் பாடியமையின் இப்பெயர் வந்தது. மேலும் இந்நூல் நந்நான்கு வகையான மணிகளாற் கோர்க்கப்பட்ட ஒருவகை அணிகலன் என விரியும் என்றும் இயம்புவர். நன் மக்கள் எக்குடியிலும் பிறப்பர் (6), கல்வியின் பயன் (29), கொலை தீது (94), எருதுடையான் வேளாளன், ஏலாதான் பார்ப்பான் (54) போன்ற பல கருத்துக்கள் வருகின்றன. வடமொழி வாடை வீசுகிறது. எல்லாம் பொருளில் பிறந்து விடும், இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக, வெல்வது வேண்டின் வெகுளிவிடல், தன்னோடு செல்வது வேண்டின் அறம் செய்க, மனைக்கு விளக்கம் மடவாள், மடவாள் தனக்குத் தகைசால் புதல்வர், மனைக்கினிய காதற் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு என்றெல்லாம் இனிய கருத்துக்களை அள்ளித் தரும் தெள்ளிய நூலாகத் திகழ்கிறது.

### 11.2 நோக்கம்

எக்காலத்திற்கும் பொருந்துவனவாக உள்ள நான்கு நான்கு நீதிக் கருத்துக்களை நான்மணிக்கடிகையின் வழி மாணவர்களுக்கு உணர்த்துவதே நோக்கமாகும்.

### 11.3. நூல் இயற்றப்பட்டகாலம்

கி.பி நான்காம் நூற்றாண்டு

### 11.4. பா அமைப்பு



பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் இரண்டு அடி முதல் ஆறடி வரையுள்ள வெண்பாக்களினால் ஆனவை.

#### 11.4.1. விளம்பிநாகனார்

இந்நூலாசிரியர் விளம்பிநாகனார் என்பவராவார். இவர் விளம்பி என்ற ஊரில் பிறந்த நாகனார் என்ற பெயர் உடையவராக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இவர் ஆற்றிய தொழில் காரணமாக இவர் விளம்பிநாகனார் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவாருமுளர். இந்நூலில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இரண்டும் திருமாலைப் பற்றி இருப்பதால் இவர் வைணவ பிரிவைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் இந்நூல் வைணவ இலக்கியம் என்றும் கூறுவாருமுளர். இவர் பெயரை நாயனார், நயினார் என்று கூறி, இந்நூலில்பல இடங்களில் சமண சமயக் கருத்துக்களான பொய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவை வலியுறுத்திக் கூறப்படுவதால் இதன் ஆசிரியர் விளம்பிநாகனார் ஒரு சமணர் என்றும் நான்மணிக்கடிகை சமணர்களின் இலக்கியம் என்று கூறுவாரும் உளர். இக்கருத்தை ஏற்பவர்கள் திருமாலைப் பற்றிய செய்திகள் இரண்டும் இடைச்செருகல் என்று வாதிடுவர். கி.ஆ.பெ விசுநாதன் பதிப்பித்துள்ள மும்மணிகளும் நான்மணிகளும் என்னும் நூலில் கடவுள் வாழ்த்து செய்யுட்கள் இரண்டும் நீங்கலாக நூற்றுநான்கு பாடல்கள் உள்ளன.

1. எள்ளற்க என்றும் எளியரென்று என்பெறினும்
   கொள்ளற்க கொள்ளார்கைம் மேற்பட – உள்சுடினும்
   சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
   கூறல் லவற்றை விரைந்து (3)

எப்போதும் பொருள், வலி ஆகியவற்றால் குறைந்தவர் என்று மற்றவரை இகழ வேண்டா. மிகச் சிறந்ததைப் பெறுவதாயினும் கொள்ளத் தகாதவரின் கைகள் தன் கைகளுக்கு மேம்பட்டு நிற்குமாறு அவரிடம் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாது விடுக. வறிய குடும்பத்தில் பிறந்தவர்களை அவர் செய்கை தம்மை வருத்துவதானாலும் சினம் கொள்ளற்க. சொல்லக் கூடாத சொற்களைச் சொல்லாமல் கைவிடுக.

குறிப்பு

2. பறைபட வாழா அசுணமா உள்ளங்
குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாம் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு (4)

பறையின் ஒலி செவியில் விழுந்தால் அசுண மாக்கள் உயிர் வாழா. அறிவுடையோர் ஊக்கத்துக்குக் குறைவு ஏற்பட்டால் உயிர் வாழ மாட்டார். மரங்கள் நெருங்கிய காட்டில் மூங்கில்களில் நெல் விளைந்த போதே அழிந்து விடும். பல நற்குணங்களாலும் நிறைந்தவன் தன் நிறைவுக்குத் தகாத சொல் உண்டாக உயிர் வாழான்.

3. மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்து
ஏறிய பின்னறிப மாநலம் மாசறச்
சுட்டறிப பொன்னின் நலங்காண்பார் கெட்டறிப
கேளிரான் ஆய பயன். (5)

மணிகளின் தன்மையை அறியும் இயல்புடையவர்கள் அவற்றைத் தூய்மை செய்து அறிவார்கள். குதிரையின் இயல்பை அறிபவர்கள் அதன்மீது சேணம் முதலியவற்றை அமைத்து ஏறிய பின்பு அறிவார்கள். பொன்னின் இயல்பை (மாற்றை) அறிபவர்கள் குற்றம் நீங்க அதைத் தீயில் இட்டுச் சுட்டு அறிவார்கள். சுற்றத்தவரால் உண்டாகும் பயனை அறிபவர்கள் தம் செல்வம் கெட வறுமை வந்து தாழ்ந்த போது அறிந்து கொள்வார்கள்.

## 11.5. நிறைவாக

இந்நிலத்து மன்னுதல் வேண்டின் இசை நடுக, வெல்வது வேண்டின் வெகுளிவிடல், தன்னோடு செல்வது வேண்டின் அறம் செய்க, மனைக்கு விளக்கம் மடவாள், மடவாள் தனக்குத் தகைசால் புதல்வர், மனைக்கினிய காதற் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும் ஓதின் புகழ்சால் உணர்வு என்றெல்லாம் இனிய கருத்துக்களை அள்ளித் தரும் தெள்ளிய நூலாகத் திகழ்வதை மாணவர்கள் இக்கூறின் வழியே அறிகின்றனர்.

குறிப்பு

**11.6. சோதித்தறியும் வினாவிடைகள்**

1. நான்மணிக்கடிகை பெயர்க்காரணம் கூறுக

நான்மணிக்கடிகையின் ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளால் ஆனது. இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றிலும் நான்கு மணியான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. இதனாலேயே இது நான்குவகை மணிகளால் ஆன ஆபரணம் நான்மணிக்கடிகை என்று அழைக்கப்படுகிறது.

2. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்? எக்காலத்தில் இயற்றப்பட்டது?

நான்மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பிநாகனார் ஆவார். கி.பி நான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

3. விளம்பிநாகனார் பற்றிக் குறிப்பு வரைக

இந்நூலாசிரியர் விளம்பிநாகனார் என்பவராவார். இவர் விளம்பி என்ற ஊரில் பிறந்த நாகனார் என்ற பெயர் உடையவராக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இவர் ஆற்றிய தொழில் காரணமாக இவர் விளம்பிநாகனார் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்து கருதுவாருமுளர். இந்நூலில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இரண்டும் திருமாலைப் பற்றி இருப்பதால் இவர் வைணவ பிரிவைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் இந்நூல் வைணவ இலக்கியம் என்றும் கூறுவாருமுளர். இவர் பெயரை நாயனார், நயினார் என்று கூறி, இந்நூலில்பல இடங்களில் சமண சமயக் கருத்துக்களான பொய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவை வலியுறுத்திக் கூறப்படுவதால் இதன் ஆசிரியர் விளம்பிநாகனார் ஒரு சமணர் என்றும் நான்மணிக்கடிகை சமணர்களின் இலக்கியம் என்று கூறுவாரும் உளர்.

4. கூறற்க கூறல்லவற்றை விரைந்து – விளக்குக

எள்ளற்க என்றும் எளியரென்று என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேற்பட – உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து (3)

எப்போதும் பொருள், வலி ஆகியவற்றால் குறைந்தவர் என்று மற்றவரை இகழ வேண்டா. மிகச் சிறந்ததைப் பெறுவதாயினும் கொள்ளத் தகாதவரின் கைகள் தன் கைகளுக்கு

மேம்பட்டு நிற்குமாறு அவரிடம் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாது விடுக. வறிய குடும்பத்தில் பிறந்தவர்களை அவர் செய்கை தம்மை வருத்துவதானாலும் சினம் கொள்ளற்க. சொல்லக் கூடாத சொற்களைச் சொல்லாமல் கைவிடுக.

குறிப்பு

5. யார் யார் உயிர் வாழ மாட்டார்கள் என்று விளம்பிநாகனார் குறிப்பிடுகிறார்?

பறைபட வாழா அசுணமா உள்ளங்
குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாம் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு (4)

பறையின் ஒலி செவியில் விழுந்தால் அசுண மாக்கள் உயிர் வாழா. அறிவுடையோர் ஊக்கத்துக்குக் குறைவு ஏற்பட்டால் உயிர் வாழ மாட்டார். மரங்கள் நெருங்கிய காட்டில் மூங்கில்களில் நெல் விளைந்த போதே அழிந்து விடும். பல நற்குணங்களாலும் நிறைந்தவன் தன் நிறைவுக்குத் தகாத சொல் உண்டாக உயிர் வாழான்.

## 11.7. பயிற்சி வினா

1. நான்மணிக்கடிகை ஒரு நீதி நூல் நிறுவுக.

## 11.8. பொருளறிக

சிறு இல் பிறந்தாரை – வறுமைமிக்க குடியிற் பிறந்தவர்களை, சீறற்க – சினவாதொழிக, அசுணமா – கேகயப் பறவைகள், உரவோர் - அறிவுடையோர், வெதிர் - மூங்கில், மா நலம் - குதிரையின் நல்லியல்பை, மாசு அற – குற்றங்கெட, கேளிரான் ஆய பயன் - உறவினரால் உண்டாகும் பயனை

## 11.9. மேலும் படித்தறிக

1. தி.சு.பாலசுந்தரம் பிள்ளையவர்கள் - நான்மணிக்கடிகை,
(இளவழகனார் உரை) கழக வெளியீடு,
சென்னை – 1,
1965

குறிப்பு

2. பேராசிரியர் மது.ச.விமலானந்தம் - தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்
ஐந்திணைப் பதிப்பகம்
சென்னை – 40
முதற்பதிப்பு – 1997
மறுபதிப்பு – 2017

3. கி.வா.ஜகந்நாதன் - தமிழ் நூல் அறிமுகம்
அமுத நிலையம்
சென்னை – 14
1991

4. புலவர் அ.மாணிக்கனார், - பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
மூலமும் தெளிவுரையும்
மூன்றாம் தொகுதி
வர்த்தமானன் பதிப்பகம்
சென்னை – 600 017
முதற்பதிப்பு1991,
மறுபதிப்பு 1999

## பிரிவு -3 (நிறைவு)

## கூறு 12 : நான்மணிக்கடிகை (தொடர்ச்சி)

மண்ணயறிப (5),கள்ளிவயிற்றில் (6),கல்லிற்பிறக்கும்(7)

**12. பாடஅமைப்பு:**

**12.1. அறிமுகம் - நான்மணிக்கடிகை (கூறு11இல் காண்க)**

**12.2. நோக்கம்**

**12.3. நான்மணிக்கடிகையின் சிறப்புக்கள்**

**12.4. கடவுள் வாழ்த்தில் நீதி**

**12.5. தூக்கமின்மை**

**12.6. எது எது பாழ்**

**12.7. இன்னாருக்கு இன்னதைவிடச் சிறந்தது இல்லை**

**12.8. ஊர்**

**12.9. ஆசிரியர் தம் பாடல்களுக்குத் திருக்குறள் கருத்துக்களை ஆளும் முறை**

**12.10. சோதித்தறியும் வினாவிடைகள்**

**12.11. பயிற்சி வினா**

**12.12. பொருளறிக**

**12.13. மேலும் படித்தறிக..**

### 12.2. நோக்கம்

நான்மணிக்கடிகையின் சிறப்புக்களை அறியச் செய்வதே நோக்கமாகும்.

### 12.3. நான்மணிக்கடிகையின் சிறப்புக்கள்

"துன்பப்பட வேண்டுமா? அதற்கு வழி சொல்கிறேன்" என்கிறார் புலவர். யாராவது துன்பம் அடைய வழி சொல்வார்களோ? எது செய்யக் கூடாது என்பதைத் தெரிவிக்கச் அப்படிச் சொல்கிறார். இது செய்தால் துன்பம் உண்டாகும் என்பதையே, 'உனக்குத் துன்பம் வேண்டுமென்ற விருப்பம் இருந்தால் இதைச் செய்' என்கிறார்.

"இன்னாமை வேண்டின் இரவுஎழுக"

'துன்பம் வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் கையில் கப்பரையை எடுத்துக்கொண்டு புறப்படு' என்கிறார். இரப்பவருக்கு எங்கே போனாலும் துன்பமே காத்திருக்கும் என்ற கருத்தை இப்படி வேறு ஒரு வகையில் எடுத்துச் சொல்கிறார். அடுத்தபடி சிலவற்றை நேராகவே சொல்லி விடுகிறார். 'இந்த உலகத்தில் நீ நிலைபெற வேண்டுமா? புகழை உண்டாக்கி வருவது அதை நிறுவு. உன்னோடு மறுமை உலகத்துக்கும் வருவது ஏதாவது வேண்டுமா? தருமம் செய். எந்தக் காரியத்திலும் வெற்றி வேண்டுமா? சினத்தை அடியோடு விட்டுவிடு' என்கிறார். ஒரு வெண்பாவில் இப்படி நான்கு நீதிகளைச் சொல்கிறார்.

"இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்தில்
மன்னுதல் வேண்டின் இசைநடுக, - தன்னொடு
செல்வது வேண்டின் அறம்செய்க, வெல்வது

வேண்டின் வெகுளி விடல்”

குறிப்பு

இந்தப் பாட்டு, பதினெண் கீழக்கணக்கில் ஒன்றாகிய நான்மணிக் கடிகையில் வருகிறது. இப்படியே ஒவ்வொரு பாட்டிலும் நான்கு நான்கு கருத்துக்கள் மணித்துண்டுகள் போல அமைந்திருப்பதனால்தான் இதற்கு அந்தப் பெயர் வந்தது. கடிகை – துண்டு.

## 12.4. கடவுள் வாழ்த்தில் நீதி

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பல நீதிகளையும், வேறு சில கருத்துக்களையும் சொல்லும் இந்நூலில் ஒவ்வொரு பாட்டும் நான்கு கருத்துக்களை வெளியிடுகின்றது. கடவுள் வாழ்த்திலும் கூட விளம்பிநாகனார் நீதிக் கருத்துக்களைக் கூறுகிறார்.

திருமாலுடைய முகத்தை ஒத்திருக்கும் சந்திரன். அவனுடைய சக்கரத்தைப் போல இருக்கும் சூரியன். அவன் கண்ணைப் போல இருப்பது தாமரை மலர். காயாம்பூ அவனுடைய நிறத்தை ஒக்கும் என்று முதற்பாட்டில் சொல்கிறார்.

“மதிமன்னும் மாயவன் வாள்முகம் ஒக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றுஅவன் கண்ஒக்கும், பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம்

என்று விளக்குகிறார்.

## 12.5. தூக்கமின்மை

1. தூக்கம் இல்லாமல் பலபேர் தொல்லைப்படுகிறார்கள். முக்கியமாக நான்கு வகையான பேர்வழிகளுக்குத் தூக்கம் வருவதில்லை. பிறர் பொருளைத் திருட வேண்டும்என்று ஒருவன் நினைக்கிறான். திருடுவதற்கு இராத்திரி தானே சரியான வேளை? அப்போதுதான் திருடன் தன் தொழிலைச் செய்கிறான். எல்லாரும் துயிலுகின்ற வேளையிலே அவன் உறங்காமல் இருக்கிறான். அவன் தூங்காத பேர் வழிகளில் முதலில் வருகிறவன்.

2. காதலியைப் பிரிந்து வருந்துகிறான் காதலன். இரவில் எப்படித் தூக்கம் வரும்? அவன் மனம் அவளையே நினைத்துக் கொண்டிருக்கும்.

இரவு நேரம் அவனுக்கு நீண்டு கொண்டே இருக்கம். தூங்காதவர்களில் அவன் இரண்டாவது பேர்வழி

3.எப்படியாவது பணம் சம்பாதித்து முன்னுக்கு வரவேண்டும் என்று முயற்சியோடிருப்பவனும் தூங்க மாட்டான். எப்படி எப்படிப் பொருளை ஈட்டலாம் என்று இராவெல்லாம் எண்ணிக் கொண்டே இருப்பான்.

4. பணம் ஈட்டினவனுக்கும் தூக்கம் வராது. அதை எப்படிக் காப்பாற்றுவது என்பதையே நினைத்துக் கொண்டிருப்பான். பணத்தைத் திருடன் கொண்டு போய் விடுவானே என்று அஞ்சுவான்.

இதனை,

கள்வம்என் பார்க்குத் துயில்இல்லை; காதலிமாட்டு
உள்ளம்வைப் பார்க்கும் துயில்இல்லை; ஒண்பொருள்
செய்வம்என் பார்க்கும் துயில்இல்லை; அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்

என்று விளக்குகிறார். தூங்காமல் இருக்கிறவர்கள் இன்னும் பலர் உண்டு. என்றாலும் நான்கு பேரை முக்கியமாக எடுத்துச் சொல்கிறார் விளம்பிநாகனார்.

## 12.6. எது எது பாழ்

எது எது பாழ் என்பதைச் சொல்கிறார் ஒரு பாட்டில். “வீட்டில் மனைவி இல்லாவிட்டால் அந்த வீடு பாழ். நாம் போகிற திசையில் நண்பர்கள் இருக்க வேண்டும். அப்போது தான் போன இடத்தில் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும். அப்படி யாரும் இல்லாவிட்டால் போன காரியம் நிறைவேறுவது அரிது. நியாயம் வழங்குவதற்குப் பழங்காலத்தில் சபைகள் இருக்கும். அந்தச் சபைகளில் அறிவும் அனுபவமும் நிறைந்த முதியவர்கள் இருப்பார்கள். அவர்கள் நடுநிலையில் நின்று தீர்ப்பளிப்பார்கள். அத்தகைய முதியவர்கள் இல்லாவிட்டால் சபையினால் எந்தப் பயனும் விளையாது. மனிதன் சற்று அறிவைப் பெற வேண்டும். இந்த அழகிய உடம்பைப் பெற்றதற்கு அறிவு பெறுவதே சிறந்த நோக்கமாக இருக்க வேண்டும். கல்வியும் அறிவும் இல்லாதவன் மனித உடம்பு எடுத்ததனால் ஒரு பயனும் இல்லை. விலங்காகப் பிறந்திருக்கலாம். அது படிக்கிறதா? படிக்காதவன் பெற்ற மனித உடம்பு பாழ்தான்” என்பதை,

குறிப்பு

மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றுஅறிவு இல்லா உடம்பு"

என்று இப்படி நான்கு பாழை நான்மணிக்கடிகை சொல்கிறது.

### 12.7. இன்னாருக்கு இன்னதைவிடச் சிறந்தது இல்லை

'உறுப்புக்களில் கண்ணை விடச் சிறந்தது எதுவும் இல்லை. ஒரு பெண்ணுக்கு எத்தனையோ உறவினர்கள் இருந்தாலும் கணவனை விடச் சிறந்தவர் யாரும் இல்லை. நாம் ஈட்டும் பொருள்கள் எல்லாவற்றிலும் சிறந்தவர்கள் குழந்தைகள். தாயை விடச் சிறந்த தெய்வம் இல்லை.

கண்ணிற் சிறந்த உறுப்புஇல்லை; கொண்டானின்
துன்னிய கேளில் பிறர்இல்லை; மக்களின்
ஒண்மைய வாய்சான்ற பொருள் இல்லை; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல்.

என்ற பாடலில் விளக்குகிறார். திருக்குறளில், "தம் பொருள் என்பதம் மக்கள்" என்று வருகிறது. அதை அடியொற்றியே 'மக்களின் ஒண்மைய வாய்சான்ற பொருள் இல்லை' என்றார் இப்புலவர்.

### 12.8. ஊர்

பொதுவாக எல்லோருக்கும் தம்முடைய சொந்த ஊரில், சொந்த வீட்டில் இருந்தால் தான் எல்லாச் சௌகரியங்களும் கிடைக்கும். வேறு ஊருக்குப் போனால் அவர்களுக்குப் பொருந்தியே இராது. 'எப்போதடா நாம் ஊருக்குப் போய் அக்கடா என்று படுப்போம்' என்று இருக்கும். ஆனால் சில பேருக்கு எந்த ஊரானாலும் வசதிகள் கிடைக்கும். செல்வாக்கு இருக்கும். சிங்கத்துக்குத் தன் காடு பிறன் காடு என்று இல்லை என்பார்கள். அதுபோல இந்த மனிதச் சிங்கங்களுக்குத் தம் ஊர் பிறர் ஊர் என்ற வேறுபாடு இல்லை. அவர்கள் எங்கே சென்றாலும் அங்குள்ளவர்கள் மதித்து நலம் செய்வார்கள். அவர்கள் யார்?

நல்லவர்கள் எந்த ஊருக்குப் போனாலும் மதிப்பை அடைவார்கள். நல்வழியிலே சென்ற தூயவர்களுக்கும் அப்படியே.

இந்த இரு வகையாரோடு இன்னும் இரண்டு வகையினர் உண்டு. அவர்களுக்கும் நம் ஊர் என்ற வரையறை இல்லை. மட்டமான மக்களுக்கு, இழிகுணம் உடையவர்களுக்கு, தம் ஊர் என்று ஒன்று இல்லையாம். நல்லவர்களுக்கும் நல்ல நெறியிலே செல்வோருக்கும் தம் ஊர் தான் என்ற கட்டுப்பாடு இல்லை. எங்கும் அவர்களுக்கு நன்மை கிடைக்கும். இழிகுணம் உடையவர்களுக்கும் தமக்கென்று ஊர் இல்லையாம். எந்த ஊருக்குப் போனாலும் அவர்களைத் துரத்தி விடுகிறார்கள். ஆகையால் நிலையாகச் சொல்லக்கூடிய ஊர் எதுவும் அவர்களுக்கு இல்லையாம்! எல்லா ஊர்களும் அவர்களுக்குச் சமமே. தம் கையில் நிறையப் பணம் உள்ளவர்கள் எங்கே போனாலும் வசதி செய்து கொள்ளலாம். ஆவர்களுக்கும் தம் ஊரில்தான் இருக்கவேண்டும் என்பதில்லை.

நல்லார்க்கும் நம்ஊர்என்று ஊர்இல்லை, நன்னெறிச்
செல்வார்க்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை, - அல்லாக்
கடைகட்கும் தம்ஊர்என்று ஊர்இல்லை, தம்கைத்து
உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.

என்ற பாடலில் இதனை விளக்குகிறார்.

### 12.9.ஆசிரியர் தம் பாடல்களுக்குத் திருக்குறள் கருத்துக்களை ஆளும் முறை

திருக்குறளை உள்ள பல கருத்துக்களை இவ்வாசிரியர் சில இடங்களில் ஆளுகிறார்.

“கெட்டுஅறிக கேளிரான் ஆயபயன்”

என்று இவ்வாசிரியர் கூறுவது,

“கேட்டினும் உண்டோர் உறுதி, கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்”

என்ற குறளைப் பின்பற்றியது.

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி

என்ற திருக்குறளிலுள்ள சொல்லையும் பொருளையும்

கோல்நோக்கி வாழும் குடிஎல்லாம்… வானத்
துளிநோக்கி வாழும் உலகம்

என்று ஆள்கின்றார்.

இன்மையின் இன்னாதது இல்லை

என்ற இவ்வாசிரியர் கருத்து,

குறிப்பு

இன்மையின் இன்னாதது யாதெனின, இன்மையின்
இன்மையே இன்னா தது

என்பதை அடியொற்றி யிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு நான்மணிக்கடிகை மனத்தில் நிறுத்துவதற்கு எளிய வகையில் கருத்துக்களைக் கொண்டு விளக்குகிறது.

**நான்மணிக்கடிகை – விளம்பிநாகனார் பாடல்கள் 3, 4, 5, 6, 7** ஆகிய பாடல்கள் நம் பாடப்பகுதியாக அமைகின்றன.

1. கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி (6)

கள்ளி மரத்தினுள் அகில் கட்டையானது தோன்றும். மானின் வயிற்றில் ஒளியுள்ள அரிதாரம் பிறக்கும். பெரிய கடலுள் மிக்க விலை மதிப்புடைய முத்துக்கள் தோன்றும். ஆகவே, நற்குணம் நற்செய்கைகளை ஆளுதலை உடையவன் தோன்றும் குடியை முன்பே அறிய வல்லவர் யாவர்? எவரும் இல்லை.

2. கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கும் உயர்மதம் - மெல்லென்று
அருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்
பொருளிற் பிறந்து விடும். (7)

ஒளிக்கதிரையுடைய மணிகள் மலையில் தோன்றும். காதலியின் இனிய சொல்லில் மிக்க களிப்புத் தோன்றும். மென்மையான கருணையில் அறவழியானது தோன்றும். அந்த அறத்துடன் மற்ற இன்பம் முதலிய எல்லாம் செல்வத்தினால் உண்டாகும்.

## 12.10. சோதித்தறியும் வினாவிடைகள்

1. கடவுள் வாழ்த்தில் சொல்லப்படும் கருத்துக்களை விளக்குக

திருமாலுடைய முகத்தை ஒத்திருக்கும் சந்திரன். அவனுடைய சக்கரத்தைப் போல இருக்கும் சூரியன். அவன்

கண்ணைப் போல இருப்பது தாமரை மலர். காயாம்பூ அவனுடைய நிறத்தை ஒக்கும் என்று முதற்பாட்டில் சொல்கிறார்.

குறிப்பு

2. யார் யாருக்குத் தூக்கம் வராது என்று ஆசிரியர் கூறுகிறார்?

பிறர் பொருளைத் திருடும் திருடன், காதலியைப் பிரிந்த காதலன், பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்று முயற்சி செய்பவன், சம்பாதித்த பணத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று நினைப்பவன் ஆகிய இந்த நால்வருக்கும் தூக்கம் வராது.

3. ஆசிரியர் விளம்பிநாகனார் பாடல்கள் எவ்விலக்கியக் கருத்துக்களுக்கு இணையாக உள்ளது? சான்று தருக.

ஆசிரியர் விளம்பிநாகனார் பாடல்கள் திருக்குறள் கருத்துக்களுக்கு இணையாக உள்ளது. சான்றாக இன்மையின் இன்னாதது இல்லை என்ற இவ்வாசிரியர் கருத்து

இன்மையின் இன்னாதது யாதெனின், இன்மையின்
இன்மையே இன்னா தது

என்பதை அடியொற்றி யிருப்பதைக் காணலாம்.

4. நல்லாள் பிறக்கும் குடியை அறிபவர் யார்? என்று விளம்பிநாகனார் கூறும் கருத்தக்களை விளக்குக

1. கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி (6)

கள்ளி மரத்தினுள் அகில் கட்டையானது தோன்றும். மானின் வயிற்றில் ஒளியுள்ள அரிதாரம் பிறக்கும். பெரிய கடலுள் மிக்க விலை மதிப்புடைய முத்துக்கள் தோன்றும். ஆகவே, நற்குணம் நற்செய்கைகளை ஆளுதலை உடையவன் தோன்றும் குடியை முன்பே அறிய வல்லவர் யாவர்? எவரும் இல்லை என்று விளக்குகிறார்.

5. எது எது எவ்வெவ்வப் பொருளில் தோன்றும் என்று விளம்பிநாகனார் குறிப்பிடுகிறார்?

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கும் உயர்மதம் - மெல்லென்று
அருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்
பொருளிற் பிறந்து விடும். (7)

குறிப்பு

ஒளிக்கதிரையுடைய மணிகள் மலையில் தோன்றும். காதலியின் இனிய சொல்லில் மிக்க களிப்புத் தோன்றும். மென்மையான கருணையில் அறவழியானது தோன்றும். அந்த அறத்துடன் மற்ற இன்பம் முதலிய எல்லாம் செல்வத்தினால் உண்டாகும்.

### 12.11. பயிற்சி வினா

1. நான்மணிக்கடிகையிலுள்ள எளிய வகையில் கருத்துக்களைக் விளக்குக.

### 12.12. பொருளறிக

மண்ணியறிப – கழுவியறிவார்கள், மாசு அற – குற்றங்கெட, சுட்டு அறிப – அதனை உருக்கியறிவார்கள், கேளிரான் ஆய பயன் - உறவினரால் உண்டாகும் பயனை, உயர்மதம் - மிக்க களிப்பு.

### 12.13. மேலும் படித்தறிக.

1. தி.சு பாலசுந்தரம் பிள்ளையவர்கள் (இளவழகனார் எழுதிய உரை), - நான்மணிக்கடிகை கழக வெளியீடு சென்னை – 1 1965

# பிரிவு-4-

# நாடகம் புதினம்

## கூறு 13: நாடகம் இராசராசசோழன் (சரித்திர நாடகம்)

குறிப்பு

13. பாட அமைப்பு

13.1 அறிமுகம்: நாடகம்

13.2 நோக்கம்

13.3 நூலாசிரியர் குறிப்பும் படைப்புகளும்

13.4 இராசராசசோழன் உண்மை வரலாறு

13.5 நாடகப் பாத்திரங்கள்

13.6 நாடக அமைப்பும் களமும்

13.7 நாடகக் கதைச் சுருக்கம்

13.8 நாடகக் கதைக் கோப்பு

13.8.1 தொடக்கம்

13.8.2 வளர்ச்சி

13.8.3 உச்சம்

13.8.4 வீழ்ச்சி

13.8.5 முடிவு

13.9 பாத்திரப்படைப்பு

13.9.1 இராசராசன்

13.9.2 விமலாதித்தன்

13.9.3 குந்தவி

13.10 நாடக உத்திகள்

13.10.1 தனிமொழி

13.10.2 குறிப்பு முரண்

13.10.3 முடங்கல்

13.10.4 நகைச்சுவை

13.10.5 மாறுவேடம் புனைதல்

13.11 நாடக நடைச்சிறப்பு

13.11.1 எளிய நடை

13.11.2 உவமை நடை

13.11.3 அடுத்துத்தொடர் நடை

13.11.4 வினாத்தொடர் நடை

குறிப்பு

13.11.5 இலக்கிய மேற்கோள் நடை
13.11.6 வருணனை நடை
13.11.7 பழமொழி நடை
13.11.8 வடமொழிக் கலப்பு நடை
13.12 நிறைவாக
13.13 சோதித்தறியும் வினா
13.14 பயிற்சி வினா
13.15 மேலும் படித்தறிக

**13.1 அறிமுகம் நாடகம்**

நாடு + அகம் = நாடகம் எனப் பிரியும். நாட்டு மக்களின் அகத்தைப் பிரதிபலிக்கும் கலை. இயல் என்பது சொல் வடிவம். இசை என்பது சொற்களோடு இசையும் சேர்ந்த வடிவம். நாடகம் என்பது இயல், இசை மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவம் ஆகும்.

கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம்.

நாடகம் என்பது பாட்டும், உரையும், நடிப்பும் என்பது தமிழ் மரபு வழி கூறும் இலக்கணமாக விளங்குகிறது. சங்க காலத்தில் குணநூல், கூத்தநூல், சயந்தம் நூல், மதிவாணர் நாடகத் தமிழர், முறுவல் போன்ற நாடக நூல்கள் இருக்கப்பெற்றன என்பதை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார்.

இறைவன் ஆடிய ஆதிக்கூத்தில் உடுக்கையிலிருந்து பிறந்தது ஓசை, ஓசையின் கழலிருந்து இசையின் உயிர்ப்பும், அதனின்று ஆட்டமும், ஆட்டத்திலிருந்து கூத்தின் அமைதியும் (ஒழுங்கு), அவ்வமைதியிலிருந்து நாடகக் கோப்பும் (ஒழுங்கு), அவ்வித ஒழுங்கிலிருந்து நாடக வகைகளும் தோன்றின எனக் கூத்தநூல் குறிப்பிடுகிறது.

**13.2 நோக்கம்**

நாடகத்தை வரலாற்று நாடகம், கற்பனை நாடகம் என இருவகைப்படுத்துவர். இராசராசசோழன் என்னும் இந்நாடகம் உண்மை

வரலாற்று நாடகமாகும். இந்நாடகம் கி.பி 999ஆம் நூற்றாண்டில் படைக்கப்பெற்றதாகும். இராசராசசோழனின் வரலாற்றில் நடந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட படைக்கப்பட்டுள்ளது. பண்டைக்கால மன்னர்களின் வரலாற்றை மாணவர்கள் அறிவது அரிதாகவே உள்ளது. இராசராசசோழனின் புற வரலாறான வீர தீரச் செயல்களையும், அவர்களிடையே இருந்த அக வரலாறான காதல் நிலையையும் மாணவர்கள் அறிய வேண்டும் என்பது நோக்கமாகும்.

**குறிப்பு**

### 13.3 இராசராசசோழன் உண்மை வரலாறு

கீழைச் சாளுக்கர்களுக்குள் உள்நாட்டுப்பூசலும் போரும் குமுறிக் கொண்டிருந்தன. பத்தாம் நூற்றாண்டில் வேங்கி மன்னன் தன் அரசாற்றல் அழிந்து முடங்கிக் கிடந்தான். (கி.பி 973-999). இராசராசன் அவனுக்குப் படைத்துணை வழங்கி மீண்டும் வேங்கியின் அரியணைமேல் ஏற்றி வைத்தான். அப்போது மேலைச் சளுக்கரின் மன்னனாக இருந்தவன் சத்தியாசிரயன் என்பவன். அவன் கீழைச் சளுக்கரையும் மேலைச் சளுக்கரையும் ஒன்றுபடுத்தி ஒரே நாடாக அதைத் தன் குடைக்கீழ் கொண்டு வரத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். இராசராசன் இத்திட்டத்தைக் குலைக்கும் அடிப்படையில் சக்திவர்மனை மீண்டும் வேங்கியின் மன்னனாக முடிசூட்டுவித்தான். (கி.பி 999)…..வேங்கி மன்னன் முதலாம் சக்திவர்மனுடைய தம்பியான விமலாதித்தனுக்கு (கி.பி 1011-1018) இராசராசனின் மகள் குந்தவி மணமுடிக்கப்பெற்றாள். கீழைச் சளுக்க நாடும் சோழ நாடும் ஒன்றாக இணையும் ஓர் அரிய வாய்ப்பை இத்திருமணம் உருவாக்கிக் கொடுத்தது" (ப.254) என்று கே.கே.பிள்ளை தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிடும் இவ்வரலாற்றுப் பின்னணி இந்நாடகத்துக்கு அடிப்படையாகும். இதனால் இந்நாடகம் உண்மை வரலாற்று நாடகம் என்பது தெளிவாகும்.

குறிப்பு

### 13.4 நூலாசிரியர் குறிப்பும் படைப்புகளும்

இராசராசசோழன் என்னும் இந்நாடகத்தின் ஆசிரியர் அரு.இராமநாதன். சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் 1924ஆம் ஆண்டு பிறந்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்தார். எழுத்தாளராக வேண்டும் என்ற ஆர்வத்தில் கல்லூரிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டார். 18 வயது கூட நிரம்பாத இளம் பருவத்தில் 'சம்சார சாகரம்' என்ற நூலைத் தயாரித்து தன் நண்பரின் திருமண நாளுக்காகப் பரிசளித்தார்

இளம் தம்பதியினருக்கும் தேவையான விஷயங்கள் அதில் இடம்பெற்றிருந்தன. 1945ல் டி.கே.எஸ் சகோதரர்கள் நடத்திய நாடகப் போட்டிக்காக 'இராசராச சோழன்' நாடகத்தை எழுதினார். அதற்கு முதல் பரிசும் கிடைத்தது. 1955ல் அரங்கேறிய அந்த நாடகம் 1000க்கும் மேற்பட்ட தடவை மேடையேறியது.

பின்னர் தமிழ் சினிமாவின் முதல் சினிமாஸ்கோப் படமாகவும் ராசராச சோழன் வெளிவந்தது. இந்தப் படத்துக்கு கதை, வசனம் எழுதியவரும் இவர்தான். ரதிப்பிரியா கு.ந.ராமையா ஆகிய புனைப் பெயர்களிலும் எழுதினார். 1947ல் திருச்சியில் 'காதல்' என்ற பெயரில் ஒரு இதழைத் தொடங்கினார். இந்தத் தலைப்புக்கு எதிராகவும் ஆதரவாகவும் கருத்துகள் எழுந்தன

ஆனால் இதன் தரம் கட்டுரைகளின் சாராம்சம் ஆகியவற்றால் எதிர்ப்புகள் காணாமல் போயின். இவரது முதல் கதை 'கோழிப் பந்தயம்'. முதல் நாவல் 'அசோகன் காதலி'. அம்பிகாபதி, பழையனூர் நீலி, நாயனம் சவுந்திர வடிவு, மனோரஞ்சிதம் உள்ளிட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

அறிவுத் திறனிலும், தமிழ்ப் புலமையிலும் இவர் ஒரு அகத்தியர் என்று டி.கே.எஸ் புகழாரம் சூட்டியுள்ளார். 'வீரபாண்டியன் மனைவி' என்னும் நாவல் இவரது பத்திரிகையில் 7 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடராக வெளிவந்தது. இவரது படைப்புகளிலேயே மிகவும் புகழைப் பெற்றுத் தந்த நாவல் இது. அடுத்து 'வெற்றி வேல் வீரத்தேவன்', 'வானவில்' ஆகிய நாடகங்களையும் எழுதினார்.

சென்னை, கோடம்பாக்கம், ஆற்காடு சாலையில் உள்ள தன் வீட்டிலேயே பத்திரிகையையும் நடத்தி வந்தார். இவர் வசனம் எழுதிய ‘தங்கப்பதுமை’ திரைப்படம் இந்திய அரசால் பாராட்டப்பட்டது. ‘பூலோக ரம்பை’, ‘ஆரவல்லி’ ஆகிய படங்களுக்கும் வசனம் எழுதியுள்ளார். திரைப்படத் தகவல்களுக்காகவே ‘கலைமணி’ என்ற சினிமா இதழைத் தொடங்கினார்.

1952ல் பிரேமா பிரசுரம் பதிப்பகத்தைத் தொடங்கினார். புராண நூல்கள், பழம்பெரும் கதைகள், சிந்தனையாளர் நூல்கள், துப்பறியும் மர்ம நாவல்கள், சரித்திர நாவல்கள், சித்தர் பாடல்கள் உள்ளிட்ட 340க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து குறைந்த விலையில் விற்றார்.

1963ல் கல்கி இதழில் ‘குண்டு மல்லிகை’ என்ற சமூக நாவலைத் தொடராக எழுதினார். சிந்தனையாளர் பிளேட்டோ, பெஞ்சமின் பிராங்க்ளின் ஆகியோர் குறித்து ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார்.

தனது இதழில் பல சிறுகதைகளும் எழுதியுள்ளார். காந்தி, பாரதி, அவ்வையார், புத்தர் ஆகியோரின் பொன்மொழிகளைத் தொகுத்து வெளியிட்டார். ‘கலைமாமணி’ விருது பெற்றவர்.

எழுத்துக்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டவர். இலக்கியப் பணி ஒன்றை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வந்த படைப்பாளி, அரு.ராமநாதன் 1974ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 50வது வயதில் மறைந்தார்.

### 13.5 நாடகப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| இராசராசன் | - | சோழ மன்னன் |
| இராசேந்திரன் | - | இராசராசன் மகன் |
| விமலாதித்தன் | - | வேங்கி நாட்டு வேந்தன் |
| சக்திவர்மர் | - | விமலாதித்தனுக்குத் தமையன்,<br>இராசராசனிடமிருந்து<br>வேங்கி முடி பெற்றவன் |

குறிப்பு

சத்தியாசிரயன் - இரட்டபாடி மன்னன், சோழர் பேரரசை விழுங்க விரும்புவன்

மதுராந்தக மூவேந்த வேளார் - இராசராசன் உடன் கூட்டத்து அதிகாரிகளில் முக்கியமானவர், அமைச்சர்களில் ஒருவர்

பாலதேவர் - இராசராசனின் நம்பிக்கையைப் பெற்றவர். நடமாடு இராசதந்திரி

நம்பியாண்டார் நம்பி - திருமுறை வகுத்த சிவனடியார்

நூலாசிரியர் - இராசராசேச்வர நாடகம் எழுதிய ஆசிரியர்

முத்துப்பல் கவிராயர் - நகைச்சுவை நாவலர்கள்

மேதினியார் - நகைச்சுவை (விகடகவிகள்)

குந்தவையார் - இராசராசனின் தமக்கையார்

குந்தவி - இராசராசனின் மகள்

வீரமாதேவி - அமைச்சர் மதுராந்தக மூவேந்த வேளாரின் தங்கை

பூங்கோதை - பணிப்பெண்

மற்றும் உடன் கூட்டத்து - அதிகாரிகள், திருமந்திர ஓலைகள், நாயகம், வீரர் முதலானோர்

நாடகங்கள் நிகழுமிடங்கள் - பெரும்பகுதி தஞ்சையிலும் சிறுபகுதி வேங்கியிலும்

## 13.6 நாடக அமைப்பும் களமும்

இந்நாடகம் 39 காட்சிகளைக் கொண்டமைந்துள்ளது. இதன் காட்சிகள் அனைத்தும் ஒரே அளவினதாக இல்லை. சில காட்சிகள் மிகச் சிறியதாகவும், சில காட்சிகள் அளவானதாகவும், சில காட்சிகள் மிக நீண்டதாகவும் உள்ளன. இந்நாடகம் பெரும்பகுதி தஞ்சையிலும், சிறுபகுதி வேங்கியிலும் நடைபெறுவதாக உள்ளது.

## 13.7 நாடகக் கதை

இராசராசன் சேரனையும் பாண்டியனையும் வென்று தமிழகம் முழுவதையும் தன் ஆட்சிக்கீழ் கொண்டுள்ளான். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்தை ஒருங்கே

கொண்டவனாக விளங்குகின்றான். உரிமைக்கு வேங்கடம் உறவுக்கு இமயம். கடலுக்கு அப்பாலும் தமிழரின் வாணிப நாகரிகம் என்ற கொள்கைகளைக் கொண்டவனாகத் திகழ்கின்றான்.

**குறிப்பு**

இராசராசனின் அமைச்சர்களுள் ஒருவரான பருத்திக்குடி மதுராந்தக மூவேந்த வேளார் இராசராசனிடம் நூலாசிரியர் ஒருவரை அழைத்து வருகின்றார். இந்நூலாசிரியர் இராசராசனின் வாழ்க்கையை நாடகமாக எழுத விரும்புவதாகக் கூறுகின்றார். அதற்கு இராசராசன் நூலாசிரியரை, அரண்மனையில் தங்கி தன்னைப் பற்றி நன்கு அறிந்த பிறகு நாடகத்தை எழுதுமாறு கூறுகிறார். இந்நூலாசிரியருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பை மதுராந்தகரிடமே ஒப்படைக்கிறார்.

இரட்டபாடி நாட்டு மன்னன் சத்தியாசிரயன் இராசராசனின் எழுச்சி கண்டு சோழ நாட்டைக் கைப்பற்ற நினைக்கின்றான். அவன் அவ்வாறு சோழ நாட்டுக்கு வருவதற்கு வேங்கிநாடு ஒன்றே வழி. இராசராசன் வேங்கி நாட்டுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டு அதைப் பலப்படுத்த எண்ணுகிறான். இந்நிலையில் வேங்கி நாட்டில் மூத்த பரம்பரைக்கும் இளைய பரம்பரையைச் சேர்ந்த சக்திவர்மனுக்கும் படையுதவி செய்கிறான். இராசேந்திரன் தலைமையிலான படையை அனுப்புகிறான். இராசேந்திரனும் வேங்கி நாட்டின் இளைய பரம்பரையினரை அடக்குகிறான்.

இராசராசன் சத்திவர்மனை வேங்கி நாட்டு மன்னனாக முடிசூட்டுகிறான். அவ்வாறு முடிசூட்டப்பட்டது நிபந்தனையற்ற முறையினது என்பதை சக்திவர்மனின் தம்பி விமலாதித்தன் இராசராசனைக் கேட்டு உறுதி செய்து கொள்கிறான். இராசராசனும் வேங்கி நாடு சுதந்திரமான தனியரசாகவே செயல்படும் என்கிறான்.

விமலாதித்தன் சிறுவயது முதல் இராசேந்திரனோடும் குந்தவியோடும் நெருங்கிப் பழகியவன். இராசேந்திரனின் உயிர் நண்பன் குந்தவியைக் காதலிப்பவன். குந்தவியும் விமலாதித்தனை விரும்புகின்றாள். அதனால் இராசராசன் குந்தவிக்கும் விமலாதித்தனுக்கும் திருமணம் செய்து வைப்பதன் மூலம் வேங்கி நாட்டுடனான உறவைப் பலப்படுத்த நினைக்கின்றான். குந்தவியும் விமலாதித்தனும் ஒருவரையொருவர் விரும்புவதால் திருமணத்தில் எவ்விதச் சிக்கலும் ஏற்படாது என அனைவரும் எண்ணுகின்றனர்.

குறிப்பு

இராசராசனின் இராசதந்திரி பாலதேவப் பட்டரையர் இரட்டபாடி நாட்டில் பிறந்தவன். ஆனால் இராசராசனின் நம்பிக்கைக்குரியவன். அவன் நாட்டுப்பற்று காரணமாக சத்தியாசிரயனுக்கு உதவ நினைக்கின்றான். சோழநாட்டுக்கும் வேங்கி நாட்டுக்கும் பகையை ஏற்படுத்தவும் விமலாதித்தன் குந்தவி திருமணம் நிகழா வண்ணம் தடுக்கவும், குந்தவியை சத்தியாசிரயன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கவும் சூழ்ச்சி செய்கிறான்.

இராசேந்திரனும் மதுராந்தக மூவேந்த வேளாரின் மகன் வீரமாதேவியும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். இவர்களது காதல் குந்தவிக்கும் தெரியும்.

வேங்கி நாட்டில் சக்திவர்மனுக்குப் பிறகு விமலாதித்தன் அரசனாகின்றான். தன் நாட்டுப் படைபலத்தைப் பெருக்குவதற்காகப் படை திரட்டுகின்றான். இதனைத் தனது சூழ்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கும் பாலதேவர் இராசராசனிடம், விமலாதித்தனும் சத்தியாசிரயனும் சேர்ந்து கொண்ட சோழநாட்டைத் தாக்கினாலும் தாக்கலாம் என்று கூறி விமலாதித்தன் மேல் பகையைத் தூண்டுகின்றான்.

இராசராசன் விமலாதித்தனை வேங்கி நாட்டிலிருந்து அழைத்து எல்லைப்புறப் பாதுகாப்புக்காகத் தனது பெரும்படை ஒன்றை வேங்கிநாட்டில் நிறுத்தி வைக்கப்போவதாகவும், பாலதேவரை வேங்கி நாட்டுக்கு அரசியல் தூதாக அனுப்ப இருப்பதாகவும் கூறுகிறான். விமலாதித்தன் இதற்கு உடன்படாமல் மறுக்கவே, குந்தவியை நினைவு படுத்துகிறான். அப்பொழுது விமலாதித்தன் பெண்ணுக்காக என் மண்ணை இழக்க விரும்பவில்லை என்கிறான். இதனைப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கும் பாலதேவர், "விமலாதித்தன் சோழநாட்டுக்காகக் குந்தவியைக் காதலிப்பது போல் நடிக்கின்றான்" என்று விமலாதித்தன் மீது வெறுப்பை உண்டாக்குகின்றான். இராசராசனும் விமலாதித்தனுக்குமிடையே பகையுணர்ச்சி தோன்றுகிறது.

தன் தந்தையையும் தன் காதலையும் மதிக்காத விமலாதித்தன் தன்னைக் காதலிக்கவில்லை என நினைத்த குந்தவி நடனப் பயிற்சியில் மனம் செலுத்துகிறான்.

இராசராசனின் தமக்கையார் குந்தவையார் இராசராசனிடம் தஞ்சையில் பெரிய கோயில் எழுப்புமாறு கூறுகிறாள். அவனும்

அவ்வாறே எழுப்புவதாகக் குந்தவியின் நடன அரங்கேற்றத்தையும் அங்கு நிகழ்த்துவதாகக் கூறுகிறான்.

குறிப்பு

வேங்கி நாட்டில் விமலாதித்தன் தன் அமைச்சர்களிடம் வேங்கி நாட்டு எல்லையில் புலிக்கொடிக்கு எதிராகப் பன்றிக்கொடியை நடுமாறும் சுற்றிலும் காவற்படையை நிறுத்துமாறும் கூறுகிறான். அவனிடம் அமைச்சர் தஞ்சையில் பெரிய கோயில் கட்டப்பட்டு அதில் குந்தவியின் நடன அரங்கேற்றம் நிகழவிருப்பதையும் விமலாதித்தனுக்குத் தவிர மற்ற அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளமையையும் கூறுகிறார். விமலாதித்தன் தனக்கு அழைப்பு இல்லையாயினும் கலைஞன் என்ற முறையில் நடன அரங்கேற்றத்தைக் காணத் தனியாகச் செல்ல இருப்பதாகக் கூறுகிறான்.

இராசேந்திரன் தன் நண்பன் விமலாதித்தனுக்கு அழைப்பு அனுப்பவில்லை என அறிந்தும் அவன் காணாத நடன அரங்கேற்றத்தைத் தானும் காண விரும்பாமல் கருவூர்ப் பாசறைக்குப் புறப்பட்டுச் சென்று விடுகிறான்.

விமலாதித்தன் நடன அரங்கேற்றத்தைக் காண, பெரிய கோயிலுக்கு வருகிறான் இராசராசனைக் கண்டு வணங்குகிறான். விமலாதித்தன் வருகையைப் பாலதேவர் சந்தேகப்படும் படியாக இராசராசனிடம் பேசுகிறார். அப்பொழுது அங்கு குந்தவி நடன அரங்கேற்றத்துக்குரிய அலங்காரத்துடன் பெண்கள் சூழ வருகிறாள். விமலாதித்தன் எதிரே வருவதைக் கண்டும் காணாதது போல் அலட்சியப்படுத்துகிறாள்.

நடன அரங்கேற்றம் நிகழ்கிறது. குந்தவி நடனமாடுகிறாள். இடையில் விமலாதித்தனை நினைத்து அவன் மனம் குழம்புகிறது. அதனால் நடனத்திலும் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதனைக் கண்ட விமலாதித்தன் நடனக்கலையைக் கொலை செய்யாமல் நடனத்தை நிறுத்துமாறு கூறுகிறான். இதனையும் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் பாலதேவர், “விமலாதித்தன் உம் மகளையும் அவமதித்து உம்மையும் அவமதித்து விட்டான்” என்று கூறி மேலும் பகையைத் தூண்டுகிறார்.

குறிப்பு

இராசராசனுக்கும் விமலாதித்தனுக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. இராசராசன் விமலாதித்தனைத் தனக்குத் திறை செலுத்த வேண்டும் எனக் கூறுகிறான். விமலாதித்தன் அதற்கு மறுக்கவே, இராசராசன், "இனிறிலிருந்து பதினோராவது நாள் இராசேந்திரன் உன்னைப் போர்க்களத்தில் சந்திப்பான்" என்று கூறுகிறான்.

இராசேந்திரன் தன் நண்பனாகிய விமலாதித்தனுக்கு எதிராகப் படைத்தலைமை ஏற்க மறுத்துத் தனது வாளை இராசராசன் காலடியில் வைத்து விட்டுச் சென்று விடுகிறான். அவனது இம்முடிவுக்குக் காரணம் மதுராந்தக மூவேந்த வேளாரின் தங்கை வீரமாதேவியைக் காதலிப்பதே என்று பாலதேவர் கூறுகிறார். இதனைக் கேட்டு வியப்படையும் இராசராசன் வீரமாதேவியைக் கொண்டே இராசேந்தினைப் போருக்கு அனுப்ப எண்ணுகிறான்.

இராசராசன் வீரமாதேவியைச் சந்தித்து இராசேந்திரனைப் போருக்கு அனுப்ப வேண்டிய பொறுப்பை அவளிடமே ஒப்படைக்கிறான். இராசேந்திரன் கொடுத்த வாளையும் அவளிடமே கொடுக்கின்றான். அப்பொழுது இராசேந்திரனும் அங்கு வந்து விடுகிறான். அவனிடம் வீரமாதேவி தன் காதலை மறைத்து வீர உணர்ச்சியைத் தூண்டுகிறாள். இராசேந்திரன் அவளிடமிருந்து வாளைப் பெற்றுப் போருக்குப் புறப்படுகிறான். அங்கிருந்த தன் தந்தையிடமும் சொல்லிக் கொள்கிறான். அவன் சென்ற பிறகு இராசராசன் வீரமாதேவியிடம் அரசியலில் இதயத்தை இரும்பாக்கிக் கொள்ள வேண்டும் என்று கூறிச் செல்கின்றான்.

பாலதேவர் இரட்டபாடி ஒற்றனிடம் விமலாதித்தனுக்கும் இராசேந்திரனுக்கும் போர் மூண்டு விட்டதையும் இருவரில் ஒருவர் மடிவார் உறுதி என்பதையும் கூறி சோழ நாட்டின் மீது படையெடுக்க இரட்டபாடி மன்னன் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும் என்று செய்தி சொல்கிறான். ஒற்றன் பாலதேவரிடம் சத்தியாசிரய மன்னன் இலச்சினைப் பொறித்த குத்துவாளை மன்னன் கொடுக்கச் சொன்னாதாகக் கூறிக் கொடுக்கிறான். இது எதற்கு? என பாலதேவர் அதனை பூசைப் பொருட்களுடன் குத்துவாளையும் எடுத்துக்கொண்டு செல்கிறான். அவனைக் காதலிப்பதாக முத்துப்பல் கவிராயரும், மேதினிராயரும் பின்தொடர்கின்றனர்.

குறிப்பு

இராசேந்திரன் போருக்குப் புறப்படுகின்றான். அவனிடம் குந்தவி விமலாதித்தன் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் நான் உயிருடன் இருக்கமாட்டேன் என்று கூறுகிறாள். இராசேந்திரன் விமலாதித்தனை உயிருடன் பிடித்து வருவதாகக் குந்தவிக்கு உறுதி கூறிச் செல்கின்றான்.

வேங்கிநாட்டு எல்லையில் பாசறையில் இருக்கும் விமலாதித்தனைக் காண இராசராசன் துறவி வேடத்தில் செல்கிறான். ஐம்பதாயிரம் வீரர்கள் கொண்ட விமலாதித்தனின் பெரும்படை ஐயாயிரம் வீரர்கள் கொண்ட இராசேந்திரன் சிறுபடையுடன் மோதி வெற்றி பெறுவதில் பெருமை இல்லை என்று இராசேந்திரனுடன் தனிவாட்போர் புரிவதால் படையின் உயிர்ச்சேதம் தவிர்க்கப்படும் என்றும் கூறுகிறான். விமலாதித்தனும் இராசேந்திரனும் தனிவாட்போர் புரியச் சம்மதிக்கிறான்.

வேங்கி நாட்டு எல்லைப்புறத்தில் இராசேந்திரனுக்கும் விமலாதித்தனுக்கும் கடுமையான வாட்போர் நடக்கிறது. இறுதியில் விமலாதித்தன் வலதுகையில் காயம் ஏற்படுகிறது. இராசேந்திரன் போரை முடிக்கக் கருதித் தன் உடைவாளை உறையில் செருக முயலுகிறான்.விமலாதித்தன் தடுத்து, தன் உயிரைப் போக்குமாறு கூறுகிறான். அதற்கு இராசேந்திரன். "உன்னை நான் உயிரோடு கொண்டு வருவதாக என் தங்கைக்கு வாக்குறுதி கொடுத்துள்ளேன். நீ என்னிடம் சரணடையச் சம்மதமில்லையென்றால் உன் வாளை என் மார்பில் புதைத்து விடு. உன் உயிர் போய் விட்டால் என் தங்கையும் உயிர் வாழாள்?" என்கிறான். உடனே விமலாதித்தன், "ஒரு பெண்ணின் உயிரைக் காப்பதற்காக அல்ல, ஒரு மாவீரனின் வாக்குறுதியைக் காப்பதற்காகச் சரணடைகிறேன்" என்று கூறிச் சரணடைகிறான்.

பாலதேவர், தாம் எதிர்பார்த்தபடி இரு நாட்டுப் படைகளும் போரில் அழியாமையால் மேலும் சூழ்ச்சி செய்து இரு நாட்டையும் அழிக்க எண்ணுகிறார். இராசராசனிடம் விமலாதித்தனை அவமானப்படுத்துமாறும், அதனைக் கேள்விப்படும் வேங்கிப்படை சோழ நாட்டின் மீது படையெடுத்து வரும் என்றும் அப்பொழுது வேங்கிப்படையை முற்றிலும் அழித்து விடலாம் என்றும் கூறுகிறார். மதுராந்தகர் அதனை மறுத்து, "வேங்கிப் படையைச் சீர்குலைப்பது நம் தற்காப்பைச் சீர்குலைப்பதாக ஆகும்" என்கிறார். இருவர் கூறுவதும் சரி என்று கூறிவிட்டு இராசராசன் செல்கிறான்.

குறிப்பு

இராசராசன் விமலாதித்தனைச் சிறையிலடைக்க ஆணையிடுகிறான். ஆதற்கு மாறாக, பாலதேவர் விமாதித்தனைப் புலிக்கூண்டில் அடைத்துக் கோட்டை வாயிலில் வைக்குமாறு கோசனை கூறுகிறார். மதுராந்தகர், "இது தமிழ்நாட்டில் இல்லாத வழக்கம்" என்று கூறியும் இராசராசன் விமலாதித்தனைப் புலிக்கூண்டில் அடைக்குமாறு கட்டளையிடுகிறான்.

புலிக்கூண்டில் அடைபட்டிருக்கம் விமலாதித்தனைப் காண மக்கள் வருகின்றனர். அவனைப் பார்த்துச் சிரிக்கின்றனர். அவர்களிடம் பாலதேவர் விமலாதித்தனை மேலும் அவமானப்படுத்துமாறு கூறுகிறார்.

விமலாதித்தன் மக்களிடம், "இரட்டபாடி சத்தியாசிரயனும் கங்கை மன்னர்களும் தமிழ்நாட்டை விழுங்கச் சமயம் பார்த்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் சோழநாட்டிற்கும் வேங்கி நாட்டிற்கும் ஒற்றுமையில்லாமல் உங்களுக்கும் எனக்கும் பகைமை இருப்பது தமிழகத்திற்கு நல்லதல்ல. இது சூழ்ச்சிக்காரர்களால் ஏற்பட்டது" என மொழி உணர்வையும் நாட்டு உணர்வையும் தூண்டுமாறு பேசுகிறான். இதனைக்கண்ட பாலதேவர் இவன் அழிந்தால்தான் தன் மனோரதம் நிறைவேறும் என்று கருதி, மக்களை அவ்விடத்தை விட்டு விரட்டுமாறு வீரர்களிடம் கூறிச் செல்கிறார்.

இரவில் வீரமாதேவியுடன் குந்தவி விமலாதித்தனைக் காண வருகிறாள். குந்தவியும் விமலாதித்தனும் மனம் விட்டுப் பேசுகின்றனர். விமலாதித்தன், "உன் காதல்தான் என்னைச் சிறை செய்தது" என்கிறான். குந்தவி, "நடன அரங்கேற்றத்தின் போது என்னை அவமதித்தது ஏன்?" எனக் கேட்கிறாள். நீ அலட்சியம் செய்ததால் மமதையில் பிறப்பது கலையுமல்லை, காதலுமல்ல என்பதை உணர்த்துவதற்காக அவ்வாறு நடந்து கொண்டேன்" என்கிறான். அவனிடம் குந்தவி, "உங்களுக்கு என்மீது ஆசை இல்லை. எங்க நாட்டின் மீது தான் ஆசை" என்று பாலதேவர் கூறினார் என்கிறாள். "அது நம்மிருவரையும் நம்மிருவர் நாட்டையும் பிரிக்க அவர் செய்த சூழ்ச்சி" என்கிறான் விமலாதித்தன். இவ்வாறு விமலாதித்தனும், குந்தவியும் மனம் விட்டு பேசிக் கொண்டதன் மூலம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்கின்றனர்.

குறிப்பு

காலையில் விமலாதித்தனைக் காண இராசராசனும் பாலதேவரும் வருகின்றனர். பாலதேவர் எண்ணப்படி விமலாதித்தனை பாதாளச் சிறையில் அடைக்குமாறு இராசராசன் உத்தரவிடுகிறான்.

குந்தவி விமலாதித்தனைச் சிறையிலிருந்து விடுவிக்க ஆணையிடுமாறு இராசராசனிடம் கூறுகிறாள். இராசராசன், "விமலாதித்தன் வேங்கி நாட்டில் நம் படையை நிறுத்தச் சம்மதிப்பார்களா?" எனக் கேட்கிறான். அதற்குக் குந்தவி, "நான் ஓர் அடிமையை விரும்பமாட்டேன்" என்கிறாள். குந்தவியின் இப்பதிலை இராசேந்திரனும் ஆமோதிக்கிறான்.

இச்சூழ்நிலையில் பாலதேவர் குந்தவியை சத்திராசிரயன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கும்படி ஆலோசனை கூறுகிறார். இதனைக் கேட்ட இராசராசன் திடுக்கிடுகிறான். அவனிடம் பாலதேவர், "இது நடந்தால் சத்தியாசிரயன் உதவியுடனேயே கங்கையையும் கடாரத்தையும் தாண்டிப் புலிக்கொடியைப் பறக்கவிடலாம்" என்கிறார். குந்தவி இத்திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டேன் என்கிறாள். இராசராசன், "அரசியல் நெருக்கடிக்குத் தேவைப்பட்டால் உன் திருமணத்தையும் ஓர் அற்ப விஷயமாக நினைக்கத் தயங்க மாட்டேன்" என்கிறாள்.

குந்தவி குந்தவையாரிடம் பாதாளச் சிறையிலிருந்து கோயிலுக்குச் சுரங்க வழி இருக்கும் இரகசியத்தைத் தெரிந்து கொள்கிறாள். பாதாளச் சிறையிலிருக்கும் விமலாதித்தனைச் சந்தித்து, "இங்குள்ள சுரங்கம் வழியாகக் கோயிலுக்குச் சென்று நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வோம்" என்று கூறுகிறாள். முதலில் இதற்கு உடன்படாத விமலாதித்தன் பிறகு உடன்படுகிறான்.

பாலதேவரின் மாளிகைப் பூங்காவிற்கு முத்துப்பல் கவிராயரும் மேதினியாரும் வருகின்றனர். அப்பொழுது இரட்டபாடி ஒற்றன் பாலதேவரைக் காண வருகின்றான். அவனைத் தொடர்ந்து பூங்கோதை வருகிறாள். முத்துப்பல் கவிராயரும், மேதினியாரும் ஒற்றனைப் பூங்கோதையின் காதலன் எனக் கருதிப் பின் தொடர்கின்றனர்.

குறிப்பு

குந்தவியும் விமலாதித்தனும் பாதாளச் சிறையிலிருந்து சுரங்கம் வழியாகத் தஞ்சைப் பெரிய கோயிலின் சந்நிதியை அடைகின்றனர். மனத்தைச் சாட்சியாகவும் தமிழை வேள்வியாகவும் கொண்டு திருமண உறுதி செய்து கொள்ள முற்படுகின்றனர். அப்பொழுது இராசராசன், பாலதேவர், மதுராந்தகர் ஆகிய மூவரும் அங்கு விரைந்து வருகின்றனர்.

இராசராசன் குந்தவியிடம், "இது தேச துரோகம்" என்று கோபப்படுகிறான். விமலாதித்தனிடம், "உனக்கு என் குந்தவியை மணம் முடித்துத் தருகிறேன். நீ எனக்குப் பணிந்து திறை செலுத்துவதாக ஒப்புக்கொள்" என்கிறான். ஆனால் விமலாதித்தன், "என் குந்தவிக்காக அவள் தந்தையிடம் பணியவும் சித்தமாகியிருக்கிறேன். ஆனால் என் நாட்டின் சுதந்திரத்தைப் பலியிட்டு எந்தப் பெண்ணையும் பெறச் சித்தமாயில்லை" என மறுத்து விடுகிறான். இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் பாலதேவர், "இன்று உங்கள் மகளை வேங்கி நாட்டானுக்கு மணம் புரிந்து கொடுத்தால், நாளை சோழ நாட்டின் அரசுரிமைக்குச் சொந்தம் கொண்டாட வந்து விடுவான்" என்றும், "இராச தர்மத்திற்காக மகள் பாசத்தை மறப்பது நன்று" என்றும் கூறுகிறார். குந்தவியிடம், "மனம் மாறினால் இரட்டபாடி அரசகுமாரனை மணக்கலாம்" என்கிறார். குந்தவி உறுதியாக, "விமலாதித்தனை மணக்க முடியாவிட்டால் மரிப்பேன்" என்கிறாள். காவலர்கள் விமலாதித்தனை மீண்டும் சிறையில் அடைக்கின்றனர்.

வீரமாதேவி குந்தவியிடம், "இராச காரியத்தை முன்னிட்டாவது நீங்கள் விமலாதித்தனை மறக்கத்தான் வேண்டும்" என்கிறாள். அவளிடம் குந்தவி, "இப்பூமண்டலமும் நிலை கலங்கலாம், நீரும் நெருப்பும் தன்னியல்பு குன்றலாம், வைகையும் காவிரியும் வற்றிவிடலாம், ஆனால் நான் கொண்ட காதல் மாறாது, வற்றாது, தன்னியல்பு குன்றாது" எனத் தன் காதலின் ஆழத்தையும் உறுதியையும் புலப்படுத்துகிறாள்.

தன் அத்தை குந்தவையார் கூறினால் தந்தை எதையும் கேட்பார் என்பதால் அவள் உதவியுடன் விமலாதித்தனைத் திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்துடன் குந்தவி தன் அத்தையைக் காணச் செல்கிறாள். அவளிடம் தான் விமலாதித்தனையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறாள்.

Self-Instructional Material

குறிப்பு

குந்தவையார் குந்தவியின் திருமணம் பற்றிப் பேச இராசராசனை அழைக்கிறாள். இராசராசன், தமக்கையாரிடம், “சிறையிலிருக்கும் விமலாதித்தனுக்கு நம் குந்தவியை மணம் முடித்தால் இரட்டபாடி சத்தியாசிரயனும், அவனுக்குத் துணையாக வடவேந்தர்களும் தமிழகத்தின் மீது படையெடுத்து அதற்கு மாறாக சத்தியாசிரயன் மகனுக்கு மணம் புரிந்து கொடுத்தால் அவன் துணையுடன் நம் புலிக்கொடி கங்கையும் கடாரமும் தாண்டிச் செல்லும். இதற்காக சத்தியாசிரயனிடமிருந்து தூதன் ஒருவன் வந்திருக்கிறான்” என்று நிலையை எடுத்துக்கூறினான்.

குந்தவி உறுதியாக, “தமிழ்நாட்டின் மானத்தைக் காக்க, என் உயிரைத் தியாகம் செய்வேனே தவிர, தன்மானத்தையும் காதலனையும் பலி கொடுக்க மாட்டேன்” என்று கூறி இளவரசி என்ற உரிமையைத் துறந்து விமலாதித்தனை மணக்க முடிவு செய்கிறாள். இளவரசிக்குரிய சின்னங்கள் அனைத்தையும் இராசராசனிடம் ஒப்படைத்து விட்டு குந்தவையாரிடமும் இராசராசனிடமும் சொல்லிக்கொள்கிறாள். இறுதியில் இராசேந்திரனிடம், “காதலும் வீரமும் தான் நாகரிகத்தின் இரட்டை நாடிகள். காதல் இல்லாத இடத்தில் இந்த வீரவாளும் இருக்க வேண்டாம்” என அவனது வாளைப் பரிசாகக் கேட்கிறாள்.

இராசராசன், “குந்தவியின் உடலில் ஓடுவது இராசராசசோழனின் இரத்தம் அல்ல. உண்மையில் அந்த இரத்தத்தில் பிறந்தவளாயிருந்தால் தன் உரிமைக்காக இந்த அரண்மனையில் இருந்து கொண்டே எவரையும் தன் புத்தி சாதுரியத்தால் எதிர்த்துப் போராடுவாளே தவிர கோழை போல் ஓடமாட்டாள்” என்கிறான். இதனைக் கேட்டு குந்தவி உடனே இளவரசிக்குரிய சின்னங்களை அணிந்து கொள்கிறாள்.

இறுதியில் இராசராசன், “காதலர்களுக்குத் திருமணம் செய்வதா அல்லது கட்டிய சோழப் பேரரசை இழப்பதா என்று தமக்கையாரே யோசித்து சொல்லட்டும்” என்று கூறிவிட்டுச் செல்கிறான்.

பாதாளச் சிறையில் உள்ள விமலாதித்தனிடம் குந்தவி, அவன் சிறையை விட்டு வெளியேறவும் தன்னை முறைப்படி திருமணம் செய்து கொள்ளவும் ஒரு வழி கூறுகிறாள். தன் காதலுக்காக இதைச் செய்ய வற்புறுத்துகிறாள்.

குறிப்பு

இராசராசனின் பிறந்த நாளான திருச்சதய நாளில் அரசியல் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், அரசவையில் பாவலரும் பாணரும் வாணரும் வந்து அரசர் புகழ்பாடி வேண்டிய பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தஞ்சையில் முரசறைந்து தெரிவிக்கப்படுகிறது.

முத்துப்பல் கவிராயரும், மேதினியாரும் சென்ற பௌர்ணமியன்று பூங்கோதையைப் பார்க்க வந்த அவளது காதலன் இந்தப் பௌர்ணமிக்கும் வருவான். அவனை எப்படியும் பிடித்து விட வேண்டும் என முடிவு செய்கின்றனர்.

இராசராசனின் பிறந்த நாளான சதய நாளில் மதுராந்தகர், சத்திராசிரயனும் கங்கை மன்னர்களும் சோழப் பேரரசின் மீது படையெடுத்து வர இருப்பதையும், வேங்கி நாட்டில் விமலாதித்தனை வேந்தனாக்கும் படி மக்கள் புரட்சி செய்வதையும் அது சோழ நாட்டுக்கும் பரவும் நிலை உள்ளது என்பதையும் கூறி அதனால் விமலாதித்தனுக்குக் குந்தவியைத் திருமணம் செய்து கொடுத்து வேங்கியை நட்புநாடாக ஆக்கிக் கொள்வது தான் சரியான அரசியல் தந்திரம் என்று கூறுகிறார்.

தஞ்சை அரண்மனையில் திருவோலக்க மண்டபத்தில் பிறந்தநாள் விழாவிற்காக இராசராசன் அமர்ந்துள்ளான். பாவலரும் நாவலரும் மன்னன் புகழ்பாடி பரிசில் பெற வருகின்றனர். அவர்களில் ஒருவனாக விமலாதித்தனும் வருகின்றான். இராசேந்திரன் இராசராசனிடம், “சக்கரவர்த்திகள் கட்டளைப்படி விமலாதித்தனும் சிறைவிடப்பட்டிருக்கிறான்” என்கிறான். விமலாதித்தன் கவிதை ஒன்று பாடிக் குந்தவியைப் பரிசாகக் கேட்கிறான். இராசராசன் முதலில் இதற்கு இசையாவிட்டாலும், பிறகு மரபு கருதிக் கொடுப்பதற்கு இசைகிறான். இந்த யோசனை உனக்கு எவ்வாறு வந்தது என இராசராசன் கேட்க விமலாதித்தன் குந்தவிதான் என விடை கூறுகிறான்.

விமலாதித்தனுக்குக் குந்தவியைத் திருமணம் செய்து கொடுக்க முடிவு செய்த நிலையில் ஏற்படும் அரசியல் சூழலை அனைவரும் ஆலோசிக்கின்றனர். அப்பொழுது பாலதேவர், “இரட்டபாடி மன்னனும் கங்கை மன்னர்களும் படையெடுக்கத் தயாராக உள்ளனர்” என்று கூறுகிறார்.

குறிப்பு

இராசேந்திரன், “கங்கையையும் கடாரத்தையும் தாண்டி சோழர் குலப் புலிக்கொடியைப் பறக்க விடுவேன். கங்கை வெள்ளம் பொங்கி வரும் முன்பே கங்கை மன்னர்களை வென்று அவர்கள் தலைமீது கங்கை நீரைக் குடம்குடமாகக் கொண்டு வரச் செய்வேன். சோழகங்கம் ஏரியை வெட்டி அதில் கங்கை நீரைக் கொட்டச் செய்வேன். கங்கை கொண்ட சோழபுரம் என்னும் தலைநகரை உருவாக்குவேன்” எனச் சபதம் செய்கிறான்.

அப்பொழுது முத்துப்பல் கவிராயரும், மேதினியாரும் மாறுவேடமணிந்த இரட்டபாடி ஒற்றனைப் பிடித்து வருகின்றனர். அவர்கள் பின் பூங்கோதையும் வந்து இராசராசனை வணங்குகிறாள்.

ஒற்றர்களிடமிருந்து இரு ஓலைகளையும் வாங்கி மதுராந்தகர் படித்துப் பார்க்கிறார். அவற்றுள் ஒன்று சத்தியாசிரயன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வர நாள் குறித்து, பாலதேவருக்கு எழுதிய ஓலை, மற்றொன்று சோழ நாட்டுப் போர் வீரர்கள் எண்ணிக்கை, கோட்டை மதில்களின் சுற்றளவு, சோழ நாட்டுப் பொருளாதார நிலை, உணவு சேமிப்பு முறை ஆகியவை குறித்துப் பாலதேவர் சத்தியாசிரயனுக்கு எழுதியது. அவ்விரண்டு ஓலைகளையும் மதுராந்தகர் இராசராசனிடம் கொடுக்கிறார். அவையோர் அனைவரும் இச்செய்தியை அறிந்து அதிர்ச்சி அடைகின்றனர். ஆனால் இராசராசன் இவையெல்லாம் தமக்கு முன்பே தெரியும் என்பது போல் புன்முறுவல் பூக்கின்றான்.

இராசராசன், “பாலதேவர் நம்பிக்கைத் துரோகி என்பது தெரிந்திருந்தும் விமலாதித்தன் குந்தவி திருமணம் மூலம் ஏற்பட உள்ள புதிய இணைப்பின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்வதற்காகவே இவ்வளவும் நடப்பதை அனுமதித்தேன்” என்று கூறுகிறான்.

மேலும், “விமலாதித்தன் சுதந்திரப் பற்று உள்ளவனா என்பதையும், சுதந்திரத்திற்காகக் காதலையும் பொருட்படுத்தாத வீர உள்ளம் அவனிடம் உள்ளதா? என்பதையும் சோதிப்பதற்காகவே போரை ஏற்படுத்தி, அதில் உயிர்ச்சேதம் ஏற்படக் கூடாது என்பதற்காகத் துறவியாக வந்து தனிவாட்போர் புரியச் செய்தேன்” என்று கூறினான்.

விமலாதித்தனுக்கும் குந்தவிக்கும் உள்ள காதல் ஆழமானதா? என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே குந்தவியைச் சோதித்தேன். இராசேந்திரன் மாபெரும் சோழப் பேரரசிற்கு வருங்கால மன்னனாக

குறிப்பு

விளங்கக் கூடியவன். அதனால் அவன் நட்பு, காதல், பாசம் என்ற உணர்ச்சிகளின் முன்னும் தேசநலனைக் கைவிடாதவனாக இருத்தல் வேண்டும். இவற்றை உணர்த்துவதற்காகவே இராசேந்திரனைச் சோதித்தேன்.

வீரமாதேவி இராசேந்திரனைக் காதலிப்பது வீரக்காதலா? அல்லது வெறும் அரச போகத்திற்காகவா? என்பதை அறியவும் தேச நலனுக்காக எதையும் தியாகம் செய்வாளா என்பதை அறியவும் அவளைச் சோதித்தேன். இவ்வாறு இராசராசன் ஒவ்வொருவரையும் சோதித்ததற்கான காரணங்களைக் கூறுகிறான். பாலதேவரை ஒற்றாய்வதற்காக தன்னால் நியமிக்கப்பட்டவளே பூங்கோதை என்கிறான். பாலதேவரிடம் இரண்டு ஓலைகளையும் கொடுத்து அவருக்குச் சத்தியாசிரயன் கொடுத்த குத்துவாளையும் கொடுத்து அதனாலேயே தற்கொலை செய்து கொள்ளுமாறு கூறிக் காவலர்களோடு அனுப்புகிறான். விமலாதித்தனுக்கும், குந்தவிக்கும் திருமணம் உறுதி செய்யப்படுகிறது.

இறுதியில் இராசராசன் நாடக ஆசிரியரை அழைத்து, தன்னைப் பற்றிய நாடகத்தை எழுதுமாறு கூறுகிறான். அவன் எழுதவிருக்கும் நாடகத்தை ஒவ்வொரு வைகாசிப் பெருவிழாவிலும் தஞ்சைப் பெரிய கோவிலில் நடிக்க ஏற்பாடு செய்கிறான். அதற்காக ஆண்டுதோறும் நூற்றிருபதின் கல நெல் நிவந்தம் ஏற்படுத்துகிறான்.

மேதினிராயர் விமலாதித்தனையும் குந்தவியையும் “வாழ்க வீரமும் காதலும்” என வாழ்த்துகிறார்.

திரைக்குப் பின்னால், “இராசராச சோழனுக்குப் பிறகு இராசேந்திரனின் சபதம் நிறைவேறியது. அவன் பெயரால் தென்னாட்டில் கங்கை கொண்ட சோழபுரமும், சோழகங்கம் ஏரியும் உண்டாயின. அவன் புகழ் கங்கையையும் தாண்டி கடலும் கடந்து மலேயா, ஜாவா, சுமத்திரா தீவுகளிலும் பரவியிருந்தது. தமிழரின் கடல் வாணிகம் சீனா வரை நடந்தது….அன்பர்களே …… அது தமிழர் தலைநிமிர்ந்து நின்ற காலம், தமிழ்நாட்டின் பொற்காலம்” என ஒரு குரல் ஒலிக்கிறது.

### 13.8 நாடகக் கதைக்கோப்பு

நாடகக் கதைக்கோப்பு என்பது நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியைக் குறிப்பதாகும். நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக

அமைவதோடு அடுத்து வரும் நிகழ்ச்சி முன் நிகழ்ச்சியின் விளைவாகவும் இருத்தல் வேண்டும். கதையில் ஒரு முரணைத் தோற்றுவித்து அதைச் சிக்கலுடையதாகவும், அச்சிக்கல் முடிவுறும்படியு், நிகழ்ச்சிகளைக் காரண காரியத் தொடர்புகள் விளக்குவது கதைக் கோப்பாகும். இது ஒருமைப்பாடுடையதாகவும் நம்பத்தக்கதாகவும் இருத்தல வேண்டும். இக்கதைக்கோப்பு தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு என ஐந்து பகுதிகளாக அமையும்.

**13.8.1 தொடக்கம்**

பொதுவாக நாடகத் தொடக்கம் நிகழ்ச்சிகளின் தொடக்கமாகவோ கதைமாந்தர் அறிமுகமாகவோ முரண் தொடக்கமாகவோ இடம்பெறும். இந்நாடகத்தின் தொடக்கம் தஞ்சை அரண்மனையின் காலை நேரக் காட்சி வருணனையாக அமைகிறது. அரண்மனை மேன்மாடத்தில் ஒரு புறம் உள்ள தமிழன்னையில் சிலை வருணிக்கப்படுகிறது. அவ்வருணணை, "மேன்மாடத்தின் ஒரு புறம் பெரியதொரு தமிழன்னையின் சிலை. அதன் கால்களில் சிலம்புகள், இடையில் மணிமேகலை, கைகளில் வளையல்கள், கழுத்தில் சிந்தாமணி, காதுகளில் குண்டலங்கள், உதடுகளில் குமிழ்சிரிப்பு" (ப.17) எனத் தொடங்குகிறது. மேலும் மேன்மாடத்தில் இராசராசன் தம் பரிவாரங்களுடன் நிற்றலும் அவனை வாழ்த்தும் வாழ்த்தொலிகள் எங்கும் கேட்டலும் ஒரு சதுரக்கல்லில் சிற்பி ஒருவன் இராசராசனின் மெய்க்கீர்த்தியைப் பொறிப்பதுமாகிய நிகழ்ச்சிகளாக இத்தொடக்கம் அமைந்துள்ளது.

இந்நிலையில் இராசராசன், "இராசராசன் என்னும் என் மெய்க்கீர்த்தி எங்கும் பரவுகின்றது என்றால் சோழர்களின் சூரியோதயம் துவங்கி விட்டது என்றும் அர்த்தம்" (ப.18)எனப் பேசுவது பாத்திர அறிமுகத்துடன் கூடிய முதல் பேச்சாகும். இராசராசன் அமைச்சர்களில் ஒருவரான மதுராந்தக மூவேந்த வேளார் வாழ்க்கையை நாடகமாக எழுத விரும்புவதாகக் கூறுவதும் அதற்கு இராசராசன் என் வாழக்கையை உடன் இருந்து பார்த்து, பிறகு எழுதலாம் எனக் கூறுவதும் இத்தொடக்க நிலையில் அமைகின்றன.

மதுராந்தகர் இராசராசனிடம், "நம்முடைய வடவேங்கடத்துக்கு அப்பால் வேங்கிநாடு. வேங்கி நாட்டின் வழியாகத்தான் இரட்டபாடி

குறிப்பு

சத்தியாசிரயனோ, கங்கை மன்னர்களோ நம் நாட்டிற்குள் நுழைய முடியும். வேங்கி நாடு நம் சோழ சாம்ராஜ்யத்திற்குத் தலைவாசல் போல நாம் நம்முடைய வாசலைப் பலப்படுத்த வேண்டும்" (ப.21) என்கிறார். அதற்கு இராசராசன், "வேங்கி நாட்டைப் பலப்படுத்துவது மட்டுமன்று அமைச்சரே! வேங்கி வேந்தனுக்கும் நமக்குமுள்ள உறவைக்கூட பலப்படுத்த வேண்டும் என்கிறான். இவ்வாறு வேந்தனுடனான உறவைப் பலப்படுத்துவதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் நாடக முரணாக அமைகிறது.

**13.8.2 வளர்ச்சி**

முரணைத் தொடக்கத்திலிருந்து படிப்படியாக வளர்ப்பதற்காக இப்பகுதி அமையும். இந்நாடகத்தில் பதினாறாவது காட்சியின் பாதி வரை உள்ள பகுதி நாடக வளர்ச்சிப் பகுதிகளாக உள்ளன.

வேங்கி நாட்டில் மூத்த பரம்பரைக்கும் இளைய பரம்பரைக்கும் அரசுரிமைப் போர் ஏற்படுகிறது. அதில் இராசராசன் மூத்த பரம்பரையைச் சேர்ந்த சக்திவர்மனுக்குத் துணையாக இராசேந்திரனையும் படையையும் அனுப்புகிறான். சக்திவர்மனை வேங்கி நாட்டுக்கு மன்னனாக்குகிறான். சக்திவர்மன் தம்பி விமலாதித்தனுக்குத் தன் மகள் குந்தவியைத் திருமணம் செய்து வைத்து உறவைப் பலப்படுத்த நினைக்கின்றான்.

இராசேந்திரனும் மதுராந்தக வேளாரின் தங்கை வீரமாதேவியும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர். அதுபோல, குந்தவியும் விமலாதித்தனும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர்.

இரட்டபாடி நாட்டைச் சேர்ந்தவர் பால தேவப் பட்டரையர். இவர் இராசராசனின் நம்பிக்கைக்குரிய இராசதந்திரி. இவரும் இரட்டபாடி மன்னன் சத்தியாசிரயனும் சேர்ந்து சோழநாட்டுக்கும் வேங்கி நாட்டுக்கும் விரோதத்தை உண்டாக்கிப் போரை ஏற்படுத்தவும் குந்தவி விமலாதித்தன் திருமணத்தைத் தடுக்கவும் சத்தியாசிரயன் மகனுக்குக் குந்தவியைத் திருமணம் முடிக்கவும் சதித்திட்டங்களைத் தீட்டுகின்றனர். பாலதேவரைப் பூங்கோதை என்னும் பணிப்பெண் பின் தொடர்கிறாள்.

வேங்கி நாட்டில் சக்திவர்மனுக்குப் பிறகு விமலாதித்தன் மன்னனாகிறான். நாட்டின் பாதுகாப்புக்காகப் படை திரட்டுகின்றான். விமலாதித்தன் படை திரட்டுவதைக் காரணம் காட்டி வேங்கி நாட்டில் சோழரது நிலப்படையை நிறுத்த வேண்டும் எனப் பாலதேவர் ஆலோசனை கூறுகிறார். இராசராசனும் விமலாதித்தனை அழைத்து

குறிப்பு

நிலப்படையை நிறுத்த நினைத்திருப்பதைக் கூறுகிறான். அதற்கு விமலாதித்தன் உடன்பாடாது மறுக்கின்றான். இராசராசன் குந்தவியை நினைவுபடுத்துகின்றான். அப்பொழுதும் விமலாதித்தன் மறுத்து விடுகின்றான்.

“விமலாதித்தன் குந்தவியை உண்மையிலேயே காதலிக்கவில்லை. அவன் சோழ நாட்டையே விரும்புகின்றான்” எனப் பாலதேவர் இராசராசனிடம் கூறி மனக்கசப்பை வளர்க்கிறார். குந்தவியும் விமலாதித்தன் தன்னை விரும்பவில்லை என நம்பச் செய்கிறார்.

விமலாதித்தன் மேல் உள்ள காதலை மறக்கக் குந்தவி நடனப்பயிற்சி மேற்கொள்கிறாள். தஞ்சைப் பெரிய கோயிலில் நடன அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. விமலாதித்தனைத் தவிர மற்ற அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்படுகிறது. விமலாதித்தன் தனக்கு அழைப்பு இல்லையென்றாலும் கலைஞன் என்ற முறையில் நடன அரங்கேற்றத்திற்கு வர முடிவு செய்கிறான்.

தன் நண்பன் விமலாதித்தனுக்கு அழைப்பு அனுப்பாமையால் இராசேந்திரன் நடன அரங்கேற்றத்திற்குச் செல்ல விரும்பாமல் கருவூர்ப் பாசறைக்குச் சென்று விடுகிறான்.

குந்தவி நடன அரங்கேற்றத்திற்குரிய கோலத்துடன் வருகிறாள். விமலாதித்தன் எதிர்ப்படுகிறான். அவனைப் பார்க்காதவள் போல் குந்தவி சென்று விடுகிறாள். நடனத்தின் போது விமலாதித்தனின் நினைவால் குந்தவையின் நடனத்தில் பிழை ஏற்படுகின்றது. இப்பிழையைக் கண்ட விமலாதித்தன் நடனத்தை நிறுத்துமாறு கூறுகின்றான்.

பாலதேவர் இராசராசனிடம், “விமலாதித்தன் குந்தவியையும் உம்மையும் சேர்ந்து அவமதித்து விட்டான்” என்று கூறிப் பகையைத் தூண்டுகிறார்.

இவ்வாறு சோழ நாட்டுக்கும் வேங்கி நாட்டுக்கும் பகை ஏற்படும் நிலையை இராசராசனுக்கும் விமலாதித்தனுக்கும் மனமுறிவு ஏற்படும் நிலையும் நாடக வளர்ச்சிப் பகுதிகளாக அமைந்துள்ளன.

**13.8.3 உச்சம்**

காட்சி பதினாறின் பிற்பகுதி நாடகத்தின் உச்சமாகும். விமலாதித்தன் பாலதேவரைக் குள்ளநரி என்கிறான். அவரை அவமதித்ததைத் தாங்காத இராசராசன் தன்னையே அவமதித்து விட்டதாக நினைக்கிறான். அதனால் ஏற்படும் கோபத்தில்

விமலாதித்தனைத் தனக்குத் திறை செலுத்துமாறு ஆணையிடுகிறான். விமலாதித்தன் அதற்குப் பணிய மறுத்ததால், "இன்று பதினோராவது நாள் வேங்கி நாட்டின் மீது இராசேந்திரன் படையெடுத்து வருவான்" எனக் கூறுகிறான். விமலாதித்தனும் போரில் சந்திப்பதாகக் கூறிச் செல்கிறான். இவ்வாறு சோழப்படையும் வேங்கிப்படையும் போரில் சந்தித்தல் சத்தியாசிரயனும் பாலதேவரும் விரும்பியபடி நடக்கவிருப்பதால் இதுவே இந்நாடகத்தின் உச்சமாகும்.

### 13.8.4 வீழ்ச்சி

நிகழ்ச்சிப் போக்கு முடிவை நோக்கிச் செல்வது நாடகத்தின் வீழ்ச்சிப் பகுதியாகும். இப்பகுதியில் நாடகத் தலைமை மாந்தருக்கு ஏற்படும் இன்னல்கள், இடர்ப்பாடுகள், தவறான எண்ணங்கள் ஆகியன ஒவ்வொன்றாக நீங்கும் இந்நாடகத்தின் வீழ்ச்சிப் பகுதி 39ஆவது காட்சி வரை உள்ளது. இப்பகுதி முரண்பாடுகளில் ஏற்பட்ட சிக்கல்கள் நீங்குவதாக அமைந்துள்ளது.

இராசேந்திரன் தன் நண்பனுக்கு எதிராகப் படைத் தலைமை ஏற்றுச் செல்ல விரும்பவில்லை என்பதை வீரமாதேவியிடம் கூறுகிறான். அப்பொழுது இராசராசனும் பாலதேவரும் வருகின்றனர். இராசராசனிடமும் இராசேந்திரன் தன் நண்பனுக்கு எதிராகப் போர்த் தலைமை தாங்கிச் செல்ல விரும்பாமையைக் கூறித் தன் வாளையும் கொடுக்கிறான். இராசேந்திரன் வீரமாதேவியைக் காதலிப்பதால்தான் கோழையாகி விட்டான் எனப் பாலதேவர் கூறுகிறார். இதைக்கேட்டு வியப்படையும் இராசராசன்வீரமாதேவியைக் கொண்டே இராசேந்திரனைப் போருக்கு அனுப்ப நினைக்கின்றார். இராசேந்திரன் கொடுத்த வாளை வீரமாதேவியிடம் கொடுத்து இராசேந்திரன் கையில் அலங்கரிக்கச் செய்யுமாறு கூறுகிறார். வீரமாதேவி இராசேந்திரனைக் காதலித்ததற்கு வெட்கப்படுவதாகக் கூறி அவன் படைத்தலைமை ஏற்க மறுத்தால் தாமே செல்ல இருப்பதாகக் கூறுகிறாள். இதைக் கேட்கப் பொறுக்காத இராசேந்திரன் அவள் கையில் இருந்த வாளைப் பறித்து, தானே போருக்குப் படைத்தலைமை ஏற்பதாகக் கூறுகிறான். இராசேந்திரன் சென்ற பிறகு இராசராசன் வீரமாதேவியின் தியாகத்தைப் பாராட்டுகிறாள்.

பாலதேவரைச் சந்திக்க வரும் சத்தியாசிரனின் ஒற்றன் அவன் கொடுத்தனுப்பியதாக அவன் இலச்சினை பொறித்த ஒரு குத்துவாளைக்

குறிப்பு

கொடுக்கிறான். பாலதேவர் அது தேவையில்லை எனத் தூக்கி எறிகிறார். பூங்கோதை பூசைப்பொருட்களுடன் குத்துவாளையும் சேர்த்து எடுத்துச் செல்கிறாள்.

இராசேந்திரன் போருக்குப் புறப்படுகிறான். குந்தவி இராசேந்திரனிடம், "விமலாதித்தன் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டு விடக்கூடாது. அவன் உயிர் போனால் என் உயிரும் போய்விடும்" என்கிறாள். இராசேந்திரனும் விமலாதித்தனை உயிருடன் பிடித்து வருவதாக உறுதி கூறிச் செல்கிறான்.

வேங்கி நாட்டின் எல்லைப்புறத்தில் பாசறையில் இருக்கும் விமலாதித்தனிடம் இராசராசன் துறவி வேடத்தில் சென்று பேரழிவைத் தவிர்க்க இராசேந்திரனுடன் தனி வாட்போர் நிகழத்துமாறு கூறுகிறான்.

இராசேந்திரனும் விமலாதித்தனும் தனி வாட்போர் புரிகின்றானர். இராசேந்திரன் குந்தவிக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக விமலாதித்தன் சரணடைகிறான். இராசேந்திரன் விமலாதித்தனைச் சிறை செய்து தஞ்சைக்கு அழைத்து வருகிறான்.

இராசராசன் பாலதேவரின் ஆலோசனைப்படி விமலாதித்தனைப் புலிக்கூண்டில் அடைக்கிறான். புலிக்கூண்டில் இருக்கும் விமலாதித்தனைக் குந்தவி சந்திக்கிறாள். இருவரும் மனம் திறந்து பேசுகின்றனர். எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பாலதேவரின் சூழ்ச்சியே காரணம் என விமலாதித்தன் குந்தவியிடம் கூறுகிறான். பாலதேவர் ஆலோசனைப்படி இராசராசன் விமலாதித்தனைப் பாதாளச் சிறையில் அடைக்கிறான்.

குந்தவி இராசராசனிடம் விமலாதித்தனைத் திருமணம் செய்து வைக்குமாறு கேட்கிறாள். இராசராசன், "நாடிழந்து சிறையில் இருப்பவனுக்கு உன்னைத் திருமணம் செய்து கொடுக்க மாட்டேன்" என்கிறான். குந்தவி பிடிவாதமாக விமலாதித்தனையே திருமணம் செய்து கொள்வேன் என்கிறாள். விமலாதித்தன் சோழ நாட்டுக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகி, வேங்கி நாட்டின் சோழரது நிலப்படையை நிறுத்தச் சம்மதித்தால் அவளை விமலாதித்தனுக்குத் திருமணம் செய்து வைப்பதாக இராசராசன் கூறுகிறான். அவ்வாறு விமலாதித்தன் அடிமையாவது தனக்கு விருப்பமில்லை எனக் குந்தவி கூறுகிறாள். இராசேந்திரனும் அதனை ஆமோதிக்கிறான்.

பாலதேவர் குந்தவியை இரட்டபாடி மன்னர் மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்கிறார். குந்தவி விமலாதித்தனைத் தவிர வேறு

யாரையும் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்கிறாள். அரசியல் நெருக்கடி தேவையானால் குந்தவியின் திருமணத்தையும் ஓர் அற்ப விசயமாக மதிக்கத் தயங்க மாட்டேன் என இராசராசன் கூறுகிறான்.

குறிப்பு

குந்தவி குந்தவையாரிடம் பாதாளச் சிறையிலிருந்து கோயிலுக்குச் சுரங்க வழி இருப்பதை அறிந்து கொள்கிறாள். இச்செய்தியை விமலாதித்தனிடம் கூறி இறைவன் முன்னிலையில் திருமணம் செய்து கொள்ளலாம் என அவனை வரச்சொல்கிறாள்.

இரட்டபாடி ஒற்றனைப் பூங்கோதையின் காதலன் என நினைத்து முத்துப்பல் கவிராயரும் மேதினியாரும் பின் தொடர்கின்றனர்.

குந்தவியும் விமலாதித்தனும் தஞ்சைப் பெருவுடையார் இறைவன் முன் மனம் சாட்சியாக தமிழ் வேள்வியாக திருமண உறுதி செய்து கொள்ள முற்படுகின்றனர். அந்தச் சமயத்தில் இராசராசனும் பாலதேவரும் மதுராந்தகரும் விரைந்து வருகின்றார். இராசராசன் குந்தவி விமலாதித்தனுக்குச் சுரங்க வழியைக் கூறியது தேச துரோகம் எனக் கோபம் கொள்கிறான். விமலாதித்தனிடம் தனக்குப் பணிந்து திறை செலுத்துவதாக ஒப்புக் கொண்டால் குந்தவியைத் திருமணம் செய்து கொடுப்பதாகக் கூறுகிறான். அதற்கு மறுக்கவே குந்தவியைத் திருமணம் செய்து கொடுக்க முடியாது என்கிறான்.

பாலதேவர் இரட்டபாடி மன்னன் மகனைக் குந்தவி திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறார். இராசராசனும் அமைதியாக இருக்கிறான். குந்தவி விமலாதித்தனைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ள முடியாது என்கிறாள். விமலாதித்தனை மீண்டும் சிறைக்கு இழுத்துச் செல்கின்றனர்.

குந்தவி விமலாதித்தனைத் திருமணம் செய்து கொள்ளக் குந்தவையாரின் உதவியை நாடுகிறாள். குந்தவையார் இராசராசனை அழைத்து, குந்தவியின் திருமணம் குறித்துக் கேட்கிறார். இராசராசன் அரசியல் சூழலைக் கூறிக் குந்தவியை சத்தியாசிரயன் மகனுக்குத் திருமணம் செய்து வைப்பதே சரி என்கிறான். அவனது முடிவை ஏற்க மறுக்கும் குந்தவி இளவரசிக்குரிய சின்னங்களைத் துறந்து விமலாதித்தனைத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்கிறாள். இராசராசன், "குந்தவி என் இரத்தத்தில் பிறந்திருந்தால் இவ்வாறு இளவரசி பதவியைத் துறந்திருக்க மாட்டாள்" என்கிறான். குந்தவி மீண்டும் இளவரசிக்குரிய சின்னங்களை ஏற்றுக் கொண்டு போராட முடிவு

செய்கிறாள். இராசராசன் குந்தவி திருமணம் குறித்துக் குந்தவையாரே முடிவு செய்யட்டும் எனக் கூறிச் செல்கிறான்.

சிறையில் உள்ள விமலாதித்தனிடம் குந்தவி அவன் சிறையை விட்டு வெளியேறவும், தன்னை முறைப்படித் திருமணம் செய்து கொள்ளவும் ஒரு வழி கூறுகிறாள். தன் காதலுக்காக அதனைச் செய்ய வற்புறுத்துகிறாள். அதற்கு விமலாதித்தனும் சம்மதிக்கிறான்.

இராசராசனின் பிறந்த நாளான திருச்சதய நாளில் அரசியல் குற்றவாளிகள் விடுதலை செய்யப்படுகின்றனர். அந்நாளில் பாவலரும் பாணரும் வாணரும் வந்து அரசர் புகழ் பாடி பரிசில் பெறுகின்றனர். அவர்களுள் ஒருவனாக விமலாதித்தனும் வந்து இராசராசனிடம் குந்தவியைப் பரிசாகக் கேட்கிறான்.

இவ்வாறு வீழ்ச்சிப் பகுதி வளர்ச்சிப் பகுதியில் ஏற்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு கூறுவதாக அமைந்துள்ளது.

### 13.8.5 முடிவு

பொதுவாக நாடகத்தின் முடிவு இன்பியலாகவோ துன்பியலாகவோ அமையும். இந்நாடகத்தின் முடிவு இன்பியலாக அமைந்துள்ளது. இந்நாடகத்தின் முப்பத்து ஒன்பதாவது காட்சி முடிவுக் காட்சியாகும்.

விமலாதித்தன் இராசராசனிடம் குந்தவியைப் பரிசாகக் கேட்டதும் முதலில் மறுத்தாலும் பிறகு மரபு கருதிப் பரிசாகக் கொடுக்க இராசராசன் சம்மதிக்கிறான். குந்தவியை விமலாதித்தனுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்கின்றனர்.

எதிர்நிலைப் பாத்திரமாகிய பாலதேவர் தண்டனை பெறுவதும் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது. முத்துப்பல் கவிராயரும் மேதினியாரும் இரட்டபாடி ஒற்றனைப் பிடித்து வருகின்றனர். பூங்கோதையும் உடன் வந்து இராசராசனை வணங்குகிறாள். ஒற்றனிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஓலைகளையும் இராசராசன் முன் ஒப்படைக்கின்றனர். அதில் பாலதேவர் சத்தியாசிரயனுக்கும், சத்தியாசிரயன் பாலதேவருக்குமாக எழுதிய இரு சதி ஓலைகள் இருத்தலைக் கண்டு அவையோர் திடுக்கின்றனர். இராசராசன் பாலதேவர் நம்பிக்கைத் துரோகி என்பது தனக்கு முன்பே தெரியும் என்பது போல் புன்முறுவல் பூக்கின்றான். வேங்கி நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் ஏற்படும் நட்புறவின் அவசியத்தையும் விமலாதித்தன் சுதந்திரப் பற்றுள்ளத்தையும் குந்தவியின் காதல் ஆழத்தையும், இராசேந்திரனின் நாட்டுப்பற்றையும்,

விமலாதேவியின் தியாக உணர்வையும் அறிந்து கொள்வதற்காகவே இவ்வளவும் நடப்பதற்கு அனுமதித்தேன் என்று இராசராசன் கூறுகிறான்.

குறிப்பு

பாலதேவரை ஒற்றாய்வதற்காக தன்னால் நியமிக்கப்பட்டவளே பூங்கோதை என்று கூறிப் பாலதேவரிடம் இரண்டு ஓலைகளையும் சத்தியாசிரியன் ஒற்றனிடம் முன்பு கொடுத்தனுப்பிய குத்துவாளையும் கொடுத்து அதனாலேயே தற்கொலை செய்து கொள்ளுமாறு கூறிக் காவலர்களோடு அனுப்புகிறான்.

இறுதியில் நாடக ஆசிரியரை அழைத்த தன்னைப் பற்றி நாடகம் எழுதக் கூறி, அதனை ஆண்டுதோறும் ஒவ்வொரு வைகாசிப் பெருவிழாவில் நடிப்பதற்கு நிவந்தம் விடுகிறான்.

இவ்வாறு இந்நாடகம் தொடக்கம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகிய பகுதிகளைக் கொண்டதாகக் கட்டுக்கோப்புடன் அமைந்துள்ளது.

### 13.9 பாத்திரப்படைப்பு

ஷேக்ஸ்பியர் உன் விருப்பப்படியே ‘As you like it’ என்ற நாடகத்தில், “உலகத்தை நாடக அரங்காகவும், மக்களை நடிகர்களாகவும், வாழ்க்கை அனுபவங்களை நாடகக் கதையாகவும், மக்களின் ஏழு பருவங்களை நாடகத்தின் ஏழு அங்கங்களாகவும்…” என்று குறிப்பிடுவார்.

அகிலன், “படைப்பாளியின் மன ஓட்டத்திலிருந்து புறப்படும் உயிர்த்துடிப்பே பாத்திரப்படைப்பு” என்பார்.

“பாத்திரப்படைப்பு தான் நாடகத்தின் வெற்றி. நாடகக் கதை ஒரு முழு உருவம். கண், காது, மூக்கு முதலிய உறுப்புகள் பாத்திரங்கள். உறுப்புகளில் ஊனமிருந்தால் உருவம் அழகு பெறாது. உறுப்பினர்களின் படைப்பு சரியில்லாவிட்டால் நாடகம் அழகு பெறாது” என்பார் அவ்வை தி.க.சண்முகம்.

#### 13.9.1 இராசராசன்

இந்நாடகத்தில் இராசராசன் முதற்காட்சியிலேயே அறிமுகப்படுத்தப்படுகிறான். “இராசராசன் என்னும் என் மெய்கீர்த்தி எங்கும் பரவுகிறது என்றால் சோழர்களின் சூரியோதயம் துவங்கிவிட்டது என்றுதான் அர்த்தம்” (ப.18) என இராசராசனே தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

குறிப்பு

இராசராசன் இந்நாடகத்தில் சிறந்த இராசதந்திரியாக விளங்குகிறான். பாலதேவர் இரட்டபாடி மன்னன் சத்தியாசிரயனின் ஒற்றன் எனத் தெரிந்தும் தன் அரண்மனையில் மந்திரியாக்கி அவர் ஆலோசனைப்படியே விமலாதித்தனை எதிர்ப்பதும் சிறை செய்வதும், குந்தவி, இராசேந்திரன், வீரமாதேவி ஆகியோரைச் சோதிப்பதுமாகிய செயல்களைச் செய்கிறான். இறுதியில் பாலதேவரின் சூழ்ச்சி வெளிப்படும்போது தன்னைச் சிறந்த இராசதந்திரியாக வெளிப்படுத்திக் கொள்கிறான்.

ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் வந்து செல்லும் இரட்டபாடி மன்னன் சத்தியாசிரயன் மற்றும் அவனது ஒற்றன் ஆகியோரைக் கண்காணிக்கப் பூங்கோதையைப் பாலதேவரின் பணிப்பெண்ணாக நியமிப்பதும் இராசராசனின் இராசதந்திரத்தை விளக்குவதாகும்.

விமலாதித்தனோடு இராசேந்திரன் செய்யும் போரில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக துறவியாகச் சென்று இராசேந்திரனுடன் வாட்போர் புரியுமாறு ஆலோசனை கூறுவதும் இராசராசனின் இராசதந்திரத்திற்குச் சான்றாகும். இவ்வாறு இராசராசன் சிறந்த இராசதந்திரியாகச் செயல்பட்டமையை இராசராசனே இறுதியில் தெரிவிக்கும் கூற்றுக்கள் விளக்கும். இராசராசன் பாலதேவரை, "நம் பகைவன் சத்தியாசிரியனுக்கு இவர் ஒற்றர். உதட்டில் நட்பும் உள்ளத்தில் பகையும் உள்ளவர். உறவாடியபடியே நம்மைக் கெடுக்க முயன்றவர்" (ப.129) எனக் குறிப்பிடுவது சான்றாகும்.

இராசராசன் சிறந்த சிவபக்தன் என்பதை நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தேவாரத் திருப்பதிகங்களைத் தொகுக்க முற்படுவதையும், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியமையையும் கொண்டு உணரலாம். இருப்பினும் சமயப் பொறை உடையவன் என்பதை அவன் சமணர்களையும் பௌத்தர்களையும் ஆதரிப்பதைக் கொண்டு அறியலாம். சத்திவர்மனிடம் எம்மதமும் சம்மதம் என்று நினைப்பவன் இராசராசன். "அரசியலுக்கும், மதத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை" (ப.25) என்று இராசராசன் கூறுவது இதனை மெய்ப்பிக்கும். மேலும் விமலாதித்தனிடம், "விமலாதித்தா நாகப்பட்டினத்தில் கடாரத்தரசன் புத்தபிரானுக்கு ஒரு பௌத்த விகாரம் கட்டத் தொடங்கியுள்ளான். அதற்கு நிவந்தமாக ஆனைமங்கலம் என்னும்

குறிப்பு

ஊரைப் பள்ளிச் சந்தமாகத் தந்ததோடு அதற்கு இராசராசப் பெரும்பள்ளி என என் பெயரையே வைக்கப்போகிறேன். புத்த சமயங்கள் எனக்குப் புறம்பல்ல" (ப.25) எனக் கூறுவதும் இராசராசனின் சமயப் பொதுமையை விளக்கும்.

இராசராசன் கலையார்வம் கொண்டவனாக விளங்குகிறான். இசைக்கலையில் மிகுந்த ஆர்வம் உடையவன் என்பது நம்பியாண்டார் நம்பியின் பாடலைக் கேட்டு "திருத்தொண்டர் திருவந்தாதி தித்திக்கிறது" (ப.27) என இராசராசன் கூறுவதால் புலப்படும். குந்தவியின் நடன அரங்கேற்றத்தை நிகழ்த்தி வைப்பதன் மூலம் இராசராசன் ஆடற்கலையில் ஆர்வம் மிகுந்தவன் என்பது விளங்கும். இதற்கு மதுராந்தகவர், "நங்கையெரெல்லாம் நடன கலையால் நளினம் பெற வேண்டும் என்பதற்காக… ஆலயத்தில் அருமைப் புதல்வியின் ஆடல் அரங்கேற்றம்" (ப.55) எனக் கூறுவது சான்றாகும். இராசராசன் நாடகக் கலையைப் போற்றும் பண்பாளன் என்பது நாடகாசிரியரை நாடகம் எழுதுமாறு கூறி அதனை ஆண்டுதோறும் நிகழ்த்துவதற்கு நிவந்தம் விட்டமையால் புலனாகும். இராசராசன் நாடகாசிரியரிடம், "நாடக நூலாசிரியரே, இனி நீர் என் நாடகத்தை எழுதலாம். இந்த இராசேச்வர நாடகத்தை நம் தஞ்சைப் பெரிய கோவிலிலேயே ஒவ்வொரு வைகாசிப் பெருவிழாவிலும் நடிக்க ஏற்பாடு செய்கிறேன். அந்த நாடகம் ஆடுபவருக்கு ஆண்டாண்டு தோறும் நூற்றிருபதின் கல நெல் நிவந்தம் ஏற்படுத்தப்படும். இவ்வளவும் என் புகழைப் பரப்புவதற்காக அல்ல, என் கொள்கைகளோடு நாடகக் கலை வளர்வதற்காக" (ப.135) என்று கூறுவது சான்றாகும். இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலைக் குந்தவையாரின் வேண்டுகோளின்படி கட்டியமையால் கட்டிடம், சிற்பம் ஆகிய கலைகளிலும் ஆர்வம் உடையவன் என்பது விளங்கும்.

இவற்றால் இராசராசன் சிறந்த இராசதந்திரியாகவும் சமயப் பொதுமை உடையவனாகவும் கலையார்வம் மிக்கவனாகவும் படைக்கப்பட்டுள்ளமை புலனாகும்.

### 13.9.2 விமலாதித்தன்

விமலாதித்தன் வேங்கி நாட்டு இளவரசன். சக்திவர்மனின் தமையன். சக்திவர்மனுக்குப் பிறகு வேங்கி நாட்டு மன்னனாக முடிசூட்டப்படுபவன். குந்தவியின் காதலன். இராசேந்திரனின் உயிர்

நண்பன். இத்தகைய விமலாதித்தன் முதற்காட்சியின் இறுதியில் அறிமுகப்படுத்தப்படுகிறான். இராசராசன் விமலாதித்தனின் அண்ணன் சக்திவர்மனை வேங்கி நாட்டு மன்னனாக முடிசூட்டப் போகும்போது, "என் தமையன்தலையை அலங்கரிக்கப் போகும் இந்த மகுடம் எந்த முறையில் சூட்டப்படுகிறது என்பதை அறிவித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்" (ப.24) எனக் கேட்பது விமலாதித்தனின் முதல் பேச்சாக அமைகிறது. இப்பேச்சு விமலாதித்தனின் சுதந்திரப் பற்றுள்ளத்தையும் துடுக்குத்தனத்தையும் விளக்குவதாகும்.

குறிப்பு

சக்திவர்மன் இராசராசனிடம், "இராசராசசோழதேவர் என் தம்பியை மன்னிக்க வேண்டும். விமலாதித்தன் கொஞ்சம் வாய்த்துடுக்கு உள்ளவன். என்னால் அவன் வாயை அடக்கவே முடியவில்லை" (ப.25) எனக் கூறுவதும் விமலாதித்தனின் பண்பை விளக்கும்.

விமலாதித்தன் காதலினும் கடமையே பெரிது என்ற கொள்கையில் விடாப்பிடி உடையவனாக உள்ளான். "நிபந்தனையற்ற சுதந்திரத்தைத்தான் எங்கள் வேங்கி நாடு விரும்பும்" (ப.25) எனக் கூறுவது விமலாதித்தனின் கொள்கையை விளக்குவதாகும். இக்கொள்கையில் உறுதி உடையவன் என்பது, "என் குந்தவிக்காக அவள் தந்தையிடம் பணியவும் சித்தமாயிருக்கிறேன். ஆனால் என் நாட்டின் சுதந்திரத்தைப் பலியிட்டு எந்தப் பெண்ணையும் பெறச் சித்தமாயில்லை" (ப.70) எனக் கூறுவதால் விளங்கும்.

விமலாதித்தன் தனக்கு அழைப்பு வராத நிலையிலும் குந்தவியின் நடன அரங்கேற்றத்தைக் காண வருவது அவனது காதல் உள்ளத்தையும் கலை ஆர்வத்தையும் காட்டும். பாதாளச் சிறையில் இருக்கும் விமலாதித்தனைக் காணவரும் குந்தவியிடம் விமலாதித்தன், "உன் காதல்தான் என்னைச் சிறை செய்தது" (ப.88) எனக் கூறுவது அவனது காதல் உள்ளத்தை வெளிப்படுத்தும். விமலாதித்தன் தனக்கு அழைப்பு வராத நிலையில், "அழையா வீட்டிற்குள் நுழைவது அழகல்ல என்றாலும் கலைஞன் என்ற முறையில் அவள் நடனத்தைக் காண நான் அவசியம் செல்வேன்" (ப.52) எனக் கூறுவது விமலாதித்தனின் கலை ஆர்வத்திற்குச் சான்றாகும்.

குறிப்பு

விமலாதித்தன் கடமை உணர்வு மிக்கவனாக உள்ளான். அவன் குந்தவியைப் பிரிந்து வேங்கி நாட்டுக்குச் செல்ல வேண்டிய நிலையில், "எந்நாட்டின் நிலைமை அப்படி, புதிதாக உரிமை பெற்ற நாடு, பொறுப்புள்ளவன் போயே தீர வேண்டும்" (ப.35) எனக் கூறுவது இதனை விளக்கும்.

விமலாதித்தன் இராசேந்திரனிடம் சரணடைவது அவனது நட்புள்ளத்தைக் காட்டுவதாகும். விமலாதித்தன் இராசேந்திரனிடம், "இதோ வணங்காமுடி விமலாதித்தன் உன்னிடம் சிறைப்படுகிறேன்... ஒரு பெண்ணின் உயிரைக் காப்பதற்காக அல்ல, ஒரு மாவீரனின் வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக" (ப.81) என்று கூறுவதில் அவனது நட்புணர்வு விளங்கும்.

இவ்வாறு விமலாதித்தன் சுதந்திரப் பற்றுள்ளம் கொண்டவனாகவும், வாய்த்துடுக்கு மிக்கவனாகவும், காதலினும் கடமை பெரிது என்ற கொள்கை உடையவனாகவும், காதல் உணர்வு மிக்கவனாகவும், கடமை உணர்வு உடையவனாகவும், நட்புணர்வு மிக்கவனாகவும் படைக்கப்பட்டுள்ளான்.

**13.9.3 குந்தவி**

இவள் இராசராசன் மகள், சோழநாட்டு இளவரசி. இராசேந்திரனின் தங்கை விமலாதித்தனின் காதலி. இவ்வாறு இந்நாடகத்தில் வரும் குந்தவியை நாடகத் தலைவி எனலாம். இவள் புத்திக் கூர்மை உடையவளாகப் படைக்கப்பட்டுள்ளாள். இராசராசன் குந்தவியிடம், "குந்தவி உன் அண்ணனின் கத்தி முனைக்கும், உன் நாக்கு முனைக்கும் உள்ள கூர்மையை விட உன் புத்திக்குத்தான் கூர்மை அதிகம் உண்டு" (ப.134) எனக் கூறுவது இதற்குச் சான்றாகும்.

குந்தவி எண்ணியதை முடிக்கும் ஆற்றல் உடையவள். பாதாளச் சிறையில் இருக்கும் விமலாதித்தனைச் சந்திக்கச் செல்லும் குந்தவி அங்கு வந்த பாலதேவரிடம், "இளவரசி குந்தவியை நீர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. எவர் குறுக்கே நின்றாலும் இவள் எண்ணியதை முடித்தே தீருவாள்" (ப.121) எனக் கூறுவது அவளது இப்பண்பை எடுத்துரைக்கும். தன் காதலுக்காக இராசராசனிடமும், குந்தவையாரிடமும் பேசும் இடங்களும் இப்பண்பை விளக்குவதாகும்.

குறிப்பு

குந்தவி காதல் வயப்படக்கூடியவாளக உள்ளாள். குந்தவி விமலாதித்தனிடம், "இந்தக் குந்தவி உங்களுக்காகவே பிறந்தவள், வளர்ந்தவள், வாழப்போகிறவள்" (ப.33) எனப் பேசுவது அவளது காதல் உள்ளத்தையும் அதில் கொண்டுள்ள உறுதியையும் காட்டும். பாதாளச் சிறையில் இருக்கும் விமலாதித்தனிடம் குந்தவி, "வாழ்விலும் தாழ்விலும் உங்களைப் பிரியேன்" (ப.103) எனக் கூறுவதும் அவள் காதலில் கொண்ட உறுதியை மெய்ப்பிக்கும்.

குந்தவி கலையார்வம் கொண்டவள் என்பது அவள் நடனக் கலையைக் கற்றுக் கொள்வதன் மூலமாகவும் அதனை அரங்கேற்றுவதன் மூலமாகவும் விளங்கும். குந்தவி இராசராசனிடம், "காலம் முழுவதும் நடனமாடியே கழிக்கப்போகிறேன்" (ப.46) எனக் கூறுவதன் மூலம் அவள் கலை மீது கொண்ட பற்று புலனாகும்.

குந்தவி நாடகம் முழுக்கப் பேச்சிலும் செயலிலும் துடுக்குத்தனம் கொண்டவளாக விளங்குகின்றாள். இராசராசன், குந்தவையார், விமலாதித்தன், இராசேந்திரன், வீரமாதேவி, பாலதேவர் ஆகிய அனைவரிடமும் தன் துடுக்குத் தனத்தை வெளிப்படுத்துகிறாள்.

குந்தவி தன் அத்தை குந்தவையாரிடம், "அத்தை… நீங்கள் என்னைப் போல் சின்னப் பெண்ணாக இருக்கிற போது, காதலித்தீர்களா அத்தை" எனக் கேட்பதும் அதற்குக் குந்தவையார், "என்னடி எதைப் பேசுவது, எதைப் பேசக் கூடாது என்று உனக்கு ஒரு வரம்பு இல்லையா" எனக் கூறுவதும் குந்தவியின் துடுக்குத்தனமான பேச்சுக்குச் சான்றாகும். குந்தவி சத்தியாசிரயன் மகனைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என இராசராசன் கூறும் நிலையில் குந்தவி, இளவரசிக்குரிய உடைவாள், சிறுமுடி, ஆபரணங்கள் முதலானவற்றை இராசராசனின் பாதங்களில் வைத்து தன் இளவரசிப் பட்டத்தைத் தூக்கி எறிந்து பேசுவது அவளது துடுக்குத் தனமான செயலுக்குச் சான்றாகும்.

இவ்வாறு குந்தவி புத்திக்கூர்மை உடையவளாகவும், எண்ணியதை முடிக்கும் ஆற்றல் உடையவளாகவும், காதல் வயப்படக் கூடியவளாகவும், கலையார்வம் கொண்டவளாகவும், துடுக்குத்தனம் மிக்கவளாகவும் படைக்கப்பட்டுள்ளாள்.

குறிப்பு

இவற்றால் இந்நாடத்தில் வரக்கூடிய ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு வகையில் தனித்தன்மை கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளமை தெளிவாகும்.

### 13.10 நாடக உத்திகள்

நாடகம் புனையும் போது அதனுள் நுட்பங்கள் இயற்கையாக அமைதல் உண்டு. சில நுட்பங்கள் திட்டமிட்டே நாடக ஆசிரியரால் புகுத்தப் பெறும் இந்நுட்பங்கள் நாடக உத்திகள் எனக் குறிக்கப்பெறுகின்றன. இந்நாடகத்தின் தனிமொழி, குறிப்புமுரண், முடங்கல், நகைச்சுவை, மாறுவேடம் புனைதல் ஆகிய உத்திகள் அமைந்துள்ளன.

#### 13.10.1 தனிமொழி

நாடகத்தில் தனிமொழி சிறந்த உத்தியாக அமைகிறது. இரகசியச் செய்தி, சதித்திட்டம், மனப்போராட்டம் முதலிய செய்திகளை அவையினருக்கு வெளிப்படுத்துவதற்கு இவ்வுத்தியே ஏற்ற உத்தியாகும். பாத்திரங்கள் தனிமொழிகள், சில மறைச் செய்திகளையும் பாத்திரங்களின் அகப் பண்புகளையும் உணர்ந்து கொள்வதற்கு உதவும். பாலதேவர், “ஆகா கெட்டது காரியம் பகைமைக்கு மாறாக ஒற்றுமையல்லவா உருவாகிறது? சோழத்திற்கும் வேங்கிக்கும் உறவு உண்டாக்கி இரு நாடுகளையும் பலப்படுத்த முயல்கின்றான் விமலாதித்தன். இவன் அழிந்தால் தான் என் மனோரதம் வெற்றி பெறும்” (ப.87) எனக்கூறும் தனிமொழி அவரது பண்பையும் சூழ்ச்சியையும் விளக்கும்.

#### 13.10.2 குறிப்பு முரண்

நடிப்பவர் சொல்லும் சொல் அவர்க்கும் அதைக் கேட்கும் கதை மாந்தர்க்கும் விளைவிக்கும் உணர்ச்சி ஒன்றாகவும் நாடகம் காண்பவர்க்கு விளைவிக்கும் உணர்ச்சி மற்றொன்றாகவும் அமையும் போது அது குறிப்பு முரண் எனப்படும். இது நாடக மாந்தர் பேச்சில் அமையும். இராசராசன் பாலதேவரிடம், “இராசதந்திர பாலதேவப் பட்டரையரே வடதிசை நோக்கி நிற்கும் நீர் வெறும் சூன்ய வெளியைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பதேன்” (ப.19) எனக் கேட்பதில் குறிப்பு முரண் வெளிப்படுகிறது. ‘இராசதந்திர’ எனப் பாலதேவருக்குக்

குறிப்பு

கொடுக்கும் அடையில் இராசராசன் உன்னை எனக்கு நன்றாகத் தெரியும் என்னும் குறிப்பை வெளிப்படுத்துகிறான்.

**13.10.3 முடங்கல்**

நாடகக் கதைத் திருப்பத்திற்காக முடங்கல்களை உத்தியாகப் பயன்படுத்துவர். பாலதேவர் சோழருக்கு எதிராகச் செய்த செயல்கள் இரட்டபாடி மன்னனுக்காக என்பதை நிரூபிப்பதற்காக ஆசிரியர் முடங்கலுடன் கூடிய ஒற்றனைப் படைத்துள்ளார். இதனால் பாலதேவரின் சூழ்ச்சித்திறம் வெளிப்படுத்தப்படுகிறது. மதுராந்தக ஒற்றனிடமிருந்து கைப்பற்றிய இரண்டு ஓலைகளையும் இராசராசனிடம் காட்டி, செய்திகளைக் கூறுவதன் மூலம் (ப.129-130) நாடகம் முடிவுக்கு வருகிறது. பாலதேவர் நம்பிக்கைத் துரோகி என்பதைக் காட்டுவதற்கு ஆசிரியரால் படைக்கப்பட்டவையே இம்முடங்கல்கள் ஆகும்.

**13.10.4 நகைச்சுவை**

நாடகத்தைப் பார்ப்பவர் படிப்பவர் உள்ளத்தில் தோற்றுவிக்கப் பெற்ற கடுமையான உணர்ச்சி முறுக்கைத் தளர்த்துதல், நாடக நோக்கத்தை ஈடேற்றும் பாங்கை விரிவாக்குதல் ஆகியவை நகைச்சுவைக் காட்சிகளின் நோக்கமாகும். எனவே நகைச்சுவை நாடக உத்திகள் ஒன்றாக அமைகிறது. இந்நாடகத்தில் ஐந்து காட்சிகள் நகைச்சுவைக் காட்சிகளாக உள்ளன. இவற்றில் முத்துப்பல் கவிராயர், மேதினியார், பூங்கோதை ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இராசராசன் விமலாதித்தனும் குந்தவியும் சேர்ந்து செல்வதைப் பார்த்து அவர்கள் ஜோடிப் புறாக்கள் போல் செல்வதாகக் கூறி மகிழச்சியடைகிறான். அப்பொழுது முத்துப்பல் கவிராயர் பாலதேவரிடம், "ஏனையா, இராசதந்திரியாரே ஜோடிப்புறாக்கள் இருக்கும் இடத்தில் கழுகுகள் வட்டமிடுவது வழக்கமாயிற்றே, இங்கே கழுகு...? என்று கேட்டு நிறுத்துகிறார். பாலதேவரே கழுகு என்பதை உணர்த்துவதாகவும், அதே சமயத்தில் நகைச்சுவையாகவும் இப்பகுதி அமைகிறது. இவ்வாறு ஆசிரியர் பல இடங்களில் நகைச்சுவைப் பகுதிகளையும், நகைச்சுவைப் பாத்திரங்களையும் உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார்.

**13.10.5 மாறுவேடம் புனைதல்**

மாறுவேடம் புனைதல் என்பதும் நாடக உத்திகளுள் ஒன்றாகும். இதனை நாடகத்தில் விறுவிறுப்பும் திருப்பமும் ஏற்படுகிறது. இராசராசன் துறவியாக வேடம் புனைந்து விமலாதித்தனைக் காண்பதன் மூலம்

குறிப்பு

இராசேந்ததிரனுடனான பெரும்போர் தவிர்க்கப்பட்டுத் தனிவாட்போர் ஏற்படுகிறது. இந்நாடகத்தில் பாலதேவர் எதிர்பார்த்தது நடக்காமல் பெரும் திருப்பம் ஏற்படுகிறது.

இவற்றால் இந்நாடகத்தில் தனிமொழி, குறிப்புமுரண், முடங்கல்கள், நகைச்சுவை, மாறுவேடம் புனைதல் ஆகிய உத்திகள் அமைந்துள்ளமை விளங்கும்.

**13.11 நாடக நடைச்சிறப்பு**

நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப் பாங்காகும். இந்நாடகத்தில் எளியநடை அமைந்துள்ளது. படிப்பவரைக் கடைசிவரை சலிப்படையச் செய்யாமல் படிக்கத் தூண்டுகிறது. உவமைநடை, அடுக்குத்தொடர் நடை, வினாத்தொடர் நடை, இலக்கிய மேற்கோள் நடை, வருணனை நடை, பழமொழி நடை, வடசொற் கலப்பு நடை ஆகிய பல நடைகள் அமைந்து வந்துள்ளன.

**13.11.1 எளிய நடை**

படிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் எளிமையாக இருப்பது எளிய நடையின் இயல்பாகும். இராசராசன், "உரிமைக்கு வேங்கடம்! உறவுக்கு இமயம், கடலுக்கு அப்பாலும் தமிழரின் வாணிப நாகரிகம் இவையே இராசராச சோழன் அடிப்படைக் கொள்கைகள்" (ப.20) என்பது எளிய நடைக்குச் சான்றாகும்.

**13.11.2 உவமை நடை**

இந்நாடகத்தில் ஆசிரியர் பல உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். மேதினியார் முத்துப்பல் கவிராயரிடம், "தாமரை போன்ற உன் வதனம் இன்று கூம்பியிருப்பதேன்" (ப.48) எனக் கேட்பதும் படையின் அளவைக் குறிப்பதற்கு "கடல் போன்ற சேனை" (ப.62) எனக் கூறுவதும் உவமை நடைக்குச் சான்றாகும்.

**13.11.3 அடுக்குத் தொடர் நடை**

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் அடுக்கி வருவது அடுக்குத் தொடராகும். இந்நாடகத்தில் பல இடங்களில் இந்நடை இயல்பாக அமைந்து வந்துள்ளது.

சான்று

குறிப்பு

"இளவரசி குந்தவை நாச்சியாரே வருக வருக"

"போயிற்று போயிற்று கோட்டையெல்லாம் மண்ணாய் போயிற்று"

"கண்டேன் கண்டேன் கண்டேன் காரிகையை"

**13.11.4 வினாத்தொடர் நடை**

வினவுவது போல அமைவது வினாத்தொடர் நடையாகும். இந்நாடகத்தில் வினாத்தொடர் நடை மிகுதியும் பயின்று வந்துள்ளது.

சான்று

"அது யார் விமலாதித்தன்?"

"என் தந்தையின் குணம் எனக்குத் தெரியாதா?"

"இங்கே எதைத் தேடுகின்றாய்?"

**13.11.5 இலக்கிய மேற்கோள் நடை**

இலக்கியப் படைப்பாளர்கள் தம் இலக்கியத்துள் பிற இலக்கிய ஈடுபாட்டை வெளிப்படுத்துவது இயல்பு. இத்தகைய நடை இலக்கிய மேற்கோள் நடையாகும். நாடக ஆசிரியர் பாத்திரங்களின் கூற்றாகத் தம் இலக்கியப் புலமையை வெளிப்படுத்துவர். இந்நாடகத்தில் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற பல இலக்கியப் பாடல்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"எல்லாம் நம் ஊர், எல்லோரும் நம் உறவினர்" (ப.37-38) என்பதில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் புறநானூற்றுக் கருத்து வெளிப்படுகிறது. "முன்னைய போரில் தன் தமையனையும் நேற்றைய போரில் தன் கணவனையும் பறிகொடுத்தும் இன்று போர்ப்பறை கேட்டுத் தன் பச்சிளம் மகனையும் போருக்கும் பரிந்தனுப்பிய தமிழ்த்தாய் வழியில் வந்தவன் நான்" (ப.102) என்பதும் புறநானூற்றுக் கருத்தாகும். "குந்தவி, நீ யார்? நான் யார்? என் தந்தைக்கும் என் தந்தைக்கும் என் உறவு? என்பதில் "யாயும் ஞாயும் யாராகியரோ, எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்" என்னும் குறுந்தொகைக் கருத்து புலனாகும்.

**13.11.6 வருணனை நடை**

நாடகத்தில் வரும் வருணனை ஆசிரியரின் கவித்துவ ஆற்றலைக் காட்டுவதாகவும் கதையோடு பொருந்தியதாகவும் கற்பவர்க்கு விருப்பூட்டும் வகையிலும் அமைதல் வேண்டும். விமலாதித்தன் குந்தவியை, "குந்தவி வானத்துப் பட்டாடையிலிருந்து வையம் செழிக்கப் பூமியில் உதிர்ந்து

குறிப்பு

விழுந்த நட்சத்திரப்பூதான் நீ! இல்லை, பாற்கடலில் தவழ்ந்த பொன்மலை ஏறும் பைந்தமிழ் நிலா நீ! (ப.102) என வருணிப்பது வருணனை நடைக்குச் சான்றாகும்.

**13.11.7 பழமொழி நடை**

பழமொழிகளைப் பயன்படுத்தி எழுதும் நடை பழமொழி நடையாகும். இந்நாடகத்தில் "வாழையடி வாழையாக வந்த வீரவாள்" (ப.69) என்றும் முள்ளைக் கொண்டே முள்ளை எடுக்க விரும்பினேன்" (ப.130) என்றும் வருவன இந்நடையை விளக்கும்.

**13.11.8 வடமொழிக் கலப்பு நடை**

இராசராசன் காலத்தில் வடமொழியாளர்களுக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது. அதைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் வடமொழியைக் கலந்து எழுத்து நடையைப் பயன்படுத்தியுள்ளார். அஸ்தமனம், விஷயம், வாஞ்சை, அம்சத்தூளிகாமஞ்சம், திக்விஜயம், சிரசாசனம் போன்ற சொற்கள் வடமொழிக் கலப்பு நடைக்குச் சான்றாகும்.

இவ்வாறு ஆசிரியர் நாடகம் நடைபெறும் காலத்தையொட்டிய நடையைப் பயன்படுத்தியுள்ளார்.

## 13.12 நிறைவாக

வரலாற்று நாடகத்தின் கட்டமைப்பு மற்றம் அரு.ராமநாதன் பற்றிய குறிப்புகள், படைப்புகள், இராசராசன் பற்றிய உண்மை வரலாறு, நாடகப் பாத்திரங்கள், நாடக அமைப்பு, நாடகம் நிகழும் இடம், நாடகத்தின் கதைச் சுருக்கம், நாடகக் கதைக் கோப்பு, நாடகத்தில் இடம்பெற்றிருக்கும் இன்றியமையாத பாத்திரப்படைப்புகள், அரு.ராமநாதன் பயன்படுத்திய நாடக உத்திகள், அவரின் நடைச்சிறப்பு ஆகியவற்றை மாணவர்கள் இப்பகுதியில் அறிகின்றனர்.

## 13.13 சோதித்தறியும் வினாக்கள்

1. அரு.ராமநாதன் பற்றிக் குறிப்பு வரைக
2. இராசராசச்சோழன் நாடத்தில் இடம்பெறும் இன்றியமையாத பாத்திரப்படைப்புகளைக் கூறுக.
3. இராசராசசோழன் நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட நாடக உத்திகளை விவரிக்க.

குறிப்பு

**13.14 பயிற்சி வினா**

1. இராசராசசோழன் நாடகத்தின் கதைக்கோப்பை விளக்குக

**13.15 மேலும் படித்தறிக**

1. அரு.ராமநாதன் இராசராசசோழன்
சரித்திர நாடகம்
பிரேமா பிரசுரம்
சென்னை – 600 024

## பிரிவு-4: நாடகம், புதினம்.(நிறைவு)

## கூறு 14: சுவடுகள் நாவல்

**14. பாடஅமைப்பு:**

**14.1. அறிமுகம்- சுவடுகள் - நூலாசிரியர் குறிப்பு**

**14.1.1. நூல் குறிப்பு**

**14.1.2. படைப்புகளும் விருதுகளும்**

**14.2. நோக்கம்**

**14.3. சுவடுகள் - கதைச்சுருக்கம்**

**14.4. நாவல் விளக்கம்**

**14.5 நாவல் கரு**

**14.6 கதைப்பின்னல்**

**14.6.1 தொடக்கம்**

**14.5.2. வளர்ச்சிநிலை**

**14.5.3. உச்சம்**

**14.5.4. வீழ்ச்சி நிலை**

**14.6.5. முடிவு**

**14.7. பாத்திரப்படைப்பு – (பாத்திரங்கள் விளக்கப்பட்டுள்ளன)**

**14.8. நடைச் சிறப்பு**

**14.9. நிறைவாக:**

**14.10. சோதித்தறியும் வினாவிடைகள்**

**14.11. பயிற்சி வினா**

14.12. பொருளறிக

14.13. மேலும் படித்தறிக..

குறிப்பு

**14.1. அறிமுகம்- சுவடுகள் - நூலாசிரியர் குறிப்பு**

சுவடுகள் என்னும் நாவலின் ஆசிரியர் முனைவர் இரா. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆவர் . இவர் மதுரை மாவட்டம் எழுமலை கிராமத்தில் C.P.இராமநாதன், அலமேலு ஆகியோருக்கு **10.06.1953** இல் பிறந்தார். **கவிதா என்ற ஆறுமுகத்தம்மாள்** இவரின் உற்ற துணைவியாவார். இவருக்கு சத்யசங்கர், அரவிந்தன் என்ற இரு மகன்கள் உள்ளனர். எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., டி.ஜி.டி., ஆகியவை இவருடைய கல்வித்தகுதிகள். இவர் பி.எஸ்.ஸியில் தங்கப் பதக்கமும், எம்.ஏ., வகுப்பில் பல்கலைத் தரமும் பெற்றுத் தேர்ச்சி அடைந்தவர். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும், பின்னர் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தேர்வாணையராகப் பணியாற்றிய காலத்தில் உடல்நலக் குறைவின் காரணமாக 28.03.2008 அன்று இயற்கை எய்தினார்.

**14.1.1. நூல் குறிப்பு**

சுவடுகள் என்னும் நாவல் 1991ஆம் ஆண்டு கலைமகளில் அமரர் நாராயணசாமி ஐயர் நினைவு நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றுத் தொடர்கதையாக வெளிவந்துள்ளது.

சுவடுகள் என்னும் நாவலைப் பற்றி கலைமகள் இதழ்ஆசிரியர் எஸ்.வி.இரமணி, "சாதாரண மக்கள் எந்த ஒரு நியாயமான செயலுக்கும் அதிகாரிகளைக் கெஞ்சுவதும் லஞ்சம் கொடுப்பதும் வழக்கமாகி வருகின்றன. சுவடுகள் என்ற புதினம் கிராமச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது" என்று மதிப்புரை வழங்கியுள்ளார்.

"…காந்தி போனால் காந்தியம் அழிந்து விடுமா என்ன? காந்தியத்தின் சுவடுகள் மண்ணில் மட்டுமா உள்ளன? மக்களின் மனங்களிலும் அழியாத நிலையில் அவை படிந்துள்ளன. இந்தச் சுவடுகள் காட்டும் பாதைகள் மக்களின் வாழ்க்கை விடியலுக்கு விடிவெள்ளிகளாக நிலைத்துதான் நிற்கும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பு

கதையின் நிறைவுப் பகுதியில் வெகு பொருத்தமாக, வெகு இயல்பாக எட்டிப் பார்க்கும் இந்தச் சொற்களே சுவடுகள் நாவலுக்கும் பொருந்தும். இளைய சமுதாயத்தைச் சரியான பாதையில் வழி நடத்திச் செல்லும் இரகுபதிகள் அதிக அளவில் உருவாகி, சிறுதுளி பெரு வெள்ளமாக தனி மனித ஒழுக்கம் பெருகி சமுதாயத்தின் ஒட்டு மொத்த மேன்மைக்குத் தூண்களாக அமைய இந்த காந்திய "சுவடுகள்" விடி வெள்ளியாக உதவ வேண்டும் என்பது என் மனப்பூர்வமான ஆசை" என்று சிவசங்கரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நாவல் கருவைத் தேர்ந்தெடுத்தது பற்றி இந்நாவலாசிரியர், "மனிதங்களைப் புரிகிற போதும் உணர்வுகளை எதிர்கொள்கிற போதும் முரண்களை அணுகுகிற போதும் கிடைக்கக் கூடியது அந்த ஐக்கிய உணர்வுதான். இந்த நீண்ட நாவல் எழுதுவதற்குக் கருவைக் கொடுத்தது. அக்கருவில் பொதிந்திருந்த சக்தி அக்னியைவிடப் பன்மடங்கு வலிமை பெற்றதாக இருக்க வேண்டும். இந்தச் சக்தியிலிருந்து வெளிப்பட்ட மிகச் சிறிய வெளிப்பாடே இந்நாவல்" என்று சுட்டியுள்ளார்.

**14.1.2. படைப்புகளும் விருதுகளும்**

இவர் சுவடுகள், சத்திய சூரியன், சக்தி, பாண்டிய நாயகன் ஆகிய நாவல்களைப் படைத்துள்ளார். இவற்றுள் சுவடுகள் என்னும் நாவல் 1991ஆம் ஆண்டு கலைமகளில் அமரர் நாராயணசாமி ஐயர் நினைவு நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றுத் தொடர்கதையாக வெளிவந்துள்ளது. சத்திய சூரியன் என்ற நாவல் 1994ஆம் ஆண்டு தமிழரசி இதழில் பரிசு பெற்றது. சக்தி என்ற நாவல் அமுதசுரபி நடத்திய நாவல் போட்டியில் 1997ஆம் ஆண்டு பரிசு பெற்றது. சத்தியதரிசனம் நாவல் இலக்கிய பீடம் மாதஇதழிலும் பரிசு பெற்றது. பாண்டிய நாயகன் என்ற வரலாற்று நாவல் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் டாக்டர் வ.சுப.மாணிக்கனார் அறக்கட்டளைக்காக நடத்திய நாவல் போட்டியில் 1999ஆம் ஆண்டு பரிசு பெற்றது. அத்வைதமும் தேசியமும் - 1991, மூவேந்தரும் தமிழும் -1992 ஆகிய கட்டுரைகள் காஞ்சிமடம் நடத்திய போட்டிகளிலும் பரிசு பெற்றது.

அகில இந்திய வானொலி நிலையத்தின் வாயிலாக இவருடைய உரைகளும், கல்லும் மலராகும் நாடகமும் ஒலிபரப்பாகி உள்ளன. கலைமகள், அமுதசுரபி, தினமணி, தமிழரசி, ஓம்சக்தி மற்றும் தமிழ்

ஆராய்ச்சி இதழ் ஆகியவற்றின் வாயிலாகத் தனது படைப்புகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கிய சிறப்புக்குரியவர்.

குறிப்பு

தமிழர் நாட்டு விளையாட்டுகள் (1980), சி.சு செல்லப்பாவின் வாழ்க்கையும் கலையும் (1983), கணியான் கூத்து 1986), இதோ தமிழ் இதழ்கள் (1986), நாட்டுப்புற வாழ்வியல் (1990), சுவடுகள் (1993), நாவல் களங்கள் (1995), அத்வைதமும் தேசியமும் (1999), சமயம் இணக்கமும் மேம்பாடும் (2000), சிந்தனைச் சுடர்கள் (2001), புராணவியல் (2003), சத்திய சூரியன் (2003), நாவல் கலையியல் (2004), பாண்டிய நாயகன் (2006), தமிழ் வரலாறும் வளமும் (2006), ஆகிய படைப்புகளைப் படைத்துள்ளார். 15 நூல்கள் இவர்காலத்திலும் இவர்மறைவிற்குப் பிறகு இரண்டு நூல்களும் வெளிவந்துள்ளன. 57க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைப் படைத்துள்ளார்.

தலைசிறந்த ஆய்வுக் கட்டுரை வாசித்தளிப்பதற்காக இலங்கை சென்ற பெருமைக்குரியவர். சிறந்த நெறியாளர்களையும், சிறந்த ஆய்வாளர்களையும் பெற்ற சான்றோனாகவும் திகழ்ந்தார்.

அரிஸ்டாட்டில் மறைவுக்குப்பின் அவருடைய மாணாக்கர்கள் ஒன்றிணைந்து நூல் வெளியிட்டதைப்போல, பேராசிரியர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களின் நெறிகாட்டுதலின் கீழ் முனைவர் பட்டம் பெற்றவர்களான கவிஞர் பேரா. இரா.கருணாநிதி, பேரா. சு.மஞ்சுளவள்ளி, பேரா கே.கண்ணாத்தாள், பேரா இரா.ரேணுகா காந்தி, பேரா முனைவர் மு.பஞ்சவர்ணம், பேரா க.சொல்லேருழவன், பேரா சோ.முத்தமிழ்ச்செல்வன், பேரா. வெ.திருவேணி, முனைவர் மாலதி, முனைவர் பா.தியாகராஜன், உயர்திரு காளைராஜன், முனைவர் பிரதீபா தேவி ஆகியோர் இவரைப் பெருமைப்படுத்தும் விதமாக இவர் எழுதிய சிறுகதைகளை ‘விடியல் காலம்’ என்ற பெயரில் தொகுப்பாக வெளியிட்டனர். பேரா சோ.முத்தமிழ்ச்செல்வன் கதிர்க்கடவுள் என்ற அவருடைய நூலினையும் வெளியிட்டுள்ளார்.

### 14.2. நோக்கம்

சாதாரண மக்கள் எந்த ஒரு நியாயமான செயலுக்கும் அதிகாரிகளைக் கெஞ்சுவதும் இலஞ்சம் கொடுப்பதும் வழக்கமாகி வருகின்றன. கிராமப் பொருளாதாரத்தை, கிராமிய அரசியலை, கிராமச்சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும்

சுவடுகள் என்ற புதினத்தின் நற்கருத்துகளை மாணவர்கள் அறியச் செய்வதே நோக்கமாகும்.

குறிப்பு

**14.3. சுவடுகள் - கதைச்சுருக்கம்**

கொடிக்குளம் என்ற கிராமத்திற்கு வருவதற்காக இரகுபதி ஒரு பெரிய பெட்டியைத் தூக்கிக் கொண்டு பேருந்தில் வருகிறான். நல்லூரில் இளநிலை எழுத்தாளராக இருந்த அவன் வருவாய் ஆய்வாளர் பணிக்குப் பதவி உயர்வு பெற்று இக்கிராமத்திற்கு மாற்றுதலாகி வந்துள்ளான். இரகுபதி மிகவும் நேர்மையானவன். குருசாமித் தாத்தாவின் ஆசிரமத்தில் வளர்ந்தவன். குருசாமித் தாத்தா காந்திய வழியைப் பின்பற்றியவர். அதனால் இரகுபதிக்கும் காந்திய வழிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று அடிக்கடி கூறி வருவார். அதன் வழியில் ரகுபதியும் நடந்து கொள்வான். கொடிக்குளம் இரகுபதிக்குப் புதிது. அதனால் அங்கு உள்ளவர்களிடம் விசாரித்து கொடிக்குளம் வருகிறான். அப்பொழுது வழியில் உள்ளவர்களைப் பார்த்து கொடிக்குளம் பற்றி விசாரிக்கிறான். அப்பொழுது குருவன் இரகுபதியைப் பார்த்து கொடிக்குளம் கூட்டி வருகிறான். குருவன் மாட்டு வண்டியில் வைத்து கூட்டிக் கொண்டு வரும்பொழுது காது வளர்த்த ஆச்சிக்கு பாம்பு தீண்டிவிட்டது. அதனால் குருவன் இரகுபதியையும் அழைத்துக் கொண்டு வைத்தியர் வேளார் வீட்டுக்கு வருகிறான். அவருக்கு வயது எழுபது. இவர் யாரையும் சாராமல் தனிமைப்பட்டவர். குருவன் வைத்தியரை அழைத்துக் கொண்டு ஆச்சியின் வீட்டுக்கு வந்து சேர்கிறான். அப்பொழுது வைத்தியர் ஆச்சியை குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறார். இதையெல்லாம் இரகுபதி கவனித்துக் கொண்டிருக்கிறான். அப்பொழுது குருவன் நாம் கணக்குப்பிள்ளை வீட்டுக்குத் தானே போகணும். வாங்க நாம வண்டியோட நடந்து போயிடுவோம் என்று இரகுபதியை கணக்குப் பிள்ளை கண்ணாயிரம் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போகிறான். இரகுபதி கணக்குப் பிள்ளையிடம் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்ட பொழுது கணக்குப் பிள்ளை மங்களேஸ்வரன் தாசில்தார் அனுப்பி வைத்தவரா என்று கேட்டு அவருக்கு மரியாதை தருகிறார். இரகுபதிக்குக் தங்குவதற்கு இடம் கொடுக்கிறார்.

குறிப்பு

அங்கு இட்லிக்கடை வைத்துப் பிழைத்துக் கொண்டிருப்பவள் பாக்கியத்தம்மாள். காலையிலும் இரவிலும் பாக்கியத்தம்மாளிடம் இட்லி வாங்கிச் சாப்பிடுகிறான். மதிய உணவைத் தானே செய்து கொள்கிறான்.

கொடிக்குளம் என்ற ஊரில் பண்ணையார் வைத்தது தான் சட்டம். அவர் பேச்சைத் தான் எல்லோரும் கேட்க வேண்டும் என்று நினைப்பார். அவரிடம் பணத்துக்காக பலர் வேலை செய்கின்றனர். வேலை செய்பவர்களில் பண்ணையாரின் நம்பிக்கைக்குரியவனாக மாடசாமி இருக்கிறான். பண்ணையாரின் அடியாளாகவும் மாடசாமி விளங்குகிறான்..

கொடிக்குளம் கிராமத்தில் பள்ளர்சேரியில் சற்று படித்து விவரம் தெரிந்தவன் அமாவாசை. பள்ளர்சேரியில் உள்ள மக்கள் விவசாயம் செய்து பிழைப்பவர்கள். அவர்கள் பண்ணையார் நிலத்தில் தான் உழ வேண்டும். அவர்களுக்கு கூலியும் குறைவாகத்தான் கொடுப்பார்கள். பிறர் நிலத்தில் உழுதால் கூலி நிறைய கிடைக்கும். ஆனால் பண்ணையார் விட மாட்டார். இவை எல்லாவற்றையும் மாடசாமி தான் கவனித்துக் கொள்வான். குறைந்த அளவு கூலியைப் பெற்றுக் கொண்டு உழவு வேலை பார்க்க அம்மக்கள் தயாராக இல்லை. எனவே வயலுக்குள் இறங்காமல் இருக்கின்றனர். இதை எல்லாவற்றையும் மாடசாமி பார்த்துக் கொண்டிருக்கிறான். மாடசாமியைப் பகைத்துக் கொண்டால் பலவாறாகக் கொடுமைப் படுத்துவான் என்று அம்மக்களுக்குத் தெரியும். இருப்பினும் வரப்போரம் கலப்பையை போட்டுக் கொண்டு வேலை செய்யாமல் இருக்கின்றனர். இதனால் மாடசாமி பக்கத்து ஊருக்குப் போய் வயலில் வேலை பார்க்க வேற்று நபரைக் கொண்டு வந்து வேலை பார்க்கச் செய்கிறான். இம்மக்களுக்காக அமாவாசை பல வகைகளில் போராடுகிறான்.

பண்ணையாரின் ஒரே மகள் இராசாத்தி. இராசாத்தி மருத்துவக் கல்வி பயில்கிறாள். அவளுக்கு அரசு உதவித்தொகை பெறுவதற்காக வருவாய் ஆய்வாளரான இரகுபதியை நாடுகிறார். விண்ணப்படிவத்தில் இரகுபதியின் கையெழுத்து இருந்தால் மட்டுமே அரசு உதவித்தொகை பெறமுடியும். ஆதலால் தன் வேலையாள் மூலமாக விண்ணப்படிவத்தைக் கொடுத்து அனுப்புகிறார். கணக்குப் பிள்ளை பண்ணையாரின் நிலமெல்லாம் கரிசல் காடு என்றும், அங்கு உள்ள நிலங்களில் சரியான விளைச்சல் என்றும் பண்ணையாரின் நிலைமையை எடுத்துக் கூறுகிறான். இப்படிப் பொய்யாகப் பேசுவதனால் இரகுபதி கையெழுத்துப் போடாமல்

விண்ணப்படிவத்தை திருப்பி வேலையாளிடம் கொடுத்து அனுப்புகிறான்.

குறிப்பு

பண்ணையாரின் மகள் இராசாத்தி நல்ல குணம் படைத்தவள். இரகுபதியின் நேர்மை அவளுக்குப் பிடித்திருந்தது. ஆதலால் இரகுபதியின் நேர்மையைக் கண்டு பிரமிக்கிறாள். அப்பொழுது இரகுபதி தாலுகா அலுவலகம் செல்வதற்காக பேருந்து நிலையத்துக்கு வருகிறான். அப்பொழுது இராசாத்தியும் வருகிறாள். பேருந்தில் இருவரும் பயணிக்கும் பொழுது இராசாத்தி இரகுபதியைப் பாராட்டுகிறாள். இதனால் இராசாத்தியின் மீது இரகுபதிக்கு மரியாதை கூடுகிறது. அவளின் நல்ல பண்பைப் புரிந்து கொள்கிறான்.

பாக்கியத்தம்மாளின் மகள் பார்வதி அவ்வூரில் உள்ள காளியம்மன் கோயிலுக்குச் செல்வதற்காக பூசைப் பொருள்களுடன் வயல் மேட்டுகளில் நடந்து வருகிறாள். அப்போது ஒரு காளை மாடு அவளை நோக்கி வேகமாக ஓடி வருகிறது. அதற்குப் பயந்த அவள் வரப்பிலிருந்து தவறி வயல்வரப்பில் உள்ள சேற்றில் விழுந்து விடுகிறாள். அப்போது அங்கு எதேச்சையாக இரகுபதி வருகிறான். அவள் சேற்றில் விழுந்ததைக் கண்டு அவளைக் காப்பாற்றுவதற்காக அவள் கையைப் பிடித்துத் தூக்கி விடுகிறான். ஓர் ஆடவன் கை பட்டவுடன் பார்வதியின் மனம் தடுமாறுகிறது. ஒருவாறு சமாளித்து கோயிலுக்குச் செல்கிறாள். பார்வதி இரகுபதியிடம் கோயிலுக்கு வருமாறு பணிக்கிறாள். இரகுபதியும் சம்மதிக்கவே இருவரும் கோயிலுக்குச் செல்கின்றனர்.

பார்வதி ஆசிரியர் பயிற்சி முடித்து பணிக்காக காத்துக் கொண்டிருக்கிறாள். அவள் வீட்டில் வெள்ளை என்பவன் பார்வதிக்கும் பாக்கியம்மாளுக்கும் ஒத்தாசையாக அவ்வீட்டில் ஒரு பிள்ளை மாதிரி அக்குடும்பத்துடன் ஒன்றி இருக்கிறான். வெள்ளை சிறுவயதாக இருந்த பொழுது பக்கத்து ஊர் திருவிழாவின் போது காணாமல் போனவன். அப்பொழுது பாக்கியத்தம்மாள் அவளின் மீது பரிதாபம் கொண்டு வீட்டிற்குக் கூட்டி வந்து தன்னுடனே வைத்துக் கொள்கிறாள். பார்வதியும் அவனைத் தன் சொந்த தம்பியாக நினைத்து பாசம் காட்டி வருகிறாள்.

கணக்குப் பிள்ளை பாக்கியத்தம்மாளின் உறவினர். பாக்கியத்தம்மாளுக்கு ஒன்று விட்ட அண்ணனாக இருப்பவர். பாக்கியத்தம்மாளின் கணவன் இறந்த பின் அவர்களுக்கு பண உதவி செய்து கொண்டிருந்தார். இந்த காரணத்தைக் காட்டி அவர்களுக்கு

உள்ள சொந்தமான நிலத்தை வட்டியும் முதலுமாகக் கணக்குப் பண்ணி நிலத்தை வாங்கிக் கொண்டார்.

குறிப்பு

கொடிக்குளத்தில் உள்ள காளிகோயில் மண்டபத்தில் தங்கியிருக்கும் முதியவர் வேளார். இவர் விஷக்கடி பொன்ற நோய்களுக்கு மருந்து கொடுத்தும், மந்திரிக்கும் வேலையைச் செய்தும் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார். ஊரில் நல்லது நடக்க வேண்டும் என எண்ணுபவர். ஆதலால் ஏதாவது குற்றம் காணப்பட்டால் உடனே வருவாய் ஆய்வாளரிடம் நடந்தவற்றைக் கூறுவார். அவ்வாறே அன்று பண்ணையார் நிலத்தில் நிகழ்ந்தவற்றைக் கூறுகிறார். மக்கள் அதிக கூலியைக் கேட்டதாகவும், தர மறுத்ததால் வயலில் வேலை பார்க்காமல் இருந்ததையும் கூறுகிறார். ஊர் நிலைமையைப் பற்றி விரிவாக இரகுபதியிடம் கூறுகிறார்.

பண்ணையாரின் ஆட்கள் சில பேர் அமாவாசை வாழும் சேரியில் தீ வைக்கின்றனர். இதனால் சேரியில் உள்ள பத்துப் பதினைந்து குடிசைகள் எரிந்து சாம்பலாகின்றன. இதைக் கேள்விப் பட்ட இரகுபதி சம்பவ இடத்திற்கு விரைந்து செல்கின்றான். அப்போது நடந்தவற்றை அமாவாசையிடம் கேட்டு அறிகிறான். இரகுபதி அமாவாசையைக் கூட்டிக் கொண்டு நல்லூர்க் காவல் நிலையத்திற்குச் செல்கிறான். இரகுபதியின் கூடவே சேரி மக்களும் உடன் செல்கின்றனர். அக்காவல் நிலையத்தின் இன்ஸ்பெக்டர் விஜயன். விஜயன் இரகுபதியின் கல்லூரி நண்பனாவான். இதைக் கண்டு இருவரும் அளவாளாவி மகிழ்கின்றனர். விஜயனும் இரகுபதியைப் போன்றே குணம் படைத்தவன். இரகுபதி ஊரில் நடந்த நிகழ்ச்சியை விஜயனிடம் ஒன்று விடாமல் கூறுகிறான். விஜயன் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று இரகுபதிக்கு வாக்குக் கொடுக்கிறான்.

இந்த நிலைமையை மேலிடத்தில் கொண்டு செல்வதற்காக இரகுபதி தாசில்தார் மங்களேஸ்வரனிடம் சென்று நடந்த சம்பவத்தைக் கூறுகிறான். அவரும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்க்கிறார். சேரி மக்களுக்கு உதவுவதற்காக மங்களேஸ்வரன் கடன் கொடுக்க ஏற்பாடு செய்கிறார். கடன் வாங்குவதற்கான விண்ணப்பத்தைக் கணக்குப் பிள்ளை எழுதுகிறார்.

இன்ஸ்பெக்டர் விஜயன் இச்சம்பவத்தை நேரில் பார்ப்பதற்காக கொடிக்குளம் வருகிறார். இவர் வருவார் என்று ஒருவர் மூலமாகக் கேள்விப்பட்ட பண்ணையார் வெளியூர் சென்று விடுகிறார். அதனால்

அவருடைய வேலையாளான மாடசாமியையும் அவன் சகாக்களும் போலீஸ் ஜீப்பில் ஏற்றிச் செல்கின்றனர்.

குறிப்பு

பார்வதிக்கு இரகுபதியின் மீது ஒரு விதமான ஈர்ப்பு இருந்தது. இரகுபதியை எண்ணிக் கற்பனையில் மிதந்து கொண்டிருந்தாள். அப்பொழுது அழகு அங்கு வருகிறாள். அழகு சீனித்தேவனின் மனைவி. சீனித்தேவனும் அழகுவும் கருத்து வேறுபாட்டின் காரணமாக மணவிலக்குப் பெற்றிருந்தனர். அழகு பார்வதியின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்டாள். இரகுபதியையும் பார்வதியையும் இணைத்துப் பேசுகிறாள். பின்னர் அழகு பார்வதியிடம், இரகுபதி சாதிக் கலவரத்தைத் துண்டுவதாகக் கணக்குப்பிள்ளை மக்களிடம் இரகுபதியைப் பற்றி அவதூறாகப் பேசி கலெக்டருக்குப் பெட்டிசன் போடப் போகும் செய்தியைக் கூறுகிறாள். ஆனால் இச்செய்தி இரகுபதிக்குத் தெரியாது. இதனால் பார்வதி வெள்ளை வாயிலாக இச்செய்தியை இரகுபதிக்குத் தெரிவிக்கிறாள். கணக்குப் பிள்ளை பட்டா மாற்றப் போவதாகவும், அதற்குப் பணம் தேவைப்படுகிறது என்று கூறியும் மக்களிடம் பணம் வசூல் செய்ய முயற்சிக்கிறான். இச்செய்தி அழகுவின் அம்மா வாசியம்மாள் மூலம் இரகுபதிக்குத் தெரிய வருகிறது.

பார்வதிக்கு அடிக்கடி இரகுபதியின் நினைவுகள் வந்து கொண்டிருந்த வண்ணம் இருந்தன. இரகுபதிக்கும் இதே நிலைமை தான். இதனால் பார்வதி இரகுபதி தன்னைத் திருமணம் செய்து கொள்வானா என்ற எண்ணம் நினைவில் தோன்றிக்கொண்டே இருக்கிறது. அழகுவை மணவிலக்கு செய்து கொண்ட சீனித்தேவன் மறுமணமாக மருதாம்பாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். ஆனால் அப்பெண் மர்மமான முறையில் பண்ணையார் தோட்டத்திற்குப் பக்கத்தில் உள்ள கிணற்றில் பிணமாக மிதக்கும் செய்தியை அழகு பார்வதியிடம் வந்து கூறுகிறாள்.

பண்ணையாருக்கு மிகுந்த இடைஞ்சலாக இருப்பவன் இரகுபதியின் முன்னாள் கல்லூரித் தோழன் விஜயன். காவல் துறை அதிகாரியான விஜயனின் நேர்மையான போக்கு பண்ணையாருக்குப் பிடிக்காததால் பண்ணையார் தன் செல்வாக்கால் வேற்றூருக்குப் பணி மாற்றம் செய்து விடுகிறான்.

குறிப்பு

மாடசாமியை விஜயன் சேரி மக்களின் குடிசைகளுக்குத் தீ வைத்ததற்காக கைது செய்து சிறையில் அடைத்து விடுகிறான். விஜயன் பணி மாறுதல் பெற்றவுடன் பண்ணையார் மாடசாமியை வெளியில் எடுத்து விடுகிறார்.

கொடிக்குளம் நியாயவிலைக்கடையில் உள்ள பொருள்களைப் பண்ணையார் வெளியில் விற்கத் தனியாக பொருள்களை எடுத்து வைக்குமாறு கூறுகிறார். இதை எப்படியோ பொதுமக்கள் அறிந்து விடுகின்றனர். இச்செய்தியை இரகுபதியிடம் தெரிவித்து முறையிடுகின்றனர். இரகுபதி நியாயவிலைக்காரரிடம் பேசி அரிசி முதலிய பொருள்களை மக்களுக்கே முழுவதையும் வழங்க வேண்டும் என்று கூறிவிடுகிறான். ஆனால் இது பண்ணையாருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆதலால் இரகுபதியைப் பண்ணையார் நேரடியாகவே எச்சரிக்கிறார்.

இரகுபதி கலெக்டர் அலுவலகத்திற்குப் புறப்படும் சமயம் பாக்கியத்தம்மாளும் பார்வதியும் அங்கு வருகின்றனர். பார்வதி ஆசிரியர் பயிற்சியை முடித்ததினால் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்வதற்காகச் செல்கிறோம் என்று கூறியவுடன் இரகுபதியும் அவர்களுடன் செல்கிறான். இவர்கள் இருவரும் சென்று கொண்டிருக்கும் போது இராசாத்தி அங்கு காரில் வருகிறாள். இரகுபதி, பார்வதி, இராசாத்தி ஆகிய மூவரும் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வருகின்றனர். இராசாத்தி பார்வதியையும், இரகுபதியையும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இறக்கி விட்டுவிட்டுச் சென்று விடுகிறாள். மூவரும் காரில் வரும்பொழுது இராசாத்தி இரகுபதியிடம் பேசிக்கொண்டே வருகிறாள். இது பார்வதிக்குப் பிடிக்கவில்லை. இரகுபதி பார்வதி தன்னைத் தவறாக நினைத்து விடக் கூடாது என்று எண்ணுகிறான்.

இரகுபதி மாவட்ட வருவாய் அதிகாரியான மங்களேஸ்வரனைச் சென்று சந்திக்கிறான். அங்கு முன்பு மங்களேஸ்வரன் தாசில்தாராக இருந்தவர். அவரது உதவியின் மூலமாகவே இரகுபதி பதவி உயர்வு பெற்று வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றுகின்றான்.

இரகுபதி கொடிக்குளம் கிராமத்தில் நடக்கும் பிரச்சனைகளை மங்களேஸ்வரனிடம் சொல்கிறான். பண்ணையாரைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்ட மங்களேஸ்வரன் இதற்குத் தான் உதவுவதாகவும், இதைப் பற்றி இனிமேல் கவலை வேண்டாம் என்றும் இரகுபதியிடம் கூறி விடுகிறார். மேலும் டி.எஸ்.பி ராகவன் தன்னைச் சந்தித்துக் கூறிய சில செய்திகளை இரகுபதியிடம் கூறுகிறார். கொடிக்குளம் மலைக்குப் பின்புறம் ஒரு கணவாய் இருக்கிறது. அதை இப்பொழுது யார் பயன்படுத்துகிறார்கள் என்று விசாரித்து வைக்கும்படி இராகவன் இரகுபதியிடம் கூறுகிறார். பின்னர் இரகுபதி அங்கிருந்து புறப்பட்டு விடுகிறான்.

இராகவன் கூறிய செய்தியை பார்வதியின் தம்பி வேளார் மூலமாக விசாரித்துத் தெரிந்து கொள்கிறான் இரகுபதி.

பண்ணையாருக்கு மிகுந்த மன உளைச்சலைக் கொடுப்பவன் இரகுபதி. அதனால் இரகுபதியைக் கொலை செய்யப் பண்ணையார் திட்டமிடுகிறார். ஒருநாள் இரகுபதி தாலுகா அலுவலகம் செல்லும் போது எப்படியும் கொன்றுவிடலாம் என்று பண்ணையாரின் ஆட்கள் நினைக்கின்றனர். இரகுபதி தாலுகா அலுவலகம் சென்று விட்டு இரவில் தான் வீடு திரும்புவான். அப்பொழுது மறைந்து நின்று கொன்று விடலாம் என்பது பண்ணையாரின் அடியாட்கள் நினைக்கின்றனர். இச்செய்தியை அறிந்த அழகு இரவில் மரத்தில் அருகில் பதுங்கியிருந்து இரகுபதி வரும்போது அவனை வேறுவழியாக அழைத்துச் சென்று காப்பாற்றுகிறாள்.

பார்வதிக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வருகிறது. இந்த வேலையை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று பார்வதியின் அம்மா பாக்கியத்தம்மாள் முயற்சிக்கிறாள். இதனால் கணக்குப்பிள்ளை மூலமாக இலஞ்சம் கொடுத்து வேலை வாங்க முயற்சி செய்கிறாள். இச்செய்தியை இரகுபதி அறிகிறான். இலஞ்சம் கொடுத்து வேலை வாங்குவதை இரகுபதி விரும்பவில்லை. ஆதலால் அவன் பார்வதியிடம் சென்று இலஞ்சம் கொடுக்க முயல வேண்டாம். இதைத் தானே பார்த்துக் கொள்வதாக பார்வதியிடம் கூறுகிறான்.

நடுவப்பட்டிப் பண்ணையாரைச் சந்தித்து பார்வதிக்கு வேலை வாங்கித் தர முயற்சி செய்கிறான். எந்தவொரு காரியமாக இருந்தாலும்

குறிப்பு

நேர்மையாக நடந்து கொள்வதில் திறமை பெற்றவன் இரகுபதி. அவனுடன் இராணுவத்தில் இருந்து விடுமுறையில் வந்திருந்த அழகுவின் அண்ணனும் உடன் செல்கிறான். குருசாமித் தாத்தாவிற்கு அடுத்த படியாக இரகுபதியை வழிநடத்துபவர் மங்களேஸ்வரன்.

பண்ணையாருக்குக் கொடிக்குளம் ஊருக்குப் பின்னால் ஒரு காட்டுப் பங்களா இருந்தது. இந்தக் காட்டுப் பங்களாவில் அரசுக்குச் சொந்தமான சந்தன மரங்களைப் பதுக்கி வைத்திருந்தான். இதற்கு வனத்துறை அதிகாரியான பெருமாள் சாமியும் உடந்தையாக இருந்தார். காட்டுப் பங்களாவை ஒட்டியிருக்கும் இடங்களில் போலீஸ் ஜீப் அடிக்கடி நிற்பதைப் பெருமாள்சாமி பார்க்கிறார். இதனைப் பண்ணையாரிடம் தெரிவிக்கிறான். பண்ணையார் அவனிடம் பணத்தைக் கொடுத்து கொஞ்ச நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு தலைமறைவாக இருக்கும்படி கூறுகிறார். பண்ணையார் எப்படியும் சந்தன மரங்களை விற்று விடவேண்டும் என்று தீவிரமாக முயற்சி செய்கிறான். தனக்கு இடைஞ்சலாக இருக்கும் இரகுபதியை எப்படியாவது எதிலாவது சிக்க வைக்க வேண்டும் என்று திட்டமிடுகிறான். இதனை மாரியம்மன் கோயில் பொங்கல் திருவிழாவன்று இதனைச் செய்து முடிக்க வேண்டும் என்று நினைக்கின்றான்.

பண்ணையாரின் திட்டத்தின் முதல்நிலையாக இரகுபதிக்கும் அழகுவுக்கும் கள்ளத்தொடர்பு இருப்பதாக ஒரு புரளியைக் கிளப்பி விடுகிறான். இச்செய்தியை ஊரில் நம்ப வைக்க அழகுவின் முன்னாள் கணவன் சீனித்தேவனின் உதவியை நாடுகிறான். பண்ணையார் சீனித்தேவன் மூலமாக அழகுவைக் கொலை செய்து அதை இரகுபதியின் வீட்டில் போடச் சொல்கிறார். சீனித்தேவனும் அவ்வாறே செய்கிறான். இதனால் இரகுபதியின் வீட்டிற்கு போலிசார் வந்து கைது செய்து அவனை நல்லூர்க் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கின்றனர்.

இரகுபதியைக் கைது செய்த விவரம் கொடிக்குளத்தில் உள்ள கிராமமக்களுக்குத் தெரிகிறது. மாடுகள் வளர்த்து எல்லோருக்கும் பால் கொடுத்து வரும் கீதாரி நாயக்கரும், அமாவாசையும், பொது மக்களும் சேர்ந்து அழகு கொலை செய்யப்பட்ட விசயத்தில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். இதன் உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக போலீஸ் நிலையத்தில் எல்லோரும் கூடி விடுகின்றனர். ஆனால் அழகுவின் அண்ணனான செல்லமுத்துக்கு

இரகுபதி கொலை செய்திருக்க மாட்டான் என்ற எண்ணம் தோன்றுகிறது. இரகுபதிக்கும் கொலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று எண்ணுகிறான்.

**குறிப்பு**

மேலிடத்திலிருந்து இரகுபதிக்கு பிரச்சனைகள் வந்த வண்ணம் இருந்தன. இந்நிலையில் இரகுபதி வேலையை இராஜினாமா செய்தான். இது அவ்வூர் மக்கள் விரும்பவில்லை. ஊர் மக்கள் சொல்வதை இரகுபதி கேட்கவில்லை. இரகுபதியைக் கொடிக்குளத்திலேயே தங்கியிருக்குமாறு ஊர் மக்கள் வேண்டினர்.

இரகுபதிக்கு குருசாமித் தாத்தா ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அக்கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் காந்தி மாதிரி மேல்நிலைப் பள்ளியை நடத்துமாறு கேட்டுக் கொண்டார். பள்ளியின் நிர்வாகத்தையும், ஆசிரமத்தின் அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்று நடத்துமாறு கடிதம் எழுதினார். இரகுபதியும் அதற்குச் சம்மதித்து ஆசிரமத்தின் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கிறான்.

பார்வதி ஆசிரியராகப் பணியாற்றினாள். இரகுபதி வேலையை இராஜினாமா செய்து காந்தி ஆசிரமத்தில் தங்கியிருப்பதாகச் செய்தியைக் கேள்விப்படுகிறாள். பின்னர் ஆசிரியப் பணியை விட்டுவிட்டு இரகுபதியுடன் ஆசிரமத்தின் பணியை இரகுபதியுடன் சேர்ந்து பார்த்துக் கொள்கிறாள். இந்நிலையில் இரகுபதியின் தாயார் காமாட்சி இறந்து விடுகிறாள். செல்லமுத்து மீண்டும் இராணுவத்தில் சேர்ந்து வேலை பார்ப்பதற்காகச் சென்று விடுகிறான். இராசாத்தி தனக்குரிய சொத்தில் பாதியை ஆசிரமத்திற்கு எழுதி வைத்து விடுகிறாள். கொடிக்குளத்தில் பால் விற்றுப் பிழைப்பை நடத்தி வரும் கீதாரி நாயக்கர் பஞ்சாயத்து செய்து மக்களுக்கு தொண்டு செய்கிறார். இதனை இரகுபதி கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைகிறான். வேளார் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் இறந்து விடுகிறான்.

எல்லோருடைய ஆசிகளும் கொடிக்குளம் கிராமத்தில் இருப்பதால் எந்த பிரச்சனையுமின்றி கொடிக்குளம் கிராம மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

குறிப்பு

**14.4.நாவல் விளக்கம்**

நாவல் பற்றிய விளக்கத்தை கிளாரா ரீவி, "எழுதப்பட்ட காலத்தின் உண்மையான வாழ்க்கையினையும், பழக்கவழக்கங்களையும் வெளியிடும் ஓவியம் தான் நாவல்" என்கிறார். "நாவல் என்பது எடுத்துரைக்கும் போக்கில் அமையும் கதை உரைநடையில் எழுதப்படுவது. நெடிய அல்லது நீண்ட போக்கில் நடப்பது படிக்கும் வாசகரின் மனத்தில் ஆசிரியரால் படைக்கப்பட்ட ஒரு கற்பனையான உண்மை உலகை, புதிய உலகைத் தோற்றுவிப்பது, அவ்வுலகத்தை அதில் படைக்கப்படும் கதை மாந்தர்களாலும் அவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களாலும் உயிர்த்துடிப்புள்ளதாகச் செயல்படுத்துவது" என்ற கூற்றிலிருந்து நாவல் என்ற சொல்லுக்கான பொருள் அறியப்படுகிறது.

புதினம் என்பது அகலப்புனை கதை என்று ஆங்கிலத் தமிழ் அகராதியும், "நடைமுறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருக்கின்ற பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் படம்பிடித்துக் காட்டுகின்ற கோர்வையான கதைத்திட்டத்தோடு ஒன்று அல்லது இரண்டு பாகமாக அமைந்திருக்கும் உரைநடைக்கதை" என்று விளக்கம் தருகிறது ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி.

**14.4.1.நாவல் கரு**

கரு என்பதை ஆங்கிலத்தில் 'Theme' என்று கூறுவர். எந்த ஒரு கதைப்படைப்பாக இருந்தாலும் படைப்பாளர் ஏதேனும் ஒரு கருவை மையமிட்டுத்தான் கதையை நடத்திச் செல்வர். கரு என்பதைப் பற்றி "அனுபவத்தோடு கற்பனை கலக்கும்போது ஆசிரியன் எந்தக் குறிக்கோளைச் சொல்ல முனைகிறானோ அதுவே கருப்பொருள்" என்று பழ.முத்துவீரப்பன் குறிப்பிடுகிறார். மேலும் "ஒரு கதை எதைப் பற்றியது என்பதைக் கூறுவது கருப்பொருள். ஒரு கதையின் எல்லாக் கூறுகளும் ஒன்றாக இணைந்து நின்று உணர்த்தும் முழுப்பொருள் யாது என்பதைப் பற்றியக் கூறுவது கருப்பொருள். ஓர் இடம், ஒரு பாத்திரம், ஒரு சூழல் ஆகிய இவற்றைப் பற்றியது கதைப் பொருள். இவற்றைப் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார் என்பதைப் பற்றியது கருப்பொருள்" என்று ஹியூகஸ் டாக்லஸ் என்பார் விளக்குவார்.

சுவடுகள் என்னும் இந்நாவல் காந்திய சிந்தனையை வலியுறுத்தி அமைக்கப்பட்டுள்ளது. இக்கதைத் தலைவனான இரகுபதியும் காந்தியக் கொள்கைகளான சத்தியம், அகிம்சை போன்றவற்றைப் பின்பற்றுகின்றான். இதனை "காந்தி போனால் காந்தியம் அழிந்து விடுமா என்ன? காந்தியத்தின் சுவடுகள் மண்ணில் மட்டுமா உள்ளன? மக்களின் மனங்களிலும் அழியாத நிலையில் இவை படிந்துள்ளன. இந்தச் சுவடுகள் காட்டும் பாதைகள் மக்களின் வாழ்க்கை விடியலுக்கு விடிவெள்ளியாக நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை" என்றும், காந்தியம் என்பது நகரங்களில் மட்டுமல்ல கிராமங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை, "காந்தியம் என்ற மந்திரம் நம் நாட்டு கிராமங்களில் மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கப்பட்டது. அதன் ஒலி ஒவ்வொரு யுகத்துக்கும் கேட்டுக்கொண்டுதான் இருக்கும்" என்றும் இந்நாவலில் இடம்பெற்றிருப்பது இதனை நன்குணர்த்தும்.

காந்தியக் கொள்கைகள் இந்நாவலின் மூலமாக இருந்தாலும் தனிமனித ஒழுக்கம் ஒவ்வொரு மாந்தரின் வாயிலாகவும் இந்நாவலின் கருவாக அமைக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கதைத்தலைவன் வாயிலாகவும், எப்படி வாழக் கூடாது என்பதை பண்ணையார் வாயிலாகவும் எடுத்துக் காட்டியிருப்பது இந்நாவலின் தனிச்சிறப்பாகும்.

கலைமகள் இந்நாவலின் கதைக்கருவை, "சாதாரண மக்கள் எந்த ஒரு நியாயமான செயலுக்கும் அதிகாரிகளைக் கெஞ்சுவதும் இலஞ்சம் கொடுப்பதும் வழக்கமாகி வருகின்றன. சுவடுகள் என்ற புதினம் கிராமப் பொருளாதாரத்தை, கிராமிய அரசியலை, கிராமச்சுரண்டலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பது" என்று குறிப்பிட்டுள்ளது.

### 14.4.2.கதைப்பின்னல்

கதையில் வரும் கதாப்பாத்திரத்துக்கு என்ன நடந்தது என்று சொல்வது கதைப்பின்னல். வரையறுக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் நடக்கும் நிகழ்ச்சிகளின் தொகுப்பே கதைப்பின்னல். செறிவான பின்னல், தொடக்கம், வளர்ச்சி, முடிவு ஆகியன கொண்டிருக்கும். ஒரு பாத்திரத்திற்கு ஏற்படும் சிக்கலையும், அந்தச் சிக்கலை அப்பாத்திரம் எவ்வாறு எதிர்கொள்கிறது, அதில் அது அடையும் வெற்றி அல்லது

குறிப்பு

தோல்வி பற்றிக் கூறுவது, சிக்கலின் தோற்றம், வளர்ச்சி, உச்சம், முடிவு அல்லது அவிழ்ப்பது (வெளிவருவது) என்ற நான்கு பகுதிகளைக் கொண்டது இது. கதையின் பின்னணி - சூழல் சிக்கிலின் தோற்றம் தரும். அதன் மேல் சிக்கலை வளர்ப்பது வளர்ச்சி எனப்படும். அடுத்து என்ன நடக்கும் என்று வாசகனை எதிர்பார்க்க வைப்பது ஆர்வநிலை. ஆர்வ நிலையின் உச்சகட்டம் உச்சநிலை எனப்படும். கதையை முடிப்பது முடிவு" என்று கதைப்பின்னல் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு விளக்கம் தருவர் இ.எம்.பார்ஸ்ட்டர் மற்றும் ஆர்ட்டெஜ் வொய்.கேஸட்.

கதைப்பின்னல் என்பது கதை நிகழ்வுகளை காரண காரியத் தொடர்புகளுடன் பின்னப்படுவது ஆகும். இக்கதைப்பின்னல் தொடக்கம், வளர்ச்சிநிலை, உச்சம், வீழ்ச்சிநிலை, முடிவு என்ற நிலையில் அமையும்.

**14.5.தொடக்கம்**

கதைத்தலைவனான இரகுபதி நல்லூர் கிராமத்திலிருந்து பதவி உயர்வு பெற்று வருவாய் ஆய்வாளராக கொடிக்குளம் என்ற கிராமத்திற்கு வருகிறான். அங்கு அவன் இட்லி விற்கும் பாக்கியத்தம்மாள் மகள் பார்வதியைச் சந்திக்கிறான். அவர்கள் இருவருக்கும் இடையில் காதல் நிகழ்வு மௌனமாகவே உள்ளது. கொடிக்குளம் என்ற கிராமத்தில் பண்ணையார் வைத்ததுதான் சட்டம். பண்ணையாரை எதிர்ப்பவர் உயிருடன் இருக்க மாட்டார். இவருக்கு அடியாள் போன்று இருப்பவர் மாடசாமி. கொடிக்குளம் கிராமத்தில் அமாவாசை விவரம் தெரிந்தவனாக இருக்கிறான். இவன்தான் சேரி மக்களுக்கு உரிய உதவிகளைச் செய்து வருகிறான். இது இந்நாவலின் கதைத் தொடக்கமாக அமைகிறது.

**14.5.1.வளர்ச்சிநிலை**

பண்ணையார் மருத்துவக் கல்வி பயிலும் தன் மகள் இராசாத்திக்கு அரசு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு இரகுபதியை நாடுகிறான். இரகுபதி விண்ணப்படிவத்தில் கையெழுத்திடாமல் அனுப்பி விடுகிறான். இதனால் பண்ணையாருக்குக் கோபம் வருகிறது. பண்ணையார் தம் வேலையாட்களின் மூலமாக வயலில் வேலை பார்க்காமல் இருக்கும் சேரி மக்களின் குடிசைகளுக்குத் தீ வைக்கிறான்,

குறிப்பு

இதை இரகுபதியிடம் சென்று மக்கள் முறையிடுகின்றனர். இரகுபதியும் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று மேலிடத்தில் புகார் செய்து அம்மக்களுக்கு நியாயம் வழங்கித் தருகிறான். பண்ணையார் நியாய விலைக்கடையில் உள்ள பொருட்களை பதுக்கி வைப்பதும், பின்னர் அதை இரகுபதி மக்களுக்கு மீட்டுத் தருவதும் வளர்ச்சி நிலையாகும்.

பாக்கியத்தம்மாள் மகள் பார்வதி ஆசிரியப் பயிற்சி முடித்தவள். வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வருகிறது. அதற்கு பாக்கியத்தம்மாள் இலஞ்சம் கொடுக்க முயல்கிறாள். அதனைத் தடுத்து நியாயமான முறையில் இரகுபதி வேலை வாங்கித் தருகிறான். பண்ணையாரின் மகள் பார்வதிக்கும், சீனித்தேவனின் முன்னாள் மனைவி அழகுவுக்கும் இரகுபதியின் நேர்மையான போக்கும் குணமும் அவன் மீது உள்ள மதிப்பைக் காட்டுகின்றன. இது இந்நாவல் வளர்ச்சி நிலையின் இறுதியாக அமைகிறது.

**14.5.2.உச்சம்**

பண்ணையார் மிகுந்த இடைஞ்சலாக இருக்கும் இரகுபதியை பல்வேறு நிலைகளில் கொலை செய்யத் திட்டமிடுகின்றான். ஒரு சமயம் தன் வேலையாட்களின் மூலமாக இரகுபதியை தீர்த்துக் கட்ட முடிவெடுக்கிறார் பண்ணையார். ஆனால் இதனைத் தடுத்து அழகு அவனைக் காப்பாற்றி விடுகிறாள். இவ்வாறு இரகுபதியைக் கொலை செய்ய பல வகைகளில் முயற்சி எடுக்கிறான்.

பண்ணையார் நேரடியாக இரகுபதியைக் கொலை செய்ய முடியாது என்று நினைத்து வேறு வழியில் சிக்க வைக்க முயற்சி செய்கிறான். அதன்படி சீனித்தேவனின் முன்னாள் மனைவி அழகுவைக் கொலை செய்து இரகுபதியின் வீட்டில் போட்டு விடுகின்றனர்.

**14.5.3.வீழ்ச்சி நிலை**

இதன் காரணமாக இரகுபதி காவல்துறையினரால் கைது செய்யப்படுதல் இந்நாவலின் வீழ்ச்சி நிலையாகும். மேலும் இந்நாவலில் இச்சூழலில் புதிர் உத்தியும் கையாளப்பட்டுள்ளது. அழகுவைக் கொலை செய்தது யார்? அழகுவின் மீது ஏற்கனவே கோபமாக இருக்கும் சீனித்தேவனா? அல்லது வேறு யாருமா? என்று ஒவ்வொரு நிகழ்வும் எதிர்பார்ப்போடு அமைக்கப்படுதல் புதிராக இடம்பெற்றுள்ளது.

குறிப்பு

பண்ணையார் சந்தன மரக்கட்டைகளைப் பதுக்கி வைத்தலும், அதனைக் காவல் துறை கண்டுபிடித்து பண்ணையாரை கைது செய்தலும், சீனித்தேவன் தான் தான் அழகுவைக் கொலை செய்தேன் என்றும், இதற்கு பண்ணையார் தான் காரணம் என்று கூறுதலும் இந்நாவலின் வீழ்ச்சி நிலையாக அமைகின்றன.

### 14.5.4.முடிவு

இரகுபதி குற்றமற்றவன் என்று காவல் துறையால் உறுதிசெய்யப்பட்டு விடுதலை அடைதலும், இரகுபதி கொடிக்குளம் கிராமமக்களை வழிநடத்தியதால் மக்கள் விழிப்புணர்வு பெறுதலும், இரகுபதி மேலிடத்தின் பிரச்சனை காரணமாக தன் வேலையை இராஜினாமா செய்தலும், தன்னை வழிநடத்திய குருசாமித் தாத்தாவின் ஆசிரமத்தின் நிர்வாகத்தின் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுதலும், பார்வதி தன் ஆசிரியப் பணி வேலையை இராஜினாமா செய்து இரகுபதியுடன் நிருவாகப் பொறுப்பில் ஈடுபடுதலும், இராசாத்தி தன் சொத்தில் பாதியை ஆசிரமத்திற்கு எழுதி வைத்து விட்டு கொடிக்குளம் கிராம மக்களுக்க மருத்துவப் பணியாற்றலும், பால் விற்றுப் பிழைப்பை நடத்தும் கீதாரி நாயக்கர் பஞ்சாயத்துத் தலைவராகப் பொறுப்பேற்றலும் நாவலின் முடிவாக அமைகிறது.

### 14.6.பாத்திரப்படைப்பு

நாவலில் முதன்மையாகக் கருதப்படுவது அதில் இடம்பெற்றிருக்கும் பாத்திரப்படைப்புகளாகும். பாத்திரப்படைப்பின் இன்றியமையாத கூறுகளாக மேரென் எல்வுட், “கதையும் எலும்பு போன்றதே. எலும்பைச் சுற்றித் தசையாக அமைந்து உடலுக்குச் சிறப்புத் தருவது பாத்திரப்படைப்பாகிய தசையே. எனவே கருவினும் கருவினும் சிறப்பு வாய்ந்தது பாத்திரமே” என்று கூறுவர்

“பாத்திரத்தைக் காட்டுவதன்று முக்கியம்.பாத்திரத்தின் அல்லது பாத்திரங்களின் இயக்கத்தால் ஏற்படும் உணர்வு நிலையைக் காட்டுவது தான் முக்கியமாகும்” என்பார் சிவத்தம்பி.

“பாத்திரப்படைப்பு என்பது ஒரு பெயர் சூட்டி விடுவதோ, அங்க வருணனை நடத்தி விடுவதோ அல்ல. மனம், அறிவு, சிந்தனை, மன

இயல்பு, சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்ச்சிகள் இவற்றை எல்லாம் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளிப்படுவதைத் தீட்டுவதாகும்" என்பர் ஜெயகாந்தன்.

குறிப்பு

இப்பாத்திரப்படைப்புகளை தலைமைப்பாத்திரம், துணைமைப் பாத்திரம், எதிர்நிலைப் பாத்திரம் என்று வகைப்படுத்துவர்.

தலைமைப் பாத்திரமாக இரகுபதி, பார்வதி, இராசாத்தி ஆகியோர் இடம்பெறுகின்றனர். துணைமைப் பாத்திரமாக சீனித்தேவன், அழகு, மாடசாமி, அமாவாசை, பாக்கியத்தம்மாள், வெள்ளை, வேளார், கீதாரி நாயக்கர், மங்களேஸ்வரன், இன்ஸ்பெக்டர் விஜயன், குருசாமி தாத்தா ஆகியோர் அமையப்பெற்றுள்ளனர். பண்ணையார், கணக்குப்பிள்ளை கண்ணாயிரம் ஆகியோர் எதிர்நிலைப் பாத்திரமாக இந்நாவலில் இடம்பெற்றுள்ளனர்.

### 14.6.1. இரகுபதி

இரகுபதி இந்நாவலின் கதைத் தலைவனாவான். இந்நாவலின் கதை முழுவதும் இரகுபதியை மையமிட்டே உள்ளது. கொடிக்குளம் கிராம மக்களின் வளர்ச்சிக்காக தன்னையே தியாகம் செய்பவனாக இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

இரகுபதி காந்திய வழியைப் பின்பற்றுபவன். இவன் சிறுவயது முதலே குருசாமி தாத்தாவின் ஆசிரமத்தில் வளர்ந்தவன். குருசாமி தாத்தா காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுபவர். அதனால் ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கும் காந்திய வழியையே போதிக்கின்றார். அதனால் தான் இரகுபதி காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கின்றான்.

கொடிக்குளம் கிராமத்திற்கு இரகுபதி வருவாய் ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்று வருகிறான். அப்பொழுது கணக்குப்பிள்ளை கண்ணாயிரம் வீட்டில் தங்காமல் தனக்கெனப் பார்த்த வீட்டில் தங்குகிறான். எந்தச் சலுகைகளையும் விரும்பாதவன். தனக்குக் கீழ் வேலைபார்க்கும் அலுவலரின் சலுகை பெற்றால் தான் நேர்மையாக நடக்க முடியாது என்று உணர்ந்தவன். பாக்கியத்தம்மாள் அவனுக்கு உணவு கொடுக்க முன்வருகிறாள். ஆனால் யாரையும் சிரமப்படுத்தக் கூடாது என்பதால் மதிய உணவை தானே தயார் செய்து உண்கின்றான்.

பண்ணையாரின் மகள் இராசாத்திக்கு அரசு உதவித்தொகை பெறுவதற்கு வருவாய் ஆய்வாளரின் கையெழுத்து வேண்டும். பண்ணையாரின் வருவாய்க் கணக்கை தவறாக கணக்குப்பிள்ளை கண்ணாயிரம் இரகுபதியிடம் கூறுகிறான். அதற்கு இரகுபதி, "அரசாங்கப் பணமென்றால் பொய் சொல்லித்தான் வழுங்கவேண்டுமா?" என்று கூறி விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்து போடாமல் திருப்பிக் கொடுத்து விடுகிறான். இதன் மூலம் அவனின் நேர்மையான குணம் புலப்படுகிறது.

இரகுபதி ஏழைகள் படும் பாட்டை அறிந்தவன். பிறர் துன்பம் கண்டு பொறுக்காத மனம் கொண்டவன். சேரியைச் சேர்ந்த அமாவாசை மற்றும் அவ்வூரில் பண்ணையாருக்குச் சொந்தமான நிலத்தில் உழவு வேலை பார்ப்பவர்கள் கூலி அதிகமாகக் கேட்டதினால் பண்ணையார் வெளியூர் ஆட்களைக் கொண்டு வந்து வேலை பார்க்கச் சொல்கிறார். இதனால் அம்மக்கள் மிகவும் ஏமாற்றமடைகின்றனர். மேலும் சேரியைத் தீ வைத்துக் கொளுத்தி விடுகின்றனர். இதனை அறிந்த இரகுபதி அம்மக்களைக் காப்பாற்ற பல்வேறு நிலைகளில் முயற்சி செய்கிறான். இதன் மூலம் பிறர் துன்பம் கண்டு பொறுக்காத மனம் கொண்டவன் என்பது தெரிகிறது.

இரகுபதி பிறர் எதிர்ப்புகளைக் கண்டு மனம் கலங்காதவன். பண்ணையாரையும், கணக்குப்பிள்ளையும் அம்மக்களுக்கு பல வகைகளில் அநியாயம் செய்கின்றனர். அம்மக்களுக்கு நியாயம் வழங்குவதற்காக அவன் காவல்துறை, தாசில்தார் போன்றோரின் உதவியை நாடுகிறான். பண்ணையார், கணக்குப்பிள்ளை ஆகியோரின் அத்தனை எதிர்ப்புகளையும் மீறி அவன் ஆற்றும் செயல்கள் பிரமிக்கத்தக்க அளவில் உள்ளன. இதனால் அவன் எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும் மனம் கலங்காமல் தான் நினைத்த காரியத்தை நடத்தி முடித்து வெற்றி பெறுபவன் என்பது அறியப்படுகிறது.

இரகுபதி இலஞ்சத்தையும் ஊழலையும் எதிர்ப்பவன். அழகுவின் அம்மா வாசியம்மாள் பட்டா வாங்குவதற்காக கணக்குப்பிள்ளையிடம் ஐம்பது ரூபாய் இலஞ்சம் கொடுத்ததை அறிந்த இரகுபதி, "இங்கே பாருங்க, இனிமேல் யார்க்கிட்டேயும் பணம் கொடுக்காதீங்க" என்கிறான். மேலும் பாக்கியத்தம்மாள் மகள் பார்வதிக்கு ஆசிரியப் பணி பெற பாக்கியத்தம்மாள் இலஞ்சம் கொடுத்து வேலை வாங்க முயல்கிறாள். இதனைத் தடுத்து இரகுபதி நேர்மையான வழியில் பார்வதிக்கு

ஆசிரியப்பணி வேலை பெற்றுத் தருகிறான். இதன்மூலம் இலஞ்சத்தையும் எதிர்க்கும் பண்புடையவனாக இரகுபதி படைக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

பண்ணையார் நியாயவிலைக் கடைப் பொருள்களை விற்பதற்கு தனியாக பொருள்களை எடுத்து வைக்கிறார். அதனைத் தடுத்து கிராமமக்களுக்கே பொருட்கள் வழங்கப்பட வேண்டும் என்று கூறி அம்மக்களுக்காகப் போராடி வழங்கச் செய்கிறான். மேலும் பண்ணையார் சந்தன மரக் கட்டைகளை அரசுக்குத் தெரியாமல் விற்பதற்காக காட்டுப் பங்களாவில் பதுக்கி வைக்கிறான். இதனை அறிந்த இரகுபதி அதனைத் தடுத்து காவல்துறையிடம் சொல்லி பண்ணையாரைக் கைது செய்கிறான். இதன்மூலம் ஊழலைத் தடுக்கும் பாத்திரமாக இரகுபதி படைக்கப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

இரகுபதி எதிலும் பொறுமையாக இருந்து காரியத்தைக் கச்சிதமாக முடிப்பவனாகவும், நேர்மையாக நடப்பவனாகவும், காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றுபவனாகவும் படைக்கப்பட்டுள்ளான்.

இவ்வாறு சுவடுகள் என்னும் நாவலில் சிறந்த கதைத் தலைவனாக இரகுபதி படைக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

### 14.6.2. பார்வதி

பாக்கியத்தம்மாளின் மகள் பார்வதி. பாக்கியத்தம்மாள் இட்லி விற்று பிழைப்பை நடத்துபவள். அவளிடம் காலையிலும் இரவிலும் இரகுபதி இட்லி வாங்கி உண்கின்றான். ஒருமுறை பார்வதி அவ்வூர் காளிகோயிலுக்குச் செல்லும் போது சேற்றில் விழுந்து விடுகிறாள். இதனைக் கண்ட இரகுபதி அவள் கையைப் பிடித்துத் தூக்கிவிடுகிறான். ஓர் ஆடவனின் கை முதல் முறை படும்போது ஏற்படும் கூச்சமும், அவனின் நேர்மையான குணத்தின் மீது கொண்ட மதிப்பாலும் பார்வதிக்கு அவன் மீது ஒரு விதமான காதல் ஏற்படுகிறது. இதனை வெளிப்படையாக அவனிடம் கூறவில்லை.

இரகுபதி வெள்ளையிடம், "ஆடம்பரமில்லாத மனைவி பணம் அந்தஸ்து இவற்றை மதிக்காத பண்பு, பிறருக்கு உழைக்கும் மனப்பக்குவம் இவையனைத்தும்தான் எனக்குப்பிடித்தவை. அப்படியொருத்தி மனைவியாகக் கிடைத்தால் இறைவனுக்குக் காலமெல்லாம் நன்றி சொல்வேன்" என்று கூறுகிறாள். இதை வெள்ளை

குறிப்பு

பார்வதியிடம் கூறுகிறான். பார்வதியும் அதையோ நினைத்துக் கொண்டிருக்கிருக்கிறாள். இரகுபதியும் பார்வதியுடன் இணைந்து வாழ்வதைத் தான் விரும்புகின்றான்.

இரகுபதியைப் பற்றிப் பெட்டிசன் போட்டிருக்கும் செய்தியைப் பார்வதி கேள்விப்படுகிறாள். இரகுபதி சாதிக் கலவரத்தைத் தூண்டினான் என்று கணக்குப்பிள்ளை கையெழுத்து வேட்டை நடத்தியதை அழகு மூலம் கேள்விப்படும் பார்வதி கவலை கொள்கிறாள். இதனால் இரகுபதியின் துன்பத்தைக் கண்டு பொறுக்க இயலாத குணம் படைத்தவளாகப் பார்வதி படைக்கப்பட்டுள்ளாள்.

இரகுபதி, பார்வதி, இராசாத்தி ஆகியோர் காரில் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்றனர். காரில் இரகுபதியும் இராசாத்தியும் பேசிக்கொண்டே வருகின்றனர். இச்செயல் பார்வதிக்குப் பிடிக்கவில்லை. இதை இரகுபதியும் உணர்ந்து கொள்கிறான். பார்வதி தன்னைத் தவறாக நினைத்து விடக்கூடாதே என்ற மனதிற்குள் நினைக்கின்றான். ஆனால் பார்வதி இந்நிகழ்வின் பிறகு இரகுபதியிடம் பேசத் தயங்குகிறாள். மேலும் வெறுப்பையும் காட்டுகிறாள். இந்நிகழ்வு பார்வதி இரகுபதியின் ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் அன்பைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இரகுபதி தன் வேலையை இராஜினாமா செய்து விட்டு குருசாமி தாத்தாவின் ஆசிரமப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்கிறான். இச்செய்தியை பார்வதி கேள்விப்படுகிறாள். இரகுபதியின் மேல் காதல் கொண்டிருக்கும் பார்வதி தன் ஆசிரியப் பணியை உதறித்தள்ளி விட்டு இரகுபதியின் ஆசிரிமத்திற்கே வந்து பணியாற்றுகின்றாள். இதன்மூலம் பார்வதி இரகுபதியின் மீது கொண்டிருக்கும் அன்பு வெளிப்படையாகத் தெரிகிறது. பார்வதி தியாகம், தொண்டுள்ளம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டவளாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளாள்.

### 14.6.3.இராசாத்தி

கொடிக்குளம் பண்ணையார் மகள் இராசாத்தி. இராசாத்தி மருத்துவக் கல்வி பயில்பவள். அவளுக்கு அரசாங்க உதவித் தொகை பெறுவதற்கு வருவாய் ஆய்வாளரின் கையெழுத்து வேண்டும். இதற்காகப் பண்ணையார் கணக்குப்பிள்ளை மற்றும் வேலையாளின் மூலமாக இரகுபதியிடம் விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்து வாங்குவதற்காக அனுப்பி வைக்கிறார். கணக்குப்பிள்ளை பண்ணையாரின் நிலம் தரிசு

என்றும், அவர் நிலத்தில் போதிய விளைச்சல் இல்லை என்றும் பொய் கூறுகிறான். இதைக் கேட்டுக்கொண்ட இரகுபதி விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்திடாமல் திருப்பி அனுப்பி விடுகிறான். இச்செய்தியை இராசாத்தி கேள்விப்படுகிறாள். இரகுபதியின் நேர்மையான குணம் அவளுக்குப் பிடித்திருந்தது. இதை நேரடியாகவே இரகுபதியிடம் உரைக்கிறாள். இது இராசாத்தியின் நல்ல பண்பை எடுத்து உணர்த்துவதாக உள்ளது.

இரகுபதி அழகுவைக் கொலை செய்ததற்காகக் கைது செய்யப்படுகிறான். இதைத் தெரிந்து கொண்ட இராசாத்தி இரகுபதியை ஜாமீன் எடுக்க முயற்சி செய்கிறாள். இதன்மூலம் இராசாத்தி தீமையை எதிர்க்கும் குணம் படைத்தவளாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளாள். இந்நாவலின் இறுதியில் இரகுபதி ஆசிரமத்திற்குச் சென்றதைக் கேள்விப்பட்டு தன் சொத்தில் பாதியை ஆசிரமத்தின் வளர்ச்சிக்காக எழுதி வைத்துவிடுகிறாள். இரகுபதி இராசாத்தியின் மேல் கொண்டுள்ள அன்பும், இராசாத்தி இரகுபதியின் மேல் கொண்டுள்ள அன்பும் காதலைப் போல் தோன்றினாலும் அது எந்த இடத்திலும் வெளிப்படவில்லை. இவ்வாறு இராசாத்தி அவள் வாழும் சூழலில் இருந்து மாறுபட்ட பண்பும் சிந்தனையும் செயலும் கொண்ட பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

### 14.6.4.அழகு

அழகு சீனித்தேவனின் மனைவியாக இந்நாவல் தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ளாள். பின்பு இருவரும் கருத்து வேறுபாட்டின் காரணமாகப் பிரிந்து விடுகின்றனர். சீனித்தேவனால் தீர்த்துவிடப்பட்டவள். வாசியம்மாளின் மகள், செல்லமுத்துவின் தங்கை, பார்வதியின் தோழி என்று இவ்வாறு பல கோணங்களில் ஆசிரியர் படைத்துள்ளார்.

அழகு பார்வதியுடன் தோழி போன்று பழகி வருகிறாள். பார்வதியும் இரகுபதியும் காதல் கொள்வது அழகுவிற்குத் தெரியும். இதனால் இரகுபதி தொடர்புடைய எந்தச் செய்தியாக இருந்தாலும் அதைப் பார்வதியிடம் வந்து கூறிவிடுவாள். இதன்மூலம் அழகு பார்வதியின் மேல் கொண்டுள்ள நட்பு புலனாகிறது.

சீனித்தேவன் தன் தந்தையின் பேச்சைக் கேட்டு அழகுவை மணவிலக்கு பெற்றுவிடுகிறான். பின்னர் வேறு திருமணமும் செய்து கொள்கிறான். சீனித்தேவன் என்றாவது ஒருநாள் தன்னிடம் திருந்தி வந்து

குறிப்பு

விடுவான் என்று நம்புகிறாள். ஆனால் அவன் நாவலின் இறுதிவரை திருந்தவில்லை. அழகு, "ஒரு ஆண் எத்தனை பெண்களையும் தொடலாம். ஆனால் பெண்ணோ அவள் மனத்தில் ஒருவருக்குத் தான் இடம் கொடுக்க முடியும்" என்று கூறுவது அவளின் நற்பண்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இரவில் இரகுபதியைக் கொலை செய்யப் பண்ணையார் தன் வேலையாட்களின் மூலமாக முயற்சி செய்கிறான். இதனைக் கண்ட அழகு இரகுபதியை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்ற எண்ணத்தில் இரகுபதி அலுவலகம் விட்டு வரும் வழியில் காத்திருந்து அவனை வேறுவழியாக திசைதிருப்பி அவனைக் காப்பாற்றிவிடுகிறாள். இரகுபதியும் அழகுவும் அண்ணன் தங்கையாகப் பழகும் குணம் படைத்தவர்களாக இந்நாவலில் இடம்பெற்றுள்ளனர். ஆனால் இது ஊரில் உள்ளவர்களுக்கு இருவரும் காதல் கொள்வதாகத் தெரிகிறது. இதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பண்ணையார் அழகுவுக்கும் இரகுபதிக்கும் கள்ளத் தொடர்பு இருப்பதாக உரைத்து விடுகிறான். இதனால் சீனித்தேவனுக்கு அழகுவின் மேல் வெறுப்புணர்ச்சி அதிகமாகிறது. சீனித்தேவன் மூலமாக அழகுவைக் கொலை செய்கிறான் பண்ணையார். அழகுவின் பிணத்தை இரகுபதியின் வீட்டில் போடச் செய்கிறார். இது நாவலுக்கு திருப்புமுனையாக அமைகிறது.

இவ்வாறு அழகு நற்பண்புகளையும் கிராமத்திற்கே உரிய வெள்ளந்தியாகப் பேசும் குணம் படைத்தவளாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளாள்.

**14.6.5.மாடசாமி**

மாடசாமி பண்ணையாரின் வேலையாட்களில் ஒருவன். அடியாளாகவும் இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளான். பண்ணையார் சொல்லும் எந்த வேலையையும் யோசிக்காமல் செய்து முடிப்பவன். கொடிக்குளம் சேரி மக்கள் மாடசாமிக்குப் பயந்து தான் வேலை செய்வர். மாடசாமியும் எந்தவொரு தயவு தாட்சணியமும் பார்க்கமாட்டான். பண்ணையார் யாரையாவது கொலை செய்யச் சொன்னால் கூட தயங்காமல் செய்து விடுவான். பண்ணையாருக்கு விசுவாசம் கொண்டவனாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளான்.

குறிப்பு

### 14.6.6.அமாவாசை

கொடிக்குளம் கிராமத்தில் சற்று எழுதப்படிக்கத் தெரிந்தவன். அச்சேரி மக்களுக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்து வருபவன். பண்ணையார் தன் வயலில் உழுவதற்குக் குறைவான ஊதியத்தைத் தான் தருவார். பொறுத்துப் பார்த்த கிராமமக்கள் கூலி அதிகம் வேண்டும் என்று வயலில் உழாமல் இருந்தனர். இதற்கு உறுதுணையாக இருந்தவன் அமாவாசை. பண்ணையாரை எதிர்த்துப் போராடும் இயல்பைக் கொண்டவனாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளான்.

### 14.6.7.பாக்கியத்தம்மாள்

பாக்கித்தம்மாள் இந்நாவலின் கதைத் தலைவியான பார்வதியின் தாய். இட்லிக்கடை வைத்து நடத்தி வருபவள்.

### 14.6.8.வெள்ளை

வெள்ளை பார்வதியின் தம்பியாகப் படைக்கப்பட்டுள்ளான். ஆனால் பார்வதிக்குச் சொந்தத் தம்பி கிடையாது. பாக்கியத்தம்மாளால் எடுத்து வளர்க்கப்பட்டவன். வெள்ளை பார்வதிக்கு பலவகைகளிலும் உதவி செய்பவனாக இந்நாவலில் இடம்பெறுகின்றான்.

### 14.6.9.வேளார்

இவர் கொடிக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள காளிகோயில் மண்டபத்தில் தங்கி அவ்வூர் மக்களுக்கு வைத்தியம் செய்கிறார். இவர் முதியவர். வயது எழுபதைக் கடந்தவர். அவ்வூரில் அநியாயமாக நடக்கும் நிகழ்ச்சியை இரகுபதியிடம் கூறும் பாத்திரமாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளார்.

### 14.6.10. கீதாரி நாயக்கர்

கொடிக்குளம் கிராமத்தில் மாடுகளை வைத்துப் பால் விற்கும் தொழில் செய்பவர். இந்நாவலின் இறுதியில் பஞ்சாயத்துத் தலைவராகப் பொறுப்பேற்கிறான்.

### 14.6.11. மங்கரேளஸ்வரன்

மாவட்ட வருவாய் அதிகாரி. குருசாமி தாத்தாவிற்கு அடுத்தபடியாக இரகுபதியை வழிநடத்துபவர்.

### 14.6.12. இன்ஸ்பெக்டர் விஜயன்

இரகுபதியின் முன்னாள் கல்லூரித் தோழனும் காவல் துறை அதிகாரியும் ஆவான்.

குறிப்பு

இரகுபதியைப் போன்ற குணம் படைத்தவன். அக்கிராமத்திற்காக பல வகைகளில் இரகுபதியுடன் சேர்ந்து போராடுபவன்.

**14.6.13. குருசாமி தாத்தா**

காந்தி ஆசிரிமப் பள்ளியின் பொறுப்பாளன். இரகுபதியை நற்குணங்களாகப் படைத்த பெருமை குருசாமி தாத்தைவையே சாரும். இவர்தான் காந்தியக் கொள்கைகளை இரகுபதியிடம் சிறுவயது முதலே போதித்து நற்குணத்தை ஏற்படத்தியவர்.

**14.6.14. பண்ணையார்**

இந்நாவலின் எந்த இடத்திலும் இவர் பெயர் குறிக்கப்படவில்லை. பண்ணையார் என்றே இந்நாவல் முழுவதும் படைக்கப்பட்டுள்ளார். கதைத் தலைவன் இரகுபதிக்குப் பலநிலைகளிலும் இடைஞ்சலாக அமைபவன். தீய குணம் படைத்தவன். இரகுபதி தனக்கு தொந்தரவாக இருப்பதினால் அவனைத் தீர்த்துக் கட்ட பல வகைகளிலும் முயல்பவன். திருட்டு, ஊழல், இலஞ்சம், கொள்ளை போன்ற சட்ட விரோதமான அனைத்து செயல்களைச் செய்பவனாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளான். இந்நாவலின் இறுதிவரை திருந்தாத பண்புடையவனாக இருக்கிறான்.

**14.6.15. கணக்குப்பிள்ளை கண்ணாயிரம்**

கணக்குப்பிள்ளை கண்ணாயிரம் பண்ணையாரிடம் கணக்குப்பிள்ளையாக பணியாற்றுபவன். பண்ணையார் செய்யும் தீய செயலுக்கு உற்ற துணையாக விளங்குபவன்.

**14.7. நடைச் சிறப்பு**

படைப்பாளனுக்குச் சிறப்புத் தருவதும், தனித்தன்மையுடையதாகவும் விளங்குவது நடைச்சிறப்பாகும்.

“படிக்கிற இடம் எளிமையா இருந்தால் போதும். தெரிஞ்க்கிற கல்விதான் வலிமையாக வாழ்க்கைக்குப் பயன்படனும்”

“இந்த கிராமத்துச் சனங்களெல்லாம் கண்ணாடி மாதிரி. நாம நடக்கிறதை அப்படியே பிரதிபலிப்பாங்க”

“கல்வி என்பது வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். வாழ வழி வகுக்கிற நிலைக்களனாகவும் அமைய வேண்டும்”

இவ்வாறு இந்நாவலில் அமையப்பெறும் தொடர்கள் எளிய நடையில் உரையாடல்கள் இடம்பெறுகின்றன.

“ஆச்சி ஒருவேளை நான் வர தாமசம் ஆனாலும் வெள்ளைக்கிட்டே கொடுத்தனுப்பிச்சிடுங்களேன்” – தலையாரி

“மதியமே கடுதாசி வந்திடுச்சாம்” – வெள்ளை. இவ்வாறு பேசும் பாத்திரங்கள் அவர்களுக்கேற்ற கிராமிய நடையாக அமைந்துள்ளது.

ஆசிரியர் இந்நாவலில் வருணனை நடையையும் பயன்படுத்தியுள்ளார். நாவலின் தொடக்கமே வருணனையுடன் அமைந்துள்ளது. “வானம் பூமியுடன் இணைந்திருந்தது. மழை மட்டும் இல்லாமல் சுழல் காற்றும் சேர்ந்து கொண்டது. இடைஇடையே பளிச் பளிச் என்ற ஒளிக்கீற்று வானத்தை யாரோ பிளந்து விட்டது மாதிரி சப்தம். இந்த மழைக்கு இப்படி என்னதான் வேகம் வந்தது…?

கொடிக்குளம் கிராமத்து சாலையை, “கப்பிக்கல் சாலை…டிரைவர் மிக சாமார்த்தியமாய்ப் பஸ்ஸைச் சாலையில் நத்தையாய் ஊர விட்டார். சாலையில் இரு பக்கங்களிலும் ஆழமான பள்ளங்கள் சாலைகளின் கப்பிக்கல் இடைவெளியை நிரப்புவதற்காக அடிக்கடி மண் எடுக்கப்படுவதால் பள்ளமும் ஆழமாகியிருந்தது. பள்ளத்தை தாண்டி உள்ள மரங்கள் சாலைப் பக்கம் வளைந்து தாழ்ந்து இருந்தன” என வருணித்துள்ளார்.

கணக்குப்பிள்ளையின் தோற்றத்தை வருணிக்கும் போது, “நெற்றியிலே பட்டை திருநீறு, நட்ட வடுவில் எட்டணா அளவிற்குச் சந்தனப் பொட்டு, சந்தனத்தின் நடுவே செந்தூரம்” என அறிமுகப்படுத்துகிறார்.

இவ்வாறு ஆசிரியர் எளிய நடையையும், கிராமிய நடையையும், வருணனை நடையையும் நாவலில் படைத்துள்ளார்.

குறிப்பு

**14.8.நிறைவாக:**

சுவடுகள் என்னும் இந்நாவல் கிராமப் பின்னணியை மையமிட்டு அமைவதால் கிராமிய நடை பின்பற்றப்பட்டுள்ளது. கிராமத்து மக்கள் பேசும் பேச்சுக்கள் அவரவர் இயல்புக்கேற்ப உரையாடலாக அமைந்துள்ளது. “சத்தியத்திற்கும் நேர்மைக்கும் என்றைக்குத்தான் சோதனை இல்லாமல் இருந்தது” ஒவ்வொரு படைப்பாளனுக்கும் நடை மாறுபடும். சுவடுகள் என்னும் நாவலில் ஆசிரியர் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய நடையைப் பின்பற்றியுள்ளது இங்கு கருதத்தக்கது.

**14.9.சோதித்தறியும் வினாவிடை**

1.கருப்பொருள் - விளக்குக.

குறிப்பு

ஒரு கதை எதைப் பற்றியது என்பதைக் கூறுவது கருப்பொருள். ஒரு கதையின் எல்லாக் கூறுகளும் ஒன்றாக இணைந்து நின்று உணர்த்தும் முழுப்பொருள் யாது என்பதைப் பற்றியக் கூறுவது கருப்பொருள். ஓர் இடம், ஒரு பாத்திரம், ஒரு சூழல் ஆகிய இவற்றைப் பற்றியது கதைப் பொருள். இவற்றைப் பற்றி ஆசிரியர் என்ன கூறுகிறார் என்பதைப் பற்றியது கருப்பொருள்" என்று ஹியூகஸ் டாக்லஸ் என்பார் விளக்குவார்.

**14.10. பயிற்சி வினாக்கள்**

1. சுவடுகள் என்னும் நாவலின் கருவை விளக்குக
2. இராசாத்தியின் பாத்திரப்படைப்பபைக் கூறுக
3. பாத்திரப் படைப்பை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
4. கதைப் பின்னல் எவ்வாறு அமையவேண்டும்?
5. நாவல் கதைச் சுருக்கத்தை சுருக்கமாக விளக்குக

**14.11. மேலும் படித்தறிக..**

1. சுவடுகள், டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், சத்யா வெளியீடு, திருநகர், மதுரை - 625006
2. நாவல் களங்கள், டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன்
3. நாவல் கலையியல், டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன்

## மாதிரி வினாத்தாள்

## பகுதி - I 31A – பொதுத்தமிழ் -தாள் - III

**காலம்: 3மணி** **மதிப்பெண்- 75**

**பகுதி-அ**

**(அ) அனைத்து வினாக்களும் ஓரிரு வரிகளில் விடையளி:**
**(10 x 2=20 மதிப்பெண்கள்)**

1. நாழிகை கணக்கர் என்போர் யார்?
2. ஐங்குறுநூற்றைப் பாடியோர் பற்றிக் குறிப்பிடுக.
3. குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள்களைச் சுட்டுக

4. தலைவன் கூற்றில் அமையும் கூற்றுச் சூழலைக் கூறுக.
5. வரைவு நீட்டித்த வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது யாது?
6. பெருங்குன்றூர்கிழார் பற்றிக் குறிப்பு வரைக
7. பாரதம் பாடிய பெருந்தேவனார் திருமாலை எங்ஙனம் போற்றுகிறார்?
8. பாடாண் திணை என்பதை வரையறு
9. அகநானூறு நூற்குறிப்புத் தருக.
10. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

**குறிப்பு**

## பகுதி-ஆ

**(ஆ) அனைத்துவினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி: (5x5=25 மதிப்பெண்கள்)**

11 (அ) கார்ப்பருவ முல்லை நில வருணனைகளை விளக்குக

அல்லது

(ஆ) ஐங்குநுறூறு பற்றி விரிவாக விளக்குக

12. (அ) தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்த பாடல்களைத் தொகுத்துரைக்க

அல்லது

(ஆ) வினைமுற்றி மீண்டுவந்த தலைவன் மழையை வாழ்த்துவதாக அமைந்த பாடல்களை பெருங்கௌசிகனார் எங்ஙனம் புலப்படுத்துகிறார்?

13. (அ) குறித்த பருவம் கண்டு வருந்திய தலைவி புலம்புவதை விளக்குக

அல்லது

(ஆ) தலைமகன் பாசறையிலிருந்து சொல்லிய செய்தியை சேந்தம்பூந்தனார் வழி நின்று விளக்குக

14. (அ) ஆனந்தப்பையுள் என்றால் என்ன? மாறோக்கத்து நப்பசலையார் பாடிய

ஆனந்தப்பையுள் துறையமைந்த பாடலை விளக்குக

அல்லது

(ஆ) வள்ளுவர் கூறும் அறிவுடையார் அறிவிலார் பற்றி விளக்குக.

15. (அ) விளம்பிநாகனார் பாடல்களின் வழி அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க

அல்லது

(ஆ) நான்மணிக்கடிகையின் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க

**பகுதி - இ**

**(இ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கும கட்டுரை வடிவில் விடையளி**

**(3x10=30 மதிப்பெண்கள்)**

**குறிப்பு**

16. முல்லைப்பாட்டில் அரசன் அரசியின் மனநிலையைப் புலப்படுத்துக
17. குறிஞ்சித்திணையின் சிறப்புக்களை விவரிக்க
18. பரணர் பாடல்களின் வழி அறியலாகும் கருத்துக்களை விளக்குக
19. இராசராசன் பாத்திரப்படைப்பை விரிவாக விளக்குக
20. **'**சுவடுகள்' நாவலின் கதைப்பின்னலைக் கட்டுரை வடிவில் விடை தருக